ஸ்ரீ:
SrI:

திருப்பாவையில் இருப்பாயே
(tiruppAvaiyil iruppAyE)

திருப்பாவையில் ப்ரபத்தி
ஶரணாகதி பற்றிய பாடல்களும் விளக்கமும்

prapatti in tiruppAvai
songs and explanation about the
total unconditional surrender (saraNAgati)

Version 4.1

அடியேன் ஸ்ரீராமானுஜ தாஸன்
(your humble servant rAmAnuja dAsan)

ஸார்வபௌமம் அய்யம்பேட்டை
ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்
(sArvabaumam ayyampettai
SrinivAsa rAjagOpAlan)

பொருளடக்கம்

CONTENTS

#	தலைப்பு # Title	பக்கம் Page
A	அடியேன் செய்யும் விண்ணப்பமே your humble servant's request	7
B	ஆசாரியர்கள் பற்றிய தனியன்கள் tanian about AchAryAs	13
C	திருப்பாவை தனியன்கள் tiruppAvai tanians	17
D	கோதை பற்றி ஆசாரியர்கள் அருளியவை AchAryAs' composition on gOdA	19
E	திருப்பாவையில் இருப்பாயே பாடல்கள் tiruppAvaiyil iruppAye verses	25
0	தனியன், விளக்கம் explanation of tanian, introduction	41
0	அவதாரிகை விளக்கம் explanation of avathArikai	81

1	மார்கழி திங்கள் mArgazhi tingaL	
2	வையத்து வாழ்வீர்காள் vaiyattu vAzhvIrgAL	xx
3	ஓங்கி உலகளந்த Ongi ulagaLanda	xx
4	ஆழி மழைக் கண்ணா Azhi mazjaikkaNNA	xx
5	மாயனை மன்னு mAyanai mannu	xx
6	புள்ளும் சிலம்பினகாண் puLLum silambina kAn	xx
7	கீசு கீசு என்று எங்கும் kIsu kIsu enRu engum	xx
8	கீழ்வானம் வெள்ளென்று எருமை kIzvAnam veLLenru erumai	xx
9	தூமணி மாடத்து சுற்றும் tUmani mAdattu ccRRum	xx
10	நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற nORRuc cuvarkkam pugginRa	xx

11	கற்றுக் கறவை கணங்கள் kaRRu kkaRavaik kaNangaL	xx
12	கனைத்திளங் கற்றெருமை kanaittiLangaRRerumai	xx
13	புள்ளின் வாய் கீண்டானை puLLin vAy kIndAnai	xx
14	உங்கள் புழக்கடை தோட்டத்து ungaL puzakkadai ttOTTattu	xx
15	எல்லே இளங்கிளியே இன்னம் ellE iLangkiLiyE innam urangudiyO	xx
16	நாயகனாய் நின்ற nAyaganAy ninRa	xx
17	அம்பரமே தண்ணீரே சோறே ambaramE taNNIrE sOrE	xx
18	உந்து மதகளிற்றன் undu mada kaLiRRan	xx
19	குத்து விளக்கெரிய kuttu viLakkeriya	xx
20	முப்பத்து மூவர் அமரருக்கு muppattu mUvar amararkku	xx

21	ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி ERRa kalangaL edir pongi	xx
22	அங்கண் மா ஞாலத்தரசர் angaN mA j~nAlattu	xx
23	மாரிமலை முழைஞ்சில் mAri malai muzhanjil	xx
24	அன்றிவ்வுலகம் அளந்தாய் anRivvulagam aLandaAy	xx
25	ஒருத்தி மகனாய் பிறந்து orutti maganAyp pirandu	xx
26	மாலே மணி வண்ணா! மார்கழி mAlE! maNivaNNA mArgazhi	xx
27	கூடாரை வெல்லும் kUdArai vellum	xx
28	கறவைகள் பின் சென்று karavaigaL pin senru	xx
29	சிற்றஞ்சிறு காலே siRRam sirukAlE	xx
30	வங்கக் கடல் கடைந்த vanga kadal kadainda	xx

A. அடியேன் செய்யும் விண்ணப்பமே

A. your humbel servant's request

அஸ்மத் குருப்யோ நம:
அஸ்மத் பரம குருப்யோ நம:
அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:

asmad gurubhyO namah
asmad paramagurubhyO namah
asmad sarva gurubhyO nama

ஸ்ரீயப்பதியான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே **பர தத்வம்.** அவனுக்கும், அவனது அடியவருக்கும் அனந்த ஆனந்தமான கைங்கர்யம் செய்வதே ஜீவனுக்கு இயற்கை நியதி, அதுவே **பரம புருஷார்த்தம்.** பரம போக்யம். அதை அடைய கர்ம, ஞான, பக்தி யோகங்களை விட ப்ரபத்தி என்னும் சரணாகதியே எளிமையான, எல்லோரும் அனுஷ்டிக்கக் கூடிய சிறந்த உபாயம். அதுவே **பரம ஹிதம்** என்பதை தானே அனுஷ்டித்து காட்டினாள், பூமி பிராட்டியின் அவதாரமான ஆண்டாள் என்கிற கோதை பிராட்டி.

Our Lord, the husband of Shrl (Srlyapati), nArAyaNA who is inseparable from Her (Srlman Narayna) is the ultimate reality (para tattvam). The fundamental nature of the individual souls (jeevan) is to perform endless (anantha), cheerful (Aanantha) service (kaimkaryam) to Him and His devotees (aDiyavar). That is the ultimate objective (parama purushArtam), ultimate enjoyment (parama bhOgyam). To reach that objective total unconditional surrender (prapatti) which is easier and adoptable universally, is superior means than the karma, j~nAna and bhakti yogas. ANDAL, as the incaranation (avatArA) of goddess mother

earth (bhumi pirAtti) demonstrated (anuShtittu) the excellence of prapatti as the ultimate good (parama hitam)

பெரியாழ்வாருக்கு மகளாக அவதரித்து, கண்ணனையே நினைத்து உருகி, அவனையே திருமணம் புரிய வேண்டும் என்று தவித்து, திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்று இரண்டு பிரபந்தங்களை எல்லா மக்களும் உஜ்ஜீவிக்க அருளினாள்.

ANDAL, born as the daughter of periyAzhvAr, had the intense love towards lord kR^ShNA. In her desperate deep desires to reach Him, she poured out her tender feelings in two poems (prabhandham) called tiruppAvai and nAchiAr tirumozhi.

இவற்றில் திருப்பாவை என்பது ஸர்வ வேத ஸாரம், **வேதம் அனைத்துக்கும் வித்து** என்று முன்னோர்களால் ஆசையுடன் அழைக்கப்படுவது. வேதங்களில் உள்ள சூஷ்ம கருத்துக்களை எளிய தமிழ் சொற்களால் சுருக்கமாய் அனைவரும் சொல்லி மகிழும்படி ஆண்டாள் அருளியது என்பதால் ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாச, புராண, மற்ற திவ்ய பிரபந்தங்களை விட திருப்பாவை மிக உயர்ந்தது எனக் கூறலாம்.

In those two, tiruppAvai is the quintessence of the vedA-s. It has been called dearly by our elders as "vedam anaiththukkum viththaagum." ANDAL extracted the intricate meanings of the vedAs and compressed them into simple, but elegant verses in tamil so that everyone can read and enjoy. And may be that is why, tiruppAvai is superior to sruthi, smruthi, ithihAsa, puraNAs etc.

திருப்பாவை என்பது ப்ரபத்தி சாஸ்திரம். முப்பது பாசுரங்களிலும் சரணாகதி நெறியையே ஆண்டாள் வலியுறுத்துகிறாள் என்பதே இந்த **"திருப்பாவையில் இருப்பாயே"** என்ற பாடல்களின் நோக்கம்.

tiruppAvai is the rule book (ShAstrA) on the unconditional total surrender (prapatti). The goal of this book tiruppAvaiyil iruppAyE is to put forth that

this total surrender has been the main theme emphasized by ANDAL, in all the thirty verses of her tiruppAvai.

ஏ மனமே! நீ நித்ய அனுஸந்தானம் செய்து, எம்பெருமானின் திருவடிகளில் நித்ய கைங்கர்யத்தில் திளைத்து, என்றும் மகிழ்ந்து **திருப்பாவையில் இருப்பாயே.** அந்த எம்பெருமான் ஸ்ரீயப்பதியான ஸ்ரீமந் நாரயணன், **அகில மநுஜ நயந விஷயதாம் கதம்"** என்ற கீதா பாஷ்யத்தில் எம்பெருமானாரின் வாக்கின்படி, எல்லா மக்களும் கண்டு, கேட்டு, ஆடிப் பாடி, உருகி, உணர கண்ணனே, நீயும் அந்த **திருப்பாவையில் இருப்பாயே!**

Oh mind! You be with tiruppAvai (tiruppAvaiyil iruppAyee) by reciting everyday and thus involving in the enjoyment of the service (kaimkaryam) on the golden feet (triuvaDi) of our lord. as bhagavad rAmanujA said in his gitA bAshyam, for the enjoyment of the the eyes of all the ordinary people (akila manuja nayana vishaythAm gadham) our Lord shrIman nArAyAnA is in tiruppAvai as lord kR^ShNA for everyone to see, hear, sing, dance and crave earnestly.

ப்ரபந்நாத்3 அந்யேஷாம் ந தி3ஶதி முகுந்தோ3 நிஜ பத3ம் என்று ப்ரபத்தியை தவிர மற்ற எந்த வழியிலும் எம்பெருமான் தன் திருவடிகளில் ஆனந்திக்கும் நித்ய கைங்கர்ய ப்ராப்தியை தருவதில்லை என்றார் ஸ்வாமி தேசிகன், ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸார ஸ்லோகத்தில். அந்த ப்ரபத்தியின் மேன்மையும், அனுஷ்டிக்கும் முறையும், அதனால் கிடைக்கும் பரம புருஷார்த்தத்தையும் காட்டுவது திருப்பாவை.

as svami deSika says in his SrImad rahasya traya sAram, our lord will not offer the eternal enjoyment of performing service (kaimkaryam) at His holy feet to any one who approach Him by means other than prapatti (prapannAth anyEshAm na diSadi mukundO nija padam). tiruppAvai portrays the exalted status of that prapatti and the ultimate rewards (parama purushArtham) it confers.

ஆசாரியர்களின் திருவடிகளையே தஞ்சமாகக் கொண்டு, அடியேனது சிறு புத்திக்கு எட்டிய வரை திருப்பாவை ஸ்வாபதேசமாக, ப்ரபத்தியின் நோக்கமாக, தமிழ் பாடல்களும் அதன் விளக்கங்களும் இங்கே தரப்பட்டுள்ளன. இதில் உள்ள, குற்றம், குறைகளை பொறுத்து அடியேனை திருத்தி அருளுமாறு எம்பெருமான் அடியவர்களை வேண்டுகிறேன்.

holding the golden feet our AchAryAs tightly as the sole refuge, your humble servant (aDiyEn) has ventured into writing songs and explantions on the intricate meanings of tiruppAvai from the angle of prapatti. Your humble servanyt (aDiyEn) request all the devotees of our lord, to pardon the errors and shortcomings in this document and bless your humble servant (aDiyEn) by correcting and advising.

ஆண்டாள் திருவடிகளே ஶரணம்.
எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்
சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே ஶரணம்
அஹோபில ஆதிவண் சடகோப ஸ்வாமி திருவடிகளே ஶரணம்

ANDAL tiruvaDigaLE SaraNam
emperumAnAr tiruvaDigaLE SaraNam
sIronRu thUppul tiruvengadamudaiAn tiruvaDigaLE SaraNam
ahObila AdivaN satakopa svAmi tiruvaDigaLE SaraNam

B ஆசாரியர்கள் தனியன்

ஶ்ரீ:

யஸ்யாப4வத் ப4க்3தி ஜநார்த்திஹரந்து:
பித்ருத்வமந்யேஷு அவிசார்ய தூர்ணம் ।
ஸ்தம்பே4 அவதாரஶ்தமநந்யலப்4யம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்3யே ।।

அஹோபி3லே க3ருட3ஶைலமத்4யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நித4ாநம் ।
லஷ்ம்யா ஸமாலிங்கி3த வாமப4ாக3ம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரப்த்3யே ।।

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

yasyAbhavat bhakta janArttihantu:
pitRtvamanyEshu avicArya tUrNam |
stambhE avatArastamananyalabhyaM
lakshmInRsimhaM SaraNaM prapadyE ||

ahObilE gAruDaSailamadhyE
kRpAvaSAt kalpita sannidhAnam |
lakshmyA samAlingita vAmabhAgaM
lakshmInRsimhaM SaraNaM prapadyE ||

SrImatE SrIlakshmInRsimha parabrahmaNE nama:

ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர த்ருஷ்டம்
லக்ஷ்மிந்ருஸிம்ம ஶடஜித் கருணைக பாத்ரம்
ஸ்ரீரங்க வீர ரகுராட் ஶடகோப ஹ்ருத்யம்
வேதாந்த தேசிக யதீந்த்ர மஹம் ப்ரபத்யே
ஸ்ரீமதே ஸ்ரீவண் ஶட கோப
ஸ்ரீவேதாந்த தேசிக யதீந்த்ர மஹா தேசிகாய நம:

44th paTTam SrImukkUr azhagiya singar

SrIra'nganAtha SaThakOpa yatIndra dRshTaM
lakshmInRsimha SaThajit karuNaika pAtram |
SrIra'nga vIraraghurAT SaThakOpa hRdyaM
vEdAnta dESika yatIndramahaM prapadyE ||
SrImatE SrIvaNSaThakOpa SrIvEdAntadESika
yatIndra mahAdESikAya nama:

ஸ்ரீமத்3 ரங்க ஶடாரி ஸம்ய விவராத் லப்3தாக3 மாந்த த்வயம்
ஸ்ரீமத்3 வீர ரகூத்3வ ஹாத்3ய ஶடஜித் பாதாரவிந்த3ா ஶ்ரயம் |
ஸ்ரீமத்3 வேத3 வதம்ஸ தே3 ஶிகயதே: காருண்ய வீக்ஷா ஸ்பத3ம்
ஸேவே ரங்க3துரீண ஶாஸந வஶம் நாராயணம் யோகி3நம். ||
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம திவ்ய பாதுகா ஸேவக
ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

prakRtam 45th paTTam azhagiya singar

SrImad ra'nga SaThAri samyamivarAT labdhAga mANta dvayaM
sRimad vIra raghUdvahAdya SaThajit pAdAravindASrayam |
SrImad vEdavatamsa dESikayatE: kAruNyavIkshAspadaM
sEvE rangadhurINa SAsanavaSaM nArAyaNaM yOginam ||
SrImatE srIlakshmInRsimma divya pAdukAsEvaka SrivaNSaThakOpa
SrInArAyaNa yatIndra mahAdESikAya nama:

வேத3ாந்த தே3ஶிக யதீந்த்3ர கடாக்ஷலப்த4
த்ரைய்யந்த ஸாரமநவத்3ய குணம் பு3த4ாக்3ரயம்।
நாராயணாத்3ய யதிது4ர்ய க்ருபாபி4ஷிக்தம்
ஶ்ரீரங்க3நாத2 யதிஶேக2ரம் ஆஶ்ரயாம:।।

ஶ்ரீமதே ஶ்ரீவண் ஶடகோப ஶ்ரீரங்க3நாத2 யதீந்3ர மஹாதே3ஶிகாய நம:

prakRtam 46th paTTam azhagiya singar

vEdAnta dESika yatIndra kaTAkshalabdha
traiyyanta sAramanavadya guNaM budhAgryam |
nArAyaNAdya yatidhurya kRpAbhishiktaM
SrIra'nganAtha yatiSEkharam ASrayAmaha: ||

SrImatE SrIvaNSaThakOpa SrIra'nganAtha yatIndra
mahAdESikAya nama:

C திருப்பாவை தனியன்கள்

C tiruppAvai tanians

(கூரத்தாழ்வான் திருமகனான பட்டர் அருளியது)

நீளாதுங்க3 ஸ்தநகி3ரிதட ஸுப்த முத்3போத்4ய க்ருஷ்ணம்
பாரார்த்2யம் ஸ்வம் ஸ்ருதிஶதஶிரஸ் ஸித்3த4 மத்4யா பயந்தீ ।
ஸ்வோச்சி2ஷ்டாயாம் ஸ்ரஜிநிக3ளிதம் யா ப3லாத்க்ருத்ய பு4ங்க்தே
கோ3தா3 தஸ்மை நம இத3மித3ம் பூ4ய ஏவாஸ்து பூ4ய:

(SrI parAsara battar, son of SrI kOrathAzhvAn composed)

nILAtunga stanagiritatI suptam udbodhya kRshNaM
pArArthyam svaM Sruti-Sata-Siras-siddham adhyApayantI
svOcchisTAyAm sraji nigalitam yA balAt kRtya bhunktE
gOdA tasyai nama idamidaM bhUya evAstu bhUyaH

(நாத முனிகள் சிஷ்யரான உய்யக்கொண்டார் அருளியது)

(SrI uyyakkondAr, disciple of SrI nAtha muni composed)

அன்னவயல் புதுவை ஆண்டாள் * அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம் * - இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு

annavayal puduvai ANDAL * arangaRku
ppannu tiruppAvai ppalpadiyam * innisaiyAl
pAdi kkoduttAL naRpAmAlai * pUmAlai
sUdi kkoduttALai ccollu

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே ! * தொல்பாவை
பாடி அருளவல்ல பல்வளையாய் ! * நாடிநீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம் *
நாங்கடவா வண்ணமே நல்கு

sUdi kkodutta sudar kkodiyE ! * tolpAvai
pAdi aruLavalla palvaLaiyAy * nADi nI
vEngadavaRkennai vidi enRa immARRam
nAm kadavA vaNNamE nalgu.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ANDAL tiruvadigaLE SaraNam

D கோதை பற்றி ஆசார்யர்கள் அருளியவை

D AchAryAs' composition on gOdA

ஸ்ரீவிஷ்ணு சித்த குல நந்த3ந கல்பவல்லீம்
ஸ்ரீரங்க3ராஜ ஹரிசந்த3ந யோக3 த்3ருஶ்யாம் ।
ஸாக்ஷாத் க்ஷமாம் கருணயா கமலாமிவான்யாம்
கோ3தா3 மனந்ய ஶரண: ஶரணம் ப்ரபத்3யே ।।

SrIvishNucitta kula nandana kalpavallIm
SrIrangarAja haricandana yoga druSyAm
sAkshAt kshamAm karuNayA kamalAmivAnyAm
godAm ananayaSaraNah SaraNam prapadye

ஶதமக2 மணி நீலா சாரு கல்ஹார ஹஸ்தா
ஸ்தந ப4ர நமிதாங்கீ3 ஸாந்த்3ர வாத்ஸல்ய ஸிந்து4: ।
அளக விநிஹிதாபி4: ஸ்ரக்3பி4 ராக்ருஷ்ட நாத2
விலஸது ஹ்ருதி3 கோ3தா3 விஷ்ணுசித்தாத்மஜா ந: ।।

Satamakha maNi nIlA cAru kalhAra hastA
stana bhara namitAngI sAndra vAtsaya sindhuh
aLaka vinihitAbhih sragbhirAkRshta nAthA
vilasatu hRdi gOdA vishNucittAtmajA nah

தாழ்வு ஒன்றில்லா மறை தாழ்ந்து × தலமுழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து × அளித்தவன் காண்மின் × அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடி கொடுத்தவள் தொல் அருளால் ×
வாழ்கின்ற வள்ளல் × இராமானுசன் என்னும் மா முனியே
(இராமநுச நூற்றந்தாதி 16)

tAzvonrillA marai tAzndu * talamuzudum kaliyE
Alginra nAL vandu * alittavan kANmin * arangar mauli
sUzkinRa mAlaiyai ccUdi kkoduttavaL tol aruLAL
vAzginra vaLLal * irAmAnusan ennum mA muniyE
(irAmAnusa nURRandAdi 16)

வேயர்புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம் *
மேன்மேலும் மிக விளங்க விட்டுசித்தன் *
தூய திருமகளாய் வந்து * அரங்கனார்க்கு
துழாய் மாலை முடிசூடிக் கொடுத்த மாதே *
நேயமுடன் திருப்பாவை பாட்டு ஆறு ஐந்தும் *
நீ உரைத்த தையொரு திங்கள் பாமாலை *
ஆய புகழ் நூறுடன் நாற்பத்து மூன்றும் *
அன்புடனே அடியேனுக்கு அருள் செய் நீயே
(பிரபந்த சாரம் 10)

vEyar pugaz villiputtUr Adippuram
mEnmElum miga viLanga vittuSittan
tUya tirumagalAy vandu * aranganArkku
tuzAy mAlai mudiSudik kodutta mAdE
nEyamudan tiruppAvaip paAttAraindum
nI uraitta taiyoru tiNgal pAmAlai
Aya pugaz nUrudan nArpattu mUnrum
anbudanE adiyEnkku aruL sey nIyE
(prabhanda sAram 10)

இன்றோ திருவாடிப்பூரம் × எமக்காக
வன்றோ × இங்கு ஆண்டாள் அவதரித்தாள் × குன்றாத
வாழ்வான × வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து ×
ஆழ்வார் திருமகளார் ஆய்.
(உபதேச ரத்னமாலை 22)

inRO tiruAdippUram * emakkAga
vanRO * ingu ANDAL avadarittAL * kundRada
vAzvAna * vaigunda vAn bOgam tannai igazndu
AzvAr tirumagaLArAy
(updEsa rattinamAlai 22)

அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய் × ஆழ்வார்கள்
தம் செயலை × விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் / பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் × பத்தியுடன் நாளும் ×
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து
(உபதேச ரத்னமாலை 24)

anju gudikku oru sandadiyAy * AzvArgaL
tam seyalai * vinji niRkum tanmaiyaLay * ppinjAy
ppazhuttLai ANDALai * ppattiudan nAlum *
vazuttAy manamE ! magizhndu.
(updEsa rattinamAlai 24)

E திருப்பாவையில் இருப்பாயே பாடல்கள்
tiruppAvaiyil iruppAyE verses

தனியன் (வணக்கம்)
Tanian (prostration to the author)

மாலை சூடித் தந்து, மா மாயனைத் தானே மயக்கி
சோலைசூழ் அரங்கன் மேல், சொல் மாலை இயற்றி
வேலை செய்வதே இயற்கை, வேண்டாது கூலியென
ஆலிலையான் அடி காட்டிய, அடியை அடைந்தேனே.

mAlai sUdi ttandu, mA mAyanai ttAnE mayakkiE
solai sUzh arangan mEl sol mAlai iyaRRi
vElai seyvatE iyaRkai, vENdAdu kUliyena
AlilaiyAn adi kAttiya, adiyai adaindenE 1

மானமிலா மாதாய் தோன்றி, மாதவம் தானே போற்றி
ஞானமிலாதார் முதல் இன்றி, நப்பின்னை தாள் பற்றி
வானத்து வாழ்வாரும் வந்து, வணங்கும் திரு வேங்கட
கானத்து திரியும் கண்ணன், கருணையைக் காட்டிட

mAnamilA mAdhAy thOnRi, mAtavam tAne pORRi
j~nAnamilAdAr mudal inRi, nappiNai tAL paRRi
vAnattu vAzhvArum vandu, vaNangum tiru vEngada
kAnattu tirium kaNNan karuNaiyaik kAttida 2

அவதாரிகை (முன்னுரை)
Introduction (avatArikai)

நல்லறிவு இருக்குங்கால், நானிலத்தில் ஒருவன்
சொல் ஒன்றாலே, சரணம் அடைந்த பின்னே
கல் கட்டையாய் கிடப்பினும், நினவு தானே தந்து
இல்லழைத்து செல்லும் இறையும், வராகன்தானே

nallaRivu iruKungAl nAnilattil oruvan
sol onRAlE, saraNam adainda pinnE
kal kattaiyAy kidappinum, ninaivu tAnE tandu
illazaittu sellum iRaiyum varAgan tAnE 3

திரு வராகன் சொல்லை, தரணியில் தழைத்திட
ஒரு பெண் ஆழ்வாராய், ஓதவே முன் தோன்றிட
திருப்பாவை முப்பத்தில், திருமறையின் வித்தை
கருவிலே காட்டித் தந்தாள், தந்தையின் சொத்தை.

tiruvarAgan sollai, taraNiyil tazaittida
oru peN AzhvArAy OthavE mun tOnRida
tiruppAvai muppattil, tirumaRaiyin vittai
karuvilE kAtti ttANDAL, tandaiyin sottai 4

உறவென்னும் சொல்லே, உயர் உண்மையென புகட்டி
பிறவிக் கடலைக் கடக்க, பரிவுடன் நல் வழிகாட்டி
அரவணை பரமனுக்கே, ஆட்செய்வதே பேரின்பம்
மறவாது அடைவீர் என்றாள், மண்மகள் கோதையாகி

uravennum sollE uyar uNmaiyene pugatti
piRavi kkadalai kkadakka, parivudan nal vazhi kAtti
aravaNai paramanukkE AtcceyvathE pErinbham
maRavAtu adaivIr enRAL, maNmagaL gOdai Agi 5

நீளை திருமார்பில் உறங்கும், நீலமேனி வண்ணா !
காளை ஏழும் வென்று மணந்த, கமலக் கண்ணா !
நாளையின்றி நிலைத்தோம், கோதை ஆறைந்தில்
வேளை தந்து வைப்பாய், வான் வீட்டு போகத்தில்

nILai tirumArbil urangum,nlamEni maNi vaNNA !
kALai Ezhum venRu maNanda, kamal kkaNNA !
nALaiyinRi nilaittOm, gOdai ARaindil
vELai tandu vaippAy, vAn vIttu bOgattil 6

கருமம் ஞானம் அறியாது * கையிலாதர் கரை ஏற
பெருவழி இதுவே என்று * பேரின்ப வாழ்வு பெற
ஒரு நாள் தாளடைந்து * ஒழுக்குடன் பணி செய்ய
விரும்பி நீ எங்கும் * திருப்பாவையில் இருப்பாயே

karumam j~nAnam aRiyAtu, kaiyilAtAr karai Era
Peruvazhi ituvE enRu, pErina vAzhvu peRa
orunAL thALadiantu, ozhukkudan paNi seyya
virumbi nI engum, tiruppAvaiyil iruppAyE 7

திருப்பாவையின் உட்கருத்தாக (ஸ்வாபதேசம்) எழுதிய பாடல்கள்

verses composed on the intricate meanings (svApadesam) of tiruppAvai

1. மார்கழி திங்கள் mArgazit tingaL

**கண்ணா நீயே காரணம் * கார்மேனி செங் கண்களிலே *
விண்ணின் மன்னா நாரணா! * வந்தாய் எமக்காய் மண்ணிலே /
அண்ணா மெய்யாறாய் பேறாய் * அகதியாம் அடைந்த பின்னே *
கண்ணார காணும் முன் * காலையில் நற்குண நினைவுகளே.**

kaNNA nIyE kAraNam * kArmEni seng kaNkaLilE
viNNin mannA nAraNA * vanthAy emakkAy maNNilE
aNNA mey ARAy pERAy * agati yAm adainta pinnE
kaNNArak kANum mun * kAlaiyil naRguNa ninaivukaLE

2. வையத்து வாழ்வீர்காள் vaiyattu vAzvIrgAL

**மணிமாயன் மனம் மகிழ்வித்து * மற்றவை முற்றும் மறுத்து *
பிணியின்றி காப்பாய் என்றே * பணிசெய்ய ஏழை வரித்து /
துணிந்து திண்கழல் பற்றி * தணிந்து தானின்றி கைகாட்டி *
அணிந்து ஆறுடன் நின்றார் * கனிந்து வாழ்வாரே இங்கு.**

maNimAyan manam magizvittu * maRRavai muRRum maRuttu
piNiyinRi kAppAy enRee * paNi seyya Ezai varittu
tuNindu tiNkazal paRRi * taNindu tAnninRi kaikAtti
aNindu Arudan ninRAr * kanintu vAzvArE ingu

3. ஓங்கி உலகு அளந்த Ongi ulagalanda

**அலையின்றி அடைந்தவையில் * அளந்தவனே மகிழ்ந்து உறங்க *
விலையின்றி கேட்டுரைத்து * வணங்கி குறையின்றி பணியுகக்க /
வலையின்றி உடல்தானும் வீழ * வான்வழி ஏறி விண்ணுலகில் *
நிலையூன்றி நின்றாருடன் * நீங்காத நிதியில் நிறைவாரே.**

alaiyinRi adaindavaiyil * aLandavanE magizntu uRanga
vilaiyinRi kEttuuraittu * vaNangi kuRaiyinRi paNiy ugakka
valaiyinRi udal tAnum vIza * vAnvazi ERi viNNulagil
nilaiyUnRi ninRArudan * nIngAta nidiyil niRaivArE

4. ஆழி மழைக் கண்ணா Azhi mazhaik kaNNA

**நீர் உறுஞ்சும் மேகம்போல் * நிகமத்தின் நுண்மை மிளிர்த்து *
கூர் அம்புமழை போல் யாம் * குதர்க்கத்தை முறித்து முழங்க /
சீர் குணத்தால் அயனை * உந்தியில் உமிழ்ந்த வல்லவனே *
கார் வண்ண கண்ணனே * காலம் கழியாது அருள்வாயே.**

nIr uRunjum mEgampOl, nigamattin nuNmai miLirttu
kUr ambu mazhai pOl yAm, kutarkkattai muRittu muzhanga
sIr gunattal ayanai, unthiyil umizhntha vallavanE
kAr vaNNa kaNNanE, kAlam kazhiyadu aruLvaayE

5. மாயனை மன்னு வட மதுரை mAyanai vada madurai

**அழியா தத்துவம் தனதாக்கி * ஆயனாய்த் தானே தோன்றி *
பழியா நதியில் விளையாடி * பெற்ற தாயின் பெருமை ஏற்றி /
ஒழியா உறவில் உத்தமராய் * ஒரு சொல்லால் அடைந்தார்க்கு *

கழியாது அறியாத வினை * கழிப்பாயே தீயினில் தூசாக்கி.

azhiA tattvam tanatAkkiE, AyanAyt tAnE tOnRi
pzhiyA nadiyil viLaiyAdi, peRRa tAyin perumai ERRi
ozhiyA uRavil uttamaray, oru sollal adaintArkku
kazhiyAtu aRiyAta vinai, kazhippAyE tIyinil tUsAkki

6. புள்ளும் சிலம்பினகாண் puLLum silambina kAN

நற்காலையென * புள்ளும் சங்கும் ஒலிக்க * தானன்றி
மற்றவை விலக்கி * மனத்தே பத்தி வைத்து இருக்க /
முற்றும் அமைத்த அரியும் * மெள்ளப் புகுந்து குளிர *
பற்றினாரோடு வாராய், பிள்ளாய் பரமனை ஏத்திட.

naRkAlaiyena, puLLum sangum olikka * tAnanRi
maRRavai vilakki, manatte patti vaittu irukka
muRRum amaitta ariyum, meLLap pugundu kuLira
paRRinArOdu vArAy, piLLay paramanai ettitda

7. கீசு கீசு என்று எங்கும் kEsukEsu enRu engum

படித்தார் பலர் பகிர்ந்து, பர தத்துவம் புகழ்ந்திட *
அடியுரையும் அதனுரையும், அத்தாட்சி என அறுதியிட *
அடியார் கேட்டு நினைத்து, மணமுடன் ஒளி வீச*
முடித்தாருடன் வாராய், முதலே கேசவனை ஏத்திட.

Padittar palar pagirntu, para tattvam pugazhndida
Adiyuraiyum adanuraiyum, attAcchi ena aRuthiyida
adiyAr kEttu ninaittu, maNamudna oLi vIsa
mudttArudan vArAy, mutalE kEsavani Ettida

8. கீழ்வானம் வெள்ளென்று kEz vAnam veLLenRu

நன்று நாளும் புலர * நீண்ட நெறியாரும் சுவைக்க *
இன்று சோம்பருடனே * இணைய நின்றோம் இங்கே *
கன்று போல் நமக்கு * கருத்தைக் காட்டும் குறிப்பால் *
வென்ற குருவை வாழ்த்தி * விழைந்து அடைய வாராய்

A
A
A
A

9. தூமணி மாடத்துச் சுற்றும் tUmani mAdattuc cuRRum

மறையும் முடியும் என * மருள் நீக்கி ஒளிர * கருமமுடன்
குறை கூறாது கேளாது * பரமின்றி பற்றில்லாது /
கறையின்றி குரு உகந்தார் * அவர் தாயே நீ சொல்லு *
வரையில்லா மாயன் மாதவனை * மனம் திறந்து சொல்ல.

A
A
A
A

10. நோற்று சுவர்க்கம் புகுகின்ற nORRu suvargam pukukinRa

தண் துழாய் நாரணன் * தானே தனிவழி ஆகி *
விண் ஏற விழைந்தார்க்கு * தன்னையே தந்தருள /
வண்மையுடன் வேள்வி * வரித்த பின்னே விலகாது *
மண்மீது மயல் முறித்து * மாதவனே மகிழ வாராய்.

A

A
A
A

11. கற்றுக் கறவைகள் kaRRuk kaRavaikaL

**கற்பவை பலரிடம் கற்று * கர்வமும் பகையும் கழித்து *
நற்குல நிதியை நன்றாய் * நாட்டிய நாவலன் உகந்த /
புற்றில் பாம்பாய் ஒடுங்கி * புனமயில் கண்ட மேகமென *
வற்றாத நம் முகிலுருவை * வாழ்த்த வாராதது ஏனோ?**

A
A
A
A

12. கனைத்திளங் கற்றெருமை kanaithilang kaRReumai

**கடும் தவத்தார் இரங்கி * குழவிக்கு மொழி சொல்ல *
கொடும் உடலோடு குருவும் * களித்து கண்ணீர் பெருக்க /
விடும் போது வீடு வேண்டி * பின் வாசனை விடுத்த *
அடிமைக்கு இனியானை * அவருடன் ரசிக்க வாராய்.**

A
A
A
A

13. புள்ளின் வாய் கீண்டானை puLLin vAy kINdanai

மாற்றாரை விலக்கி * மனம் ஒடுக்கிய தேசிகரை *

போற்றியே சேர்ந்தனர் * சிறுவர் சிலரும் காலத்தில் /
சாற்றி முடித்தவனே * போக்கும் பொழுது நோக்காய் *
பற்றிலாது வாராய் * பொல்லாங்கு கில்லாது ஏத்திட.

A
A
A
A

14. உங்கள் புழக்கடைத் தோட்டத்து ungaL puzakkadai tottatu

உடலில் உள்ளே உறங்கும் * உத்தம குணங்களும் மலரும் *
அடக்கி புலனும் ஆசையும் * அழுக்கிலாது கோவில் சேரும் /
முடித்த தவத்தீர் மேவி * முன்வந்து அழையா விடினும் *
குடியேறிய சங்காழி * கமலக் கண்ணனை பாட வாராய்.

A
A
A
A

15. எல்லே இளங்கிளியே elle eLam kiLiyE

சிறுகிளியே வழிபடவாராய் என்க * சிலுக்காதே சொன்னாரை என்க *
குருமொழி குறிப்பு வன்மை என்க * குறை எமதே மன்னிக்க என்க /
வருவார் எல்லாம் உளரா என்க * வந்தார் என்றே உணர்வாய் என்க *
நீரும் நுமதும் ஒழிக்கும் என்றே * நிகரிலா மாயனை ஏத்த வாராயே.

A
A
A
A

16. நாயகனாய் நின்ற nAyakanAi ninRa

நல் நினைவும் புலனும் காத்து * நலம் நிறைக்கும் நாதனே *
மேல் மேயாது மண் வந்தாய் * எம் மனக்கதவை திறவாயே /
இல்லாது வேறு பேறென * இயலாது வந்தோம் இருடீகேசா! *
சொல் மாறாது சொன்னவாறு * பற்றறுப்பாயே பத்தி நிலைக்க.

A
A
A
A

17. அம்பரமே தண்ணீரே ambaramE tannIre

குலம் காத்து மகிழ்வித்து * மெய் வழி பலனைப் பொழிந்து *
நலம் அருளி நல்விளக்காய் * தரமுடன் மெலிந்த இறைவா /
நிலம் நின்ற நித்யர் தலைவா * நீண்டு வானை நிறைத்தாயே *
பலம் மிகுந்த நிதிபதியே * பாங்காய் நாடினோம் நாங்களே.

A
A
A
A

18. உந்து மதகளிற்றன் undu madakaLiRRan

மணம் கமழும் நப்பின்னை * மல் நந்தகோபன் மருமகளே *
அணுக உன்னை கோழிபோலே * ஆசிரியர் மறைமுடியாலே /
வணங்க விரகாகி * தொட்டில் வளைக்கை குலுங்க * உன்
கணவன் குணம் பாடி மகிழ * எம் மனக் கதவை திறவாயே.

A
A
A
A

19. குத்து விளக்கு எரிய kuttu viLakku eriya

**அஞ்சை அருளால் அறிந்து * அவனியில் ஒரு நாலும் *
தஞ்சமாய் மிதுனம் அடைந்து உகக்க * நப்பின்னை கட்டில் /
மஞ்சத்தில் மயங்கிய நீ * வாய் மலராயோ? * மைக்கண்ணே
கொஞ்சமும் பகிராது * உனக்கே கொள்வதும் முறையோ?**

A
A
A
A

20 - முப்பத்து மூவர் அமரர்க்கு muppattu mUvar amararkku

**இமையோர்க்கு முன் சென்று * இடர் தீர்க்கும் தூயவனே *
சுமை விடுத்தார் கடன் கழற்றி * மேன்மையுடன் ஒத்தவனே /
பகையின் அனலே அருளாயே * பூர்த்தி நப்பின்னையே திருவே *
வகையாய் பதியை கவனித்து * வாழ வைப்பாய் இக் கணமே.**

A
A
A
A

21. ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி ERRa kalangaL edir pongi

**கருத்தை சுரக்கும் மறையும் * காட்டும் பரக்க இறையும் *
இருக்கும் நிலையாய் பெரிதாய் * இருப்பார் உள்ள முகக்கும் /
விருப்புடன் பணிந்தோம் உன்னடி * விரோதி போல் அன்று *
ஆறு பேறு தெய்வம் வேறு * அணுகாத எமக்கு அருளாயே**

A
A
A
A

22. அங்கண் மா ஞாலத்தரசர் angaN mA j~nAlattarasar

**அழகிய பெரும் வானில் * அமர்ந்த நாகணையான் *
கழல்கள் கீழ் தனதன்றி * கட்டிலாதார் பணி போலே /
எழில் பரிதிமதி செங்கண் * சிறிது திறந்த சதங்கை *
விழி கொடுத்து எமக்கு * விலக்கிய வினை ஒழிப்பாயே.**

A
A
A
A

23. மாரிமலை முழைஞ்சில் mAri malai muZaingil

**தன்னுள் எல்லாம் அமிழ * தான் ஒன்றாய் நீரில் உறங்க *
நன்று நினைத்து நீ உமிழ * நாகத்தை நறையுடனே நமுவ *
என்றும் பிரியா மேனி மிளிர * தாழ வந்து குணமும் மலர *
இன்று அரியணை யிருந்து * ஆராய்ந்து எமக்கு அருளாயே.**

a
a

a
a

24. அன்றி இவ்வுலகம் அளந்தாய் anRi ivvulagam aLantAy

**உலகம் அளந்த கழலானே * புலன் பத்தும் களைந்தவனே *
கலங்கு மனம் கடைந்தவனே * கரத்தின் வலிமை கழலாலே /
குலம் காக்கும் குணவானே * குடி ஒத்து வேல் பிடித்தானே *
நலம் மிக்க நற் பணியை * நாளும் பெற நமக்கு அருளாயே.**

A
A
A
A
A

25. ஒருத்தி மகனாய் பிறந்து orutti maganAy pirandu

**பன்னும் மறையில் ஒளிர * பஞ்ச ராத்திரம் மட்டும் மலிய *
மேன்மை மாற்றிய மொழியை * பொசுக்கி நடுக்கம் எடுத்த /
அன்பனே அத்தனே * ஆறும் பேறுமென அலற்றினோம் *
நின்று நற்நிதி நிலைக்க * நலிவு விடுத்து நல் அருளாயே.**

A
A
A
A

26. மாலே மணி வண்ணா mAlE maNi vaNNA

இடையே முன்னோர்வழி நடந்து * இறைக்கும் பகவருக்கும் *

அடிமையே என்னும் அறிவை * தரணி நடுங்க தாரம் முழங்க /
பாடியே அப் பல்லாண்டை * நாலெட்டுடன் எட்டும் இரண்டை *
ஆடிமகிழ நீலமேனி அன்பா * ஆலிலையானே எமக் கருளாயே.

A
A
A
A

27. கூடாரை வெல்லும் kUdArai vellum

குணத்தால் பணியாரைக் கவர * வணங்க வியப்பாய் வீடு செய்ய *
மணத்தூள் மாலை மை ஆடை * அணியுடன் அக்கரையில் அழைக்க *
இனமொத்த மேனியெடுக்க * இன்பத்தால் இறையை மூட * சேர்ந்து
மனமொத்து சுவைக்கும் சம ஆனந்த * சிந்தை அருளாய் கோவிந்தா

A
A
A
A

28. கறவைகள் பின் சென்று kaRavaigaL pin senRu

குருவைப் பற்றி குறை சேராது * உன்னையன்றி வேறு அறியாது *
தருவாய் கோவிந்தா குறையிலாது * பெறவே எம்மிடம் வினையிலாது /
பெருமை முழுதும் அறியாது * பரம் சொல்லி சீலம் சொல்லாது * நம்
உறவு இயற்கை அழியாது * அருளாயே எமக்கு அமிழ்த்தாது

A
A
A
A

29. சிற்றஞ்சிறு காலே siRRam siRukAle

**உன் பொன்னடியை முறையாய் * உணர்ந்து பொழுதே அடைந்து *
யான் வேண்டும் பலன் கேட்டு * ஆயனே உம் பணி மறுக்காதே /
முன் வேண்டி உறவை அறிந்து * உமக்கு அடியாருடன் எங்கும் *
நன் நோக்குடன் வேறின்றி * நழுவா பணிக்கு ஆட் செய்வாயே.**

A
A
A
A

30. வங்கக் கடல் கடைந்த vanga kadal kadainta

**பொங்கும் கடலைக் கடையும் * மாதவனை கேசவனை ஆறாய் *
தங்கும் எழில் குணத்துடன் * திவம் வேண்டி அடைந்தாரை /
நங்கை புதுவை பட்டர்கோதை * நவின்ற முப்பதையும் தவறாதார் *
செங்கண் திறல் திருமாலால் * எங்கும் பணியுடன் மகிழ்வாரே.**

A
A
A
A

0-1 தனியன், அவதாரிகை

0 tanian and introduction

மாலை சூடித் தந்து, மா மாயனைத் தானே மயக்கி
சோலைசூழ் அரங்கன் மேல், சொல் மாலை இயற்றி
வேலை செய்வதே இயற்கை, வேண்டாது கூலியென
ஆலிலையான் அடி காட்டிய, அடியை அடைந்தேனே. 1

மாலை சூடித் தந்து = பகவானுக்காக தொடுத்த மாலையைத் தான் முதலில் அணிந்து, பிறகே அவனுக்கு அளித்து

மா மாயனைத் = மார்பிலே மஹாலக்ஷ்மியை தாங்கி, அகடித கடிநா ஸாமர்த்யனான பகவானை

தானே மயக்கி = தானே தன் வசப்படுத்தி

சோலைசூழ் அரங்கன் மேல் = அழகான தோட்டங்கள் நிரம்பிய, மற்ற 107 திவ்யதேசங்களும் சோலையாகவும் நடுவில் அரண்மனையாக (ஆராமம் சூழ்ந்த அரங்கம்) விளங்கும் திருவரங்க ராஜன் மேல்

சொல் மாலை இயற்றி = பாமாலைகள இயற்றி

வேலை செய்வதே இயற்கை = ஜீவனின் ஸ்வரூபமே பகவானுக்கு கைங்கர்யம் செய்வது என்கிற இயற்கை நிலையை

வேண்டாது கூலியென = அந்த கைங்கர்யமும் ஸ்வாபாவிகமானது, காசு வாங்கி செய்யும் தொழில் இல்லை என்று

ஆலிலையான் = ஆல மரத்து சிறு இலைமேல் ஸயனித்து இருக்கும் கண்ணனின்

அடி காட்டிய = திருவடிகளை நமக்கு காட்டிக் கொடுத்த

அடியை அடைந்தேனே = ஆண்டாளின் திருவடிகளை சரணமாக அடைந்தோம்.

mAlai sUdi ttandu, mA mAyanai ttAnE mayakkiE
solai sUzh arangan mEl sol mAlai iyaRRi
vElai seyvatE iyaRkai, vENdAtu kUliyena

AlilaiyAn adi kAttiya, adiyai adaintanE 1

adiyai adaintanE	= (we) reached the feet of (gOdA, who)
mAlai sUdi ttandu	= putting the garland on herself first, those that were specially prepared and set aside to be offered to the lord
tAnE mayaKiE	= attracted (the lord who is)
mA mAyanai	= having mahalakshmi in his chest and who performs miraculous deeds
sol mAlai iyaRRi	= composed poems
solai sUzh arangan mEl	= about the lord ranagnathA, in ShrIrangam, who is surrounded beautiful gardens
vElai seyvatE iyaRkai	= (and instructing us that) performing service (to the lord) is the nature of our soul)
vENdAdu kUliyena	= for that there is no wages or payment
AlilaiyAn adi kAttiya	= (and) showed the feet of baby kR^iShNA who is lying on a small banyan leaf

0-1 **உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்து கலத்து அது உண்டு தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன சூடுமித் தொண்டர்களோம்**
(திருப்பல்லாண்டு 9)

எம்பெருமானுக்கு ஸமர்பித்த பொருள்களான பீதாம்பரத்தை அணிந்து, அவன் அமுது செய்து பாத்திரத்தில் உள்ளதை புசித்து, அவன் அணிந்த மலர் மாலைகளைச் சூடி கொள்ளும் தொண்டர்கள் நாம் என்ற பெரியாழ்வார் வாக்கின்படி, எப்பொருளையும், பகவத் பிரசாதமாக கொள்வதே, ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய முறை.

udttuk kaLaintha nin pIdaga Adai uduttuk kalattu adu uNdu *
todutta tuzAy malar sUdik kaLaindana sUdumit toNdargaLOm
(tiruppallAndu 9)

periAzhvAr says, it is traditional for the devotees to wear the nice yellow upper cloth (piithambaram) that was worn by the Lord, eat the

food only after showing to Him, put on the garlands only after he wore them. The practice in shrIvaishnava tradition is that anything can be consumed or used only after offering to the Lord. It is used then as the lord's gift (bhagavad prasadam).

0-2 கோதா பிராட்டியோ, பகவானுக்காகவே என்று தந்தை விஷ்ணு சித்தர் தொடுத்து, கட்டி வைத்த மாலைகளைத் தான் முதலில் அணிந்து மகிழ்ந்து, பிறகே பகவானுக்கு ஸமர்பித்ததால் **மாலை சூடித் தந்து**.

But gOdA pirAtti, put on happily the garlands that was prepared and reserved by her father Vishnuchittar, specifically for consumtion for the Lord. Then only those garlands were offered to the Lord and thus "mAlai sUdi ttandu"

0-3 **பூமாலை சூடிக் கொடுத்தாளைச் சொல்லு**
சூடி கொடுத்த சுடர்கொடியே
(திருப்பாவை தனியன்)

என்று, தான் முதலில் முதலில் மாலைகளைச் சூடி, பிறகே பகவானுக்கு ஸமர்பித்து அருளினாள் என்கிறது தனியன்களும்.

pUmAlai sUdik koduttaLai sollu
sUdik kodutta sudarkodiyE
(tiruppAvai tanian)

Tanian also claims that ANDAL first wore the garlands and then only it was offered to the Lord.

0-4 **ஸ்வோச்சி2ஷ்டாயாம் ஸ்ரஜிநிக3ளிதம் யா ப3லாத்க்ருத்ய பு4ங்க்தே**
(திருப்பாவை தனியன்)

ஸ்வோச்சி2ஷ்டாயாம் = தான் சூடி மகிழ்ந்து களைந்த மாலையை
ஸ்ரஜிநிக3ளிதம் = மாலையால் கட்டப்பட்டவனாய் இருக்கும்

ப3லாத்க்ருத்ய பு4ங்க்தே = பலாத்கரித்து அனுபவிக்கிறாளோ
உச்சிஷ்டம் என்பது ஒருவர் அனுபவித்து கொடுத்தது.

svOcchistAyAm srajinigalitam yA balAtkrtya bhunkte
(tiruppAvai tanian)

svOcchistAyAm = taken out, after weraing the garlands for herself first
srajinigalitam = having tied by the garlands
balAtkrtya bhunkte = enjoys forceibly
ucchistam means any item, that has been used by someone already.

0-5 **வேயர் புகழ் வில்லி புத்தூர் ஆடிப்பூரம் ***
மேன் மேலும் மிக விளங்க விட்டுசித்தன் *
தூய திருமகளாய் வந்து * அரங்கனார்க்கு
துழாய் மாலை முடி சூடிக் கொடுத்த மாதே *
(பிரபந்த சாரம் 10)

ஸ்வாமி தேசிகன், பிரபந்த சாரத்தில், தான் தன் திருமுடியில் சூடிக் களைந்த துளஸி மாலைகளை ஸ்ரீரங்கநாதனுக்கு ஸமர்பித்து என்கிறார்.

vEyar pugaz villiputtUr Adippuram
mEnmElum miga viLanga vittuSittan
tUya tirumagalAy vandu × aranganArkku
tuzAy mAlai mudiSudik kodutta mAdE
(prabhanda sAram 10)

svAmi deSikan in his prabhanda sAram claims that ANDAL putting the tulasi garlands on her head first and then taking it out before offering to shrI ranganathA.

0-6 ஸ்வாமி தேசிகன் அனுபவம் நன்கு கவனிக்க வேண்டும். சாதாரணமாக, பெண்கள் அழகான மல்லிகை, முல்லை, என்று வாசனையும் வண்ணங்கள் நிறைந்த மாலைகளை அணிவார்கள். ஆனால் கோதையோ தனக்கு

பிடித்ததைவிட, பகவானுக்கு பிடித்ததான துளஸி மாலையை அணிந்து அழகு பார்த்தாள்.

It is important to take a note on svAmi deSikan's mind set here. Normally girls prefer flowers and garland that are colorful and have a nice fragrance. But gOdA didn't choose something that she likes, instead chose what the lord kR^iShNA loves, the tuLasi. That is how she beautified hereslef wearing tuLasi garland.

0-7 கண்ணனுக்கு தான் ஏற்றவளா என்று நினைத்து, அழகு பார்க்கும்போது அவன் விரும்பியதை செய்து காட்டினாள். பிரபத்தியின் ஆனுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்ய வர்ஜன அங்கங்களை காட்டினாள். ஜீவனின் நோக்கமே எம்பெருமானை மகிழ்விப்பது என்ற உபனிஷத் ஸாரத்தை சுலபமாக நடித்துக் காட்டினாள்.

When dressing up herself, pretending to be the bride for kR^iShNA and testing her suitability to Him, she was doing what the lord would love. She was emphasizing the limbs (angA) of prapatti namely – do what the lord likes (AnukOlya sankalpam) and avoide what the lord doesn't like (prAdikOlya varjanam). The sole objective of individual souls is to make the lord happy, so says upanishads. ANDAL performed that act.

0-8 விஷ்ணுசித்தருக்கு பெரியாழ்வார் என்று பெயர் எதனால்? எல்லோரும் தங்களுக்கு பிடித்த வஸ்துக்களை - சர்க்கரை பொங்கல், திரட்டிப்பால் என்று - பகவானுக்கு ஸமர்பிப்பார்கள். ஆனால் விஷ்ணுசித்தரோ, எம்பெருமான் விரும்பியதை அளித்தார். ஆண்டாள் சூடிக் களைந்த மாலையை அவனுக்கு அளித்ததால் பெரியாழ்வார் என்ற பெயர் பெற்றார், என்றார் தேசிகன் கோதாஸ்துதியில்.

Why viShNuciitar was called periAzhvAr? Usually one offers whatever the food that he likes to the lord – sweets and others. But viShNucittar offered to Lord what the lord likes. He offered the garlands which were worn by ANDAL, the very which ones, lord lovingly demanded.

0-9 **தாதஸ்து தே மது4பி4த3: ஸ்துதி லேஶ வஶ்யாத்**
கர்ணாம்ருதை: ஸ்துதி ஶதை ரநவாப்த பூர்வம் ।
தவந்மௌளி க3ந்த ஸுப4கா முபஹ்ருத்ய மாலாம்
லேபே4 மஹத்தர பத3ாநுகு3ணம் ப்ரஸாத3ம் ।।
(கோதாஸ்துதி 10)

தவத் மௌளி க3ந்த ஸுப4காம் = உன் திருமுடி மணத்தால் பெருமையான
மாலாம் உபஹ்ருத்ய லேபே4 = மாலயை ஸமர்பித்து அடைந்தார்.
அநவாப்த பூர்வம் = [எது என்றால்] இத்தனை நாள் பெறாத
மஹத்தர பத3ம் = பெரியாழ்வார் எனும் திருநாமம்

விஷ்ணுசித்தருக்கு பெரியாழ்வார் என்ற பெயர் எப்போது கிடைத்தது என்றால், அம்மா கோதையே! உன் திருமுடியில் சாத்தி, பின் களைந்த திருமாலைகளை கொண்டு போய் பகவானுக்கு ஸமர்பித்ததால், அதனால் மிகவும் மகிழ்ந்த எம்பெருமான், அவர் இத்தனை நாள் வரை பெறாத அந்த பட்டத்தை அளித்தான்.

tAtastu te madhubidH stuti leSa vaSyAt
karNAmrtaiH stuti SatairanavApta pUrvam
tvanmaUli gandha subhagAm upahrtya mAlAm
lebhe mahattara padAnuguNaM prasAdam
(gOdAstuti 10)

upahrtya mAlAm = by offering the garlands [which got]
tvanmaUli gandha subhagAm = nice fragrance (by associating) with top of your head [hair]
lebhe mahattara padam = received the name great rank [periAzhvAr]
anavApta pUrvam = [which he] never obtained before

viShNucittar received the blessings of the lord and title periAzhvAr, the title he never had before, only after he offered the fragrant garlands that received the glory of being decorated on your head first.

மாமாயனைத் தானே மயக்கி

mA mAyanait tAnE mayakkiE

0-10 மாமாயன் என்பதால் ஸ்ரீமந் நாரயணன். மா என்பது மஹாலக்ஷ்மியையும், மாயன் என்பது அகடித கடிநா ஸாமர்த்யனாய், தன் ஆஸ்ரிதர்களுக்கு ஆச்சரியமான செயல்களை செய்து மகிழ்விக்கும் எம்பெருமான்.

mAmAyan refers SrIman nArAyanA. mA refers to SrI mahAlakshmI and mAyan indicates the one who can perfrom the impossible tasks in a swish, does incredible deeds for those who reached out to Him (Asridhar).

0-11 மாயங்கள் பல செய்தாய் என்பதாலும், ஸ்ரீயப்பதி ஆகையாலும், இவனே பரத்வம் என்று காட்டியது.

By the nature of performing miraculous actions and also being the husband of SrI, squarely concludes that He is the suprme (para tattvam).

0-12 ஆண்டாளும் 5ம் பாசுரத்தில் மாயனை என்றே ஆரம்பிக்கிறாள்.

ANDAL also calls Him “mAyanai” in her 5th paasuram

0-13 பகவானை மயக்குவது அவனிடம் தனக்கே உள்ள வால்லப்யத்தாலே (Influence). புருஷகாரம் செய்வதற்காக. சேதனர்களுக்காக தானே பரிந்துரை பேச

gOdA captivated the lord through her influence (vAllabhyam) with him. This is to put forth the recommendation (puruShakAratvam) for the individual souls (chetanA-s).

0-14 "புருஷகாரத்வமாவது, ஸ்வதந்த்ரனான ஈச்வரனைத் தன் இனிமையாலே மயக்கி, ஜீவனுடைய தோஷங்களை மறக்கச் செய்து, "உனக்கு மோக்ஷம் அளித்தேன்," என்னும் ஸங்கல்பத்தை ஈச்வரன் செய்யும்படியாக பண்ணுகை," என்றார் பெரியவாச்சான் பிள்ளை.

periavAcchan piLLAi says, "Recommnedation / intercession (purushakAram) means, to enchant the lord who has the ultimate, total indpedence so that He forgets the flaws (sins) of the individual souls (chetana-s) and make sure that He says assuringly "I have granted the mOksham to you."

0-15 **புருஷகாரம் என்பது புருஷனாகிய எம்பெருமானிடம் ஜீவனுக்காக பரிந்து பேசுதல்**

(ஸ்வாமி தேசிகன், விரோதி பரிகாரம்)

என்பதாலே, அதற்கு எம்பெருமானை சரிகட்ட, அவனைத் தன் போகங்களாலே மயக்கி, அத்தாலே சேதனர்களை உஜ்ஜீவிக்கிறாள்.

puruShakAragam enpathu purshanAgia emperumAnidam jIvanukkaga parinthu pEsuthal

Recommendation (puruShakAragam) means representing the individual soul (jEvan) and putting forward the case to the lord, the only one who has the total indepednece.

0-16 **ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் ப4க3வத: இதம் சந்த்3ர வத3நே!**
த்வத் ஆஶ்லேஷ உத்கர்ஷாத் ப4வதி க2லு நிஷ்கர்ஷ ஸமயே

(பராசர பட்டர், குணரத்ந கோசாம் 28)

சந்திரனை ஒத்த திருமுகத்தை உடைய ரங்கநாயகியே! தாயே!, நான் நன்றாக யோசித்து பார்த்தேன். உன் புருஷனான ரங்கநாதனின் ஸ்வரூபம், ஸ்வாதந்திர்யம் போன்ற திருக்கல்யாண குணங்கள் எல்லாம் உன்னுடைய அணைப்பினால் அல்லவோ உண்டானது," என்றார், பராசர பட்டர்.

svarUpam svAtantryam bhagavata idam candra vadanE
tvadAshleS otkarshAt bhavati khalu nishkarSha samayE
(SrI parAsara bhattar SrI guNaratnakoSaH)

Oh rangnayAki pirAtti, your face is like a stunning moon in fascinating the hearts of your devotees. When I contemplated deeply on this, Your husband SrI ranganAthA enjoys the status of complete indepedence which is characteristic of His ultimate supremacy, is only through your consort and hugging you show on Him.

0-17 பிறக்கும்போதே கண்ணன் பெற்றோரின் கால் விலங்கை தகர்த்து எறிந்தான். அதனால், ஆண்டாள் ஸாமர்த்யமாக, தன் பூமாலையாலும், பகவானை முழுவது கட்டினாள். இது அன்பு விலங்கு, கண்ணினுன் சிறுத்தாம்பினால் கட்டுண்ட பெருமான் ஆயிற்றே!

Even during the birth, baby kR^iShNA had the power to knock down the shackles on the hands and legs of His parents. That is why ANDAL was careful and smartly tied his whole body with her garlands (pUmAlai) and poems (pAmAlai). This restraint comes out of affection. After all He is the Lord who got himself tied on a smal rope, (kaNNi nuN kaTTuNNa ppaNNiya perumAyan avan] earlier.

சோலைசூழ் அரங்கன் மேல், சொல் மாலை இயற்றி
solai sUzh arangan mEl sol mAlai iyaRRi

0-18 ஸ்ரீரங்கம் என்பது அழகான பூஞ்சோலைகள் நிரம்பிய திவ்யமான தேசமாய் அதன் நடுவே ஆனந்தமாய் ஸ்ரீரங்கநாதன் ஸயனித்துள்ளார்.

SrIrangam is a divine place (divya desam) place surrounded by beautiful flower gardens and lord rangnathA is lying down in the middle.

0-19 ஆராமம் சூழ் அரங்கம்
(சிறிய திருமடல்)

திருமங்கையாழ்வார் ஸ்ரீரங்கத்தை ராஜதானியாகவும், மற்ற திவ்ய தேசங்களை தோட்டங்கள் போலவும் வர்ணித்துள்ளார். ஆராமம் என்றால் தோட்டம், நந்தவனம்.

ArAmam sUzh arangam
(siRia tirumadal)
tirumangaiAzhvAr describe SrIrangam as the palace in the center and the rest of the divya desams as the gardens surrounding. ArAmam means garden, flower patch.

0-20 கங்கையிற் புனிதம் ஆய காவிரி நடுவு பாட்டு *
பொங்கு நீர் பரந்து பாயும் பூம்பொல்ழில் அரங்கம் தன்னுள்
(திருமாலை 23)

உயர்ந்த காவிரி நதி பொங்கி வருகின்ற சோலைகள் நிரம்பிய அரங்கம்.

gangaiyiR punitamAya kAviri naduvu pattu
pongku nIr paranthu pAyum pUmpozil arangam tannuL
(tirumAlai 23)

Famous cauvery comes out with force into the gardens surrounding SrIrangam

0-21 வண்டு இனம் முரலும் சோலை * மயில் இனம் ஆடும் சோலை*
கொண்டல் மீது அணவும் சோலை * குயில் இனம் கூவும் சோலை /
அண்டர்கோன் அமரும் சோலை அணி திருவரங்கம்
(திருமாலை 14)

சோலை அணி திருவரங்கம் என்பதாலே சோலைகளை தனக்கு ஆபரணமாய் கொண்ட ஸ்ரீரங்கம்.

vaNdu inam muaralum solai mayilinam Adum solai
koNdal mIdu aNavum solai kuyil inam kUvum solai
aNdarkOn amrum solai aNi tiruvarangam
(tirumAlai 14)

Solai aNi tiruvarangam means that SrIrangam considers those gardens surrounding as its ornaments.

0-22 அன்னவயல் புதுவை ஆண்டாள் * அரங்கற்கு
பன்னு திருப்பாவை பல்பதியம் / இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை
(திருப்பாவை தனியன்)

அன்ன வயல் = அன்னங்கள் விளையாடுகின்ற
பன்னு = ஆராய்ந்து அருளிய
பல்பதியம் = பல பாட்டுகளை

ஆண்டாள் பாடிய பாட்டுக்கள் எல்லாம் ரங்கநானைப் பற்றியே என்கிறார் உய்யக் கொண்டார்.

annavayal puduvai ANDAL * arangkaRkup
pannu tiruppAvai palpatiyam / * innisaiyAl
pAdik koduttAL naRpAmAlai

ANDAL is hailing from SrIvilliputtur where swans playing gently in the fields. She is singing many songs which are deeply researched into. The author of the tanian says all those songs are about lord ranganathA only.

0-23 தொல்பாவை பாடி அருள பல்வளையாய்
(திருப்பாவை தனியன்)

பழமையான திருப்பாவையை பாடி, எல்லோருக்கும் உபகாரம் செய்கின்ற கோதை பிராட்டியே!

ANDAL is very generous to the whole mankind by singing many songs. Her songs are not of any novel idea, but has been in practice for centuries.

0-24 வைகுந்தத்திலிருந்து இறங்கி, அர்ச்சாயவதாரமாய், என்றும் நமக்காக காத்து கொண்டு இருக்கும் ஸ்ரீரங்கநாதனின் ஸௌலப்யத்தை காட்டுகிறது.

When we hear the name lord SrIranganathA, we should think immediately of the lord's easy accessibility (saulabhyam). He descended down from SrIvaikuntam and settled in SrIrangam in iconic form (arccyAavathAram) for everyone to come and pray to him at their own conveneience.

0-25 ஆண்டாள் தான் அருளிய முப்பது திருப்பாவை பாசுரங்களிலே எங்கேயும், அரங்கனை பேர் சொல்லி அழைக்காவிடினும், அவளுடைய பாமாலை, பூமாலை எல்லாம் அரங்கனையே சேரும் என்பது பூர்வாசாரியர்கள் வாக்கு.

Though ANDAL did not call out rangan by name anywhere in her thirty verses of tiruppAvai, our elders (pUrvAchAryA-s) considered the garland of flower and verses (pUmAlai and pAmAlai) of her directed only towards lord ranganathA.

0-26 வான் திகழும் சோலை மதிள் அரங்கர் வண் புகழ்மேல்
ஆன்ற தமிழ் மறைகள் ஆயிரமும்
(திருவாய் மொழி தனியன்)

என்று பராசர பட்டர் திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களும் அரங்கனையே சொல்கிறது என்று அருளினார்.

vAn thigazum solai madiL arangar vaN pugaz mEl
AnRa tamiz maRaigaL Ayiramum
(tiruvoimozhi tanian)

SrI parAsara bhattar also asserted that all the thousand verses of tiruvoimozhi is about SriranganAtha only.

0-27 ஆக, **அரங்கனைச் சொன்னால் அது அனைத்தையும் சொன்னதாகும். அனைத்தைச் சொன்னாலும் அது அரங்கனையே சேரும்.**

Thus, whatever said about arangan can be thought of being said about everyone else. Whatever said about others, is always said about arangan.

0-28 **மந்தி பாய வடவேங்கட மாமலை வானவர்கள்**
சந்தி செய்ய நின்றான் அரங்கத்து அரவினணையான்
(அமலனாதிபிரான்)

என்று ரங்கநாதனே திருவேங்கடமுடையான் என்றார் திருப்பாணாழ்வார்.

mandi pAy vada vEngada mAmalai vAnavargaL
sandi seyya ninRAn arangattu aravninaNaiyAn
(amalanAdipiiran)

SrI ranganathA is not different from tiruvengadamudaiyAn, says tirupAnAzhvAr.

0-29 ஜீவாத்மாவின் உண்மை நிலை (ஸ்வரூபமே) எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்து, அவனை ஆனந்திப்பதே என்பது **வேலை செய்வதே இயற்கை** நியதி

The true nature (svarUpam) of the individual souls' (chetanA-s) is to perform service (kaimkaryam) and strive to make the lord happy and so it is said vElai seyvatE iyaRkai

0-30 இந்த கைங்கர்யம் ஸ்வாபாவிகமானது (The nature of the jeevan itself is to serve the Lord) என்பதால் அது **கூலி வேண்டாது**, சம்பளத்திற்காக செய்யும் செய்யும் வேலை அன்று.

This service (kaimkaryam) is inherent to the individual souls and is not like an ordinary paid job, kUliy vENdAthu.

0-31 **துலை ஒன்று இலை என நின்ற * துழாய் முடியான் உடம்பாய் *
விலை இன்றி நாம் அடியோம் எனும் * வேதியர் மெய்ப்பொருளே**
(அதிகார ஸங்ரஹம் 10)

எம்பெருமானை விட்டு பிரியாமல் அவனுக்கு சரீரரமாய் இருக்கும் நாம், அவன் வசப்பட்டவர்கள். அவனுக்கு அடிமை. அவனுக்கு கைங்கர்யம் செய்வதற்காகவே இருக்கிறோம். இது கூலி கொடுத்து செய்யும் வேலை போல் அன்று, இயற்கையாகவே உண்டானது.

thulai onRu ilai ena ninRa * thuzAy mudiyAn udambAy*
vilai inRi nAm adiyOm enum * vEdiar meyp poruLE
(adikAra sangraham 10)

We are inseparable from bhagavAn and form his body (sarIram). We are dependent on him and are slaves to him. The very reason why we exist, is only to serve him. This service (kaimkaryam) is natural (svAbhavikam) and not a paid work.

0-32 **பாரார்த்2யம் ஸ்வம் ஶ்ருதிஶதஶிரஸ் ஸித்3த4 மத்4யா பயந்தீ ।**
(திருப்பாவை தனியன்)

ஸ்வம் பாரார்த்2யம் = பகவானிடத்து தனக்குள்ள பாரதந்திரியத்தை
ஶ்ருதிஶதஶிரஸ் ஸித்3த4ம் = நூற்றுக்கணக்கான வேதங்கள் நிர்ணயிக்கிற
அத்4யா பயந்தீ = அறிவித்து

pArArthyam svaM Sruti-Sata-Siras-siddham adhyApayantI
(tiruppAvai tanian)

ANDAL expressing her total dependecy on the lord (pAra tantriyam) as it has been established in hundreds of veda-s

0-33 கண்ணன், ஆல மரத்தின் ஒரு சிறிய இலையில், சிறு குழந்தையாக ஸயனித்து இருக்கிறான். அது ப்ரளய காலத்தில். ஜீவன்கள் நாம ரூபம் இல்லாது அசேதன வஸ்துக்கள் போல் அவனிடம் ஒன்றிக் கிடக்கின்றன. எங்கும் ஒரே ஜலப்ரவாகம்.

kaNNan, as a small child lying on a small banyan leaf, durirng the big dissolution (mahA praLayam). All the individual souls (jeevan-s) without any name or form are sticking to him like inanimate things. Everywhere there is only floods of water.

0-34 **எண் திசைகளும் ஏழ் உலகும் வாங்கிப் பொன் வயிற்றில் பெய்து,**
பண்டு ஓர் ஆலிலைப் பள்ளிக் கொண்டவன்
(பெரிய திருமொழி 1-8-6)

திசைகளையும், எல்லா உலகங்களையும், தன் வயிற்றில் உள்ளே இழுத்துக் கொண்டு, பழமையான அந்த நாளில் ஒரு சிறிய ஆல மரத்து இலையில் படுத்துக் கிடந்தான்.

eN disaigaLum Ezu ulagum vAngip pon vayiRRil peythu
paNdu Or Alialip paLLi koNdavan
(peria tirumozi 1-8-6)

In that old day, after sucking in all the directions, all the worlds into his stomach, the lord lies on top of a small banyan leaf.

0-35 **ஆலமா மரத்தின் இலை மேல் * ஒரு பாலகனாய் *
ஞாலம் ஏழும் உண்டான் * அரங்கத்து அரவினணையான் *
(அமலனாதி பிரான்)**

ஏழு உலகங்களையும் விழுங்கி, சிறு பாலனாய் ஆலை இலைமேல் கிடந்தவன் இந்த ஸ்ரீரங்கநாதன் அன்றோ, என்றார் திருப்பாணாழ்வார்.

AlamA marattin ilai mEl oru bAlakanAy
njAlam Ezum uNdAn arangattu aravinaNaiyAn
(amalanAdi piran)

After swallowing all the seven worlds, sleeping on a small banyan leaf as a child, is not that this Sri ranganAtha?, claims tirupAnAzhvAr.

0-36 **மஞ்சாடு வரை ஏழும் கடல்கள் ஏழும்
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்
எஞ்சாமல் வயிற்றில் அடக்கி ஆலின் மேல் ஓர்
இளந்தளிரில் கண் வளர்ந்த ஈசன் தன்னை
(பெரிய திருமொழி 2-10-1)**

மேகங்கள் விளையாடுகின்ற உயர்ந்த மலைகள், ஸமுத்திரங்கள் என்று ஒன்று விடாமல் பூலோகம், சுவர்லோகம் என்று எல்லா உலகங்களையும் தன் வயிற்றில் கொண்ட எம்பெருமான், ஆலின் இலை மேல் கண் வளர்கின்றான்.

manjAdu varai Ezum kadalkaL Ezum
vanakamum maNNakamum maRRum ellam
enjamal vayiRRil adakki Alin mEl Or
iLantaLiril kaN vaLarwtha Isan tannai
(periya thirumozhi 2-10-1)

bhagvAn, who took everything without any leftovers, like tall mountains where the clouds are playing at the top, oceans, and all the worlds like this earth (bhU lokam), heaven (suvar lokam) and everything else, is sleeping quietly on a small banyan leaf as a child.

0-37 **ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லா அன்று,**
நான்முகன் தன்னோடு தேவர் உலகோடு உயிர் படைத்தான்
(திருவாய்மொழி 4-10-1)

ஏகோ ஹ வை நாராயண ஆஸீத், ந ப்ரம்மா நேசாந: என்ற வேதவாக்கை தமிழ் செய்த மாறன் வாக்கின்படி ஸ்ருஷ்டி காலத்தில் அவன் மட்டுமே தனித்து, இரண்டு என்று இல்லாது இருந்தான்.

onRum dEvum ulagum uyirum yAdum illA anRu
nAnmugan tannOdu dEvar ulagodu uyir padaittAn
(tiruvoimozhi 4-10-1)

nammAzhvAr who translated vedas into tamil (vedam tamizh seytha mAran) took the vedic phrase, Eko ha vai nArAyana AsId na bramma neSAnaH and translated that as, there was only one lord stayed during the creation, without any second being in existence.

0-38 **ஜந்மாத் யஸ்ய யத:**
(பிரம்ம சூத்திரம் 2)

அஸ்ய = இந்த ஜகத்திற்கு
ஜன்மாதி = தோற்றம், நிலை இருப்பு, மறைவு ஆகியவை
யத: = எதனிடமிருந்து ஏற்படுகின்றதோ [அது ப்ரம்மம்]

யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே என்கிற ஸ்ருதி வாக்கின்கிபடி ப்ரம்மத்தின் லக்ஷணம் ஜகத்தின் தோற்றம் முதலியவை (ஜகத் ஜந்மாதி காரணம்). அதை இங்கே ஆலிலையான் என்பது உணர்த்துகிறது.

janmad yasya yatha:

(bramma sUtram 2)

asya = for this universe
janmAdi = creation, sustenace and destruction etc.
yada: = from where it is happening [that is brammam]

yado vaa imani bUthAni jAyante, a sentence from veda-s (srut vAkyam) says the identification/credential (lakshaNam) for the brammam is the creation etc. of the universe. That is the generation, operation, destruction fo the universe (jagad janmAdi kAraNam)

0-39 **ஆலிலையான்** என்பதால் பரத்வ நிர்ணயம் இங்கே.

AlilaiyAn confirms the supremacy (parattva nirNayam - mEnmai) of the lord here.

0-40 **அடி** என்பதால், **ஸ்ரீமந் நாராயண சரணௌ** என்ற த்வய வசனத்தின்படி எம்பெருமானின் இரண்டு திருவடிகளையும் சொன்னது இங்கே.

Adi refers to bhagavAn's two lotus feet as referred in dvaya mantra **"SrIman nArAyaNa charanu"**

0-41 எம்பெருமான் கண்ணனே பரத்வம் என்று நமக்கு காட்டி கொடுத்த கோதா பிராட்டியின் திருவடிகளை வேறு ஒரு புகலின்றி சரணமாக அடைகிறேன், **அடியை அடைந்தேனே**

கே3ாத3ாம் அநந்ய ஶரண: ஶரணம் ப்ரபத்3யே
(கோதாஸ்துதி 1)

We prostrate and surrender to the lotus feet of gOdA, without any other refuge, who showed and instructed that lord kR^ShNA is the ultimate supreme god, adiyal adaintEnE

gOdAm ananya Sarana: SaraNam prapadye

(gOdAstuti 1)

0-42 **அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய், ஆழ்வார்கள்**
தம் செயலை * விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப் / பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப் * பத்தியுடன் நாளும் *
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து
(உபதேச ரத்னமாலை 24)

a'nju kuDikku oru santatiyAi AzhvargaL
tam Seyalai vi'nji niRkum tanmaiyaLAi / pi'njAip
pazhuttALai ANDALai * pattiudan nALum *
vazuttAy manamE mkizhntu
(upadesa ratnamAlai 24)

0-43 ஐந்து லக்ஷமாய் இருக்கும் ஆய்ப்பாடி குடி மக்களுக்கு ஒரு விளக்காய், பகவானுக்கு என்ன வந்து விடுமோ என்று அஞ்சுகின்ற உயர்ந்த பாகவத உத்தம கோஷ்டிக்கே ஒரு சந்ததியாய், தன் செயலால் ஆழ்வார்கள் எல்லாவரையும் விட சிறந்தவராய், சிறு வயதிலேயே பக்தியில் முற்றிய ஆண்டாளை நாம் வணங்குகிறோம்.

AyarpAdi is a communion of five lakh (anju laksham) cowherds. These flawless devotees (uttama bhAgavatA-s) are always concerned and scared (anjukinRa) for kR^ShNA's welfare. ANDAL, the sole representative of that dynasty, bloomed into bhakthi at very early age demonstrated her noble actions which are superior to other AzhvArs. We prostrate to that ANDAL's golden feet.

மானமிலா மாதாய் தோன்றி, மாதவம் தானே போற்றி
ஞானமிலாதார் முதல் இன்றி, நப்பின்னை தாள் பற்றி
வானத்து வாழ்வாரும் வந்து, வணங்கும் திரு வேங்கட
கானத்து திரியும் கண்ணன், கருணையைக் காட்டிட 2

ஞானமிலாதார்	= எம்பெருமானை அடைய கர்ம, பக்தி யோகங்களுக்கான ஞானம் சிறிதும் இல்லாதவர்
முதல் இன்றி	= அகிஞ்சனராய் கைம்முதல் எதுவும் இன்றி
நப்பின்னை தாள் பற்றி	= நப்பின்னையுடம் புருஷகார ப்ரபத்தி செய்து அதன் மூலம் அடையும்
வானத்து வாழ்வாரும்	= மோக்ஷத்தில் உள்ள நித்யஸூரிகளும், முக்தர்களும் ஆச்சரியத்துடன்,
வந்து வணங்கும்	= கீழ் இறங்கி வந்து நமஸ்கரிக்கும் [பெருமான்]
கானத்து திரியும் கண்ணன்	= காட்டிலே கன்று மேய்க்கும் கண்ணன்
திரு வேங்கட	= [இங்கே] திருவேங்கட மலையில்
கருணையைக்	= தயை என்கிற உயர்ந்த குணத்துடன் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறான்.
காட்டிட	= அதை உலகிற்கு காட்டவே
மானமிலா	= ஓர் அளவு என்று வரையறுக்கமுடியாதபடி
மாதாய் தோன்றி	= பெண் ஆழ்வாராய் அவதரித்து
மாதவம்	- உயர்ந்ததான ப்ரபத்தி என்னும் உபாயத்தை
தானே போற்றி	= தானே அனுஷ்டித்து காட்டினாயே!

mAnamilA mAdhAy thOnRi, mAtavam tAne pORRi
j~nAnamilAdAr mudal inRi, nappiNai tAL paRRi
vAnattu vAzhvArum vandu, vaNangum tiru vEngada
kAnattu tirium kaNNan karuNaiyaik kAttida 2

j~nAnamilAdAr	= Those who doesn't have the knowledge to carry out karma, gnana and bhakthi yogas
mudal inRi	= having nothing to offer from their side

nappiNai tAL paRRi	= by holding the feet of nappinai for the mediation and through her reaching the lord
vAnattu vAzhvArum	= those eternls and liberated sould (nithya, mukthas) who live above (in paramapadam)
vandu, vaNngkum	= come down and prostrate
kAnattu tirium kaNNan	= kR^ShNA, the cowherd, whose job is to let the small calves to gaze on the forest green
tiru vEngada	= [that kaNNA] is here in Tirvegada hills
karuNaiyai	= displaying His amazing qulaity of compassion
kAttida	= to enlighten [that great qulaity to the world]
mAdAy thOnRi	= [gOdA] was born as a femal azhvaar
mAnamilA	= without any limits or bounds [to her auspicious qualities]
tAne pORRi	= and she herself performed
mAtavam	= the greatest penance [prapatti].

0-44 மானம் என்றால் ஓர் அளவு. **மானமிலா** என்பதால் அளவில்லாத, எல்லையை வரையறுக்க முடியாத.

பூமி பிராட்டியின் அவதாரமாய் தோன்றிய ஆண்டாளின் பெருமை, பொறுமை, ஜீவன்களிடம் உள்ள வாத்ஸல்யம் என்ற உயர்ந்த குணங்களை ஒரு அளவிட்டு சொல்ல முடியாது. அவளுக்கு நிகர் அவளே.

mAnam means limit or bounds. mAnamilA means limitless, no ends or boundaries.

ANDAL was born as the incaranation (avatArA) of bhUmi pIratti. Her noble characters like patience, compassion, extreme affection towards all the souls, are countless. In fact, there is no one equal to Her in these great qualities.

0-45 ஸம்பிரதாயத்தில் பொதுவாக, எல்லோரும் ஆண்கள். அவர்கள் ஸ்ருதி, ஸ்மிருதிகளைக் கொண்டு பல சாஸ்திரங்களை தந்தனர். ஆனால் ஆண்டாளோ ஓர் பெண்ணாக தோன்றி, இயற்கையான பாரதந்திரியத்தை காட்டி, எல்லோரும் அனுஷ்டிக்க பிரபந்தமாக அருளிய மேன்மை இவள் ஒருத்திக்கே.

generally, in our tradition mostly male created the rulebooks (shAstrA-s) from srutis (vedA-s), smruthis. Woman had the drawback of being barred from them. But ANDAL appearing as a woman displayed her natural total depedency (pAratantriyam) and poured out the essence of those shAstrA-s into simple Tamil verses for the benefit of everyone to recite and follow them. That supremacy goes only to Her.

0-46 **பே4ாக்தும் தவ ப்ரியதமம் ப4வதீவ கே3ாதே3**
ப4க்திம் நிஜாம் ப்ரணய ப4ாவநயா க்3ருணந்த: ।
உச்சாவசைர் விரஹ ஸங்க3மஜை ருத3ந்தை:
ஶ்ருங்க3ாரயந்தி ஹ்ருத3யம் கு3ரவஸ்த்வதீ3யா: ।।
(கோதாஸ்துதி 8)

என்று ஸ்வாமி தேசிகன் கோதாஸ்துதியில் கூறுகிறார். பாரதந்திரியமும் பெண்ணின் காதல் என்பது உனக்கு இயற்கை. மற்றவர்கள் ஏறிட்டு (assume the role of a female) கொள்ள வேண்டும்.

கே3ாதே3 ப4வதி இவ = கோதை பிராட்டியே உன்னைப்போல
தவ ப்ரியதாம் பே4ாக்தும் = உனக்கு அன்பான கண்ணனை அனுபவிக்க
நிஜாம் ப4க்திம் = தங்கள் பக்தியை
ப்ரணய ப4ாவநயா க்3ருணந்த: = காதலாக நடித்து
உச்சாவசைர் = பல்வேறான
விரஹ ஸங்க3மஜை = பிரிகை, சேர்க்கை போன்ற ஊடல்
உத3ந்தை: = வார்த்தைகள் சொல்லி
ஶ்ருங்க3ாரயந்தி ஹ்ருத3யம்= காதல் கொண்ட இதயமாக்கி கொண்டனர்
த்வதீ3யா: கு3ரவ: = உம் தந்தை போன்ற பெரியோர்

bhoktum tava priyatamam bhavatIva gOde
bhaktim nijAm praNaya bhAvanayA grnantah
uccAvacair viraha samgamajai rudantaih
srNgArayanti hrdayam guruavas tvadIyAh
(godAstuti 8)

SvAmi deSikan beautifully describes in godAstuti that the state of utter depedence (pAratantiraym) and the feminine love are natural to you. But others (azhvArs) had to act like a female and assume that role.

gOde bhavatI iva	= Oh godA pirAtti, just like you
tava priyatamam bhoktum	= enjoy your loving husband
tvadIyAh guruava	= your father and elders
nijAm bhaktim	= their bhakthi
praNaya bhAvanayA grnantah	= converted as the deep love
uccAvacair udantaih	= and talked various
viraha samgamajai	= about lovers' quarrels and compromise etc.
srNgArayanti hrdayam	= made their heart filled with sentiments of love

0-47 ஆகவே ரிஷிகளோ, ஆழ்வார்களோ, ஆசாரியர்களோ, இவளுக்கு உபமானம் சொல்ல முடியாதபடி என்பதால் **மானம் இலா மாதாய்.**

And so, there is no rishi, AzhvAr or AchArya who can be comapred to gOdA. That is why mAnamilA mAdhAy, without any boundaries

0-48 **மாதாய்** என்பது **மாது + ஆய்** = பெண்ணாக என்று ஒரு பொருள். **மா + தாய்** = பெரிய அன்னை

mAdhAy can be broken into madu +Ay which means as a female. But it can also be broken into mA + thAy, which means great mother.

0-49 கோதை பெண்ணாக மட்டும் அவதரிக்காது, உயர்ந்த அன்னைக்கே உள்ள தயை, வாத்ஸல்யம், காருண்யம் போன்ற திருக்கல்யாண குணங்களை பிரகாசிப்பதால் மேம்பட்ட **மாதாய் தோன்றி.**

gOdA descended down not just as a girl, but also displayed down here, superior qualities of an excellent mother - affection, compassion, and tolerance. That is why mAdhAy tOnRi

0-50 தாயாருக்கே உள்ள பரிவால் ஒரு பக்கம் கட்டிலும், ஒரு பக்கம் தொட்டிலுமாய் சேர்த்து வைப்பதால், **மாதாய் தோன்றி.**

As she display the exclusive motherly compassion to bond the cradle from on one side and the bed from the other side

0-51 **வாத்ஸல்ய நிர்ப4ரதயா ஜநநீ குமாரம்**
ஸ்தந்யேந வர்த4யதி த3ஷ்ட பயோதராபி
(கோதாஸ்துதி 27)

ஜநநீ தஷ்ட பயோதரா அபி = அம்மாவின் மார்பகம் தவறி கடிக்கப்பட்டாலும்
வாத்ஸல்ய நிர்ப்ரதயா = தன் அன்பின் பெருக்கால்
குமாரம் ஸதந்யேந வர்தயதி = தன் குழந்தைக்கு பாலூட்டி வளர்க்கிறாள்

vAtsalya nirbharadayA jananI kumAram
stanyEna varthayadi dashta payOdarAbi
(gOdAstuti 27)

jananI dashta payOdarAbi = even when the mother's breast was biten
vAtsalya nirbharadayA = with the bubbling motherly compassion
kumAram stanyEna varthayadi = feed the the baby with her milk.

0-52 **மாதவம் என்பது மா + தவம் = பெரிய தவம்.**

mAtavam means ma + tavam = big penance (tapas).

0-53 ஶரணாகதி என்பது உயர்ந்த நெறி. அது ஒரு யாகம் போன்றது. தவத்திலே உயர்ந்த தவம் ப்ரபத்தி.

SaranAgaty is a superior means. It is like an yAga. It is the foremost among the many types of penances (tapas).

0-54 **தஸ்மாத் ந்யாஸ மேஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு**
(தைத் நார உபனிஷத் 50)

ப்ரபத்தி என்னும் ந்யாஸ வித்தையே எல்லா தவங்களிலும் மிக உயர்ந்தது அதனால் இது **மா தவம்.** மிகப் பெரிய தவம்.

tasmAt nyAsa mEshAm tapasAm adiriktham AhU
(tAitriya nArAyanA upanishad 50)

Therefore, this nyAsA, namely saranagathi excels all other peanances.

0-55 **நாத2 த்வதீ3ய சரணௌ ஶரணம் க3தாநாம்**
நைவாயுதா யுத கலாப் யபரை ரவப்யா
(சரணாகதி தீபிகை 29)

நாத2 த்வதீ3ய சரணௌ	= ஸ்வாமி, உம் திருவடிகளை
ஶரணம் க3தாநாம்	= சரணம் அடைந்தவர்களின்
அயுத அயுத கலா அபி	= கோடியில் ஒரு பங்கு கூட
அபரை: ந ஏவ அவாப்யா	= மற்றவரால் அடையவே முடியாது

பகவானே உம்முடைய திருவடிகளில் ப்ரபத்தி செய்தவர்களின் பெருமையை பார்க்கும்போது, அதில் கோடியில் ஒரு பங்கு கூட பெற மாட்டார்கள், மற்ற உபாயங்களை அனுஷ்டித்தவர்கள்.

nAtha tvadIya caraNau SaranaM gatAnAm
naivAyutA yuta kalAp yaparai ravApyA
(SarnAgati dIpikA 29)

Oh bhagavAn, comparing the recognition and greatness of those who have done prapatti at your golden feet, those who have performed other means, won't even qualify one billionth of it

0-56 அந்த ஶரணாகதி நெறியை எல்லோருக்கும் எடுத்து உரைப்பது மட்டும் இன்றித் தானே அனுஷ்டித்தும் காட்டினாள் ஆண்டாள் என்பதால் **"தானே போற்றி".**

ANDAL not only instructed and propagated the superior means called prapatti to everyone, but also obeyed and followed it by herself with discipline (anushtAnam). That is why tAnE pORRi

0-57 **ந த4ர்ம நிஷ்டே2ாऽஸ்மி ந சாத்மவேதீ3**
ந ப4க்திமாந் த்வத் சரணாரவிந்தே3
அகிஞ்சன: அநந்யக3தி: ஶரண்ய
தவத் பாத3 மூலம் ஶரணம் ப்ரபத்3யே
(ஸ்தோத்ர ரத்னம் 22)

ஶரணாகதி என்பது கைம்முதல் இல்லாமையும், போக்கிடம் இல்லாமையும் (அகிஞ்சன அநந்யகதித்வத்தை) முன்கொண்டது.

na dharma nishtO'smi na cAdmavEdI
na bhaktimAn tavaccaranAravinde
Aki'ncana: ananya gati: SaraNya
tvat pAda mUlam SaraNam prapadyE
(stotra ratnam 22)

SaraNAgaty is based on
(1) no means of any kind at our disposal to achieve anything [kaimmudal illAmai] (Aki'ncanyam) and
(2) no other person or place to resort to [pOkkiDam illAmai] (ananaya gativam).

0-58 பத்தி முதலாம் அவற்றில் பதி எனக்கு கூடாமல்
(அடைக்கலப்பத்து 1)

பக்தி போன்ற வேறு உபாயங்களை செய்து பலன் எனக்கு கிட்டாதலால், என்றார் ஸ்வாமி தேசிகன். அதுபோல இங்கே **ஞானம் இலாதார்** என்பது கர்ம, ஞான, பக்தி யோகங்களை செய்ய முடியாதார் என்று பொருள்.

patti mudalAm avRRil padi enakku kUdAmal
(adaikkalappattu 1)

svAmi deSikan says, means like bhakthi did not give me the fruit and so (he indulges into prapatti). Similarly here j~nAnam ilAdAr means those who can't accomplsih karma, j~nAna and bhakthi yogas.

0-59 பெரிய பிராட்டியே புருஷகாரபூதையாய் இருக்க, இங்கே நப்பின்னையைச் சொல்வது ஏன்? - வைகுந்தத்தில் பெரிய பிராட்டி போலே கோகுலத்தில் நப்பின்னை. அகிஞ்சனர்கள் **முதல் இன்றி** அந்த **நப்பின்னை தாள்** புருஷகாரமாக **பற்றி**

When ShrI mahAlakshmI, (periapirAtti) is the recommeder (puruShakAra bhUdai), one may wonder why nappinnai is mentioned here? Similar to periya pirAtti in SrI vaikundam, nappinnai is here at gokulam. Individual souls with a destitute reach nappinnai as a mediator, mudal inRi nappinnai tAL paRRi.

0-60 மாண்டு பிறப்பு ஒழிந்து வைகுந்தம் புக்கவரும்
மீண்டு வந்து தொழ காதலிக்கும் வேங்கடமே

என்கிறபடி, எண்ணற்ற பிறவிகளுக்கு பின் பிறவிச்சுமையை கழித்து ஒழித்து, ப்ரகிருதி மண்டலம் தவிர்த்து, பரமபதம் ஏறிய முக்தர்களும், நித்யஸூரிகளுடன், கீழ் இறங்கி வந்து தொழுது ஆனந்திப்பதால், **வானத்து வாழ்வாரும் வந்து வணங்கும் திரு வேங்கடம்.**

mANdu piRappu ozhindu vaikuntam pukkavarum

mINdu vandu thozha kAthalikkum vEngadamE

Even the liberated souls (mukthAs) who deserted this prakriti and climbed the abode paramapadam after countless births and deaths, crave to come down adoringly with eternals (nithyasOris) and pay homage at this place called tiru vengadam, vAnattu vAzhvArum vantu vaNangum tiru vEngada

0-61 **வானவர்கள் சந்தி செய்ய நின்றான்**
(அமலனாதிபிரான் 3)

விண்ணோர் தொழும் வேங்கட மாமலை மேய
அண்ணா, அடியேன் இடரைக் களையாயே
(பெரிய திருமொழி (1-101)

மேல் உள்ளவர்கள் கீழ் இறங்கவும், கீழ் உள்ளவர்கள் மேலே ஏறவும் நடுவே வந்து நின்றான் திருவேங்கடமுடையான்.

vAnavargaL sandi seyya ninRAn
(amalanAdipiran 3)

This tiruvangadamudiyAn came and stood in the middle, so that those who are above can come down easily and those who are on the ground can climb up and pray to him.

திரு வேங்கட கானத்து திரியும் கண்ணன்
tiru vEngada kAnattu tiriyum kaNNan

0-62 மாடு மேய்க்கும் கண்ணன், அவனே திருவேங்கட மலையில் உள்ளான்

kaNNan, the cowherd, who takes care of the grass gazing of cows, is the one now standing at tiruvengadam

0-63 **காட்டில் வேங்கடம் கண்ணபுர நகர்**
வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன்
(நாச்சியார் திருமொழி 4-2)

என்றே ஆண்டாளும் திருவேங்கடத்தை காடு என்றாள். அந்த காட்டிலே ஒரு வேடனாக வந்தவன் கண்ணாகிற திருவேங்கடமுடையான்.

kAttil vEngadam kaNNapura nagar
vAttam inRi magizntuRai vAmanan
(nAchiAr tirumozhi 4-2)

ANDAL also called the tiruvengadam as the forest. kaNNan is the one came as a hunter called tiruvengadamudiyAn in that forest.

0-64 **காடுகள் ஊடு போய்க் கன்றுகள் மேய்த்து**
மறியோடி, கார்க்கோடல் பூச்சூடி வருகின்றா தாமோதரா!
(பெரியாழ்வார் திருமொழி 3-3-3)

என்று இவளுடைய தந்தையும் காட்டிலே கன்றுகள் மேய்க்கும் கண்ணனே! என்று அழைக்கிறார்.

kAdugaL Udu pOyk kanRugaL mEyttu
maRiyOdi, kArkkOdal pUcchUdi varuginRa dAmOdarA
(periyAzvAr tirumozhi 3-3-3)

Her father, periyAzvAr also calls kanNNan as the one who helps the cows to gaze the grass in the forest.

0-65 **கண்ணன் அடி இணை எமக்கு காட்டும் வெற்பு**
கடுவினையர் இரு வினையும் கடியும் வெற்பு
(அதிகார ஸங்ரஹம்)

கிருஷ்ணனின் இரண்டு திருவடிகளை காட்டக் கூடியது திருவேங்கடம் என்றார் ஸ்வாமி தேசிகன்.

kaNNan adiyiNai emakku kAttum veRpu
kaduvinaiyar iruvinaiyum kadiyum veRpu
(adikAra sangraham)

sVami deSikan calls the tiruvengadam as the one which clearly shows the two lotus feet of kR^ShNA

0-66 **ப்ரபூ4த விபு3த4 த்3விஷத்3 ப4ரண கி2ந்ந விஶ்வம்ப4ரா-**
ப4ராப நயநச் ச2லாத் த்வ மவதார்ய லக்ஷ்மீத4ரம்
(தயா சதகம் 89)

ப்ரபூ4த விபு3த4 த்3விஷத்3 = பலமான தேவர்களின் பகையான அசுரர்களை
ப4ரண கி2ந்ந விஶ்வம்ப4ரா = தாங்கியதால் வருந்திய பூமாதேவியின்
ப4ர அபநயநச் ச2லாத் = சுமையை கழிக்க வேண்டும் என்ற ரீதியில்
த்வம் லக்ஷ்மீத4ரம் = நீ ஶ்ரீநிவாஸனை
அவதார்ய = [கண்ணனாக] அவதரிக்கச் செய்து

தயாதேவியே ஶ்ரீநிவாஸனை கண்ணனாக அவதரிக்கச் செய்தாள் என்கிறார். அசுரர்களின் சுமை ஒழித்து பூதேவியின் பாரத்தை குறைக்க திருவேங்டகமுடையானே, நீ கண்ணனாக அவதரித்தாய் என்கிறார் ஸ்வாமி தேசிகன், தயா சதகத்தில்.

prbhUta vibudha dviShad bharNa khinna viSvambharA-
bhara apanayana cchalAt tvam avatArya lakshmIdharam
(dayA Satakam 89)

prbhUta vibudha dviShad	= asurAs who were the enemies of strong devas
bharNa khinna viSvambharA	= were a huge burden to bhUdevi and she was in despair
bhara apanayana cchalAt	= To unload those,
tvam avatArya lakshmIdharam	= you descended down, ShrInivAsa

To remove the asurAs who were the burden to bhU devi, shrInivAsA, you incaranated as kirshNA, claims Svami deSikan in his dayA Satakam

0-67 கண்ணனின் கருணை என்பது உபனிஷத்தின் ஸாரமான பகவத் கீதையாகவும், அதிலும் முக்யமாக அந்த கீதையின் சாரமாக சரம ஸ்லோகமாகவும் பொங்கி வந்துள்ளது. **கண்ணனின் க்ருணையைக் காட்டிடவே** கோதையின் கீதை.

The compassion of kaNNan was released as the downpour of the essence of upanishads as bhagavad gItA and more significantly the charama sloka which is the heart of bhagavad gItA. ANDAL's gita is to illustrate the compassion of the lord kR^ShNA, karuNaiyaik kAttita

0-68 சரம ஸ்லோகத்தில் எம்பெருமானின் வாக்கு

- உன் தகுதிக்கு (பொறுமை, ஞானம், ஜாதி, சக்தி - TICE) பொருந்தாத பக்தி போன்ற யோகங்களை மோஷோபாயமாக துளியும் அணுகாது **(ஸர்வ தⅹர்மாந் பரித்யஜ்ய)**
- வேற்றுமை பாராது எல்லோரையும் காக்கும் என்னை ஒருவனையே சரணம் என்று அடைந்தால் **(மாம் ஏகம் ஶரணம் வ்ரஜ)**
- கற்பக மரம் போல், என் ஸங்கல்பத்தை யாராலும் தடுக்க முடியாதபடி உள்ள, நானே உன்னோடு அநாதி காலமாய் ஒட்டிக்கொண்டு உன் இயற்கை ஸ்வரூபத்தை மறைக்கும் எல்லா விதமான பாபங்களையும் விலக்கி **(அஹம் த்வா ஸர்வ பாபேⅹய்யோ)**
- உயர்ந்த நித்யஸூரிகளுடன் ஸம்ஸாரத்தை எட்டிப் பார்க்காத வகையில் உன்னை சேர்த்து, அவருடன் எனக்கு நித்ய கைங்கர்யம் செய்யும் மோஷ ப்ராப்தியை அளிக்கிறேன், நீ எதற்கும் வருந்தாதே! **(மோக்ஷயிஷ்யாமி மா ஶுச:)**

In the charma sloka, lord SrI kR^ShNA commands to,

- completely divorce all the ineligible means like bhakthi for mOksham, [TICE – Time, Intelligence, Cast and Energy] **(sarva dharmAn parityajjya)**

- surrender only to me as your sole savior and I treat everyone with any indifference (**mAm ekam SaraNam vrajA)**
- I, myslef will remove all your sins which are sticking to you eternally. I am like a boon tree (karpaga vrukshA) and no one can stop my intention (sankalpam) **(aham tva sarava pApEbhyO)**
- confer you the eternal bliss (mOksham) escape from this birth/death cycle (samsArA), and put you in a place with eternals and grant you to offer ceaseless service to me (nithya kaimkaryam) **(mOkshayishyAmi mAsucha)**

0-69 **ஔத்ஸுக்ய பூர்வ முபஹ்ருத்ய மஹா பராத4ாந்**
மாத: பரஸாத3யிது மிச்ச2தி மே மநஸ் த்வாம் ।
ஆலிஹ்ய தாந் நிரவஶேஷ மலப்3த4 த்ருப்தி:
தாம்யஸ் யஹோ வ்ருஷகி3ரீஶ த்4ருதா த3யே த்வம் ।।
(தயா சதகம் 97)

ஸ்வாமி தேசிகன் எம்பெருமானின் கருணையின் எல்லையை வர்ணிக்கிறார்

மே மந:	= என் மனது
ஔத்ஸுக்ய பூர்வம் உபஹ்ருத்ய	= ஆசையுடம் காணிக்கையாக
மஹா பராத4ாந்	= மிகப் பெரிய பாபங்களால்
த்வாம் பரஸாத3யிதும் இச்ச2தி	= உன்னை மகிழ்விக்க விரும்புகிறது
த்வம் தாந் நிரவஸேஷ	= நீ அந்த பாபங்களை துளியும் மீதி இல்லாமல்
ஆலிஹ்ய அலப்3த4 த்ருப்தி:	= ருசித்து, திருப்தி அடையாதவளாய்
தாம்யஸி அஹோ	= வருத்தப்படுகிறாய், என்ன ஆச்சரியம்!
வ்ருஷகி3ரீஶ த்4ருதா	= மலையப்பனால் தரிக்கப் பெற்ற
மாத: தயே	= தாயாகிய தயா தேவியே.

மோக்ஷம் வேண்டி நான் செய்த ப்ரபத்தியில் மகிழ்ந்து, நீ என் பாபங்கள் எல்லாம் பொசுக்கினாய். இந்த உயிர் பிரியும்போது நீ மோஷம் அளிப்பது

நிச்சயம். தவிர, ப்ரபத்திக்கு பின் தினமும் செய்து வரும் பாபங்களை ப்ரயாசித்தம் போன்ற எதோ ஒரு வகையில் அழிக்க தயாராக இருக்கிறாய். இது எல்லாம் செய்து திருப்தி அடையாதவளாய் இன்னும் என்ன இருக்கிறது என்று என் பாபங்களை அழிக்க தேடுகிறாய்!

autsukya pUrva mupahrtya mahAparAdhAn
mAtah prsAdayitu micchati me manas tavAm
Alihya tAn niravaSesha malabdha trptih:
tAmyasyaho vrShagirISa dhrutA daye tvam
(dayA Satakam 89)

SvAmi deSikan extols on the infinite mercy of the lord.

satisfied with my total and unconditional surrender (prapatti), dhayA dEvi, you annihilated all my sins. when my soul leaves this body at the end of this life, you definitely are going to confer me with mOksham. Besides, for the sins I do continuosuly every day after prapatti, you are preared to wipe them out through atonement (prAyaschittam) or by some other means. After doing all these, you still are unsatisifed and searching what other sins are left out with me to eradicate them also completely

நான் செய்ததோ ஒரு முறை அல்ப காரியமான ப்ரபத்தி. அதை பெரியதாக நினைத்து நீ மகிழ்கிறாய். அதுமட்டுமா? நீ செய்கின்ற மஹா காரியங்களை அல்பமாக நினைக்கிறாய். நான் செய்த ப்ரபத்திக்கு கைம்மாறு செய்ய முடியவில்லையே என வருந்துகிறாய், பகவானே உன் கருணையின் எல்லைதான் என்ன?

what I have done is, only once a cheap and simple action called prapatti. You treat that as if it is so huge and are extremely happy. In addition, you consider that your great actions as the cheap ones. You also repent that you could not repay enough for the prapatti, I have done. oh Lord, where is the end for your great compassion!

0-70 திருப்பாவை என்பது கண்ணனின் கருணையால் வந்த சரம ஸ்லோகத்தில் விதித்துள்ள ப்ரபத்தியை விவரிக்கும் பிரபந்தம் என்பதே இந்த **திருப்பாவையில் இருப்பாயே** பாடல்களின் நோக்கம்.

The objective of this book "**tiruppAvaiyil iruppAyE**" is to exemplify that the verses of ANDAL's tiruppAvai is nothing other than the detailed explanation of charama sloka, commanded by lord SrI kR^ShNA out of His magnanimous compassion.

0-71 **மார்கழி திங்கள்** என்று "**மா**" என்ற சப்தத்தில் திருப்பாவை ஆரம்பிப்பது போல் இங்கே இரண்டு தனியன்களும் **மாலை சூடித் தந்து, மானமிலா மாதாய்** என்று அதே "**மா**"விலே ஆரம்பிக்கின்றன.

tiruppAvai starts with "mA" in mArghazi tingaL. Similarly here, the two tanian verses start with **mA** as in mAlai sUdi ttandu, mAnamilA mAday

0-72 ஸ்ரீரங்கநாதனையும், திருவேங்கடமுடையானையும் உய்யக் கொண்டார் அருளிய தனியன் ரீதியாகவே இங்கும் சொல்லப் பட்டது.

shrI uyyakkondAr in his tiruppAvai tanian explictly mentioned about shrI ranganathA and shrInivAsA and we followed his lead in out tanians also.

0-73 பட்டர் தனியனில் அருளியபடி ஜீவாத்மாகளின் பாரதந்திரியம் காட்டப் பட்டது.

shrI parAsara bhattar indicated about the individual souls utter dependence (pArAtantriyam) in his saMskr^it tanian. We followed his example here.

0-74 ஸ்வாமி தேசிகன் கோதாஸ்துதியில் ஸாதித்த முறையில் கோதையின் திருவடிகளை சரணமாக அடைவதை காட்டுகிறது.

SvAmi deSikan in his gOdAstuti expresed about surrendering at the feet of gOdA in the first sloka itself. Same pattern is followed here.

0-75 **மானமிலா பன்றியாம்** என்று திருவராகனை போற்றுகிறாள், கோதை நாச்சியார் திருமொழியில். பூமிதேவி, அந்த வராகனிடம் கேட்ட சரம ஸ்லோகத்தை எல்லோரும் அறிந்து மோக்ஷ ப்ராப்தியை பெற வேண்டும் என்ற உதார குணத்தினால், கோதா பிராட்டியாக இந்த பூமியில் அவதரித்தாள். அதனால், இவளை **மானமிலா** என்று சொன்னது இங்கே.

gOdA, in her nAchiAr tirumozhi, cherishes SrI varAha perumAn as mAnamilA panRiyAm. bhU devi who listened to the charma slokam from that mighty varAha, came down to this earth as gOdA to help out the individual souls to ascend to permanent bliss (mOksham). That gOdA is called here by the same adjective "mAnamila" (boundless compassion).

0-76 **மாயன், ஆலிலையான்** என்பதால் பரத்வமும், **அரங்கன், வேங்கட கண்ணன்** என்பதால் ஸௌலப்யமும் காட்டியது.

mAyan, AlilaiyAn shows the supremacy (para tattvam) and arangan, vEngada kaNNan shows easy accessbility (saulabhyam)

0-77 **ஆலிலையான் அடி** என்பதாலே த்வய வசனத்தின்படி இரண்டு திருவடிகளையும் சொன்னது.

The phrase AlilaiyAn adi is in synchronization with dvaya mantrA, as it mentions the two lotus feet of the lord.

0-78 **மாநாதீத ப்ரதித விபவாம்** என்றே ஸ்வாமி தேசிகன் **ஸ்ரீஸ்துதியை** ஆரம்பிக்கிறார். **மாந அதீத** என்பதால் எல்லையில்லாத ப்ரபாவங்களை உடைய லக்ஷ்மியே என்கிறார். அதே ரீதியில் இங்கே கோதா பிராட்டியை இரண்டாம் தனியனில் **மானமிலா மாதாய்** என்றது.

mAnAtIta prathita vibhavAm is the opening phrase of SvAmi desikAn in his ShrIstuti. **mAna atita** means boundless. He calls the glories of ShrI lakshmI as boundless. In a similar fashion, gOdA pirAtti is called mAnamila mAtAy in the opening of our second tanian verse.

0-79 ஜீவன் மோக்ஷம் அடைய ஆசாரியன் அருள் இன்றிமையாதது. அது இல்லாமல் மோக்ஷம் இல்லை. ஒரு ஸாதாசாரியனை அடைய பகவானின் நிர்ஹேதுக க்ருபையே முதல் காரணம் என்று ஸ்வாமி தேசிகனின் வாக்கு ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரய ஸாரத்தில். ஆசாரியன் அருள் இல்லையேல் மோக்ஷம் இல்லை.

ஆசாரியனை அடைவதற்கும், அவர் மூலமாக பிராட்டியிடம் புருஷகார பரபத்தியும், அவள் மூலமாக மோக்ஷத்தை அளிக்கும் கண்ணனின், அந்த காரணமிலா கருணையை காட்டவே கோதையின் அவதாரம், திருப்பாவையின் தோற்றம் என்பது இந்த தனியன்களின் ஸாராம்ஸம்.

For the individual soul to ascend to mOksham, the blessings of the AchAryA is inevitable. Witout AchAryaA's blessings (kaTaksham), there is no attainment of mOksham. SvAmi deSikan, in his shrImad rahasya traya sAram states that for any individual soul (jeevAtma) to approach a noble teacher (satAchArya) the first and foremost reason is the causeless compassion (nirhEdhuga krupA) of the lord.

The incaranation (avatAra) of gOdA and the origin of tiruppAvai is to demonstrate to the world about the causeless compassion (nirhEduga krupa) of lord kR^ShNA. And that is the primary and exalted emphasis in these two verses.

0-80 நமக்கு பகவானைக் காட்டித் தந்து, அந்த எம்பெருமானுக்கே உபதேசம் செய்து, அவனை மயக்கி, அவனிடம் நம்மை காட்டித் தந்த கோதையின் திருவடிகளை சரணமாக அடைகிறோம் என்று முக்யமான கருத்துக்களை ஆழ்வார்கள், ஆசாரியர்கள் அனுபவித்த முறையிலேயே இந்த இரண்டு தனியனிலும் சொல்லி அவதாரிகையை ஆரம்பிக்கிறோம்.

We take refuge at the feet of gOdA, who educateed and showed us the bhagavAn and also instructed to that lord Himself by charming Him. This moral, as emphasized by our AchAryA-s was the main highlight in

these two tanian verses. With that prelude, now we will get into the birth of (avathArgai) of tiruppAvai.

அவதாரிகை (Introduction)

நல்லறிவு இருக்குங்கால், நானிலத்தில் ஒருவன்
சொல் ஒன்றாலே, சரணம் அடைந்த பின்னே
கல் கட்டையாய் கிடப்பினும், நினவு தானே தந்து
இல்லழைத்துச் செல்லுமிறையும், வராகன்தானே! 3

நல்லறிவு இருக்குங்கால்	= உடம்பு நல்ல நிலையில் (ஸ்வஸ்தமாக) இருக்கும்போது
நானிலத்தில் ஒருவன்	= இந்த கர்ம பூமியிலே ஒருவன்
சொல் ஒன்றாலே	= வேறு ஒன்றும் தேவையற்று, அல்பமான தன் வாக்கு ஒன்று மட்டிலுமே
சரணம் அடைந்த பின்னே	= எம்பெருமானே நீயே எனக்கு கதி என்று அடைக்கலம் அடைந்தால்
கல் கட்டையாய் கிடப்பினும்	= அவன் உயிர் பிரியும் தருணத்தில், அவனுக்கு நினைவு (ப்ரஞ்ஞை) எப்படி இருந்தாலும்
நினவு தானே தந்து	= எம்பெருமானைப் பற்றிய நினைவைத் தானே அவனுக்கு அளித்து
இல் அழைத்துச் செல்லும்	= வான் வீடு என்னும் மோக்ஷத்திற்கு கொண்டு செல்லும்
இறையும், வராகன்தானே!	= ரக்ஷகன் என்பதும் வராகப் பெருமான்தானே!

nallaRivu iruKungAl nAnilattil oruvan
sol onRAlE, saraNam adainda pinnE
kal kattaiyAy kidappinum, ninaivu tAnE tandu
illazaittu sellum iRaiyum varAgan tAnE ! 3

nallaRivu iruKungAl	= while body and mind are in good condition
nAnilattil oruvan	= for anyone who is on this universe (karma bhumi)
saraNam	= after having done total unconditional surrender (prapatti)

adainda pinnE	= at the Lord's lotus feet without any other refuge
sol onRAlE	= by doing that with just mere words only. [then]
kidappinum	= during last stages of life, if one loses senses and
kal kattaiyAy	= remain like a stone or a piece of wood
ninaivu tAnE tandu	= [at that time] by giving divine memory by himself
illazaittu sellum	= and taking to His home srivaikuntam by Himself
iRaiyum varAgan tAnE	= is the protector, none other than SrI varAga peruman

0-81 ஸ்ரீமந் நாரயணனனின் பத்னியான பூமி பிராட்டி, பெரிய பிராட்டிக்கு அடுத்தது, பெருமையில். பொறுமையின் ரூபமான அவளின் அவதாரமே கோதை எனும் ஆண்டாள்.

bhUmi devi, the divine wife of the lord SrIman nArAyaNA, has the highest status, right after SrI mahAlakshmi in our tradition (sampradAyam). bhUdevi is the emobdiment of the quality, forbearnace or patience (kshamA). That bhUmi pirAtti, personification of the earth, has incarnated down (avatAram) as gOdA, also known as ANDAL.

0-82 வராஹ புராணத்தில் பூமி பிராட்டியின் மஹிமை உள்ளது. புராணங்களில் ஸாத்விக புராணம் என்பவை 6 (விஷ்ணு, பாகவத, வராக, நாரத, பாத்ம, காருட) ஸாத்விக புராணங்கள் வேதங்களின் உண்மையான அர்த்தங்களை விளக்கி காட்டின. இவற்றில் வராஹ புராணம் தத்துவம், உபாயம், பலன் இவற்றை அசைக்க முடியாதபடி காட்டுகிறது.

varAha purAnA cherishes the splendor of this bhUmi priAtti. only six out of eighteen purAnAs are sAtvic in nature. They are SrI vishNu, bhAgavata, varAha, nArada, pAdma, gAruda, purAnAs. these six illustrate the true meanings of vedA-s. Among them SrI varAha purAna explains unequivocally the reality (taatvam), means (upAyam) and goal (palan).

0-83 ஒரு முறை ஹிரண்யாக்ஷன் என்கிற அசுரன் பூமியை கவர்ந்து கடலின் உள்ளே எடுத்து சென்ற போது, பூமி பிராட்டி பூமியாகவும், பகவான் வராகராயும் அவதரித்தனர். வராகப் பெருமான் ஆழ்கடலில் அமிழ்ந்து அசுரனைக் கொன்று பூதேவியை காத்து மீட்டினார்.

Once, a demon (asurA) named hiraNyAkshan seized the earth and submerged it under the vast ocean. bhUdevi took the role of the mother earth and bhagavAn assumed (avatArA) the form of a boar (varAhan). varAha perumAn came to her aid by diving deep down into great waters. He then rescued the bhUmi priAtti after fighting and winning the war over the demon.

0-84 எம்பெருமானின் வாயிற்காப்போனாகிய ஜய விஜயர்கள், ஸநகாதிகளை (பிரம்மாவின் நான்கு மானஸீக புத்ரர்கள் ஸனகர், ஸநாதனர், ஸநந்தனர், ஸநத் குமாரர்) வைகுந்தத்தின் உள்ளே அனுமதிக்காதலால் சாபம் பெற்று, எம்பெருமானால் பல பிறப்பு பாகவதானாகவோ அல்லது மூன்று பிறப்பு பகைவனாகவோ இருந்த பின் நீ வைகுந்தம் பெறலாம் என்பதற்கு பின்னதை அவர்கள் வேண்டினர். அதன்படி ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு; ராவணனன், கும்பரகர்ணன்; கம்ஸன், தந்தவக்ரன் எனப் பிறந்தனர்.

once, jayA, vijayA the gatekeepers (dvArabAlagar-s) of SrIvaikuntam, unknowingly prevented the entry of sanaka-s (the four sons born from the mind of brahma – sanakA, sanAtanA, sanandanA, sanatkumArA) . They got mad and cursed these two gatekeepres. When jayA and vijayA pleaded with the lord, lord said that he can't erase the fault caused to his devotees (bhAgavata apachAra). But he said that he will give them a choice that they can be born on earth many births as bhAgavatAs or three times as enemies and return after that. They chose the latter. That is how we see -- hiraNyAkshan, hiraNyakasibu; rAvaNan, kumbakarNan; sisubAlan, tantavakran.

0-85 இங்கே ஒரு கேள்வி - ஸாத்விகமான மோக்ஷத்தில் நித்ய ஸூரிகளான ஜய விஜயர்கள் பாகவத அபசாரம் செய்தார்களா? அவர்கள் சாபம் பெற்று கீழே வந்தார்களா என்று.

There is a small doubt here. did jaya and vijaya, the nityasOris in mOksha really acted shamefully (apachAram)? Is it possible to harm a devotee (bhAgavata apacharA) even in mOksham where it is full of sAtvic qualities? Because of the curse, did they really come down?

0-86 அந்த வைகுந்தம் மோக்ஷம் இல்லை. இது கீழே காரிய ஸ்ரீவைகுந்தமாக எம்பெருமான் அமைத்துக் கொண்ட ஒன்று. விஷ்ணு லோகம் எனப் பெயர். இங்கே உள்ள வாயில் காப்போன் தொழில் பெயர் ஜய விஜயர்கள். ப்ரம்மா, சிவன் என்கிற தொழில் பெயர்போலே. இவர்கள் பத்த ஜீவர்கள்.

இந்த விஷ்ணு லோகம் என்பது மோக்ஷம் இல்லை. இங்கே சாபம் பெற்றவருக்கும் மோக்ஷத்தில் உள்ள ஜய விஜயர்களுக்கும் சம்பந்தம் இல்லை. [நித்யஸூரிகளும் விஷ்ணு லோகத்திற்கு வந்து கைங்கர்யம் செய்யலாம். ஆனால் இந்த ஜய விஜயர்கள் நித்யஸூரிகள் இல்லை.]

No, this is not mOksham. The vaikuntam referred here is an identical one created by the lord in the prakriti and is called vishnu lokam. The gatekeeprs here are called jayA vijyA. In fact, jayA and vijayA are merely the names of the position as gate keepers, just like brahma, shivA which are titles of their position. these two are not eternals (nithyasOri) but are bounded (baddha) souls.

this vishNu logam is not the real mOksham and the two who got the curse has no connection with the jaya vijaya in mOksham. [For that matter, nithyasoris can come and perfrom service in vishunu logam too. But those two referred here in our episode are not.]

0-87 ஸ்வாமி தேசிகன் விரோதி பரிகாரத்தில் கடைசியாக ஸாதிக்கிறார். "அடியிலே ஸ்ரீவிஷ்ணு லோகத்திலே த்வாரபால பதம் பெற்றார் இரண்டு

க்ஷேத்ரஜ்ஞர் பாகவதாபசார விசேஷத்தாலே மூன்று ஜன்மம் ப்ரதிகூலராய்ப் பிறந்து, அவ்வபசார பலவஸாநத்திலே பழைய பதம் பெற்று, க்ரமேண முக்தராய் நின்றார்கள் என்று புராண ஸித்தமாகையாலே

SvAmi deSikan explains this in the virOdhi parikAram.

0-88 பாகவதமும் (7.1.36) ப்ரம்மாவின் புத்ரர்களான் ஸநகாதிகள் ஸஞ்சரிக்கும்போது எதேச்சையாக விஷ்ணு லோகம் வந்து சேர்ந்தனர் என்றது. எதேச்சையாக மோக்ஷத்திற்கு யாரும் போக முடியாது. பக்தி, ப்ரபத்தியால் மட்டுமே முடியும் என்கிறது சாஸ்திரம். ஆக விஷ்ணுலோகம் என்பது மோக்ஷம் இல்லை.

In SrImadbhAgavatam (7.1.36), SrI nAradA says, “once the four sons of brahma who were wandering around the three worlds happened to arrive by chance at the vishnu logam.” no one can go to mOksham by chance, says sAstrA-s. it is only by bhakthi or prapatti gives you mOksham. So the vishnu logam referred here is not real mOksham.

0-89 **பாசி தூர்த்து கிடந்த பார்மகட்க்கு பண்டு ஒரு நாள்**
மாசுடம்பில் நீர் வாரா மானமிலாப் பன்றியாம்
(நாச்சியர் திருமொழி 11-8)

ஜலத்தில் மூழ்கி கிடந்த பூமியின்மேல் நீர்ப்பாசி ஏறிக் கிடந்தது. அதைக் கண்ட எம்பெருமான், தானும் நீருக்கும் சேற்றுக்கும் கூசாத பன்றி உருவைக் கொண்டான். அழுக்கு நீர் ஒழுகும் உடம்பு உடையதாய் அதற்கு வெட்கப்படாமல் மானமிலாப் பன்றி என்னும் பிறப்பை ஏறிட்டுக் கொண்டான்.

pAsi tOrttu kkidanta pArmagatkku paNdu oru nAL
mAsudambil nIR vArA mAnamilA ppanRiyAm
(nAcchiAr tirumozhi 11-8)

the earth, submerged underwater had collected moss all over it. witnessing that, bhagavAn also took the form as a boar which doesn’t

even concern about water or mud. he took a form of a shameless boar (mAnamilA panRiyAm), and the dirty water was dripping all over him. He was not shy of his body.

0-90 அப்போது, தண்ணிரின் உள்ளே நடுங்கிக் கொண்டிருக்கும் பூமி பிராட்டியை வெளியே எடுத்து, அணைத்துக் கொண்டு எம்பெருமான் அவளைத் தேற்றுகிறான்.

the lord then takes the shivering bhUmi pirAtti out of the ocean waters, hugs her gently and consoles her.

0-91 **நீல வரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்தது ஒப்ப**
கோல வராகம் ஒன்றாய் நிலம் கோட்டிடைக் கொண்ட எந்தாய்
(திருவாய்மொழி 10-10-7)

நீல வண்ண மலை (**வரை**) இரண்டு பிறையை கவ்விக் கொண்டு புறப்பட்டது போல அழகான வராஹ அவதாரம் எடுத்து உன் தந்தத்திலே (**கோடு**) பூமிப் பிராட்டியை ஏந்திய என் தந்தையே

nIla varai iraNdu piRai kavvi nimirntu oppa
kOla varagam onRAy nilam kOttidai kkonda entAy
(tiruvAimozhi 10-10-7)

“like a gigantic blue mountain that rose holding two crescent moons (usks), the beautiful boar has started. oh lord, my father, with that wonderful appearance as a boar, you were holding bhUmi pirAtti on your tusks,” describes nammAzhvAr in his tiruvAimozhi

0-92 **தடம் பெரும் தோள் ஆரத் தழுவும்; பார் என்னும்**
மடந்தையை * மால் செய்கின்ற மால் ஆர் காண்பாரே?
(திருவாய்மொழி 2-8-7)

தன்னுடைய பெரிய தோள்களால் பூமி பிராட்டியை அணைத்தான். அவளிடம் காட்டும் அவனுடைய அன்பையும் அதனால் விளையும் செயல்களையும் யார் அறிவார்கள் என்றார்.

tadam perum tOL Arat tazhuvum; pAr ennum
Madantaiyai * mAl seykinRa mAl Ar kANpArE?
(tiruvoimozhi 2-8-7)

varAha perumAn hugged the bhUmi pirAtti softly with his broad shoulders. can anyone even imagine his affection towards her or the bhagavad playful acts (lElA) emerge from that?," questions nammAzhvAr.

0-93 **பத்யுர் த3க்ஷிண பாணி பங்கஜ புடே விந்யஸ்த பாத3ாம்பு3ஜா**
வாமம் பந்நக3 ஸார்வபௌ4மம் ஸத்3ருசம் பர்யங்கயந்தீ பு4ஜம்
போத்ர ஸ்பர்ச லஸத் கபோல ப2லகா பு2ல்லாரவிந்தே3க்ஷணா
ஸா மே புஷ்யது மங்க3ளாந் யநுதி3நம் ஸர்வாணி ஸர்வம்ஸஹா
(பூஸ்துதி - 32)

பத்யு:	= கணவனாகிய வராகனுடைய
த3க்ஷிண பாணி பங்கஜ புடே	= வலது திருக்கையில்
விந்யஸ்த பாத3ாம்பு3ஜா	= வைக்கப்பட்ட திருவடித் தாமரைகளை
பந்நக3 ஸார்வபௌ4மம் ஸத்3ருசம்	= ஆதிசேஷனுக்கு ஒப்பாய்
வாமம் பு4ஜம் பர்யங்கயந்தீ	= வலது கையில் சாய்ந்து படுத்துக் கொண்டு இருக்கிறாள்
போத்ர ஸ்பர்ச லஸத்	= பகவானுடைய கன்னம் பட்டதால் மயிர் கூச்செறிந்து
கபோல ப2லகா	= பலகை போன்ற கன்னத்தை உடையவளாய்
பு2ல்ல அரவிந்த3 ஈக்ஷணா	= மலர்ந்த தாரைக் கண்கள் உடையவள்
ஸா ஸர்வம்ஸஹா மே	= அந்த பூமிபிராட்டி, எனக்கு
ஸர்வாணி மங்க3ளாநி	= எல்லாவிதமான சுபங்களையும்

அநுதி3நம் புஷ்யது = எல்லா நாட்களிலும் வளர்த்து அருள வேண்டும்

எம்பெருமானுடைய வலது கையில் தன்னுடைய இரண்டு திருவடிகளையும் வைத்துள்ளாள், பூமி பிராட்டி. எம்பெருமான் தன் வலது கையை ஆதி ஸேஷன் போல் வைத்து அணைத்துக் கொண்டிருக்க, அதில் தலை சாய்த்து திருப்பள்ளி கொண்டு இருக்கிறாள். பகவானுடைய கன்னத்தில் இவள் கன்னம் பட்டு, ஆசை மிகுதியால் உடம்பு எல்லாம் மயிர் கூச்செறிகிறது, இருவருக்கும்.

ஸ்வாமி தேசிகன், பூமிபிராட்டியை அற்புதமாக த்யான ஸ்லோகத்தில் வர்ணிக்கிறார்.

patyurdakShiNa pANi pa~Nkaja putE vinyasta pAdAmbhujA
vAmaM pannaga sArvabhauma sadhr^sam parya~NkayanatI bhujam
potra sparsa lasat kapOla palakA phullAravindekShaNA
sA mE puShyatu ma~NgaLAni anudinam sarvAni sarvam sahA
(bhUstuti 32)

bhUmi pirAtti resting both of her lotus feet on emperumAn's right palm. while, emperumAn swings his right hand surrounding her like AdiseshA and hugs her softly, she tilts her head gently and reclines on it. When her head [or her cheeks] rubs gently on emperumAn's fine cheeks, both of them were getting the sense of all goosebumps.

svAmi deSikan's exquisite description of bhUmi pirAtti here, is a beautiful verse for meditaion (dhyAna sloka).

0-94 கடலிருந்து தன்னை காத்ததால் பூதேவி மகிழ்ந்தாலும், ஸம்ஸார கடலில் பரிதவிக்கும் தன் குழந்தைகளை எண்ணி, அவர்களை உய்விக்க எளிய வழி சொல்லுமாறு எம்பெருமானை வேண்டினாள்.

bhUmi pirAtti was rejoicing after being rescued from the ocean. but, she is also sad and concerned about her children, who are all still submerged in the ocean of bondage (samsArA). with her immense compassion towards them, she requests the lord to instruct a simple but unfailing means (laghu upAyam) for their redemption and liberation.

0-95 ஸ்வாமி, அடியேன் உம்முடைய சிஷ்யையாயும், தாஸீயாயும், பக்தையாயும் இருக்கிறேன். ஆதலால், எல்லா விதமான ப்ராணிகளும் நல்ல கதி அடைய சுலபமான வழியை அருள வேண்டும் என வேண்டினாள்.

அஹம் ஸிஷ்யா ச தாஸீச பக்தாச த்வயி மாதவ
மத்க்ருதே ஸர்வ பூதாநாம் லகூபாயம் வத ப்ரபோ
(வராஹ புராணம் 114.64)

aham sishyAca dAsIca bhaktaca tvayi mAdhava
matkruthE sarva bhUdAnAm lagubhAyam vada prabhO
(varAha purANam 114.64)

svAmi, I am your your disciple (sishyA), your humble servant (dhAsI) and your ardent devotee (bhakthA). please accept my appeal and instruct (upadesam) an easy approach (lagu upAyam) of salvation (mukthi) for all the living creatures.

0-96 அப்போது யஜ்ஞ வராஹ நயினார் (வேதங்களுக்கும், யாகங்களுக்கும் சின்னமாக இருப்பவர்) பூதேவிக்கு ரஹஸ்யத்தை உபதேசம் செய்கிறார். அதை வராக சரம ஸ்லோகம் (பூர்வ, உத்தர பாகம்) என்பர்.

yaj~na varAha nayinAr (varAha as a symbol of vedic mantrA-s and ritual), then revealed her the secret with two verses (slokAs), what is known as varAha charama slokam (earlier and latter part - pUrva and uttara).

0-97 பூமிபிராட்டி ஸர்வஞ்ஜையாக (ஸர்வமும் அறிந்தவளாய்) இருந்தாலும், எம்பெருமான் திருவாக்கிலிருந்து வர வேண்டும் என்பதற்காக, ஒன்றும் தெரியாதவளாய் எம்பெருமானை வேண்டுகிறாள்.

bhUmi pirAtti though omniscient (all-knowing or infintely wise), acts very politely and humbly and requests the bhagavAn to tell the menas for salvation so that everyone can hear through the all powerful bhagavAn's own words.

0-98 ஞானப்பிரான் வராகன் பூதேவியின் வேண்டுகோளைக் கேட்டு மகிழ்கிறார். "தேவி, நீ தாயானவள். உன் கருணை உயர்ந்தது. நானும் பூமியை உண்டு, உமிழ்ந்ததால் நானும் ஒரு தாய். உன்னைப் போலவே நம் குழந்தைகளை நம்மிடம் வருவதற்கு எனக்கும் ஆசை. என் மனதில் உள்ளதை நீயாகவே கேட்டாய். சொல்கிறேன், கேள்!

கலியுகம் மிக உயர்ந்தது. ஏன் என்றால் இந்த யுகத்தில் மாத்திரம்தான் சுலபமான வழியில் என்னை அடையலாம். நாம ஸங்கீர்த்தனம் செய்தாலே போதும். நான் மகிழ்கிறேன். மற்ற யுகங்களில் நானே வந்து உபதேசம் செய்து, நடந்து காட்டி அவதார மஹிமை செய்கிறேன். ஆனால் கலியிலோ, எல்லா திருக்கல்யாண குணங்களுடன் அர்ச்சை மேனியில் எழுந்தருளி உள்ளேன். பக்தர்கள் என் புகழைப் பரப்புவார்கள். பூக்களால் அர்ச்சித்து, வாயினால் பாடி, மனத்தினால் தொழுது என்னிடம் அன்பாக இருப்பார்கள்," என்றார்.

ȷ~nAnapirAn varAhA is pleased hear bhUdevi's appeal. He says, "devi, you are the mother earth and your compassion and forbearnce is so lofty. i have swallowed and spit out this earth before, and by that I am also a mother for all these souls. i am aslo very keen for our children to back to us. Your request is like reading my mind. So, please listen!

the kali yuga is amazing because only in this yuga people can pursue an easy path to reach me. I can be pleased easily on simple chanting of my name (nAma samkErtanam). in other yugas, I do a lot like teaching,

abiding by the law, and showing them my powers etc. by descending down (avtAra). But in kali, I stay put all the time with all my divine qualities in iconic form (archya mOrthi). my devotees cherish my fame. They decorate me with flowers with their hands, sing my name and glories by their mouth, pray and meditate with their mind. They are very affectionate to me."

0-99 வராஹப் பெருமான் இரண்டு ஸ்லோகங்களால் உபதேசிக்கிறார்.

ஸ்தி$_2$தே மநஸி ஸுஸ்வஸ்தே$_2$ ஶரீரே ஸதி யோ நர: ।
த$_4$ாதுஸாம்யே ஸ்தி$_2$தே ஸ்மர்த்தா விச்வரூபம் ச மாமஜம் ।।
ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட$_2$ பாஷாண ஸந்நிப$_4$ம் ।
அஹம் ஸ்மராமி மத்$_3$ப$_4$க்தம் நயாமி பரமாம் க$_3$திம் ।।

வராஹ சரம ஶ்லோகம்

யோ நர: மநஸி ஸ்தி$_2$தே	= எந்த மனிதன் மனம் கலக்கம் இல்லாத நிலையுடன்
ஶரீரே ஸுஸ்வஸ்தே$_2$	= உடல் நோய் இல்லாமல் சுகமாக
த$_4$ாதுஸாம்யே ஸ்தி$_2$தே ஸதி	= கபம், வாதம், பித்த தாதுக்கள் எல்லாம் சரியாக இருக்கும்போது
விச்வரூபம் ச	= பிரபஞ்சத்தை உடலாகவும்
அஜம் மாம் ஸ்மர்த்தா	= மாறுதல் இல்லாத என்னை நினைக்கிறானோ
தத:	= பின் ஒரு காலத்தில்
காஷ்ட$_2$ பாஷாண ஸந்நிப$_4$ம்	= கட்டை, கல் போன்று
ம்ரியமாணம்	= சாகாமல் கிடக்கும்போது
தம் மத்$_3$ப$_4$க்தம் அஹம் ஸ்மராமி	= அந்த என் பக்தனை நான் நினைக்கிறேன்
பரமாம் க$_3$திம் நயாமி	= உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்கிறேன்

stitE manasi susvasthE sarIrE sathi yo nara:

dhAtu sAmye stite smurta visvarUpam cha mAmajam
tatastam mriyamAnam thu kAshta pAshANa sannibham
aham smarAmi matbhaktam nayAmi paramAm gatim

0-100 உடல், மனம் எல்லாம் சரியான நிலையில் இருக்கும்போதே பகவானிடம் ஒரு தடவை சரணம் புகுந்தால் போதும். அந்திம ஸ்ம்ருதி அவசியம் இல்லை. கடைசி காலம் வரும்போது, எம்பெருமானே நல்ல நினைவு தந்து, தானே மோக்ஷம் அழைத்துச் செல்கிறான்.

while body and mind are in good working condition, it is sufficient to perform an unconditional and total surrender (prapatti), only once. there is no hard and fast requirement to meditate of the lord at death bed (anthima smruti). even if you can't think of him by yourself, don't worry. at that time, the lord Himself will bless you with the divine thoughts and He will guide you to the eternal bliss (mOksham).

0-101 ஆழ்வாரும் **அப்போதைக்கு இப்போதேசொல்லி வைத்தேன் அரங்கத்து அரவிணை பள்ளியானே** என்றார்.

AzhvAr also proclaimed that "appOtaikku ippOde solli vaittEn arangattu aravinai paLLiyAnE."

0-102 ஸ்வாமி தேசிகன் இந்த வராக சரம ஸ்லோகத்திற்கு அழகான வியாக்யானம், பதம் பதமாக அருளி உள்ளார், ரஹஸ்ய சிகாமணி என்ற சில்லரை ரஹஸ்யத்தில்.

SvAmi deSikan has detailed word by word meaning of this varAha charama sloka in "rahasya sikAmani", in chillarai rahasyangaL

0-103 **சூழல்கள் சிந்திக்கில் மாயன் கழல் அன்றிச் சூழ்வாரோ**
ஆழப் பெரும் புனல் * தன்னுள் அழுந்திய ஞாலத்தை /
**தாழப் படாமல் * தன்பால் ஒரு கோட்டிடைத் தான் கொண்ட *

கேழல் திருவுரு ஆயிற்றுக் * கேட்டு உணர்ந்ததுமே
(திருவாய்மொழி 7.5.5)

(சூழல் = உபாயம், கழல் = கால் ஆபரணம் இங்கே திருவடிகள், கோடு = கொம்பு, கேழல் = பன்றி, வராஹம்)

ஆழமான ப்ரளய வெள்ளத்திலே பூமி கீழே அழுந்தி இருந்தபோது, பகவான் வராஹ அவதாரம் எடுத்து, காலம் வீணாக்காது, அதைத் தன் கொம்பில் ஏந்தி வெளிக் கொண்டு வந்து காப்பாற்றினான். இந்த உயர்ந்த வராஹ அவதார மஹிமையை ஒருவன் கேட்டு உணர்ந்து விட்டால், கழல் அணிந்த எம்பெருமானின் திருவடிகளை பற்றுவது அன்றி வேறு உபாயம் உள்ளதோ?

sOzhakaL sindikkil mAyan kazhalanRi cchOzhvArO
Azhap perumpunal tannuL azhundia j~nAlattai
tAzhap padAmal tanpAl oru kOttidait tAnkoNda
kEzhal tiruvuruvAyiRRuk kEttum uNarnthumE
(tiruvAimozhi 7.5.5)

when bhUmi was submerged all the way down in the floods of praLaya, lord without any delay, took the form of a boar, diving deep into the water, rescued the earth and brought her out on top of his tusk. If anyone listens and realizes the greatness of this varAha story, would he ever even think of any means other than holding the feet of lord varAha, for his salvation?

0-104 அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்து அவர் அறிய
நெறி எல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்து ஒரு மூர்த்தி
(திருவாய்மொழி)

நம்மாழ்வார் சொல்கிறார், மக்களுக்கு, அறிவு அபாரமாய் இருக்கிறது. அவர்களுக்கு கண்ணன் பகவத் கீதை உபதேசித்தான் என்று. ஏற்கனவே அறிவு இருப்பவர்களுக்கு கண்ணன் ஏன் உபதேசம் செய்ய வேண்டும்?

அவர்களுக்கு இருக்கும் ஏராள அறிவு உலக விஷயங்களில். ஆத்ம உஜ்ஜீவனமான பகவத் விஷயங்களில் இல்லை. அதைச் சொல்லவே கண்ணனின் அவதாரம்.

அதனால்தான் இங்கே **நல்லறிவு இருக்குங்கால்**

aRivinAl kuRaiyillA agal jn~alattu avar aRiya
neRi ellam eduttu uraittta niRai njAattu oru mUrti
(tiruvoimozhi)

nammAzhvAr asks why lord kR^ShNA has instructed the bhagavad gItA to the people, who already have have enormous knowledge (j~nanam). The answer is that most of their knowledge is about cheap worldly stuff, but not in the soul searching area to liberate the soul through bhagavad vishayam. kaNNan descended down to earth to teach them how to liberate their soul.

nallaRivu irukkungAl, means while one has a good knowledge, that is about the soul.

0-105 நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்
(பெரிய திருமொழி 1-1-9)

nalam tarum sollai nAn kaNdu koNdEn
bArAyaNA ennum nAmam
(peria tirumozhi 1-1-9)

0-106 சரணமாகும் தன தாள் அடைந்தார்க்கு எலாம்
மரணமானால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்
(திருவாய்மொழி 9-10-5)

என்கிறபடி எம்பெருமானின் திருவடிகளை சரணம் என்று ஒரு தடவை அடைந்தால் போதுமானது.

SaraNam Agum tana tAL adintArkku elAm
maraNamAnAl vaikuntam kodukkum pirAn
(tiruvoimozhi 9-10-5)

As the verse says, if anyone takes the surrender (saranAgaty) at the feet of the lord, that itself is enough for the lord to grant him the mOksham.

0-107 உமதடிகள் அடைகின்றேன் என்று ஒரு கால் உரைத்தவரை
(அடைக்கலப்பத்து)

உம்முடைய திருவடிகளை "சரணம்" என்ற ஒரு சொல்லால், ஒரு தடவை அடைந்தேன் என்பதை **"சொல் ஒன்றாலே சரணம் அடைந்த பின்னே"**

umadaigal adaikinRen enRu oru kAl uraittavarai
(adaikkapattu)

"Lord, with a single word surrender (SaraNam) if anyone holds your feet once," that is enough for the mOksham claims deSika in adaikkala pattu.

0-108 கே3ாபாயேத்3 அநிஶம் ஜக3ந்தி
குஹநா போத்ரீ பவித்ரீ க்ருத ப்3ரஹ்மாண்ட
(தசாவதார ஸ்தோத்ரம்)

கே3ாபாயேத்3	= காத்து அருள வேண்டும்
ஜக3ந்தி அநிஶம்	= உலகங்களை எப்போதும்
ப்3ரஹ்மாண்ட பவித்ரீ க்ருத	= ப்ரம்மாண்டங்களை பரிசுத்தமாகிய
குஹநா போத்ரீ	= ஏமாற்று வேடம் புனைந்த வராகப் பெருமானே

"ரக்ஷித்து அருள்வாய்" என்ற ஒரே சொல்லை முதலில் வைத்தார், ஸ்வாமி தேசிகன் தசாவதார ஸ்தோத்திரத்தில் வராகாவதாரத்தை சொல்லும்போது. அதுபோல இங்கே **சொல் ஒன்றாலே**

gOpAyEd anisam jaganti
guhanA pOtrI pavitrI kR^ta brahmANDa
(dasAvatAra stootram 3)

gOpAyEd = [bless with your] protection
jaganti anisam = [to] all the worlds, all the time guhanA
pOtrI = the lord who put on a deceiving pretense like a boar
brahmANDa pavitrI kR^ta = [who] purified multitude of universes

"protect us" was the first single word svAmi deSikan used to descrivbe varAha perumAn in his dasAvatAra stotoram. Similarly "sol onRAlE" was said here.

0-109 தாய் நினைந்த கன்றே ஒக்க என்னையும்
தன்னையே நினைக்கச் செய்து * தான் எனக்காய்
நினைந்து அருள் செய்யும் அப்பனை
(பெரிய திருமொழி 7-3-2)

திருமங்கையாழ்வார் எம்பெருமானின் கருணையை வர்ணிக்கிறார். தாய்ப்பசு எப்படி தன் கன்றையே நினைத்து இருக்கும். அது போல. அது மட்டுமின்றி என்னையும் அவனை நினைக்கச் செய்வான். அது மட்டுமின்றி எனக்காக அவனே நினைத்து வருந்தி, அருளும் செய்கிறான் என்றார்.

tAy ninaInta kanRE okka ennaiyum
tannaiyE ninaikkas seythu tAn enakkAy
ninaintu aruL seyyum appanai
(peria tirumozhi 7-3-2)

tirumangai AzhvAr describes emperumAn's infinite compassion. bhagavAn is like a mother cow which will be thinking of its calf all the

time besides, he will make me to think of him. moreover, he will think for me, empathetic for me and will bless me.

0-110 பூதாத்மா பராமத்மா ச முக்தாநாம் பரமா க3தி:
(ஸ்ரீ:விஷ்ணு ஸஹஸ்ர நாமம் - 2)

என்கிறபடியே, "பரமப்ராப்யனான தன்னையாதல், தன் விஷயத்தில் பரிபூர்ண அநுபவத்தையாதால், அவ்வநுபவ பரீவாஹமான கைங்கர்ய விசேஷத்தைச் சொல்லுகிறது. இவற்றில் ஒன்றைச் சொன்னாலும், மற்றுள்ளவைகளைச் சொல்லிற்றாய் விடும். இதில் **நயாமி** என்கிற இத்தாலே தன்னுடைய ப்ராபகத்வமும், **பரமாம் கதிம்** என்றவித்தாலே தன்னுடைய ப்ராப்யத்வமும் சொல்லிற்றாகை உசிததமம்."
(ஸ்வாமி தேசிகன் ரஹஸ்ய சிகாமணி)

- உயர்ந்த பலனான என்னையே அனுபவிக்க கொடுப்பேன்.
- என்னைப் பற்றிய முழு அனுபவத்தை கொடுப்பேன்.
- அந்த அனுபவத்திற்கு போக்குவீடான கைங்கர்யத்தையும் கொடுப்பேன்

இந்த மூன்றில் ஒன்றைச் சொன்னாலும் மூன்றையும் சொன்னதாக ஆகும். மோக்ஷத்தை கொடுக்கும் உபாயமும் நானே. அங்கு பலனாக அனுபவிக்கப் படுபவனும் நானே, என்று விளக்கினார் ஸ்வாமி தேசிகன்.

bhUdAtmA paramAtmA ca mukthAnAm paramA gati
(SrI vishNu sahsara nAmam)

svAmi deSika explains, "I will give you myself, the highest reward; I will give you anything that is related to myself, for your total enjoyment, and finally I will give you the opportunity to perform the eternal service (kaimkaryam) to letout of your extreme happiness.

mentioning any one the above three is good enough as if mentioning all the three. I am the means (upAyam) for the mOskham and the I am the rewards (palan) you are going to enjoy in the moskham

0-111 ப்ரபத்தி ஸகல பல ஸாதனம் ஆயினும் சேதனன் மோக்ஷத்தை தவிர வேறு பலனுக்காக ப்ரபத்தி செய்யாதலால், இவனுக்கு வேறு பலனைக் கொடுக்க மாட்டேன், என்கிறார்.

மது வித்யை போன்ற பக்தி யோகங்களில், அவர்கள் விரும்பிய ஐச்வர்யம், கைவல்யம் போன்ற அற்ப பலன்கள் கொடுத்து பின் மோஷம் அளிப்பது முறையாக உள்ளது. அது போலன்று அல்ப பலன்கள் தராமால் நேராகவே மோக்ஷத்தை தருகிறேன், என்கிறார்.

One has to pay attention carefully, here. though prapatti is an universal means and has the ability to grant anything, the individual soul (chetanA) has performed it for a single benefit of mOksham and has not done it for seeking other benefits. So, the lord says, “I will not give other benefits to him.”

“In the case of bhakthi yoga, like madhu vidya, the performer usually aspires for wealth and the enjoyment of their own soul (kaivalyam). For them, that is the proper procedure and I grant many worldly pleasures before granting the mOksham. Here, it is not such case. So, without any delay on low level pleasures, I give him mOksham directly.”

0-112 **மஹா வராஹோ கோ3விந்த:**
(விஷ்ணு ஸஹஸ்ர நாமம்)

மஹா வராஹன் என்று விஷ்ணு ஸஹஸ்ர நாமம் வராஹாவதாரத்தை புகழ்கிறது. ஸ்வாமி தேசிகனும் தன்னுடைய தஸாவதார ஸ்தோத்திரத்தில் **மஹா போத்ரிந்** (மிகப் பெரிய பன்றி உரு எடுத்தவனே!) என்றார்.

இங்கே வராஹனைச் சொல்லி, உடனே கோவிந்தனை சொன்னது விசேஷம். கோவிந்தா என்பதற்கு பல அர்த்தங்கள் இருக்கின்றன். இந்த இடத்தில், கோ + விந்தா = பூமியை மீட்டவர் என்று பொருள்.

mahA varAhO gOvinda:
(SrI vishNu sahasra nAmam)

SrI vishNu sahasranAmam also praises as the great (mahA) varAha. svAmi deSikan also glorifies mahA pOttrin (gigantic boar) in his dashAvatAra stotram.

here, the name gOvinda following varaha is very interesting. The name gOvindA has several meanings. In this context, gOvindA = gO + vindA means earth finder.

திரு வராகன் சொல்லை, தரணியில் தழைத்திட
ஒரு பெண் ஆழ்வாராய், ஓதவே முன் தோன்றிட
திருப்பாவை முப்பத்தில், திருமறையின் வித்தை
கருவிலே காட்டித் தந்தாள், தந்தையின் சொத்தை. 4

திரு வராகன் சொல்லை = எம்பெருமான் வராகராய் அவதரித்து பூமி பிராட்டிக்கு உபதேசித்த சரம ஸ்லோகத்தை
தரணியில் தழைத்திட = பிரபஞ்சம் அனைத்திலும் பரப்ப வேண்டி
ஒரு பெண் = ஓப்பற்ற பெண்ணாகிய பூதேவியானவள்
ஓதவே ஆழ்வாராய் = எல்லோருக்கும் உபதேசிக்க வேண்டி ஆழ்வாராக [கோதையாக]
முன் தோன்றிட = முன்பு ஒரு நாள் அவதாரம் செய்து
திருப்பாவை முப்பத்தில் = திருப்பாவை என்னும் மூன்று பத்துக்களால்
திருமறையின் வித்தை = வேதங்களின் ஸாரங்களை
கருவிலே = சிறிய பெண்ணாக இருக்கையிலே
காட்டித் தந்தாள் = நமக்கு போதித்தாள்
தந்தையின் சொத்தை = [இவை எல்லாம்] எனக்கு குருவும் தந்தையும் ஆன பெரியாழ்வார் அருளிய உட்பெருள் (ஸ்வாபதேசம்) என்று

tiruvarAgan sollai, taraNiyil tazhaittida
oru peN AzhvArAy OdavE mun tOnRida
tiruppAvai muppattil, tirumaRaiyin vittai
karuvilE kAttit tandAL, tandaiyin sottai 4

taraNiyil tazaittida = to spread all over the universe
tiruvarAgan sollai = the charama sloka instructed by the varAga peruman to bhUmi pirAtti
oru peN = one woman, who is beyond any comparison
AzhvArAy mun tOnRida = was born one day as an AzhvAr (gOdA)
OthavE = and disseminated [those secrets]

karuvilE kAttit tandAL = elegantly at such a child age,
tiruppAvai muppattil = in 3 sets of 10 called tiuppAvai
tirumaRaiyin vittai = [which is] the essence of all vedas
tandaiyin sottai = [implicitly telling that] these are the intricate meanings instructed to me by my father and guru periyAzhvAr

0-113 திரு வராகன் சொல்லை தரணியில் தழைத்திட. வராஹப் பெருமானுக்கும் பூமி பிராட்டிக்கும் நடந்த குரு சிஷ்ய ஸம்வாதத்தை கருத்தில் கொண்டு, உதார குணத்துடன், எல்லோரும் உஜ்ஜீவிக்க வேண்டி, கலி யுகத்தில் கண்ணன் மேல் காதல் கொண்ட கோதையாக தோன்றி, தானே உபதேசித்தும், அனுஷ்டித்தும் காட்டினாள்.

tiruvarAgan sollai taraNiyil tazaittida. Remembering the dialogue (samvAdham) between the teacher - disciple (guru sishya), ANDAL has descended to eath in kali yuga to teach what the boar-god (varAha perumAL) has instructed. With her extreme compassion she has poured down the prabhandham and set as an example of abiding by them also.

0-114 நாவளரும் பெரு நான்மறை ஓதிய கீதம் எலாம்
பாவளரும் தமிழ் பல்லாண்டு இசையுடன் பாடுவமே
என்ற தேசிகர் வாக்கின்படி(பரமபத சோபானம் 18), **அத்யாபயந்தீ** என வேதத்தை அத்யயனம் செய்து, பகவானுக்கும் அத்யயனம் பண்ணி வைத்தது **ஒரு பெண் ஆழ்வாராய் [**தமிழ் வேதத்தை] **ஓதவே.**

NavaLarum peru nAnmaRai Odiya gItam elAm
pAvaLarum thamizh pallANdu isaiyudan paaduvamE
as SvAmi deSika says (paramapadasOpanam 18)
oru peN AzhvArAy OdavE. As parAsara battar explained in his tanian "adyapayanti", she instructed tamiz vedA-s to the wrold and instructed that to bhagavAn also.

0-115 திருப்பாவை ஜீயரான எம்பெருமானாருக்கு முன் தோன்றி, பிரபந்தங்களை அருளி, அவர் மூலமாக ஸம்பிரதாயத்தை நிலைநிறுத்த காரணமானதாலே **முன் தோன்றி.**

she has helped bhagavad rAmAnuja, by descending down first and composing tiruppAvai. because of her blessings and constant recitation of tiruppaavai by bhagavad rAmaAnuja, he was called tiruppAvai jeeyar.

0-116 **பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே** என்று வாழித்திருநாமம் சொன்னாலும், அவதார காலத்தில் இவளே எம்பெருமானாருக்கு **முன் தோன்றிட.**

though vAzhi ttirunAmam says perumpUthUr mAmunikku pinnAnAL vAzhiyE, ANDAL was earlier by birth to bhagavad rAmanujA.

0-117 ஸ்வ ஞானம், ப்ராபக ஞானம், ப்ராப்ய ஞானம் என்ற மூன்றையும் முமுக்ஷுவிற்கு **திருப்பாவை முப்பத்தில்** அருளினாள்.

ஸ்வஞானம், ப்ராபக ஞானம் ப்ராப்ய ஞானம் முமுக்ஷுபி:
ஞான த்ரய உபாதேயம் ஏததந்யந் நகிஞ்சன:

தான் யார் என்ற அறிவு [**தத்வம்**], எம்பெருமானை அடையும் வழி [**ஹிதம்**], அடைந்த பின்னே அவனே பரம போக்யம் என்று அனுபவிக்கும் முறை [**பரம புருஷார்த்தம்**] என்ற மூன்றையும் மூன்று பத்தால் அருளினாள்.

tiruppAvai muppatu – ANDAL has composed ten verses of each on the reality [tattvam], route [hitham] and rewards [purushArttam] {simply 3Rs}

sva j~nAnam prApaga j~nAnam prApye j~nAnam mumukshubI
j~nAna treya upAdEyam Eta tanyan nakincanA

One has to the knowledge on three basic realities.

1. about himslef (svaj~nAnam) [tattvam]
2. the path to reach the lord (prApaga j~nanam) [hitham]
3. after attaining the empurmAn, how to enjoy him (prApye j~nAnam) [purushArttam]

ANDAL has explained all these in her three sets of ten verses.

0-118 **வேதம் அனைத்துக்கும் வித்தாகும், ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை வையம் சுமப்பதும் வம்பு; தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே** என்றெல்லாம் போற்றப்படுவது **திருமறையின் வித்தான** திருப்பாவை.

tirumaRaiyin vittai - tiruppAvai has been praised like these -- vedam anaittukkum vittAgum; aiainttum aintum aRiyAda mAniDarai viyam sumappattum vambu; theLiyAda maRai nilang~aL theLikinROmE

0-119 ஆண்டாளின் தந்தையும், ஆசாரியனுமான பெரியாழ்வாரின் சொத்து பகவான். பகவான் ஆசார்யனுக்கு வசப்பட்டவன். ஆண்டாள், **தந்தையின் சொத்தை,** கண்ணனை நமக்கு காட்டித் தருகிறாள், இங்கே.

father's wealth - PeriyAzhvAr is actually father and guru (AcAryA) for ANDAL. What is the wealth, her father has accumulated? AcAryA's wealth is nothing other than bhagavAn. bhagavAn is obedient and listen to the AcAryA and AcAryA's wealth is nothing but bhagavAn and sAstra-s. ANDAL says her father's wealth is nothing but lord kR^ShNA, here.

0-120 **ஆசாரிய ஸம்பந்தம்** ஆசாரியனின் அருளின்றி மோக்ஷம் இல்லை என்கிற சாஸ்திரார்த்தத்தை சொல்கிறாள்.சேதனனுக்கும் ஈச்வரனுக்கும் உள்ள ஸேஷ-ஸேஷி ஸம்பந்தம் நித்யமானது. அநாதியானது. இந்த ஸம்பந்த ஞானம் மட்டுமே மோக்ஷம் தராது. இது வரை பகவானைப் பெறாமால் இருந்த நாம், ஆசாரியனை அடைந்த உடனே பகவானைப் பெறுகிறோம்.

AcAryA connection - The master-servant relation between bhagavAn and us, the individual souls (chetanA-s), is unbreakable and eternal.

yet we could not attain him because we didn't have the blessings of the AcAryA (AchArya sambhandham). Having a satAcharyA as the mediator (purshakAragam), BhagavAn is so easy to get, now. Without AchAryA, bhagavaN is not attainable. That is the sAstrA, ANDAL is showing here

0-121 **ஆழ்வாருக்கு வசப்பட்டவன் எம்பெருமான்** - வில்லிபுத்தூருக்கு உயர்ந்தவர் பெரியாழ்வார். அவர் இட்ட வழக்காய் (விதேயராய்) இருப்பவன் பகவான். அந்த எம்பெருமானை, அவர் தம்மால் இயன்ற வழிகளில் அழைத்தாரானால் அப்போது பகவானை நாமும் ஸேவிக்கலாம்.

வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே
(நாச்சியார் திருமொழி 10-10)

bhagavAn himself is under the control of periAzhvAr, the most celebrated person of SrIvilliputtur. Which ever the way periyAzhvAr calls upon Him, then we can also prostrate to the lord, says ANDAL.

0-122 ஆண்டாள் தன்னுடைய பிஞ்சு வயதிலேயே, பெரியாழ்வார் சொத்தான கண்ணனை நமக்கு காட்டியது **கருவிலே காட்டித் தந்தாள்**.

மற்றொன்று, நாம் தாயின் வயிற்றிலே கர்பத்தில் கருவாக இருக்கும்போதே, நம் தந்தையான எம்பெருமானின் சொத்தான மோக்ஷத்தையும், நித்ய கைங்கர்யத்தையும் நமக்கு புகட்டினாள் என்பது.

This can be interpreted in two ways. First, ANDAL showed us the lord kR^ShNA, the welath of her father periyAzhvAr, at her tender young age itself.

Secondly, when we are still in the womb of our mother, she showed us the mOksham and eternal service, which is the wealth of our father, lord SrIman nArAyaNA.

0-123 ஜாயமாந கடாக்ஷம் - ஜீவன் தாயின் வயிற்றில் கர்பத்தில் இருக்கும்போதே, மதுஸூதனனின் கடாக்ஷத்தால், அந்த ஜன்மாவில் நல்ல ஆசாரியனை அடைந்து முக்தி அடைகிறான். **கருவிலே திருவுடையார்,** என்பது அந்த கடாக்ஷம் பிராட்டியுடன் கூடியது என்பதைச் சொல்லும்.

ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேத் மது4ஸூத3ந:
ஸாத்த்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த2 சிந்தக:
(பாரதம் சாந் 358)

பிறக்கும்போது எந்த ஜீவனை மதுஸூதனன் கடாக்ஷிக்கின்றானோ அவன் ஸத்வ குணத்தைப் பெற்று மோக்ஷ புருஷார்த்தத்தை நினைக்கிறான் என்றது. பாரதம் அந்த அருளை முதலில் எம்பெருமானோடு பிராட்டியும் சேர்ந்து அருளுகிறாள்.

blessings at birth (jayamAna kaTAksham) The blessings of lord madhusudanan while a baby is still in the mothers' womb, is the primary cause for him to reach an AcAryA and liberate himself in that birth. karuvilE tiruvudaiyAr means that blessings of the lord is along with the priAtti.

jAyamAnam hi purusham yam paSchyet madhusUdhana:
sAtvikas sa tu vijjEeyas sa vai mOkshArtta sindaka
(bharatam santhi 358)

To whom the lord madhsudhanA sets an eye and bless during the childbrith, he will gain all the sAtvic qualities and will contemplate on the eternal bliss (mOksham), says mahAbhAratam. Lord pours that blessing along with consort only.

உறவென்னும் சொல்லே, உயர் உண்மையென புகட்டி
பிறவிக் கடலைக் கடக்க, பரிவுடன் நல் வழிகாட்டி
அரவணை பரமனுக்கே, ஆட்செய்வதே பேரின்பம்
மறவாது அடைவீர் என்றாள், மண்மகள் கோதையாகி **5**

உறவென்னும் சொல்லே = சாரீரக சாஸ்திரத்திலே சொல்லிய பகவானுக்கும் ஜீவனுக்கும் உள்ள பிரிக்க முடியாத உறவு என்பதே
உயர் உண்மையென = தத்வங்கள் கூறும் சிறந்த உண்மை என
புகட்டி = தாய் என்பவள் ஒன்றும் அறியாத குழந்தைகளுக்கு ஊட்டுவது பேல், நமக்குபோதித்து
பிறவிக் கடலைக் கடக்க = ஸம்ஸார கடலைக் கடக்க
பரிவுடன் நல் வழிகாட்டி = இரக்கத்துடன் நமக்கு உய்ர்ந்த உபாயத்தை காட்டி
அரவணை பரமனுக்கே =ஆதிஸேஷனின் மேல் ஸயனித்து இருக்கும் பர தத்வமான எம்பெருமான் ஸ்ரீமந் நாரயணனுக்கே
ஆட்செய்வதே பேரின்பம் = இடைவிடாமல் கைங்கர்யம் செய்வதே பேரானந்தம்
மறவாது அடைவீர் = இதை மறக்காது அந்த கைங்கர்ய ப்ராப்தியை கேட்டு [ப்ரபத்தி செய்து] அடைவீர்களாக
என்றாள் மண்மகள் = என்றாள் பூமி பிராட்டி,
கோதை ஆகி = கோதை என்று அவதாரம் செய்து

uravennum sollE uyar uNmaiyene pugatti
piRavik kadalaik kadakka, parivudan nal vazi kAtti
aravaNai paramanukkE AtseyvathE pErinbam
maRavAtu adaivIr enRAL, maNmagaL gOdai agi 5

pugatti = instructed (us) about
uravennum sollE = the unbreakable, eternal relation between bhagavAn and us, as illustrated in the sAreraka sAstra
uyar uNmaiyene = is the only ultimate truth
piRavik kadalaik kadakka = To cross the ocean of birth and deaths

parivudan nal vazi kAtti	= showed the right means with compassion
aravaNai paramanukkE	= To the supreme lord who sleeps on the serpent bed
AtcceyvadE pErinbam	= performing service (kaimkaryam) is the ultimate happiness
maRavAdu adaivIr enRAL	= Without any forgetfullness, perform prapatti and ask and attain this eternal service was told by
maNmagaL gOdai Agi	= bHu devi incaranated as ANDAL

0-124 உறவு என்னும் சொல்லே விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் உயிர் நாடி. சரீர சரீரீ பாவமே சாரீரக சாஸ்திரம். சேதனாசேதனங்கள் எல்லாம் பகவானின் சரீரம். அவனுக்கும் நமக்கும் உள்ள உறவு நித்யமானது. பிரிக்க முடியாது (அப்ருதக்ஸித்தி).

uravennum sollE The heart of visishtAdvaita philosophy is the sArEraka sAstram, body-soul relationship. All the sentient and nonsentient (chetana and achetana) for mthe body of the lord. this relation is eternal and unbreakable (abruthaksiddhi).

0-125 மோக்ஷத்திலும் கூட பரமாத்மா வேறு. ஜீவாத்மா வேறு. இவற்றின் உறவை, **உயர் உண்மையென** அறிந்து பணி செய்வதே **அஹம் ப்ரம்மாஸ்மி** என்பதின் தாத்பர்யம்.

uyar uNmaiyene. even in mOksham, our souls are different from that of the lord. Understanding and act accordingly on this difference on the types of souls and their relation (master – slave that is sesha seshi bhAvam) is the essence of "aham brammAsmi" phrase.

0-126 மோக்ஷத்தில் ஸாம்யம் ஆனந்தத்தில்
ஸோஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்3ரஹ்மணா விபஶ்சிதா
(தைத் ஆர 1-2)

முக்தன் எல்லாக் கல்யாண குணங்களையும் ஸர்வஜ்ஞனான ப்ரஹ்மம்மத்துடன் கூட அனுபவிக்கிறான் என்பதாலே ப்ரம்மம் வேறு ஜீவன் வேறு, ஆனால் ஆனந்தத்தில் ஸாம்யம் என்பது புலனாகிறது. அவர்கள் ஒன்று போல் இருப்பார்களே தவிர ஒன்றே அல்ல.

sameness is only on bliss in moksham
SOsnudE SarvAn kAmAn saha brahmaNA vibaSchitA
(tait Ar 1-2)

The liberated soul enjoys all the noble qualitites along with the omniscient bhagavAn says veda-s. By that, it is implicit that individual soul and lord are different, and the sameness (sAmyam) comes only in their total enjoyment (Anandam). They are similar and not identical.

0-127 ஆண்டாள் அறிவித்த **உறவு** என்பது **உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது (28), உன் தன்னோடு உற்றோமேயாவோம் (29)**

ANDAL has celebrated this inalienable kinship in several places
un tannOdu uRavEl namakku ingu ozhikka ozhiyAdu
un tannOdu uRREmEyAvOm

0-128 பிறவிக் கடலைக் கடக்க, ப்ரபத்தி அன்றி வேறு உபாயம் இல்லை. **ப்ரபந்நா த3ந்யேஷாம் ந தி3ஶதி முகுந்தே3 நிஜ பத3ம்** (ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 8) என்கிறபடி மோக்ஷத்தை அருளும் முகுந்தன், ப்ரபந்நர்களைத் தவிர மற்றவருக்கு தன் திருவடியோ தன் இடமாகிய பரமபதமோ காட்டுவது இல்லை.

piRavik kadalaik kadakka there is no means, other than prapatti

prapannAd anyEshAM na diSadi mukundO nija padaM
(Srimad rahasyathrayasAram 21)
one can understand the superiority of prapatti, by reading through svami deSikan's words that, "our lord will not offer the eternal enjoyment of performing service (kaimkaryam) at His feet to any one who approach Him by means other than prapatti."

0-129 கீதையில் மற்ற உபாயங்களை எல்லாம் விவரித்து, இறுதியில் சரம ஸ்லோகத்தில் சுருங்க ப்ரபத்தியை கூறிய கண்ணன் போலன்றி, ஆண்டாள் **பரிவுடன் நல் வழிகாட்டி** என கருணையுடன் அகிஞ்சனருக்கு, பலனைத் தரும் வழி என ப்ரபத்தியை முதலிலேயே போதித்தாள்.

parivudan nal vazhi kAtti - Lord kR^ShNA first extensively talked about all methods and confused everyone. Finally he told in a hurry about prapatti at charama slokam in the eighteenth chapter. Unlike him, ANDAL at the beginning of her tiruppAvai itself instructs. She does that, with extreme compassion by knowing that useless people like us who can follow and achieve only through prapatti.

0-130 **பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தாதார்**
இறைவன் அடி சேராதார் (திருக்குறள்)

என்று திருவள்ளுவனும் எம்பெருமானின் திருவடிகளை கெட்டியாக பிடித்தால் அன்றி இந்த ஸம்ஸார ஸாகரத்தை கடக்க முடியாது என்றான்.

piRavip perungkdal nInduvar nIndAdAr
iRaivan adi sErAtAr
(tirukkuraL)

tiruvaLLuvar also says, those who hold the lord's feet tightly will cross the ocean of bondage and those don't will not.

0-131 **ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்** என்ற திருவாய்மொழியின்படி எம்பெருமானுக்கு கைங்கர்யம் ஸதா ஸர்வ காலமும் செய்து கொண்டே இருப்பது **அரவணை பரமனுக்கே, ஆட்செய்வதே பேரின்பம்.** அதுவே ஜீவனின் ஸ்வரூபம் எனக் காட்டினாள்.

Ozhivil kAlam ellAm udanAy manni vazhuvilA adimai seyya vENdum nAm, says nammAzhvAr. We should be performing kaimkaryam to the lord at all the time, place and state. aravaNai paramanukkE AtseyvathE pErinbam

0-132 **ரக்ஷயா பேஷாம் ப்ரதீக்ஷதே** என்கிறபடி உபாய ப்ராத்தனாரூபமான ப்ரபத்தியை எம்பெருமான் எதிர்பார்க்கிறான் என்றதாலே **மறவாது அடைவீர் என்றாள் மண்மகள் கோதையாகி.**

As the pramANA says, rakshyA pEkshAm pradIkshatE, the lord expects our request of prapatti as a means. And so maRavAtu adaivIr enRAL.

0-133 ஏதேனும் ஒரு ப்ராகரமாகவும், ஆரேனும் ஒருவர் அநுஷ்டிக்கவுமாம் ப்ரபத்திக்கு அல்லது ஸர்வேச்வரன் பரமபுருஷார்த்தம் கொடுக்க இரங்கான் என்றதாயிற்று (அதிகாரி விபாகாதிகாரம், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம்) என்பதாலே **மறவாது அடைவீர் என்றாள் மண்மகள் கோதையாகி.**

மோஷம் அளிக்கும் முகுந்தன், ப்ரபன்னனைத் தவிர மற்றவனுக்கு தன் திருவடிகளையோ, பரமபத்தையோ அளிப்பதில்லை.

mukundA, who confers the mOksham, will not grant the reward of mOksham or his feet to anyone other than a prapannan.

நீளை திருமார்பில் உறங்கும், நீலமேனி வண்ணா !
காளை ஏழும் வென்று மணந்த, கமலக் கண்ணா !
நாளையின்றி நிலைத்தோம், கோதை ஆறைந்தில்
வேளை தந்து வைப்பாய், வான் வீட்டு போகத்தில் 6

நீளை திருமார்பில் = நீளை என்னும் நப்பின்னையின் மார்பகத்தில்
உறங்கும் = சுகமாக உறங்கும் கண்ணனே
நீலமேனி வண்ணா = நீல மணி போன்ற நிறத்தை உடையவனே
காளை ஏழும் வென்று = ஏழு காளைகளையும் ஜயித்து பின்
மணந்த = நப்பின்னையை திருமணம் செய்து கொண்ட
கமலக் கண்ணா = தாமரைக் கண்ணனே
நாளையின்றி = [பிரபத்திக்கு பின்] இந்த பூமியில் மறு பிறவி இல்லை என மகிழ்ந்து, [ஜீவித காலங்களில்]
கோதை ஆறைந்தில் = ஆண்டாள் அருளிய திருப்பாவையில்
நிலைத்தோம் = பக்தியுடன் நிஷ்டராானோம்
வேளை தந்து = எனக்கு சரியான நேரம் நீயே குறித்து
வான் வீட்டு போகத்தில் = [மோக்ஷ ப்ராப்தியான] பரமபதத்தில் நித்ய முக்தர்களோடு இடைவிடா பணி செய்யும் ஆனந்தத்தை
வைப்பாய் = நியமித்து அருள்வாய்

nILai tirumArbil urangum nIamEni maNi vaNNA !
kALai Ezum venRu maNanda, kamalk kaNNA !
nALaiyinRi nilaittOm, gOdai Araindil
vELai tandu vaippAy, vAn vIttu bOgattil 6

nILai tirumArbil urangum = Sleeping o nthe chest of NiLa alias nappinai
nIamEni maNi vaNNA = blue hued kR^ShNA
kALai Ezum venRu maNanda = subdued over seven bulls and married
kamalk kaNNA ! = kR^ShNA, whose eyes are like lotus flower

nALaiyinRi nilaittOm	= After prapatti there is no next birth and
gOdai Araindil	= we meditate gOdA's thirty verses of tiruppAvai on our rest of the days here
vELai tandu vaippAy	= Lord, at the right time
vAn vIttu bOgattil	= you will be put me in mOksham for the permanent happiness of serving you forever.

0-134 **நீளாம் தேவீம் ஶரணமஹம் ப்ரபத்யே** என்று நீளா தேவியை நான் சரணம் அடைகிறேன் என்றது வேதம்.

niLA devim SaraNam aham prapdhye
I surrender (prapatti) to niLa devi, says veda-s.

0-135 நப்பின்னை என்ற பெயர் பாகவதம், மஹாபாரதம் இவற்றில் காணப் படாவிடினும், ஸ்ரீமந் நாரயணனின் மூன்று பத்னிமார்களில் ஒருவரான நீளாதேவியின் அவதாரமாய் கருதினர் நம் ஆசார்யர்கள்.

niLa is one of three three consorts of SrIman nArAyaNA. Our AchAryA consider nappinai is the incarantion of niLadevi, though nappinai was not mentioned anywhere in Lord kR^ShNA stories other than in Tamil. Never mentioned in bhagavatam or mahabharata.

0-136 ஆழ்வார்கள் பல இடங்களில் நப்பின்னையும், அவள் கண்ணனின் ஆயர் குல மனைவியாகவும் பாடி உள்ளனர்.

பின்னை மணாளனை
(பெரியாழ்வார் திருமொழி 2-5-1)

Nappinai belongs to herdswoman community. AzhvAr-s have sung praising this nappinnai in many instances.

Pinnai maNALanai
(periyAzhvAr tiumozhi 2-5-1)

0-137 **இன்துணைப் பதுமத்து அலர்மகள் தனக்கும்**
இன்பன் * நற்புவி தனக்கு இறைவன் *
தன் துணையாயர் பாவை நப்பின்னை தனக்கு இறை *
மற்றையோர்க்கு எல்லாம் வன் துணை
பெரிய திருமொழி (2-3-5)

கண்ணன் தாமரையில் அமர்ந்திருக்கும் லக்ஷ்மிக்கு இனிமையான துணைவன். பூமி தேவிக்கு நல்ல இறைவன். ஆயர் மகளான நப்பின்னைக்கும் இறைவன். ஆயர்பாடியில் உள்ள மற்ற எல்லோருக்கும் அவன் ரக்ஷகன்.

intuNai ppadumattu alarmagaL tanakkum
inban * naRpuvi tanakku iRaivan
tan thuNaiyAr pAvai nappinai tanakku iRai
maRRaiyOrkku ellam van thuNai
(peria tirumozhi 2-3-5)

kaNNan is the sweet companion for lakshmi who sits on lotus. For bhUmi devi, he is the good savior. For the cowherdess nappinnai he is the lord. Fr othe rest at Ayarpadi he is the protector.

0-138 நப்பின்னை என்பவள் ஸ்ரீதேவியாக இருக்கலாம், என்று ஒரு கருத்து

- **நல் + பின்னை** = நன்றாக பின் ஆனவள் இளைய பிராட்டி? பாற்கடல் கடைந்த போது, பின் வந்த லக்ஷ்மி.
- **ந + பின்ன: (binna)** = பிரிக்க முடியாமை. மத் என்கிற பதத்தால் எம்பெருமானை விட்டு பிரியாத ஸ்ரீமஹாலக்ஷ்மி.
- **நப்பின்னை நங்காய், திருவே துயில் எழாய்** என்று ஆண்டாளும் நப்பின்னையை திரு என்றே அழைக்கிறாள்.

nappinnai could be SrImahAlakshmi, is one opinion.

- nal + pinnai = nicely came afterwards. Second piratti? When milk ocean (paaR kadal) was chrunred mUdevi came first and then lakshmi.

- Na + binna = inseaprable. The word muth refers that lord nArAyaNA and lakshmi are inseparable.
- ANDAL herself called "nappinnai nangAy tiruvE thuyil ezhAy"

0-139 திருமகள் ருக்மிணியாகவும், பூமி பிராட்டி ஸத்ய பாமையாகவும், நீளாதேவி நப்பின்னையாகவும் கண்ணனுடன் மூன்று தேவிமார்களும் அவதாரம் செய்து அருளிய மேன்மை என்றனர் முன்னோர்.

But our elders considered Rukmini as SrI, sathybhAma as bhUmi pirattti and nappinai as nILA devi's incaranations. kaNNan was so celebrated because he came dow nt oearth with al lthe three wives.

0-140 **திரு மகளும், மண்மகளும், ஆயர் மகளும்** என மூன்று தேவிமார்கள் என்றார் பொய்கையாழ்வார்.

tirumagaLum maNmagalum, Ayar magaLum, Poigai AzhvAr says the lord has three wives.

0-141 **ஆஸ்ரிதர் குற்றத்தை பொறுக்கும் பிராட்டி; குற்றம் காண்பது ஏன்? பொறுப்பது ஏன்? என்றிருக்கும் பூமி பிராட்டி. நப்பின்னைப் பிராட்டி க்ஷமைதான் (பொறுமை) ஒரு வடிவாய் இருக்கும். பெரிய பிராட்டியார் இவனுக்கு ஸம்பத்தாய் இருக்கும். அது விளையும் தரை (பூமி). அதனை அனுபவிக்கும் போக்தாவாய் இருக்கும் நப்பின்னை** என்றார் பெரியவாச்சான் பில்ளை. (வியாக்யானம் திருவிருத்தம் 3)

periavAccan piLLai says, "lakshmi pardons all the crimes of those devotees who cherish her; bhUdevi's view is why find fault and then pardon it? Ignore; nappinai is the embodiment of patience, tolearance and forbearance. peria pirAtti forms his wealth; for that to grow, bhUmi forms as the ground; nappinai is the enjoyer of these."

0-142 குணாதிசயங்களால் இப்படி, மற்ற பிராட்டிமார்களை விட மேன்மையான நப்பின்னையை அனுஸந்திக்கிறார் பட்டர், தனியனில் **நீளாதுங்க ஸ்தந கிரி தடீ** என்று.

With these kind of great characters, nappinai who is superior to other wives of the lord has been glorified in the tanina by bhattar.

0-143 காளை ஏழும் வென்று மணந்த கமலக் கண்ணா.

மூங்கில் போன்ற மென்மையான தோள்களை உடைய நப்பின்னையை அணைக்க வேண்டி, கொடிய கொம்புகளை உடைய ஏழு எருதுகளோடு ஒரே சமயத்தில் போராடி வென்று, பின் மணந்த மணாளன் கண்ணன் என்றார், பெரிய திருவந்தாயில் (48), நம்மாழ்வார்.

~அமைப் பொலிந்த
மென் தோளி காரணமா * வெங்கோட்டு ஏழ் ஏறு உடனே *
கொன்றானையே மனத்துக் கொண்டு

kALai Ezum venRu maNanda
amaip polinda
men tOli kAraNamA vengkOttu Ezhu Eru udanE
konRAnaiyE mantttuk koNdu
(peria tiruvandadi 48)

kR^shNA fought and subdued seven bulls at the same time, in a public tournament to embrace soft bamboo-like shouldered nappinai, and eventually married her, says nammAzhvAr.

0-144 கண்ணனுடைய பால்ய லீலைகள், துஷ்ட நிக்ரஹம், பாண்டவ ஸஹாயம், கீதோபதேசம் என்று ஏதும் சொல்லாது, இங்கே அவதாரிகையில், எருதுகளைக் கொன்று நப்பின்னையை மணந்ததை சொன்னது ஏன்?

பிரியமான நப்பின்னை அடைய, தடையை அழித்தது போல், அப் பிராட்டியின் புருஷகாரத்தால், பிரியமான நம்மை அடைய, நம் வினைகளையும் ஒழிப்பான்.

while there are many great acts of kaNNA like his early mischief childhood, killing the demons like kamsan and sisubAlan, grand friendship with pAndavAs, preaching the gItA, why in this introductory verse did not talk about them, but instead kaNNA killing seven bulls?

just like how kaNNan cleared those hurdles in the way of his access to his beloved nappinai, with the recommedation (purushakAram) from pirAtti, he will clear our impediments (sins), since all of us (individual souls) are near and dear to him. That is the main theme of these verses.

0-145 கமலக் கண்ணா.

செந்தாமரைத் தடங்கண் செங்கனி வாய் செங்கமலம்,
கண்ணும் செந்தாமரை கையும் அவை அடியோ அவையே,

நம: பங்கஜ நாபாய நம: பங்கஜ மாலினே
நம: பங்கஜ நேத்ராய நமஸ்தே பங்கஜாங்க்ரயே
(பாகவதம் 21)
என்கிறபடி கண்ணனின் திருக்கண்கள், கைகள், முகம், திருப்பாதங்கள் எல்லாம் ஒரே தாமரை மயம். தாமரை உந்தி, தாமரை மாலைகள், தாமரைக் கண்கள், தாமரைத் திருவடிகள் என்றது பாகவதம்.

sentAmarai tadankaN sengani vAy sengkamalam;
kaNNum sentAmarai kaiyum avai adiyO avaiyE;
nama: pankaja nAbhAya nama: pankaja mAlinE
nama: pankaja nEtrAya namastE pankajAnghrayE.

As the AzhvArs euologize, lord's eyes, face, navel, feet and everything is all lotus. Lotus navel, lotus garlands, lotus eyes and lotus feet, everything with lord is lotus.

0-146 கோதை காட்டிய ஆறும் ஐந்தும் (ப்ரபத்தி என்கிற உபாயமும், அர்த்த பஞ்சகம் என்கிற ஞானத்துடன்) பகவானிடம் சரணாகதி செய்தபின், மறு பிறப்பின்றி, மீதி நாட்களில் **கோதை ஆறைந்தில் நாளையின்றி நிலைத்தோம்** என்கிறபடி ப்ரபத்தி நிஷ்டரானோம்.

gOdai Araindil nALaiyinRi nilaittOm. ANDAL has shown the path (upAyam, ARU) based on artha panca knowledge (ainthu means five essentials in arta pancakam). With that we surrendered to the lord (saranAgati) and now we are confident that there is no more birth for us and live the rest of the days out here as true and ideal prapannA.

0-147 **வேளை தந்து வைப்பாய், வான் வீட்டு போகத்தில்**

மோக்ஷ ப்ராப்தி உடனே அளிக்க விரும்பினும், த்ருப்த பிரபன்னனின் அப்யுபகத ப்ராரப்த கர்மா கழியும் வேளைக்கு காத்திருக்கிறான்.

~ முற்றும்

வினை விடுத்து விண்ணவரோடு ஒன்ற விரைகின்றார்
நினவு உடைத்தாய் நீ மனமே நில்லு
(அமிருத ரஞ்சனி 36)

நம்முடைய எல்லாவிதமான வினைப்பயன்களையும் முழுக்க விலக்கி நித்யஸூரிகளோடு நம்மை சேர்க்க, எம்பெருமான் வேகமாக முனைகிறார். மனமே! இதை நீ நினைத்துக் கொண்டு தளராமல் இருப்பாயாக.

vELai tandu vaippAy, vAn vIttu bOgattil

though the lord wants to grant the eternal bliss (mOksham) immediately, he is waiting patiently for our prarabdha karma (our actions in many births for which fruits has been started yielding already) to wear out.

muRRum
vinai viduttu viNNavrOdu onRa viraikinRAr
ninaivu udaittAy nI manamE nillu
(amriruta ranjani 36)

lord is rushing to annihilate entirely our sins (karmA) and to put as along with eternals (nityasOri-s). hey mind, think about this and be worry-free.

கருமம் ஞானம் கலவாது, கையிலாதர் கரை ஏற
பெருவழி இதுவே என்று, பேரின்ப வாழ்வு பெற
ஒருநாள் தாளடைந்து, ஒழுக்குமிகு பணி செய்ய
விருப்புடனே என்றும், திருப்பாவையில் இருப்பாயே. 7

கருமம் ஞானம் கலவாது = கர்ம யோகம் ஞான யோகம் போன்றவற்றை துளிக்கூட சேர்க்காது
கையிலாதார் = அகிஞ்சனர்களான சேதனர்கள்
கரை ஏற = ஸம்ஸார மென்ற பெருங்கடலில் கரை காண
பேரின்ப வாழ்வு பெற = உயர்ந்த புருஷார்த்தமான மோஷ ப்ராப்த்தி அடைய
பெருவழி இதுவே என = சிறந்த உபாயம் இது ஒன்றுதான் என
ஒரு நாள் தாளடைந்து = ஏதேனும் ஒரு நாள், ஒரு முறை எம்பெருமானின் திருவடிகளில் சரணம் அடைந்து
ஒழுக்கு மிகு பணி செய்ய = (பின்) ஜீவித நாட்களில் சாஸ்திர வரம்பின்படி பகவத் பாகவத தொண்டு செய்து கொண்டு
விருப்புடனே என்றும் = ஆசையுடன், எல்லாக் காலங்களிலும் [நீ]
திருப்பாவையில் இருப்பாயே = திருப்பாவையை அனுஸந்தித்துக் கொண்டு இருப்பாயாக!

karumam j~nAnam kalavAdu, kaiyilAtAr karai Era
peruvazhi ituvE enRu, pErina vAzhvu peRa
orunAL thALadiantu, ozhukku migu paNi seyya
viruppudanE enrum, tiruppAvaiyil iruppAyE 7

karumam j~nAnam kalavAdu = Never even to think of mixing karma j~nAna yogas
kaiyilAtAr karai Era = those utterly ineliglble souls struggling to see the shore of the samsara ocean

pErina vAzhvu peRa	= To attain the highest objective of mOksham
peruvazhi ituvE enRu	= determined that this (prapatti) is the best path
orunAL thALadiantu	= one day go and perfrom prapatti at the lotus feet of the lord
ozhukku migu paNi seyya	= (then) doing flawless service (kaimkaryam) enormously
viruppudanE enrum nI	= with an ever exhuberant mind and at all times, [you]
tiruppAvaiyil iruppAyE	= spend your time in reciting and contemplating (anusandhAnam) on tiruppavai

0-148 கருமம் ஞானம் கலவாது

மூண்டாலும் அறியதனின் முயல வேண்டா
முன்னம் அதில் ஆசை விடுகை திண்ணம்
வேண்டாது சரண நெறி வேறு ஓர் கூட்டு
(அதிகார சங்கிரகம் 47)

என்றபடி, மோக்ஷத்திற்காக வேண்டி கர்ம ஞான யோகங்களை அரம்பித்து விட்டாலும் அவற்றை முழுக்க கழித்து ஒழித்து, பின் மோக்ஷத்திற்கான இந்த சரணாதியுடன் அவற்றை கலக்காது.

karumam jn~Anam kalavAdu
mUNdAlum ariyatanin muyala vENdA
munnam atil Asai vidukai tiNNaM
vENDatu saraNa neRi vEROr kUttu
(adhikArasangraham 47)

as sVami deSika explained, even if one has already started performing karma and jn~Ana yogAs, it is not too late to completely divorce from them and get into tootal and complete surrender (SaranAgaty). But

once you are int othis, never mix the others along with this, as this prapatti will not tolerate any companion.

0-149 **நாயேன் வந்து உன் திருவடி அடைந்தேன்** என்கிறபடி **கையிலாதார்** ஆன நான் **கரை ஏற** வந்து சேர்ந்தேன்.

kaiyilAtAr karai Era as tirumangai AzhvAr says, nAyEn vantu un tiruvaDi adAintEn I am utterly uselss and now have come and hold on to your feet.

0-150 மற்ற உபாயங்களை விட உயர்ந்ததானது ப்ரபத்தி என்பதால் **இதுவே பெருவழி.** சுருக்கமான பாதையானதாலே பெருவழி (highway or expressway)

peruvazhi ituvE Here, peruvazhi maeans large or big path. Since prapatti is so exemplified compared to other routes, it is called peruvazhi. Also, peruvazhim eans highway or expressway. The expressway takes to your destination faster, and so is prapatti.

0-151 **இது வழி எய்துக என்று உகப்பால் எம் பிழை பொறுப்பார்**
இது வழியா மறையோர் அருளால் யாம் இசைந்தனமே
(அதிகார சங்கிரகம் 53)

ஆசார்யர்கள் நம்முடைய குற்றங்களை எல்லாம் பொறுத்து இந்த உயர்ந்த ப்ரபத்தி மார்க்கத்தை, கருணையோடு நமக்கு உபதேசிக்க, நாமும் அதை கைக்கொண்டதால் **பெருவழி இதுவே.**

Idu vazhi eyduga enRu ugappAl em pizhai poRuppAr
Idu vazhiyA maRiyOr aruLAl yAm isaindanamE
(adhikArasangraham 53)

Our great AcAryA-s, have pardoned all our sins and instructed us this great path of prapatti, with grace. We also have concurred and followed.

0-152 ஒரு நாள் தாளடைந்து (பின்) ஒழுக்குமிகு பணி செய்ய. ப்ரபத்திக்கு பின்னே, மோக்ஷம் நிச்சயம்தானே என தன் விருப்பப்படி அல்லாது, சாஸ்திர விஹிதமாகவே பிரபன்னன் பணி செய்ய வேண்டும்.

orunAL thALadiantu [and then] ozhukku migu paNi seyya. After prapatti, prannan should not be careless and think, “I have completed already praptti and mOksham is for sure, so the rest of the days here, I can do whatever I want.”

0-153 நித்யம் நிரபராதே4ஷு கைங்கர்யேஷு நியுங்க்ஷ்வ மாம் (ந்யாஸ தஸகம் 6) என்கிறபடி அபராதம் இல்லாத அடிமைப் பணியில் அடியேனை என்றும் நியமிப்பாயாக!

nityam niraparAdeshu kaInkayeshu niyu~kshava mAm (nyAsa dasakam 6) Oh lord! please command me into never ending flawless service (kaimkarym) to you and your devotees.

0-154 ஒரு நாள் உரைக்க உயிர் தரு மந்திரம் ஓதிய நாம்
வரு நாள் பழுது அற்று வாழும் வகையதின் மன்னுவமே
(அமிருத ரஞ்சனி 35)

நமக்கு நல்ல கதி தரும் உயர்ந்த த்வய மந்திரத்தை ஆசாரியர்கள் நமக்கு ஒரு நாள் உபதேசிக்க, அதை அனுஸந்தித்த நாமும் இனி இந்த வாழ்க்கையில் மீதி உள்ள நாட்களில் குற்றம் கலவாத கைங்கர்யத்தில் ஊக்கத்துடன் நிலை பெறுவோம்.

Oru nAL uraikka uyir taru mantiram Odiya nAm
Varu nAL pazhutu aRRu vAzhum vakaiyatin mnnuvamE

one day, our AcAryA-s have instructed, the grand dvaya mantra, which leads us into the ultimate bliss and we have followed it rigidly. let us

be determined to live out with flawless kaimkaryam, throughout the rest of the days, on this earth.

0-155 **விருப்புடனே என்றும்.** எம்பெருமானின் கைங்கர்யங்களில் ஆசை கொண்டு அந்த எம்பெருமானின் திருவடிகளைப் பெறுவதற்கு செய்கிறேன். **உற்றேன் உகந்து பணி செய்து உன பாதம் பெற்றேன்** (திருவாய்மொழி)

uRREn ukandu paNi seythu una pAdam peRREn
(tiruvaimozhi)
viruppudanE enrum.bhagavAn gives his feet to only those who crave about him, and about serving him and his devotees.

0-156 திருப்பாவை என்பது வித்து. வேதம் என்பது மரம். வித்திலிருந்து மரமும், மரத்திலிருந்து வித்தும் உண்டாவது இயற்கை.

tiruppAvai is the seed for all the vedA-s. It is natural tree comes out of seed and seed comes out of tree.

0-157 **வியாஸ ரூபாய விஷ்ணுவே:** என்று வேத உபனிஷத்தின் ஸாரமான ப்ரம்ம சூத்திரத்தை அருளியது போலே பிராட்டியும் வேத, உபனிஷத் ஸாரமான திருப்பாவையை அருளினாள்.

The essence of vedA-s are upanishad-s; the essence of those upanishad-s are bramma sUtram. Similar to how vishnU came as vyAsa and gave the bramma sutram to the world, pirAtti also descended down and gave the the essence of vedA-s and upanishad-s, which is none other than tiruppAvai.

0-158 ப்ரம்ம சூத்திரம் காட்டுவது ரஹஸ்யத்ரயமும் (திருமந்திரம், த்வயம், சரம ஸ்லோகம்), ப்ரபத்தி மார்க்கமும். ஆண்டாளின் திருப்பாவையும் அப்படியே.

bramma sUtram explains the rahasya trayam - tirumantram, dvayam, charama slokam. rahasya trayam points out the path of saraNAgaty.

ANDAL's tiruppAvai also explains these three rahasyas and show the path of saraNAgaty.

0-159 கருமம் ஞானம் கலவாது கையிலாதர் கரை ஏற = **கார்ப்பண்யம்**
பெருவழி = உபாயம்
இதுவே என்று = **மஹாவிச்வாசம்**
பேரின்ப வாழ்வு பெற = மோக்ஷம்
ஒருநாள் தாளடைந்து = **கோப்த்ருத்வ ப்ராத்தனை**
ஓழுக்குமிகு = **ப்ராதிகூல்ய வர்ஜனம்**
என்றும் பணி செய்ய = கைங்கர்ய ப்ராப்த்தி / மோக்ஷ ஆனந்தம்
விருப்புடனே என்றும் = **ஆநுகூல்ய ஸங்கல்பம்**
திருப்பாவையில் இருப்பாயே.

0-160 **திருப்பாவையில் இருப்பாயே. திருமந்திரத்தில் பிறந்து, த்வயத்தில் வளர்ந்து, த்வய நிஷ்டராகவே இருக்க வேணும்** என்று முன்னோர் மொழிந்த முறையான கருத்தை **திருப்பாவையில் பிறந்து திருப்பாவையில் வளர்ந்து, திருப்பாவை நிஷ்டராகவே இருக்க வேணும்** என்று சொல்லாம்.

tiruppAvaiyil iruppAyE. One is born in tirumantram, brought up with dvaya mantra and needs to be resolute with dvaya is the proper advice given out by our elders. it is not superfluous to say the same as, "one is born in tiruppAvai, brought up by tiruppAvai and needs to be steadfast with tiruppAvai.

திருப்பாவை பாசுரங்களில் ப்ரபத்தி பற்றிய கருத்து
mature thoughts regarding total unconditional surrender (prapatti) in tiruppAvai

பாசுரம் 1
Verse 1

தத்வ ஹித புருஷார்த்தங்களை உணருதல்
Realization of reality (tattvam), means (hitham) and highest rewards (purushArttam)

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் *
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேர் இழையீர் ! *
சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் *
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன் *
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம் *
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான் *
நாராயணனே நமக்கே பறை தருவான் *
பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்.

mArgazhi tingaL mati niRainta nannALAl
nIradap pOtuvIr! pOtuminO nEr izhaiyIr
sIr mulgum Ayppadi selvac chirmuIrgAL
kUrvel kodunthozhilan nandagopan kumaran
ErArnta kaNNi yasOdai iLanjchingam
kArmEnic chenkkaN katirmatiyam pOl mukattaan
nArAyaNanE namakkE paRai taruvaan
pArOr pukazhap paditElOr empAvAi

கண்ணா நீயே காரணம், கார்மேனி செங் கண்களிலே *
விண்ணின் மன்னா நாரணா!, வந்தாய் எமக்காய் மண்ணிலே /
அண்ணா மெய்யாறாய் பேறாய், அகதியாம் அடைந்த பின்னே *
கண்ணார காணும் முன், காலையில் நற்குண நினைவுகளே.

பதவுரை

விண்ணின் மன்னா	= வைகுந்தத்து அதிபதியாய் பரத்தவமான
நாரணா!	= திருநாராயணனே!
கார்மேனி	= எம்பெருமானின் திருமேனி ஸ்வாபாவிகமாய் கருமையானது.
செங்கண்களிலே	= அந்த கரிய திருமேனியில் உள்ள சிவந்த திருக் கண்களைக் கொண்டு
காரணம்	= ஜகத் காரணகாரன் நீயே என்பதை நன்கு அறிந்து கொண்டோம்
கண்ணா	= அந்த பரத்தவமான நீயே ஸௌலப்யனான (எளிமையான) கண்ணனாய்
எமக்காய்	= எங்களை உஜ்ஜீவிக்கவே
மண்ணிலே வந்தாய்	= பூலோகத்தில் (ஆய்ப்பாடியில்) அவதாரம் செய்தாய்
அண்ணா	= மேலே உள்ளவன், கீழே இருப்பவனிடம் வேறுமை பாராது, சரி சமமாக, தானே வலிய வந்து பழகும் உயர்ந்த நீர்மை குணம் கொண்ட உம்மிடம்
மெய்	= உண்மை தத்துவம்
ஆறாய்	= ஹிதம் என்கிற ஸௌகரியமான உபாயம்
பேறாய்	= பரம புருஷார்த்தம்
அகதி யாம்	= ஆகிஞ்சன்ய அநந்யகதியர்களான நாங்கள்
அடைந்த பின்னே	= [எல்லாம் நீயே என] உம்மிடம் சரணாகதி செய்து முடித்த பிறகு
கண்ணார	= ஞான ஸங்கோசம் (அறிவு சுருக்கம்) இல்லாமல் பரிபூர்ணமாய்
காணும் முன்	= உன்னை மோஷத்தில் முக்தர்களாய் அனுபவிப்பதற்கு முன், ப்ரபன்னர்களாகிய நாங்கள்

முன் காலையில் = விடியற்காலை பொழுது மாதிரி இருக்கும் பூலோகத்தில் எம்முடைய மீதி நாட்கள், [ப்ரபன்னர்களின் ஜீவித தெசை]

நற்குண நினைவுகளே = பகவத் திருக் கல்யாண குணாதிசயங்களில் ஈடுபட்டு மகிழ்ந்து இருத்தலே [எங்களுக்கு போக்யம்]

1-1 ஏலோ எம் பாவாய் **என உறங்கும் தோழிகளை எழுப்பி, நீராட அழைப்பது என்பது, எம்பெருமானிடத்து தமக்கு உள்ள ஸேஷத்வ பாரதந்திரிய ஞானத்தை நன்கு உணர்ந்த பிரபன்னர்களை, பகவத் குணாதிசயங்களை, சேர்ந்து அனுபவிக்க வாரும் என அழைப்பது.**

Waking up the maiden-friends is a metaphor for inviting those prapannAs who already understands their servitude to the lord, to enjoy the noble characters and miraculous deeds of the lord.

1-2 **எம்பெருமானை உகப்பிக்கும் செய்கை ஸேஷத்வம்.**
சுதந்திரமற்று அவன் வசமாய் கிடக்கை பாரதந்திரியம்.
பணியாள் போல் காத்துக் கிடப்பது தாஸத்வம்.
லச்ஷ்மணன், பரதன், அனுமனிடம் இதைக் காணலாம்.

Servitude (seshatvam) total dependence (pArAtantriyam) (dAsatvam)

1-3 கண்ணா. **கோதையின் காதலனாய், கீதையின் நாயகனாய், ஸர்வருக்கும், ஸர்வதேச, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளிலும், பலவிதமான பல ஸாதனமான கண்ணனை அழைத்தது முதலிலே.**

1-4 நாரணா. **வேதங்களும், ரிஷிகளும், ஆழ்வார்களும், ஆசாரியர்களும், பலகால் ஆழ்ந்து, அனுஸந்திக்கும் அஸாதாரணமான திருநாமம் நாராயணன் ஆகையாலே, அடுத்து அதன் அனுஸந்தானம்.**

1-5 மெய், ஆறாய், பேறாய். **தத்துவம் அறிந்து, உபாயம் அனுஷ்டித்து, உயர்ந்த பலனை அடைய எண்ணி,** நாராயணனே நமக்கே பறை **என்றது முதல் பாட்டிலே.**

உண்மைப் பொருளை அறிந்து, எளிமையான வழியை பின்பற்றி, உயர்ந்த பலனை அனுபவிக்க வேண்டும்,

mey ARAy pERAy phrase indicates the reality (tattvam), means (hitham) and the rewards (purushArtam) as ANDAL has succinctly said nArAyaNanE namakkE paRai in the first verse (pAsuram) itself.

one needs to understand true reality, follow the simple path and enjoy the highest rewards.

1-6 நாரணா. **நாராயணாவின் சுருக்கம் இது.** நாரணன் முழுவே ழுலக்குக்கும் நாதன் **(திருவாய்மொழி 2-7-2),** நாரணன் எம்மான் பார் அணங்கு ஆளன் **(திருவாய்மொழி 10-5-2),** நாரணன் தமரைக் கண்டு உகந்து **(திருவாய்மொழி 10-9-2) என்று ஆழ்வார் அருளியபடி, இது நாராயணனைச் சொல்லும்.**

1-7 நாரணா. **உள்ளதை குறைத்துச் சொல்கை இப்பதத்தின் உயர்வு. அக்ஷரம், ஸ்வரம், தொனி, பாவம் தப்பினால், அத்தால் பிரம்ம ராக்ஷஸான போகக் கடவது எனும் தண்டனை மற்றவைக்கு உண்டு. அதுவன்றி எல்லோருக்கும் எளிமையாய், சொல்வதற்கு அருமையாய் இருப்பது இது.**

1-8 நாரணா. **திருமாலின் திருநாமத்தை, எப்படியேனும் உளறினும்,** யேந கேநாபி ப்ரகாரேண த்3வயவக்தா த்வம், கேவலம் மதீ3யயைவ தயயா **என கருணையால் ரக்ஷிப்பவன் எம்பெருமான் ஆகையாலே**

1-9 **நாரணா.** எம்பெருமானை சொன்ன இடம் எல்லாம் பிராட்டியையும் சொல்லிற்றாம் ஆயிற்றே **என்ற எம்பெருமானார் வாக்கின்படி, நாரணா என்னில் அது வெறும் நாரணன் இல்லை. வெல்லம் கலந்த நாரணன். திருநாரணன். ஸ்ரீமந் நாராயணன்.**

1-10 **நாரணா. பரப்பிரம்மம் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே.** நாராயண பரம் ப்ரஹ்ம; ஏகோ ஹவை நாராயண ஆஸீத்: ; நான்முகனை நாராயணன் படைத்தான் **இத்யாதிகளில் இது நிஷ்கர்ஷம் (நிச்சயம்).**

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன ஒருவனே ஜகத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரத்திற்கும் மூல காரணம்.

1-11 **நாரணா. ஜகத்காரணகன் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே.** க இதி ப்ராஹ்மணோ நாம ஈஶோSஹம் ஸர்வதேஹிநாம் **என்கிறபடி கர்மவச்யரான பிரம்ம ருத்ராதிகளும் அங்கங்கள். இவன் ஒருவனே அங்கி.**

க இதி ப்ராஹ்மணோ நாம ஈஶோSஹம் ஸர்வதேஹிநாம் |
ஆவாம் தாவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேஶவ நாமவாந் ||
- ஹரி வம்ஸம், விஷ்ணு பர்வா 134

“க எனும் பிரம்மனும், எல்லா பிராணிகளுக்கும் ஈசனான நானும் உம்முடைய திருமேனியிலிருந்து பிறந்து உம் உடலிலேயே இருந்து வருவதால் உமக்கு கேசவன் என்ற பேர்,” என்றான் ருத்ரன்.

1-12 **நாரணா நீயே காரணம்.** காரணன் நீ, கற்றவை நீ, கற்பவை நீ, நற்கிரிசை நாரணன் நீ, நன்கு அறிந்தேன் நான் **என எம்பெருமான் நாராயணன் ஒருவனே ஸர்வ காரணகன், கர்மாக்கள் ஒட்டாதவன், ஸகல கல்யாண குணாகரன், ஸர்வ ஸ்வாமி. கர்மவச்யரான அனைவருக்கும் பலன் அளிப்பவன் இவன் ஒருவனே.**

1-13 நாரணா, நீயே காரணம். சடைமுடியன் சதுமுகன் என்று இவர் முதலாம் **என** ப்ரம்ம ருத்ராதிகளுக்கு பதவியும், சக்தியும், அதிகாரமும், பெருமையும் அளிப்பது இவன் ஒருவனே. காரணம் நீயே நாரணன் ஆதலில் இவன் ஒருவனே ஆதி காரணம். ஆராத்யன், அளிப்பவன். மற்ற யாவரும் காரியம். ஆராதனை செய்பவர், பலனைப் பெறுபவர்.

1-14 நாரணா. நராத் ஜாதாநி தத்வாநி நாராணீ **என நரனிடமிருந்து உண்டாவை நாரங்கள்;** நார ஸப்தே தேந ஸமூஹ: ப்ரோச்யதே புதை:/ கதிராலம்பநம் தஸ்ய தேந நாரயண: ஸ்ம்ருத: **என்று நாரம் எனும் ஜீவ சமூகத்திற்கு வழியும், பலனுமாய் எம்பெருமான் இருப்பதால் அவனை நாராயணன் என்றது.**

1-15 நாரணா. அயன சப்தத்தில், ஈயதே அநேந **எனும் கரண வ்யத்பத்தியால், இவனால் பலன் அடையப்படுகிறது என்பதால், பலன் அடைய இவனே உபாயம்.**

1-16 நாரணா. நாராயண பதத்திற்கு பல பொருள் இருப்பினும், பரத்வம், உபாயம் என்பதே நமக்கு இங்கு அபேஷிதம்.

1-17 கார்மேனி. எம்பெருமானின் சுபாஸ்ரயமான திருமேனி, நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா, புருஷம் கிருஷ்ண பிங்களம், கரியவாகி புடை பரந்து **என்று கறுத்து, ப்ரதிபலன் நோக்காது, வாசியின்றி பொழியும் மேகம் போன்றது.**

1-18 செங்கண். தஸ்ய யதா கப்யாஸம் பூண்டரீக ஏவம் அக்ஷிணி, கண்கள் சிவந்து, பெரியவாய் வாயும் சிவந்து, மிளிர்ந்து செவ்வரி ஓட்டிய அப்பெரியவாய கண்கள் **என எம்பெருமானின் திருக்கண்கள் கருணையால் சிவந்தவை.**

1-19 மூவுருவம் கண்டபோது ஒன்றாம் சோதி, முகில் உருவம் எம்மடிகள் உருவம் தானே **என கார்மேனியைக் காட்டியே பரத்வத்தை நிஷ்கர்ஷிக்கிறார், கலியனும்.**

1-20 **நாரணா என்று பரத்வமான ஸர்வேச்வரனே உபாயம் என்று சொல்ல வேண்டிய ப்ரகரணத்தில், கார்மேனி என்றும், கண்ணா என்றும் வந்தாய் மண்ணிலே என்று விசேஷிப்பது ஏனெனில், உபாயபூதனான எம்பெருமான், நிர்குண நிர்விசேஷ ப்ரம்மம் அன்று;** ரூபம் யத3த்யத்3பு4தம் **என அவனுக்கு திவ்யமான ரூபமும்,** அகி2ல ஹேய ப்ரத்யநீக கல்யாணைகதாந **என உன்னதமான குணங்களும், உபயவிபூதியும் சொந்தமே என ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளைச் சொன்னது.**

1-21 **விண்ணின் மன்னா.** **சார்ந்தவருக்கு சந்திரன் போல் இனிமையும், பகைவருக்கு பகலவன் போல் வெப்பமுமான, சந்திர சூரியனை ஒத்த கண்களை உடைய அவன், நித்ய ஸூரிகளுக்கும் தலைவன். அவனே** கதிர் மதியம் போல் முகத்தான்

1-22 **வந்தாய் எமக்காய் மண்ணிலே பரமபதத்தைக் காட்டிலும், குணங்கள் பல பிரகாசிக்கும் பூமி இதுவன்றோ! குணங்கள் அங்கே, பகல் விளக்கு போலே. கும்மிருட்டில் இங்கே குத்து விளக்கு போலே.**

1-23 **வந்தாய் எமக்காய் மண்ணிலே.** **மண் என்பது ஆயர்பாடி. மேலான மோக்ஷத்தை உதறி, அதிமானுஷ லீலைகளால் மேன்மையும், ஆஸ்ரித பாரதந்திரியத்தால் எளிமையும் கொண்ட** கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரனாய், ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கமாய், சீர்மல்கும் ஆய்ப்பாடியில், **சேதனர்களை காக்கவே பூவுலகில் அவதரித்தான்.**

1-24 **வந்தாய் எமக்காய் மண்ணிலே.** பிறவாமை தந்திட தானே பிறக்கும் பெருமைகளும் **என நம் பிறப்பறுக்க, பிறப்பிலி இங்கே வந்து பிறந்தான்.**

1-25 **வந்தாய் எமக்காய் மண்ணிலே.** பலபிறப்பாய் ஒளிவரும் முழுநலம் **இங்கே அன்றோ.** ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந: **என்று பிறக்க பிறக்க பள பளக்கும் மேன்மை அடைவதால்.**

1-26 **வந்தாய் எமக்காய் மண்ணிலே.** **காலம் பொறுத்து, வேறு தேஹம் எடுத்து அடையும் பரமபத அனுபவம் போலன்றி, இங்கேயே இப்படியே, இக்கணமே கிருஷ்ணானுபவம் பண்ண சுலபமாய், எமக்காய் வந்தாய் மண்ணிலே.**

1-27 **கண்ணா நாரணா.** **கண்ணன்தான் நாரணன் என அறிந்தது எப்படி எனில்** ஏஷ நாராயண ஸ்ரீமாந் க்ஷிரார்ணவ நிகேதந: / நாக பர்யங்க உத்ஸ்ருஸ்ஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் **என பாம்பணை பள்ளி கொண்ட பாற்கடல் பரமனே வந்தாய் எமக்காய் மண்ணிலே என மதுராபுரியில் வந்து உதித்தான்.**

1-28 **கண்ணா நாரணா.** கண்ணன் கழலிணை நண்ணும் மனம் உடையீர் / எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே **என்கிறபடி நாரண நாமும், கண்ணனின் திருவடிகளுமே போக்யம்.**

1-29 **நாரணா என்பதால் ஜகத்காரணகமும்,**
கார்மேனி என்பதால் வியாபகத்வமும்
செங்கண் என்பதால் பரதத்தவ நிர்ணயம் செய்து
ஸர்வ ஸ்வாமித்வத்தை காட்டியது.
கண்ணா என்பதால் ஸௌலப்யமும்,
வந்தாய் மண்ணிலே என்பதால் வாத்ஸல்யாதி குணங்களையும்,
அண்ணா என்பதாலே ஸௌஸீல்யமும் காட்டியது.

1-30 **வந்தாய் எமக்காய் மண்ணிலே என** நிகரில் புகழாய் **எனும் பொங்கும் பரிவாகிய வாத்ஸல்யமும்,**

நாரணா என்று உலகம் மூன்று உடையாய் ஆன **ஸ்வாமித்வமும்,**
கண்ணா என அவன் அடியிணைக் காட்டும் வெற்பில் நின்ற
திருவேங்கடத்தானே **என்கிற** ஸௌலப்யமும்,
அண்ணா என்னை ஆள்வானே **என்று மேன்மையானவன், கீழ் இறங்கி,**
சரிசமமாய், தானே வலிய வந்து பழகும் ஸௌஸீல்யமும்
ஆழ்வாரின் அகலகில்லேன் இறையும் **ரீதியில் இங்கே அனுஸந்தானம்.**

1-31 மெய் **ஆறாய் பேறாய்** நாராயணனே நமக்கே பறை **பரத்வத்தையும்,** ஸௌலப்யத்தையும் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் கண்ணனின் வாத்ஸல்ய, ஸௌஸீல்ய குணங்களைக் கண்டு கைம்முதல் இல்லாது வேறு புகல் அற்றவர்களான நாங்கள் (மெய்), தத்வ, ஹித, புருஷார்த்தங்களை அறிந்து கொண்டு, மோக்ஷத்திற்கான (பேறாய்) சரணாகதி (ஆறாய்) செய்தோம்.

1-32 நாரணா **என்பதால் ஈச்வர தத்துவமும்,** ஆறு **என்பதால் அவனே உபாயம் என்பதும்,** யாம் **என்பதால் ஜீவாத்ம ஸ்வரூபமும்,** மண்ணிலே **என்பதால் மோக்ஷ ப்ராப்திக்கு அது செய்யும் தடைகளும்,** பேறு **என்பதால் புருஷார்த்தமும் ஆகிய அர்த்த பஞ்சகம் இங்கே சூசகம்.**

அர்த்த பஞ்சகம் என்பது YAHOO (You Access Him with an Objective without any Obstacle).

1-33 அடைந்த பின்னே **எனில்** முமுக்ஷுர் வை ஶரணம் அஹம் ப்ரபத்3யே; ஒருக்காலே சரணாக அடைகின்றார்க்கும், உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றாற்கு **என எம்பெருமானிடத்து மோக்ஷ ஶரணாகதி செய்து பிரபன்னன் ஆனவன்.**

யோ ப்3ரஹ்மாணம் வித3த4ாதி பூர்வம்
யோ வை வேத3ாம்ச ப்ரஹிணோதி தஸ்மை
தம் ஹ தே3வ ஆத்ம பு3த்தி4 ப்ரஸாத3ம்
முமுக்ஷுர் வை ஶரணம் அஹம் ப்ரபத்3யே

என ஶ்வேதாஸ்வர உபனிஷத் எவன் பிரமனை படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசித்தானோ, அந்த தேவனை, ஞானத்தை பிரகாசிக்கும் அவனிடத்து மோக்ஷதிற்கான செய்யும் சரணாகதி என்றது.

1-34 **நாரணா, அகதி யாம் அடைந்த.** **வேறு ஒன்றையும் அபேஷிக்காத (எதிர் பார்க்காத) உபாயம் நாராயணன்.**
மாம் ஏகம் சரணம் வ்ரஜ **என்னை ஒருவனையே உபாயமாக அடை;**
த்வம் ஏவ உபாயபூ4தோ மே ப4வ **நீ எனக்கு உபாயமாய் இருப்பாயாக;**
மாம் ஏவ ப்ரபத்யந்தே **என்னையே எவர்கள் சரணம் அடைகிறார்களோ;**
சரணம் நாரயண: **(சூபால உபனிஷத்), நாரயணனே உன்னிடத்து சரணம்;**
நாராயணம் பராயணம் (நாராயண அநுவாகம்) **அவன்தான் மேலான உபாயம்;**
நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கு **என்றன ப்ரமாணங்களும்.**

1-35 **அடைந்த பின்னே, எம்பெருமானின் திருவடிகளில், சேதனன் என்றைக்கு ஶரணாகதி செய்தானோ அதுவே நல்ல நாள். அதுவே** மதி நிறைந்த நன்னாள். **அது தொடங்கி, எல்லாம் ஞானம் பிறந்த நாட்களே.**

1-36 **அடைந்த.** **பலனுக்கு, உபாய அநுஷ்டானத்தின் அவசியத்தை காட்டுகிறது. பறை எவருக்கும் அருள, எம்பெருமானிடம் வல்லமை இருப்பினும், கருணை அவனிடம் கரை புரண்டு ஓடினும்,** ரக்ஷ்யா பேஷாம் ப்ரதீக்ஷதே **என்கிறபடி ஸாத்யோபாய ப்ராத்தனாரூபமான ப்ரபத்தி என்னும் வ்யாஜத்தை முன்னிட்டே பலனை அளிக்கிறான்.**

1-37 **நாரணா.** தனித் தருமம் தான் எமக்காய் **என்று நாரங்களுக்கு தன்னையே காட்டிக் கொடுக்கும் ஸித்தோபாயமான நாராயணனைச் சொல்லிற்று.** **அடைந்த.** நின் தனிமை துணையாக எந்தன் பாதம் பூண்டால் **என்று அகிஞ்சனனான சேதனன் அனுஷ்டிக்கும் ஸாத்யோபாயமான ப்ரபத்தியைச் சொல்லிற்று.**

1-38 முன் காலையில். **உத்தராயண புண்ய காலத்தின் முன் வருவது மார்கழி, தேவர்களுக்கு தெளிவு கொடுக்கும் பிரம்ம முகூர்த்தம். விடியற்காலை. அதுவே** மார்கழித் திங்கள்.

1-39 முன் காலையில். **நித்ய முக்தர்களுடன் சேர்ந்து** ஸத3ா பஶ்யந்தி ஸூரய: **என எம்பெருமானை அனுபவிக்கும் மோக்ஷ ப்ராப்தி, ப்ரபன்னர்களுக்கு, சரீரம் சாயும் போது நிச்சயம். இருப்பினும், அதுவரை, பூலோகத்தில் பிரபன்னைன் ஜீவித நாட்கள், விடியற்காலை பொழுது போலே.** மார்கழித் திங்கள்

1-40 முன் காலையில். தேஹாவஸானத்தளவும் நல்விடிவு **என விடிந்தும் விடியாத பொழுதாக இருப்பவை பிரபன்னனின் எஞ்சிய நாட்கள். அங்கே சாஸ்திரமும், ஆசாரியனுமே கைவிளக்கு.**

ஸதாசாரிய பரிக்ரஹத்துக்கு முன்புள்ள அநாதி காலம் எல்லாம் ஒரு காள ராத்ரி. பின்பு தேஹாவஸானத்தளவும் நல்விடிவு. மேல் முழுக்க ஸ்வச்சசந்த கைங்கர்ய மஹோத்ஸவ திவஸம் **என்றார் ஸ்வாமி தேசிகன் ரஹஸ்யரத்நாவளியில்.**

1-41 நற்குண நினைவுகளே **பிரபன்னனின் பரமபத அனுபவம்வரை, எம்பெருமானின் குணாதிசயங்களில் இழிந்து, அடியாரோடு கூடி மகிழ்ந்து, மோக்ஷ ப்ராப்தியை இப்புவியிலேயே** நிஸ்ஸம்ஶய: ஸுக2மாஸ்வ **என அனுபவிக்க வேண்டி, மற்றோரையும் அழைப்பது,** நீராடப் போதுவீர்.

1-42 அகதி யாம். **பகவதனுபவத்திற்கு அநுகூலமான ப்ரபன்னரின் ஆத்ம குணங்களே அணியும் ஆபரணங்கள்.** நேர் இழையீர் .

அதில் பங்கு கொள்ள வேண்டி, எப்பொழுதும் தான், தனது என்று இல்லாமல் எம்பெருமானே கதி என்றும், அடியேன் என்று பாகவதர்கள் இட்ட ஆணையாக இருக்கும் பிரபன்னர்களின் உயர்ந்த ஆத்ம குணங்களைக் காட்டும்

1-43 **அகதி என்பது செல்வம். யாம் என்பது அந்நினைவை உடைய சிறுமியர்.** செல்வச் சிறுமீர்காள். **அகிஞ்சனராய், அநந்யகதியராய், அநந்ய ப்ரயோஜனராய், அநந்யார்ஹ சேஷபூதராய், கைங்கர்ய ஞானம் தவிர மற்று அறியாத ஸேஷத்வ பாரதந்திரயரான ப்ரபன்னர்கள்.**

அகிஞ்சனர் = கைம்முதல் இல்லாதவர்
அநந்யகதியர் = வேறு கதி இல்லாதவர்ம
அநந்யப்ரயோஜனர் = பகவான், அவன் அனுபவம் தவிர மற்றதில் கண் வைக்காமை
அநந்யார்ஹ சேஷர் = பெருமாளைத் தவிர மற்றவருக்கு உரிமை இல்லாதவன்.

1-44 **அகதி யாம்.** லக்ஷ்மணோ லக்ஷ்மீ ஸம்பந்ந: **எனும் கைங்கர்ய லக்ஷ்மீ பெற்ற லக்ஷ்மணன், எல்லாம் துறந்தாலும்** அந்தரிஷ கதஶ் ஶ்ரீமாந்: **என்ற ஶ்ரீவைஷ்ணவ ஶ்ரீயை உடைய விபீஷணன், சுயமுயற்சி சுகமில்லை என** ஸது நாக வர: ஶ்ரீமாந் நாராயண பராயண: **என்று அறிந்த கஜேந்திரன் போலே அகதி இங்கே.**

1-45 **நாரணா மெய் ஆறாய் பேறாய் என்பதால் அகாரவச்யனான நாராயணன், மகாரவாச்யனான ஜீவனுக்கு, உபாய அனுஷ்டானங்களை அருளி, உயர்ந்த பலனையும் அருள்வான் என்கிற ப்ராப்ய ப்ராபகங்களை காட்டுகிற திருமந்திரம் இங்கே தெளிவு.**

1-46 **ஆறாய்.** **கண்ணன் திருவாக்காலே கீதை முழுவதும் கேட்டு, இறுதியில் அவனே** உபாயம் **என்பதை அறிந்தான் அர்ஜீனன்.** **பேறாய்.** **உயர்ந்த** பலனாகிய **எம்பெருமான் அனுபவத்தை, பாரதந்திரியத்தால் உணர்த்தினான் பரதன். இந்த உபாய உபேயங்கள் இரண்டும் இங்கே தெளிவு.**

1-47 **பரத்வம், ஸௌலப்யம், மற்ற எல்லா திருக்கல்யாண குணங்களும், திவ்ய திருமேனியும் கொண்டு, பிராட்டி ஸஹிதமான ஶ்ரீமந் நாராயணனிடம் அகிஞ்சனராய் அநந்ய கதியராய் ப்ரபத்தியை உபாயமாய் பற்றி க்ஷுத்ர பலனை யாசிக்காது, மஹா புருஷார்த்தமாகிய மோக்ஷ பலனை வேண்டி,**

அநந்யப்ரயோஜனராய் அனந்த ஆனந்தமான கைங்கர்ய பராப்தியை வேண்டிய ப்ரபன்னர்களை, புவியிலே எஞ்சிய நாட்களில், அந்த எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களை சேர்ந்து அனுபவிக்க வாரும் என்று அழைத்தல், இந்த பாசுரத்தின் ப்ரபத்தி பற்றிய ஸாரார்த்தம்.

பாசுரம் 2

மோக்ஷதிற்காக அனுஷ்டிக்கும் சரணாகதி

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
*செய்யும் கிரிசைகள் கேளீரோ! * பாற்கடலுள்*
*பையத் துயின்ற பரமன் அடி பாடி *
*நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி *
*மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் *
*செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம் *
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி *
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்.

**மணிமாயன் மனம் மகிழ்வித்து * மற்றவை முற்றும் மறுத்து *
பிணியின்றி காப்பாய் என்றே * பணிசெய்ய ஏழை வரித்து /
துணிந்து திண்கழல் பற்றி * தணிந்து தானின்றி கைகாட்டி *
அணிந்து ஆறுடன் நின்றார் * கனிந்து வாழ்வாரே இங்கு.**

பதவுரை

மணிமாயன்	= கௌஸ்துப மணியான ஜீவனை மார்பில் கொண்ட எம்பெருமான், (அவனை)
மனம் மகிழ்வித்து	= உகப்பித்து - ஆநுகூல்ய ஸங்கல்பம்
மற்றவை	= சாஸ்திர விரோதங்களை
முற்றும் மறுத்து	= முழுக்க கைவிட்டு (ப்ராதிகூல்ய வர்ஜனம்)
துணிந்து	= மஹாவிச்வாசத்துடன்
ஏழை	= அகிஞ்சனான [என்னை] கார்பண்யம்
காப்பாய்	= ரக்ஷித்து அருள்வாய்
என்றே வரித்து	= என்றே பிரார்தித்து (கோப்த்ருத்வ வரணம்)
பிணியின்றி	= பிறப்பு/இறப்பு என்னும் நோய் தொலைந்து

பணிசெய்ய = நித்ய கைங்கர்ய ப்ராப்தி பெற

திண்கழல் பற்றி = எம்பெருமானின் திருவடிகளையே திடமாக பற்றி (சரணாகதி)

தணிந்து தானின்றி = அகங்கார மமகாரங்கள் எல்லாம் விலகி, ஸ்வரூப ஞானத்துடன்

கைகாட்டி = எல்லாம் எம்பெருமானே என ஸாத்விக த்யாகத்துடன்

அணிந்து = ஆத்ம குணங்களையே [வாய்மை, இரக்கம், பொறுமை, புலனடக்கம் போன்றவை உடையவராய்] ஆபரணங்களாய் கொண்டு

ஆறுடன் = ஷடங்க யோகமான ப்ரபத்தியில்

நின்றார் = நிலையாக நின்றவர்கள் (மற்ற உபாயங்களை ஏறெடுத்தும் பாராது)

கனிந்து = ஞான, பக்தி முற்றி

வாழ்வாரே = பகவத் பாகவத நினைவுடன் உயர்ந்த வாழ்க்கை வாழ்வார்கள்

இங்கு = பூலோகத்தில்.

உட்கருத்தின் சுருக்கம்

முதல் பாசுரத்தில் கண்ணன்தான் நாராயணன். அவனே பரத்வம் என்றும் ஜீவர்களாகிய நாம், அவனுக்கு வசப்பட்டு (ஸேஷியாய்), அவனைச் சார்ந்து (பாரதந்திரியராய்), அவனுக்கு பணி (கைங்கர்யம்) செய்யவே உள்ளோம் என்ற தத்துவத்தை புரிந்து கொண்டோம். அல்ப அஸ்திர பலத்தையே தரும் ஸம்ஸாரத்தில் வெறுப்பு உண்டாகி, பெரும் பேறான, பரம புருஷார்த்தமான, நித்ய கைங்கர்யத்தில் ஆசையும் ஏற்பட்டு விட்டது.

இந்த தத்துவ ஞானமும், புருஷார்த்த ருசியும் மிகவும் அவசியமானாலும் அவை மட்டுமே மோஷத்தை தராது (necessary but not sufficient condition).

இத்துடன், மோக்ஷத்தை பெறுவதற்கு நாம் செய்ய (அனுஷ்டிக்க) வேண்டிய பரம ஹிதமான உபாயம் ஒன்று இருக்கிறது. அதுதான் ப்ரபத்தி.

அநாதி காலமாய் பாவமே செய்து வந்தால் நம்மேல் பகவானுக்கு மகா கோவம், ஆஜ்ஞாதிலங்கனம். அந்த சீற்றத்தை தணித்து அவனை வசீகரிக்க நாம் செய்ய வேண்டிய அல்பமான சாக்கு - ஸாத்யோபாயமான ப்ரபத்தி (Executable means). நாம் செய்கிற ப்ரபத்தியில் கோவம் தணிந்த ஸித்தோபாயமான (Existing means) எம்பெருமான், தனக்கே உள்ள ஸ்வாதந்திரியத்தாலும், கருணையாலும் நமக்கு மோஷத்தை அளிக்கிறான். அந்த ப்ரபத்தியை எப்படி அங்கங்களுடன் அனுஷ்டிப்பத்து என்பதை காட்டுகிறது இந்த பாசுரம்.

உய்யும் ஆறு எண்ணி
ஆறுடன்
நாம் உஜ்ஜீவிக்க வேண்டி ஒரே ஒரு முறையே அனுஷ்டிக்க வேண்டிய ஆறு அங்கங்கள் கூடிய

நம் பாவைக்கு
நின்றார்
நம்முடைய எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனிடம் நாம் செய்யும் ப்ரபத்தி என்னும் சடங்கைச் செய்து அதிலே நிலையாக நின்றவர்கள்

செய்யும் கிரிசைகள் கேளீரோ!
அணிந்து
அதற்கு வேண்டிய அங்கங்களை நீங்கள் கேட்டு அதன்படி நடக்க மாட்டீர்களா?

ஆந்தனையும் கை காட்டி
தணிந்து தானின்றி கைகாட்டி

இப்படி ப்ரபத்தி செய்யும்போது தான், தனது என்கிற அகங்கார மமகாரங்கள் இல்லாது, அதாவது கர்த்ருத்வ, மமதா, பல, பல உபாயத்வ த்யாகங்களுடன், [பகவான் தானே, தனக்காக, பலன் எல்லாம் தனக்கே கொண்டு, தானே உபாயமாய் நின்று] என்னை ஒரு கருவியாய் கொண்டு, எல்லாவற்றையும் நடத்திக் கொள்கிறான் என்கிற நினைவை ஆந்தனையும் கை காட்டி என்பது காட்டுகிறது.

வையத்து வாழ்வீர்காள்
கனிந்து வாழ்வாரே இங்கு.
இப்படி திருடிய பொருளான ஆத்மாவை எம்பெருமானிடமே திருப்பி தந்து எல்லாம் பகாவானே எல்லாம் என்று கை காட்டி விட்டு அடக்கத்துடன் இருக்கும் பிரபன்னர்களை வையத்து வாழ்வீர்காள் என்று நீங்கள்தான் பூலோகத்தில் வாழ்வு பெற்றவர்கள் என்று அதிசயிக்கிறாள் இந்த இரண்டாம் பாசுரத்தில்.

ப்ரபத்திக்கான ஐந்து அங்கங்களையும், ஆறாவதான சரணாகதி என்கிற அங்கியையும் விவரிக்கிறாள்.

பரமன் அடி பாடி, நாட்காலே நீராடி.
மணிமாயன் மனம் மகிழ்வித்து
பகவான் கௌஸ்துப மணியான ஜீவனை தன் மார்பில் வைத்துக் கொண்டு இருக்கிறான். அந்த எம்பெருமான் உகந்த காரியங்களைச் செய்வது, அதாவது சாஸ்திரத்தின்படி நடப்பதுதான் ஆநுகூல்ய ஸங்கல்பம்.

நெய் உண்ணோம், பால் உண்ணோம், மை இட்டு எழுதோம், மலர் இட்டு நாம் முடியோம், செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்று ஓதோம்.
மற்றவை முற்றும் மறுத்து
பகவான் விரும்பாததை தவிர்ப்பது, எம்பெருமானின் கட்டளையான சாஸ்திர விதி முறைகளை மீறுவதில்லை என்கிற எண்ணம். இது ப்ராதிகூல்ய வர்ஜனம் (2).

ஐயமும்

ஏழை

ஐயம் என்பது சந்தேகம். இங்கே இது அதற்கு பின் மறைந்துள்ள கோழைத்தனத்தை (cowrdness) காட்டுகிறது. ஞான பக்தி யோகத்தில் தனக்கு திறமை இல்லை (inability) என்று தன்னுடைய இழிந்த நிலையை பகவானிடத்தில் சொல்லி வருந்தும் என்கிற கோழைத்தனமாகிற கார்ப்பண்யம் (3).

பிச்சையும்.

காப்பாய் என்றே வரித்து

பிச்சை என்பது யாசகம். பக்வானிடத்தில் சென்று அகிஞ்சனான எனக்கு உபாய ஸ்தானத்தில் நீயே நின்று ரக்ஷித்து அருள வேண்டும் என்று யாசிக்கும் பிராத்தனை கோப்த்ருத்வ வரணம் (4).

எண்ணி

துணிந்து

என்பது நினைத்து மகிழ்வது. எம்பெருமானின் குணாதிசயங்களை நினைத்து நினைத்து மகிழும்போது அவன் நம்மை நிச்சயம் ரக்ஷித்தே தீருவான் என்ற திடமான, அசைக்க முடியாத நம்பிக்கை கொள்ளல். இதுவே மஹா விச்வாசம் (5).

உய்யும் ஆறு

ஆறுடன்

உஜ்ஜீவிப்பதற்கான வழி. அது எம்பெருமானே. கீழே சொன்ன ஐந்து அங்கங்களுடன் ஸாத்விக த்யாகம் என்னும் ஆறாவதான அங்கியுடன் செய்யும் சரணாகதி (6).

உகந்தேலோ

திண்கழல் பற்றி நின்றார்

இப்படி எம்பெருமானிடம் சரணாகதி செய்து இந்த பூலோகத்திலேயே மகிழ்ந்து இருப்பவர்கள்.

சரணாகதிக்கு வேண்டிய ஐந்து அங்கங்களை *செய்யும் கிரிசைகள்* என்பதாலும், சரணாகதி என்கிற அங்கியை *நம் பாவைக்கு* என்பதாலும், உஜ்ஜீவிக்க வேண்டி நாம் ஒரே ஒரு முறையே அனுஷ்டிக்க வேண்டிய ஷடங்க யோகமாகிற ப்ரபத்தியை *உய்யும் ஆறு எண்ணி* என்பதாலும் காட்டுகிறது இந்த பாசுரம்.

பாசுரம் 3

ப்ரபத்தி செய்த பிரபன்னர்களின் பலன்
க்ருத க்ருத்யர்கள் கருதாத்தர்களாக ஆவது

*ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர்பாடி *
நாங்கள் நம்பாவைக்கு சாற்று நீராடினால்
*தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து *
*ஓங்கு பெறும் செந்நெல் ஊடு கயலுகள *
*பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப *
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
*வாங்க * குடம் நிறைக்கும் வள்ளல் பெறும் பசுக்கள் *
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.

**அலையின்றி அடைந்தவையில் * அளந்தவனே மகிழ்ந்து உறங்க *
விலையின்றி கேட்டுரைத்து * வணங்கி குறையின்றி பணியுகக்க /
வலையின்றி உடல்தானும் வீழ * வான்வழி ஏறி விண்ணுலகில் *
நிலையூன்றி நின்றாருடன் * நீங்காத நிதியில் நிறைவாரே.**

பதவுரை

அலையின்றி = திட மனதுடன் வேறு உபாயங்களை தவிர்த்து
அடைந்தவையில் = எம்பெருமானின் திருவடிகளில் ப்ரபத்தி அடைந்த எல்லா ஜீவன்கள் இதயத்திலும்
அளந்தவனே = திரிவிக்கிரமானாய் உலகளந்த எம்பெருமானே
மகிழ்ந்து உறங்க = உழவன் நன்றாக வளர்ந்த தன் பயிரைக் கண்டு கவலை நீங்கி மகிழ்வது போலே [உள்ளாய்]
விலையின்றி = ஸ்வயம் ப்ரயோஜனமாய்
கேட்டு உரைத்து = பகவானின் திருக்கல்யாண குணங்களை கேட்டும் அதைச் சொல்லி மகிழ்ந்தும்

வணங்கி = பகவானையும் பாகவதர்களையும் ஸேவித்தும்
குறையின்றி = அபராதமிலாத
பணி உகக்க = கைங்கர்யங்களில் மகிழ்ச்சி கொள்வார்கள் [இங்கு]
உடல் தானும் வீழ = இந்த பூமியில் உடலும் அதைச் சேர்ந்த அக்ங்கார மமகாரங்களும் விட்டு ஒழியும்போது
வலையின்றி = ஸம்ஸாரம் மறுபடியும் தொடராது
வான்வழி ஏறி = அர்ச்சிராதி மார்கமாய் சென்று
விண்ணுலகில் = வைகுந்தத்தில் உள்ள
நிலை ஊன்றி நின்றாருடன் = நித்ய ஸூரிகளுடன்
நீங்காத நிதியில் = அழியாத செல்வமாகிற கைங்கர்**யத்தி**ல்
நிறைவாரே = முழுவதுமாய் திளைத்து மனம் நிறைந்து மகிழ்வர்.

உட்கருத்தின் சுருக்கம்

முதல் பாசுரத்தில் நாரயணனே பரத்துவம் என்றும், இரண்டாம் பாசுரத்தில் அந்த நாரயணனை அடைய ப்ரபத்தி என்ற உபாயத்தை அங்கங்களுடன் அனுஷ்டிப்பதையும் சொன்னாள். அப்படி சரணாகதி என்கிற உயர்ந்த உபாயம் செய்தவர்கள், செய்ய வேண்டிய காரியம் யாவையும் செய்து முடித்த க்ருதக்ருத்யராக ஆகிறார்கள். அந்த பிரபன்னர்கள் பலனை பெற்றவர்களாக, க்ருதார்த்தர்களாக ஆவதை இந்த பாசுரத்தில் விளக்குகிறாள்.

ஒங்கு பெறும் செந்நெல்
அலையின்றி
நன்றாக வளர்ந்த பயிர். இது பிரபன்னனைக் காட்டும். உலகில் எத்தனையோ விதை விதைத்தாலும், சில மட்டுமே நன்றாக செழித்து ஓங்கி வளர்கின்றன. அதுபோல எத்தனையோ ஜீவராசிகள் உலகில் இருக்க, சிலர் மட்டுமே உலக விஷயங்கள் என்ற அலைகளை நோக்காது எம்பெருமானின் திருவடிகளே உயர்ந்தது என்று சரணாகதி செய்கின்றார்கள்.

ஒரு ஸதாசாரிய ஸம்பந்தத்தால் எம்பெருமானின் திருவடிகளில் அடைக்கலம் அடைந்த ப்ரபன்ன் ஒங்கு பெறும் செந்நெல். அவனுக்கு பலன் உடனேயே ஆரம்பித்து விட்டது.

ஊடு கயலுகள

அவையில்

நடுவே மீன்கள் துள்ள. சேதனர்கள் மனிதர்களாகவோ, பசு, பக்ஷி என்றாகவோ இருந்தாலும் அதிலிருந்தேயே மோக்ஷம் அடையலாம். மனிதனாகித்தான் மோக்ஷம் என்று இல்லை. கஜேந்திர மோக்ஷத்தில் இதைக் காணலாம். செந்நெல்லான பிரபன்னனுடன், இங்கே மீனைச் சொன்னது, பசு மனுஷன், பக்ஷி என்று எந்த ஜீவனும் மோக்ஷம் அடையலாம் என்பதைக் காட்டுகிறது. அவை என்பது எல்லா பத்த ஜீவர்களை காட்டும்.

தேங்காதே

நிலையான

ஏங்காமல். இங்கே இது பயமின்றி என்று பொருள். ஸம்ஸாரம் நமக்கு வந்து விடுமோ என்ற பயமின்றி. கிடைத்த மோக்ஷம் என்பது நிலையாயானது என்பதை அறிந்து.

இருந்து புக்கு

ஏறி

ப்ரபத்தி நிஷ்டையில் ஸ்திரமாக இருந்து, இங்கு இருந்து புகுந்து. இந்த சரீரம் கழிந்து போகும்போது. பூலோகத்திலிருந்து மேலே ஏறி.

சீர்த்த முலை பற்றி வாங்க

வான்வழி ஏறி விண்ணுலகில்

அர்ச்சிராதி மார்க்கம் வழியாக ஆதிவாஹிகர்கள் நடத்திச் செல்ல மோஷ ஸாம்ராஜயம் அடைந்து,

குடம் நிறைக்கும் வள்ளல் பெறும் பசுக்கள் நீங்காத செல்வம் நிறைந்து
நிலையூன்றி நின்றாருடன் நிலையான நிதியில் நிறைவாரே
நித்யஸூரிகளுடன் எம்பெருமானுக்கு பணி செய்யும் நித்ய கைங்கர்யத்தை ஏற்ற தாழ்வு இன்றி அனுபவிப்பர்.

ஓங்கு உலகு அளந்த
அளந்தவனே
திரிவிக்கிரமாவதாரம் செய்து உலகை எல்லாம் தன் திருவடியில் அளந்து எல்லாம் தனக்கு சொந்தம் என்று ஸ்வாமித்வத்தையும், ப்ரத்வத்தையும் பிரகாசித்த பகவான்

பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப
மகிழ்ந்து உறங்க
தான் நட்ட பயிர்கள் நன்றாக வளர்ந்து செழுமையாக இருப்பதைக் கண்டு மகிழும் உழவன் போல எம்பெருமான் இந்த ஜீவன்கள் தன்னை அடைய ப்ரபத்தி செய்து முடித்ததைக் கண்டு ஆனந்தமாக, காரியம் முடிந்தது என்று சுகமாக உறங்க

தீங்கின்றி நாடெல்லாம்
விலையின்றி, குறையின்றி

திங்கள் மும்மாரி
கேட்டு, உரைத்து, வணங்கி
மாதத்தில் மூன்று முறை நன்றாக மழை பெய்வது. இங்கே பிரபன்னர்கள் மூன்று வகையாய் நல்ல விஷயங்களை கேட்டு, பிறருக்கு சொல்லி, எம்பெருமானை வணங்கி நிற்பதை காட்டும்.

பெய்து

பணி உகக்க

அப்படி மூன்றிலும் சிறந்தவர்களை எப்படி அறியலாம் என்றால் அவர்கள் செய்யும் கைங்கர்யங்களையும், அதிலே ஆன்ந்தமாக இருப்பதிலும்.

தேங்காதே

வலையின்றி

இப்படி ப்ரபத்தி செய்து எம்பெருமான் மோக்ஷத்தை அளிப்பதாக உண்மை உரைத்ததில் ஏதாவது (Is there any catch? Or disclaimer) தடங்கல் அல்லது உள்ளர்த்தம் உண்டா என்றால் கிடையாது. மோக்ஷம் நிச்சயம் அது ஒரு வழி பாதை (one way only)

புக்கிருந்து

உடல்தானும் வீழ,

இந்த பிறவியில் எப்பொழுது உடல் கீழே விழுகிறதோ, ஆத்மா பிரிகிறதோ அப்போதே இங்கிருந்து கிளம்பி மேலே ஏறி.

பாசுரம் 4

பிரபன்னர்கள் பூலோகத்திலேயே பலனை வேண்டுதல்

*ஆழி மழைக்கண்ணா! ஒன்று(ம்) நீ கை கரவேல் *
*ஆழியுள் புக்கு முகந்துகொ (டு) ஆர்த்தேறி *
*ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்துப் *
*பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில் *
*ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து *
*தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல் *
*வாழ உலகினில் பெய்திடாய் * நாங்களும்*
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்.

**நீர் உறுஞ்சும் மேகம்போல் * நிகமத்தின் நுண்மை ஒளிர *
கூர் அம்புமழை போலே * குதர்க்கத்தை குலைத்து முழங்க /
சீர் குணத்தால் அயனை * உந்தியில் உமிழ்ந்த வல்லவனே *
கார் வண்ண கண்ணா * காலம் கழியாது அருள்வாயே.**

பதவுரை

நீர் உறுஞ்சும்	= கடலில் உப்பை விட்டு நீரை மட்டும் கிரஹிக்கும்
மேகம்போல்	= மேகங்கள் போலே
நிகமத்தின் நுண்மை	= வேதத்தில் உள்ள சூஷ்மமான கருத்துக்களை
ஒளிர	= பிரகாசிக்கும்படியாக
குதர்க்கத்தை	= உண்மையான தத்துவங்களுக்கு மாறாய் பரப்புகின்ற குத்ருஷ்டிகளை
கூர் அம்புமழை போலே	= கூரிய அம்பு மழைபோலே எமக்கு கருத்தும், வாக்கும் (தோன்றி)
குலைத்து	= வாதத்தில் அடியோடு நாசம் செய்து,
முழங்க	= வீர கர்ஜனையுடன் (விளங்க)

உந்தியில் = திரு நாபியில்
அயனை உமிழ்ந்த = பிரம்மாவை படைத்த
வல்லவனே = ஸகல ஸாமர்த்யமும், பலமும் உடைய
கார் வண்ண = மேகங்கள் போல் கருமை நிறம் கொண்ட
கண்ணா = எங்களுடைய கண்ணனே
சீர் குணத்தால் = உம்முடைய திருக்கல்யாண குணங்களால்
[எமக்கு = பிரபன்னர்களாகிய எங்களுக்கு]
காலம் கழியாது = காலம் தாமதிக்காது
அருள்வாயே = ஸங்கல்பிக்க வேண்டும்.

உட்கருத்தின் சுருக்கம்

மூன்றாம் பாசுரத்தில் ப்ரபத்தி செய்து க்ருதக்ருத்யனான பிரபன்னனின் புருஷார்த்த பலன் எப்படி பூலோகத்திலும், மோக்ஷத்திலும் உள்ளது என்பதை பார்த்தோம். இந்த பாசுரத்தில், அந்த பிரபன்னனின் பூலோகத்து பலனை தாமதமின்றி உடனேயே பெற எம்பெருமானின் ஜகத் காரணத்வத்தை காட்டி தனக்கு அருளும்படி பிரார்த்திப்பதாக உள்ளது.

ஊழி முதல்வன் உருவம்போல் மெய் கறுத்து
கார்வண்ண
நீரை எல்லாம் வாரி விழுங்கி மழை பொழிய காத்துக் கொண்டிருக்கும் கருமையான மேகம் போல், ஜகத் காரணனான எம்பெருமான் கருமையான திருமேனியுடன் ஜகத் ஸ்ருஷ்டி செய்ய காத்துக் கொண்டு இருக்கிறான்.

பாழி அம் தோளுடைப் பற்பநாபன்
அயனை உந்தியில் உமிழ்ந்த வல்லவனே
அப்படி ஜகத்காரியம் செய்ய பெருமையும், வலிமையும் கொண்ட தோள்களை உடைய பகவான் படைப்பதற்கு பிரம்மாவை தன் அழகான திருநாபியிலிருந்தும், அழிப்பதற்கு சிவனை அவன் மூலமாக படைக்கிறான்.

ஆழி மழைக்கண்ணா
கண்ணா
அப்படிப்பட்ட எண்ணற்ற கல்யாண குணங்களை உடைய எம்பெருமானே

ஒன்று(ம்) நீ கை கரவேல்
அருள்வாயே
எங்களை காக்க வேண்டி நீர் அனுக்ரஹம் செய்ய வேண்டும்

ஆழியுள் புக்கு முகந்துகொ (டு) ஆர்த்தேறி
நீர் உறிஞ்சும் மேகம்போல் நிகமத்தின் நுண்மை ஒளிர
கடலில் உள்ள உப்பு கலந்த நீரில் உப்பை விட்டு நல்ல நீரை மட்டும் கிரஹிக்கும் மேகங்கள் போலே வேதங்களில் முமுக்ஷுக்கு தேவையான உபனிஷத்தில் சொன்ன தத்வ ரஹஸ்யங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு

ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
ஒளிர முறித்து முழங்க
தத்வ ஞானத்தை ப்ரகாசித்தும், அதற்கு மாறாக குத்ருஷ்டிகளால் சொன்னவைகளை பூண்டோடு அழித்தும்

தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல்
காலம் கழியாது கூர் அம்புமழை போலே,
அப்படி நம்முடைய எண்ணங்களும், சொற்களும் துளிக்கூட தாமதம் இன்றி அம்பு மழைபோல் தங்கு தடையின்றி பொழிய வேண்டும்

வாழ உலகினில் பெய்திடாய்
சீர் குணத்தால் அருள்வாயே

உன் திருக்கல்யாண குணங்களை அனுபவிக்க நீ எனக்கு அருள் செய்வாய்

பாசுரம் 5

அநிஷ்ட நிவ்ருத்தி ஒழிய ப்ராத்தனை

*மாயனை மன்னு வட மதுரை மைந்தனைத் *
*தூய பெருநீர் யமுனைத் துறைவனை *
*ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத் *
*தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத் *
*தூயோமாய் வந்து நாம் தூமலர்த்தூவித் தொழுது *
*வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் *
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும் *
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்.

**அழியா தத்துவம் தனதாக்கி * ஆயனாய்த் தானே தோன்றி *
பழியா நதியில் விளையாடி * பெற்ற தாயின் பெருமை ஏற்றி /
ஒழியா உறவில் உத்தமராய் * ஒரு சொல்லால் அடைந்தார்க்கு *
கழியாது அறியாத வினை * கழிப்பாயே தீயினில் தூசாக்கி.**

பதவுரை

அழியா தத்துவம்	= ப்ரகிருதி, சேதனர்களை
தனதாக்கி	= தனக்கு வசமாகக் கொண்டு ஜகத் ஸ்ருஷ்டி செய்து, ஜீவன்களை ப்ரகிருதியிலிருந்து விடுவித்து
ஆயனாய்த் ।	= எளிமையாக ஆயர் குலத்தில்
தானே தோன்ற	= பரத்வமான எம்பெருமான் தானே அவதாரம் செய்து
பழியா	= ஸமுத்ரம், கோதாவரி போலன்றி யாரும் குறை சொல்லாதவாறு
நதியில் விளையாடி	= உயர்ந்த யமுனை நதியில் விளையாடி
பெற்ற தாயின்	= இவனைப் பெற்ற வயிறு உடையாள் என்று

பெருமை ஏற்ற = போற்றும்படி தாயாருக்கு புகழ் தந்த [கண்ணா]
ஒழியா உறவில் = எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள ஒழிக்க முடியாத உறவை அறிந்து
உத்தமராய் = ஆத்ம குணங்களுடன்
ஒரு சொல்லால் = ஒரே ஒரு முறை சரணம் என்று சொல்லி
அடைந்தார்க்கு = ப்ரபத்தி செய்த பிரபன்னர்களுக்கு
கழியாது = இத்தனை ஜன்மங்களாக விலகாமல் இருந்த ஸஞ்சிதம், ப்ராரப்த கர்மாக்களையும்
அறியாத வினை = ப்ரபத்திக்கு பிறகு அறியாமல் செய்த பாவங்களையும்
தீயினில் தூசாக்கி = தீயில் விழுந்த தூசி எப்படி உடனே கருகி சாம்பலாகுமோ, அது போலே
கழிப்பாயே = அடியோடு ஒழிப்பாயே

உட்கருத்தின் சுருக்கம்

ஒங்கி உலகு அளந்த பாசுரத்தில் புருஷார்த்தம் என்பது பூலோகத்தில் *"தீங்கின்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து"* என்றும், வைகுந்தத்தில் *"நீங்காத செல்வம் நிறைந்து"* என்றும் பார்த்தோம். *ஆழிமழைக்கண்ணா* பாசுரத்தில், புருஷார்த்தத்தை இந்த மன்னுலகிலேயே விரைவாக அளிக்கும்படி பிரபன்னர்கள் பிரார்த்திப்பதை பார்த்தோம்.

இந்த பாசுரத்தில் இஷ்டப்ராப்தியான பரம புருஷார்த்தம் ஸித்திக்க, அநிஷ்ட நிவ்ருத்திகளான நமமுடைய பாபங்கள் முதலில் ஒழிய வேண்டும் என்பதை விரும்பும் முறையில் அமைந்துள்ளது.

மாயனை மன்னு
அழியா தத்துவம் தனதாக்கி,

மாயன் என்பதற்கு பல பொருள்கள் சொன்னாலும், இங்கே ப்ரகிருதியாகிற ஜடத்தை தன் வசத்தில் வைத்துக் கொண்டு ஜகத்தை அட்டி படைக்கும் எம்பெருமானின் பரத்வத்தை சொன்னது.

வட மதுரை மைந்தனை
ஆயனாய்
அந்த எம்பெருமானே வட மதுரையில் கிருஷ்ணனாக வந்து தன் எளிமையைக் காட்டினான்.

தூய பெருநீர் யமுனைத் துறைவனை
பழியா நதியில் விளையாடி
ஸமுத்திரத்திற்கும் கோதாவரிக்கும் ராமனுக்கு ஸகாயம் செய்யாத குறை உண்டு. ஆனால் யமுனையோ கிருஷ்ணன் அடிப் பாடி, நீராடி அகமகிழ்ந்த நதி என்ற பெருமை கொண்டது. அதனால் அது தூய பெருநீர்.

ஆயர் குலத்தினில் தோன்றும் அணி விளக்கைத்
ஆயனாய்த் தானே தோன்றி
இடைக்குலத்திற்கே ஒரு மகுடம் மாதிரி, பெரும் விளக்காக வந்து தோன்றினான் கிருஷ்ணன்.

தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனைத்
பெற்ற தாயின் பெருமை ஏற்றி
யசோதை உரலில் கட்ட அதில் தான் கட்டுண்டு வயிற்றில் அந்த கயிற்றின் தழும்பு உடைத்ததாக ஸௌலப்ய ஸௌஸீல்யாதி குணங்களை உடைய கண்ணனனை மகனாக அனுபவிக்க இந்த யசோதை என்ன தவம் செய்தாளோ என்று தோன்றும்.

நாம் தூயோமாய் வந்து

உத்தமராய்

என்பது ப்ரபத்தி செய்யும்போது உண்டாக வேண்டிய ஸாத்விக த்யாகத்தை காட்டும். நான் எனது என்ற அகங்கார மமகாரங்கள் இல்லாது எல்லாம் எம்பெருமானே தன் ப்ரீதிக்காக தானே என் மூலமாய் செய்து கொள்கிறான் என்ற எண்ணம் உண்டாவது.

மனத்தினால் சிந்திக்கப்

ஒழியா உறவில்

எம்பெருமானுக்கும் நமக்கும் உள்ள உறவை அறிந்து கொண்டு, பரம புருஷார்த்தமான வைகுந்தத்தில் ஆசை கொண்டு

வாயினால் பாடி

ஒரு சொல்லால்

த்வயத்தை அனுஸந்தித்துக் கொண்டு

தூமலர்த்தூவி தொழுது

அடைந்தார்க்கு

தூய மலர்கள் என்னும் ஆத்ம குணங்களால் எம்பெருமானை வசீகரிக்க முக்கரணங்களாலும் (மனோ வாக் காயை) என்பதன் மூலம் சரணாகதியை செய்து

போய பிழையும்

கழியாது

நம்முடைய ஸஞ்சிதம், அநப்யுகதக ப்ராரப்தம் என்கிற பாவங்களை எல்லாம் விலக்கி

புகுதருவான் நின்றனவும்

அறியாத வினை

ப்ரபன்னன் அறியாமல் செய்யும் பாவங்களை கண்டு கொள்ளாமல் இருக்கிறான் பகவான்.

தீயினில் தூசாகும் செப்பேலோ
கழிப்பாயே தீயினில் தூசாக்கி
அந்த பாவங்கள் எல்லாம் எப்படி பறந்து ஒடுகின்றன என்றால் தீயில் அகப்பட்ட தூசி எப்படி ஒரு நொடியில் பொசுங்கி சாம்பலாகி இருந்த இடம் தெரியாமல் போகுமோ அதுபோல

பாசுரம் 6

புதியதாக சேர்ந்த பிரபன்னை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

*புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில் *
*வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ *
*பிள்ளாய் எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு *
*கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி *
*வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை *
*உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் *
*மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம் *
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்.

நற்காலையென * புள்ளும் சங்கும் ஒலிக்க * தானன்றி
மற்றவை விலக்கி * மனத்தே பத்தி வைத்து இருக்க /
முற்றும் அமைத்த அரியும் * மெள்ளப் புகுந்து குளிர *
பற்றினாரோடு வாராய், பிள்ளாய் பரமனை ஏத்திட. **12**

பதவுரை

நற்காலையென	= நல்ல காலைப்பொழுது வரப்போகிறது என்பதற்கு அறிகுறியாக
புள்ளும் சங்கும் ஒலிக்க	= பறவைகளும், கோவிலில் சங்கு நாதமும் ஒலிக்க
தானன்றி	= பிரகிருதியாகிற பேயிடமிருந்து தான், தனது என்கிற அகங்கார மமகார விஷம் இல்லாது

மற்றவை விலக்கி = மனச் சக்கரத்திலிருந்து எம்பெருமானைத் தவிர மற்ற உள்ள விஷயங்களை திருட்டு போல் விலக்கி

பத்தி வைத்து = பக்தி யோகத்தை ஆரம்பித்த முனிவர்களும்

பத்திஇருக்க = பக்தியோகத்தில் கை தேர்ந்த யோகிகளும்

பரமனை = பாற்கடலில் அரவணைமேல் பள்ளி கொண்ட எம்பிரானை

மனத்தே = உள்ளத்தில் கொள்ள

முற்றும் அமைத்த அரியும் = எல்லாம் படைத்த ஜகத் காரணகான அரியாகிற எம்பிரானும்

மெள்ளப் புகுந்து குளிர = கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மனதில் புகுந்து அவர்களை கடாக்ஷிக்க

பற்றினாருடன் = பிரபன்ன கோஷ்டியுடன்

பரமனை ஏத்திட = பகவத் அனுபவத்தில் ஈடுபட்டு குணாதிசயங்களை போற்றிட

பிள்ளாய் வாராய் = புதியதான பிரபன்னனே நீயும் வர வேண்டும்.

உட்கருத்தின் சுருக்கம்

முதல் ஐந்து பாசுரங்களால் தத்வ, ஹித, புருஷார்த்தங்களை விளக்கி ஆறாம் பாசுரம் (புள்ளும் சிலம்பின காண்) முதல் பதினைந்தாம் பாசுரம் வரை (எல்லே இளங்கிளியே) மேலே உள்ள பத்து பாசுரங்களில் பகவத் அனுபவத்திற்கு வந்து சேர ஒவ்வொரு பிரபன்னனையும் அழைப்பதாக உள்ளது.

பிரபத்தி செய்த பிரபன்னன், நமக்கு மோஷம் நிச்சயம்தானே, அங்கு போய் எம்பெருமானை அனுபவிக்கலாம் என்று தன்னுடைய மீதி நாட்களில் பூலோகத்தில் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம் என்று நினைக்கக் கூடாது. ஒழுக்கத்திலோ, பகவத் அனுபவத்திலோ குறைவு இன்றி, சாஸ்திர விஹிதமாய் நடந்து, அபராதம் இல்லாத கைங்கர்யம் செய்து மோஷ

ப்ராப்தியை இங்கேயே அனுபவித்து வாழ வேண்டும் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

இந்த பாசுரத்தில் புதியதாக பகவத் அனுபவத்திற்கு வந்து சேர்ந்த பிரபன்னனை, பிள்ளாய், என்று சொல்லிட்டு அழைக்கிறாள். பகவத் அனுபவம் என்பது நல்ல சேர்க்கையாலே வரக் கூடியது. எல்லோருடன் கூடி அனுபவித்து மகிழக் கூடியது.

பிள்ளாய் எழுந்திராய்

பற்றினாருடன் வாராய் பிள்ளாய் பரமனை ஏத்திட

பகவத் அனுபவத்திற்கு புதியதாய் எங்களுடன் வந்து சேர இருக்கும் பிரபன்னனே

புள்ளும் சிலம்பினகாண்

புள்ளும் ஒலிக்க

பறவைகள் சப்திப்பது பொழுது விடியப் போகிறது என்பதைக் காட்டும். பகவத் அனுபவத்திற்கு புதியதான வந்து சேர்ந்த பிரபன்னனை இது விடியற்காலை. பிரபத்திக்கு பின் பூலோகத்தில் உன்னுடைய மீதி நாட்கள். காலை நேரம் வரப்போகிறது. அதாவது மோக்ஷ ப்ராப்தி உண்டாகப் போகிறது. அதுவரையில் இங்கேயே பகவானின் திருக் கல்யாண குணங்களில் ஈடுபட்டு சந்தோஷிக்கலாம் என அழைக்கிறாள்.

புள்ளரையன் கோயிலில் வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ

சங்கும் ஒலிக்க

புள் என்பது கருடன். கருடனுக்கு ஸ்வாமியாக உள்ள எம்பெருமானின் கோவில் புள்ளரையன் கோவில். இங்கே பாகவதனான கருடனைக் கொண்டு எம்பெருமானை அழைப்பது முக்யமானது. பாகவதர்களை முன்னிட்டு எம்பெருமானை அனுபவிப்பது என்பதே சிறந்தது. அந்த பெருமாள் திருவாரதனத்திற்கு முன் அறிகுறியாக சங்கு நாதம் ஒலிக்கிறது.

பேய் முலை நஞ்சுண்டு
மற்றவை விலக்கி
பேய் முலை என்பது மூல ப்ரகிருதி. நஞ்சு என்பது அகங்கார மமகாரங்கள். இதை எல்லாம் தாண்டி நின்ற பிரம்மவித்துக்களை காட்டுகிறது.

கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
தானன்றி
சகடம் என்பது மனது என்னும் சக்கரம். அது கள்ளத்தனமானது என்பது எம்பெருமானிடம் செல்லாது, மீதி உள்ள அல்ப அஸ்திர விஷயங்களில் நம்மை ஆழ்த்துகிறது. அதை எல்லாம் ஒழித்து கட்டி, விஷயாந்தரங்களில் செல்லும் மனதை கட்டுப் படுத்தி.

முனிவர்களும் யோகிகளும்
பத்தி வைத்து இருக்க
பக்தியோகத்தை அரம்பித்தவர்கள் முனிவர்கள். அதில் கை தேர்ந்தவர்கள் யோகிகள்

உள்ளத்துக் கொண்டு
மனத்தே வைக்க
அவர்கள் தங்களுடைய ஹ்ருதய கமலத்தில் நினைத்து இருக்க

வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்தினை
முற்றும் படைத்த பரமனை
வெள்ளி நிறம் கொண்ட ஆதிஸேஷன் மேல் ஸயனித்து உறங்குகின்ற எம்பெருமானே ஜகத் காரணகன். அவனை உள்ளே வைத்து

அரி என்ற பேரரவம்

முற்றும் படைத்த அரியும்
ஹரி என்று பெரும்பூதமாகிற எம்பெருமான்

மெள்ள எழுந்து உள்ளம் புகுந்து குளிர்ந்து
மெள்ள குளிர புகுந்து
கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மனத்தில் தான் வந்து அவர்கள் அனுபவிக்க தன்னையேத் தருகிறான்.

பக்தியோகத்தில் இருப்பவர்கள் பக்தி நிஷ்டையாக, ஸாதனமாக எம்பெருமானை அனுபவிக்கிறார்கள். ப்ரபத்தி செய்த பிரபன்னர்கள் பலனாக, ஸாத்யமாக எம்பெருமானை அனுபவிக்கிறார்கள். அது ஸாதன பக்தி. இது ஸாத்ய பக்தி.

பாசுரம் 7

வேகத்துடன் பரபரக்கும் ஒரு பிரபன்னனை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

*கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தன் * கலந்து*
பேசின பேச்சரவம் கேட்டிலையோ பேய்ப்பெண்ணே !
*காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து *
*வாச நறுங்குழல் ஆய்ச்சியர் * மத்தினால்*
*ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ *
*நாயகப் பெண் பிள்ளாய்! * நாராயணன் மூர்த்தி*
*கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ *
தேசமுடையாய்! திறவேலோ எம்பாவாய்.

படித்தார் பலர் பகிர்ந்து, பர தத்துவம் புகழ்ந்திட *
அடியுரையும் அதனுரையும், அத்தாட்சி என அறுதியிட *
அடியார் கேட்டு நினைத்து, மணமுடன் ஒளி வீச*
முடித்தாருடன் வாராய், முதலே கேசவனை ஏத்திட. 13

பதவுரை

படித்தார் பலர் பகிர்ந்து = பல வித்வான்கள் ஒன்று கூடி ஸத் விஷயங்களை பேசி பரிமாறிக் கொண்டு
அடியுரையும் = மிக உயர்ந்த ப்ரமாணமான ஸ்ருதியும்
அதன் உரையும் = அதிலிருந்து தோன்றிய ஸ்மிருதி, இதிகாச புராணங்கள் போன்ற சாஸ்திரங்களையும்
அத்தாட்சி என அறுதியிட = ஸ்ரீமந் நாரயணனே பரத்துவம் என்று நிஷ்கர்ஷம் செய்ய

பர தத்துவம் புகழ்ந்திட = அந்த எம்பெருமானை ஸ்தோத்திரம் செய்ய
கேட்டு = தங்களுடைய ஆசாரியன் பக்கலில் காலக்ஷேபம் செய்து
நினைத்து = அவற்றை ஸ்ரவணம், மனனம், த்யானம் என்கிறாற்போல் சிந்தித்து
மணமுடன் = உயர்ந்த வேத மணம் சூழ
ஒளி வீச = ஜ்வலிக்கும் தேஜஸ்ஸுடன் விளங்கும்
அடியார் = தம் ஸேஷத்வ பாரதந்த்ரியத்தை அறிந்த

முடித்தாருடன் = க்ருத க்ருத்யாராய் விளங்குகின்ற ப்ரபன்ன கோஷ்டியில்
முதலே = அவர்களுக்கு தலைவனாய் இருக்கும் பெருமை வாய்ந்த பிரபன்னனே
கேசவனை = பிரமனுக்கும், சிவனுக்கும் ஈசனான, பரதத்வம் நாராயணனை
ஏத்திட = புகழ்ந்து பாடி அனுபவிக்க
வாராய் = வருவாயாக!

உட்கருத்தின் சுருக்கம்

பேய்ப் பெண்ணே!
முதலே
எம்பெருமானின் குண விசேஷங்களை அனுபவிக்க சாஸ்திரங்கள் எல்லாம் கற்று கரை தேர்ந்து, உண்மையான பரத்வத்தை அறிந்து கொள்ள வேண்டும். அதற்கு பொறுமையற்று எல்லோருக்கும் முதலாக, ஒரு வேகத்துடன் பகவத் குணாதிசயங்களில் உடனே ஈடுபட துடிக்கும் ஒரு பிரபன்னனை பேய்ப்பெண்ணே! என்று அழைப்பதாக இந்த பாசுரத்தில் உள்ளது.

கீசு கீசு என்று எங்கும் ஆனைச் சாத்தன் கலந்து பேசின பேச்சரவம்

படித்தார் பலர் பகிர்ந்து பர தத்துவம் புகழ்ந்திட

வேதார்த்தங்களை கசடறக் கற்ற பிரம்ம வித்துக்கள் ஒன்று கூடி மாநாட்டில், ஒருவர்க்கு ஒருவர் தாத்பர்யங்களை பரிமாறிக் கொள்ளும் சப்தம்.

காசும் பிறப்பும்

அடியுரை அதனுரையும்

காசு என்பது வேதம். பிறப்பு என்பது அதிலிருந்து தோன்றிய ஸ்மிருதி, இதிகாச புராணங்களாகிற மற்றைய ப்ரமாணங்கள்.

கலகலப்பக் கை பேர்த்து

அத்தாட்சி என அறுதியிட

ப்ரமாணங்களுக்கு முரணாக அர்த்தம் கற்பிப்பவர்களின் வாதங்களை அடியோடு முறியடித்து உணமையான பொருளை நிரூபித்து

வாச நறுங்குழல் ஆய்ச்சியர்

மணமுடன் அடியார்

ஆசாரியர்களின் உபதேசத்தால் மணம் பெற்று பகவத் பாகவத ஸேஷத்வத்தை உணர்ந்து அவர்களுக்கு கைங்கர்யம் செய்பவர்கள்.

மத்தினால் ஒசை படுத்த தயிரரவம்

கேட்டு நினைத்து

ஆசாரியர் பக்கலில் கேட்ட உபதேசங்களை படித்து, சிந்தித்து, சொல்லி மகிழ்வது. வேதார்த்த விஷயங்களை பேசி பரிமாறிக் கொள்வது தயிர் கடைவதைப் போல் உள்ளது.

நாரயணன் மூர்த்தி கேசவனை

கேசவனை

வேதாந்த விசாரங்களால் அறியப்படுவது, அனுபவிக்கப்படுவது எல்லாம் அந்த நாராயணன், கேசியை அழித்த கேசவன். சிவனுக்கும் பிரமனுக்கு ஈசனான கேசவன்.

தேசமுடையாய் நாயகப் பெண் பிள்ளாய்
ஒளி வீச முதல்வா ஏத்திட
ஞான, பக்தி, வைரக்யத்தால் ஒளி பெற்று, பிரபன்ன கோஷ்டிக்கு ஒரு தலைவியாக உள்ள பிரபன்னனே

பாசுரம் 8

எம்பெருமானை அனுபவிப்பதில் உற்சாகம் உடைய ஒரு பிரபன்னை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

*கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறு வீடு *
*மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும் *
*போவான் போகின்றாரைப் போகாமல் காத்து * உன்னைக்*
*கூவுவான் வந்து நின்றோம் * கோதுகலம் உடைய*
*பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு *
*மாவாய் பிளாந்தானை மல்லரை மாட்டிய *
*தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால் *
ஆவா என்று ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்.

நன்று நாளும் புலர * நீண்ட நெறியாரும் சுவைக்க *
இன்று சோம்பருடன் * இணைந்து வந்தோம் இங்கே /
கன்று போல் நமக்கு * கருத்தைக் காட்டும் குறிப்பால் *
வென்ற குருவை வாழ்த்தி * விழைந்து அடைய வாராய்.

பதவுரை

நன்று நாளும் புலர = காலைப் பொழுது நன்றாக விடிய
நீண்ட நெறியாரும் = பக்தி யோகம் செய்யும் மஹான்களும்
சுவைக்க = பல ஜன்மங்களாக பகவானை அனுபவித்து மகிழ்ந்து இருக்க
இன்று = இந்த ஜன்மத்திலேயே
சோம்பருடன் = ப்ரபத்தி செய்து அந்த நிஷ்டையில் ஊறி மற்றொன்றை ஏறெடுத்தும் பாராத ப்ரபன்னர்கள்
இணைந்து வந்தோம் = காத்திருந்து எல்லோரையும் ஒருங்கே சேர்த்து

இங்கே = உன்னுடைய வாசலில் வந்தோம்
வென்ற = மற்ற துர்வாதங்களையும், குயுக்திகளையும் நிரஸனம் செய்த
குருவை = நம்முடைய ஆசார்ய ஸார்வபௌமரை
வாழ்த்தி = புகழ்ந்து அவர் தனியன்களை சொல்லி
விழைந்து = உற்சாகத்துடன்
அடைய = வணங்கி தண்டம் ஸமர்பிக்க
வாராய் = பிரபன்னனே நீயும் வருவாயாக
கன்று போல் நமக்கு = அந்த ஆசாரியாரும் தன்னுடைய கன்றுக்கு பாலை சுரக்கும் தாய்ப்பசு போல்
குறிப்பால் = சூக்ஷ்ம விஷயங்களை
கருத்தைக் = ஸத் ஸம்பிராதாய முறையில்
காட்டும் = சொல்லி நம்மை கடாக்ஷிப்பார்.

உட்கருத்தின் சுருக்கம்

கோதுகலம் உடைய பாவாய்
விழைந்து
எம்பெருமானின் குண விசேஷங்களை அனுபவிக்க மிக உற்சாகம் உள்ள ஒரு பிரபன்னை அழைக்கிறாள்.

கீழ்வானம் வெள்ளென்று
நன்று நாளும் புலர
விடியற்காலை பொழுதை குறிக்கிறது. காலைப் பொழுது என்பது மனதிற்கு ஆனந்தமாகவும், ஸத்வ குணம் நிறைந்தும், கற்பவை மனதில் எளிதில் பதியும்படியாகவும் இருக்கும். மார்கழி மாதங்களில் காலையில் காலக்ஷேபங்கள் நடை பெறும்.

எருமை
நீண்ட நெறியார்

எருமை என்பது மந்தமாகவும், நிதானமாகவும் இருக்கும். அது பக்தி யோகிகளைச் சொல்லும். எருமையைபோல நிதானமாக மோக்ஷத்தை அடைபவர்கள் அவர்கள். பசு என்பது ப்ரபத்தி அதிகாரிகளைச் சொல்லும்.

சிறு வீடு மேய்வான் பரந்தனகாண்

சுவைக்க

பெரும் வீடு என்பது மோக்ஷம். சிறு வீடு என்பது பூலோகத்தில் உள்ள சுகங்கள். பக்தி யோகியனவன், பூலோகத்திலேயே பகவத் விஷயங்களை அனுபவிக்கிறான். சிலருக்கு பக்வத் ஸாக்ஷாத்காரமும் உண்டாகும். ஆனால் அது எல்லாம் முடியக் கூடியவை. நிரந்தரம் இல்லை. ஆசையுடன், இந்த பக்தியோகிகள் இந்த யோகங்களைச் செய்கிறார்கள்.

மிக்குள்ள பிள்ளைகள்

சோம்பருடன்

பிள்ளைகள் என்பது கர்ம ஞான யோக தகுதி தேவையற்ற, கால விளம்பம் பொறுக்காத பிரபன்னர்களை காட்டும். மிக்குள்ள என்பது அவர்களுடைய அவசரத்தை சொல்கிறது.

போவான் போகின்றாரை போகாமல் காத்து

இன்று இணைந்து வந்தோம்

பகவத் விஷயத்தில் ஈடுபட செல்லும் அந்த பக்தி, ப்ரபத்தி யோகிகளை தடுத்து, நீங்கள் மட்டும் தனியே சென்று அனுபவிக்காமல், மற்ற பிரபன்னர்களையும் அழைத்துக் கொண்டு பிறகு எம்பெருமானை சேர்ந்து அனுபவியுங்கள் என்பது போலே

உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்

இங்கே

ஏ பிரபன்னனே, நீயும் இந்த கால்க்ஷேபத்தில் மிகுந்த ஆசை உடையவன் ஆனதால், உன்னை அழித்துச் செல்லவே நாங்களும் இங்கே வந்திருக்கிறோம்.

எழுந்திராய் பாடிப் பறை கொண்டு

வாராய் வாழ்த்தி

எம்பெருமானை அனுபவிக்க முதலில் ஆசாரியனை ஸேவிக்க வேண்டும். அந்த ஆசாரியனிடம் செல்லும்போது அவர் புகழையும், கீர்த்தியையும் பாடிக் கொண்டு அவருக்கு ஸமர்பிக்க உபகரணங்களையும் எடுத்துக் கொண்டு உபகரணங்களில் மிக உயர்ந்தது அஞ்சலி முத்திரை.

மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய தேவாதிதேவன்

வென்ற குருவை

ஆசாரியன். பீதக ஆடை பிரானார் பிரம குருவாகி என்கிறார் போல் பகவானே ஸாக்ஷாத் ஆசாரிய ரூபமாக வந்துள்ளான். அந்த ஆசாரியர் துர்வாதங்களை கண்டித்து, மற்ற மதங்களின் ஸித்தாந்தங்களை தவிடு பொடியாக்கி, வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை நிலை நாட்டியவர்கள்.

சென்று நாம் சேவித்தால்

அடைய

அந்த ஆசாரியர்களிடம் நாம் சென்று ஸேவித்தால்

ஆ ஆ என்று ஆராய்ந்து அருள்

கன்று போல் நமக்கு குறிப்பால் கருத்தைக் காட்டும்

அடாடா, இப்படி நம்மிடம் விஷயங்களை கேட்க வந்துள்ளானே என அவர் அக மகிழ்ந்து, நன்கு புரியுமாறு வேண்டாதவை விலக்கி, தகுந்தவற்றையே உபதேசிப்பார்.

பாசுரம் 9

ஆசாரிய ஸம்ப்ந்தம் உடைய ஒரு பிரபன்னனை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

*தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கு எரியத் *
*தூபம் கமழத் துயில் அணை மேல் கண் வளரும் *
*மாமான் மகளே! மணிக் கதவம் தாள் திறவாய் *
*மாமீர்! அவளை எழுப்பீரோ * உன் மகள்தான்*
*ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ *
*ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ *
*மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று *
நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய்.

மறையும் முடியும் என * மருள் நீக்கி ஒளிர * கருமமுடன்
குறை கூறாது கேளாது * பரமின்றி பற்றில்லாது /
**கறையின்றி குரு உகந்தார் * அவர் தாயே நீ சொல்லு *
வரையில்லா மாயன் மாதவனை * மனம் திறந்து சொல்ல.**

பதவுரை

மறையும் = உயர்ந்த ப்ரமாணமான வேதமும்
முடியும் = அந்த வேதத்தின் சிகரமான உபனிஷத்தும்
என = அத்துடன் திவ்ய பிரபந்தம், இதிகாச புராணங்களும்
மருள் நீக்கி = அஞ்ஞானமாகிற இருட்டை விலக்கி
ஒளிர = நன்கு பிரகாசிக்க [அந்த ஞானத்தைக் கொண்டு]
கருமமுடன் = நித்யானுஷ்ட கர்மாக்களை சரிவர செய்து
குறை கூறாது = மற்றவரைப் பற்றி குற்றம் குறை சொல்லாது

கேளாது = யாராவது மற்றவரைப் பற்றி இழிசொல் சொன்னால் அதை கேட்காது

பரமின்றி = ஆத்ம ஸமர்ப்பணம் செய்து எல்லாம் எம்பெருமானே கதி என்று கிடந்து

பற்று இல்லாது = உலக விஷயங்கள் என்கிற அல்ப அஸ்திர பலனை நோக்காது

கறையின்றி = தான் தனது என்கிற கர்வம் இல்லாது

குரு உகாந்தார் = ஆசாரிய அபிமானத்திற்கு பாத்திரமான ஒரு உயர்ந்த சிஷ்யனே

அவர் தாயே = அவருடைய அம்மாவே

நீ சொல்லு = நீர் சொல்லும்

வரையில்லா = அளவு கடந்தவன் என்று வைகுந்தபிரான்

மாயன் = ப்ரகிருதியை தன் வசம் கொண்டு ஆட்டிப் படைப்பவன்

மாதவனை = பிராட்டியை க்ஷண காலமும் பிரியாதவன்

மனம் திறந்து = தன்னுடைய இதயத்தில் சேமித்து வைத்திருக்கும் சத் ஸம்பிரதாய ஸூக்ஷ்ம அர்த்தங்களை எல்லாம்

சொல்ல = எங்களுக்கு அவர் உபதேசிக்க வேண்டும்

உட்கருத்தின் சுருக்கம்

தூமணி மாடத்து
மறையும் முடியும்
வேதம் என்கிற தூய்மையான மாளிகையில், உபனிஷத் என்னும் அறையிலே, ஞானமாகிய விளக்கு பிரகாசிக்கிறது.

சுற்றும் விளக்கு எரியத்
என மருள் நீக்கி ஒளிர
விளக்கு எப்படி நன்கு பரவி தன்னைச் சுற்றியுள்ள இருட்டை நீக்குவது போலே வேதங்களும், உப ப்ரும்மணங்களும் (இதிகாச, புராணங்கள், அருளிச்

செயல், போன்றவை) அதில் உள்ள எல்லாப் பகுதிகளும், எல்லா இடங்களிலும் அஞ்ஞானமாகிற இருளை போக்குகின்றன.

தூபம் கமழத்

கருமமும்

நித்ய நைமித்ய கர்மாக்களை வர்ணாஸ்ரம விஹிதமாக அனுஷ்டிப்பவன்.

துயில் அணை மேல் கண் வளரும்

பற்று இன்றி

உலக இன்பங்களான உறக்கத்தை கொடுக்கும் படுக்கையை காணாதவாறு கண்களை மூடிக் கிடப்பவன்.

மாமான் மகளே

குரு உகந்தவர்

ஆசாரியரிடம் குடல் துவக்கு ஸம்பந்தமும், அவருடைய கருணைக்கு பாத்திரமான உத்தமரே. ஆத்ம குணங்கள் நிரம்பி மற்ற சிஷ்யர்களின் கேள்வி ஞானத்தை தூண்டி அவர்கள் சிந்தனையை வளர்த்து, ஸம்பிராய விஷயங்களை சரியான பாதையில் விளக்குபவரே

மணிக் கதவம் தாள் திறவாய்

மனம் திறந்து

உம்முடைய மனதை திறந்து எமக்கு உபதேசிப்பீராக

மாமீர்! அவளை எழுப்பீரோ

அவர் தாயே நீ சொல்லு

ஆசிரியருக்கு தாயாய் இருப்பவளே நீர் அவரிடம் சொல்லி அவரை எமக்கு உபதேசம் செய்யும்படி பண்ணவும்.

உன் மகள்தான் ஊமையோ அன்றிச் செவிடோ அனந்தலோ

குறை கூறாது கேளாது கறையின்றி

மற்றவரை குற்றம் குறை சொல்லாது இருப்பவன் ஊமை. பழிச்சொல் கேளாது இருப்பவன் செவிடு. அனந்தலோ என்பது கர்வம் துளிக்கூட இல்லாதவன்

ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ

பரமின்றி

எம்பெருமானிடம் ஆத்மாவை ஸமர்ப்பித்தபின், நிர்பரமாய், நிச்சலமாய் ஜீவித நாட்கள் கர்மவச்யம் என்று இருப்பவன்.

மாமாயன் மாதவன் வைகுந்தன்

வரையில்லா மாயன் மாதவனை

ப்ரகிருதியான மாயையை தன் வசம் கொண்டு ஆட்டி படைப்பவன். பிராட்டி ஸஹிதமானவன். மோஷத்திலும் விலக்ஷணமாய் எல்லோராலும் அனுபவிக்கப் படுபவன்.

என்றென்று நாமம் பலவும் நவின்றேலோர்

சொல்ல

என்று எம்பெருமானின் பலவிதமான திருநாமங்களையும் சொல்லி அனுபவிப்பர்.

பாசுரம் 10

பூர்வ கர்மாவினால் அழுத்தப்பட்ட ஒரு பிரபன்னை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய் ! *
மாற்றமும் தாராதோ வாசல் திறவாதார் ? *
நாற்றத் துழாய் முடி நாராயணன் * நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால் * பண்டொருநாள்
கூற்றத்தின் வாய் விழுந்த கும்ப கரணனும் *
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ ? *
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே ! *
தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.

**தண் துழாய் நாரணன் * தானே தனிவழி ஆகி *
விண் ஏற விழைந்தார்க்கு * தன்னையே தந்தருள /
வண்மையுடன் வேள்வி * வரித்த பின்னே விலகாது *
மண்மீது மயல் முறித்து * மா தவனே மகிழ வாராய்.**

பதவுரை

தண்துழாய் = குளிர்ந்த துளஸி [மாலை]
நாரணன் = [அணிந்த] ஸ்ரீமந் நாராயணன்
தானே = தான் மட்டுமே
தனிவழி ஆகி = ஸித்தோபாயமாக நின்று
விண் ஏற = மோக்ஷம் அடைய
விழைந்தார்க்கு = ஆசையுடன் சரணாகதி செய்தவர்களுக்கு
தன்னையே = தன்னையே தந்து
அளிக்க = [மோக்ஷத்தை] அருள

வண்மையுடன் = பெருமையுடன்
வேள்வி = ப்ரபத்தி என்கிற யாகம்
வரித்தபின்னே = செய்து முடித்த பிறகு
விலகாது = கும்பகர்ணன் போல் தமோ குணம் மேலிட்டு எம்பெருமானை மறக்காது
மண் மீது = பூலோகத்தில் உள்ள
மயல் முறித்து = பற்று எல்லாம் ஒழித்து
மாதவனே = உயர்ந்த [ப்ரபத்தி என்னும்] தவத்தை செய்தவனே
மகிழ = [ப்ரபன்ன கோஷ்டியான எங்களுடன்] எம்பெருமானை அனுபவிக்க
வாராய் = வருவாயாக

உட்கருத்தின் சுருக்கம்

தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.
மகிழ வாராய்
தடுமாறாது வந்து எங்களுடன் சேர்வாய்

ஆற்ற அனந்தல் உடையாய்!
பின் விலகாது
பிரபன்னனுக்கு ஜீவித தசையில் பகவத் குணானுபவமே பொழுது போக்கு என்பதை மறந்து உலக விஷயங்களில் மனம் சென்ற ஒருவனை எழுப்புகிறாள்.

அருங்கலமே
மா தவனே
பிரபன்னர்கள் சரியான பாதையிலிருந்து விலகினாலும் அன்புடன், அனுதாபத்துடன் அவரை சரி செய்ய வேண்டுமே தவிர கடுமையான

வார்த்தகளால் பழிக்கக் கூடாது. இந்த உத்தம குணங்களை உடைய பிரபன்னன் உண்மையிலேயே மா என்பதாகிய பெருந்தவம் செய்தவன்.

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
வண்மையுடன் வேள்வி வரித்த பின்னே
ஆத்மா என்னும் புருஷனும் உடல் என்னும் மனைவியும் செய்யும் ஆத்ம ஸமர்ப்பணம் என்னும் மோக்ஷத்திற்கான யாகத்தில் ஆத்மாவையே ஸ்ரீமந் நாரயணனிடம் ஹவிஸ்ஸாக ஸமர்பித்து க்ருத் க்ருத்யனாய் நிற்பவன் பிரபன்னன்

மாற்றமும் தாராதோ வாசல் திறவாதார் ?
மயல் முறித்து வாராய்
அப்படி எம்பெருமானிடம் சரணாகதியை செய்து விட்டு பகவத் அனுபவம் பெறாமல் இருக்கும் உன்னை பகவத் அனுபவத்திற்கு அழைத்துச் செல்ல வந்துள்ள எம்மோடு மறு வார்த்தை பேசாது நீயும் வர வேண்டும்.

நாற்றத் துழாய் முடி நாராயணன்
தண்துழாய் நாரணன்
வாசனை மிகுந்த துளஸி மாலையை அணிந்திருக்கும் அந்த நாரயணனை நாம் அனுபவிக்கப் போகிறோம்.

நம்மால் போற்றப் பறை தரும்
விண் ஏற விழைந்தார்க்கு தன்னையே அளிக்க
அந்த எம்பெருமான் நாம் செய்த சரணாகதிக்கு பலனாக தன்னையே தரப்போகிறான். எப்படிப்பட்டவராலும் சரி, நம்மால் என்ரு சொல்லும்போது எல்லோருக்கு சரணாகதிக்கான பலன் உண்டு.

புண்ணியனால்
தானே தனி வழி ஆகி

ஸித்தோபாயமான அவனே புண்ணியன்

பண்டொருநாள் கூற்றத்தின் வாய் விழுந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
மண் மீது மயல் முறித்து

யமனுடைய வாயில் விழுந்த கும்பகரணனும் தோல்வி அடைந்து உனக்கு உறக்கத்தை தந்தனோ? ராவணனிடத்து ரஜோ குணம், கும்பகர்ணனிடம் தமோ குணம், விபூஷணனிடத்து ஸத்வ குணம். ஸ்த்வ குணம் அதிகமாகி நீ சரணாகதி செய்து விட்டாலும், இப்போது இந்த பூலோகத்தில் இருப்பதால், பூர்வ கர்மாவின் பலனாக, தமோ குணம் தலை எடுத்து உன்னை எம்பிரானை அனுவிக்க முடியாதபடி செய்கிறது. அதை நீக்கி, நீயும் எங்களுடன் வந்து சேர்வாய்

பாசுரம் 11

ஆசாரிய அனுக்ரஹத்திற்கு உகந்த ஒரு பிரபன்னை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

*கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து *
*செற்றார் திறல் அழிய சென்று செருச் செய்யும் *
*குற்றம் ஒன்றில்லா கோவலர்தம் பொற்கொடியே *
*புற்றரவல்குல் புனமயிலே போதராய் *
*சுற்றத்து தோழிமார் எல்லோரும் வந்து * நின்*
முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட
*சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி ! * நீ*
எற்றுக்குறங்கும் பொருள் ஏலோ எம் பாவாய்

கற்பவை பலரிடம் கற்று * கர்வமும் பகையும் கழித்து *
நற்குல நிதியை நன்றாய் * நாட்டிய நாவலன் உகந்த /
புற்றில் பாம்பாய் ஒடுங்கி * புனமயில் கண்ட மேகமென *
வற்றாத நம் முகிலுருவை * வாழ்த்த வாராதது ஏனோ?

பதவுரை

கற்பவை	= கற்க வேண்டிய ஸத்விஷயங்கள் எல்லாம்
பலரிடம்	= பல ஸதாசாரியர்களிடமிருந்து
கற்று	= கற்று கரை தேர்ந்து
பகையும்	= துர்வாதம் செய்யும் எதிரிகளையும்
கர்வமும்	= அவர்களுடைய ஆணவத்தையும்
கழித்து	= ஒழித்து கட்டி
நற்குல நிதியை	= வழிவழியாய் வந்த ஸம்பிரதாய கருத்துக்களை
நன்றாய்	= குற்றம், குறை ஒன்றும் இல்லாமல்

நாட்டிய = நிர்த்தாரணம் செய்த
நாவலன் = வாக்கு வன்மை படைத்த ஆசாரியன்
உகந்த = மனதிற்கு பிடைத்தவனான [பிரபன்னனே!]
புற்றில் = [நீ] தன்னுடைய புற்றுக்குள்
பாம்பாய் = பாம்பானது எப்படி
ஒடுங்கி = அடங்கி கிடக்குமோ அதுபோல் அடக்கத்துடன்
புனமயில் கண்ட = அழகான மயில்பார்த்த
மேகம் என = தோகை விரித்தாடுவதற்கான தோன்றிய மேகம் போல
நம் = நமக்கு எல்லாம் ஈச்வரனாகிய
வற்றாத = வள்ளல் தன்மை சிறிதும் குறையாத
முகில் உருவை = மேகம் போல் கருத்த திருமேனியை உடையவனை
வாழ்த்த = புகழ்ந்து பாட
வாராதது = எம்மோடு சேர்ந்து வரமால் இருப்பது
ஏனோ = [ஏ பிரபன்னனே] எந்த காரணத்தினால்?

உட்கருத்தின் சுருக்கம்

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து
கற்பவை பலரிடம் கற்று
ஸம்பிரதாய கருத்துக்களில் நன்கு அறிந்தவர்களாய், பரம்பரையாய், ஓராண் வழியாய் கற்றுத் தேர்ந்த ஆசார்ய புருஷர்கள் பலரிடம் ஸத் விஷயங்களை, அலசி முக்யமான தத்துவங்களை மட்டும் கிரஹித்து கொண்டு

செற்றார் திறல் அழிய சென்று செருச் செய்யும்
பகையும் கர்வமும் கழித்து
பகைவர்களின் பலம் அழிந்து போகும்படி அவர்களின் கர்வத்தையும், தவறான வாதங்களையும் அழித்து ஒழித்து

குற்றம் ஒன்றில்லா கோவலர்தம்

நற்குல நிதியை நன்றாய் நாட்டிய நாவலன்
பிழை ஏதும் இல்லாது வேதாந்த சாஸ்திரங்களை நன்கு கற்று மனனம் செய்த ஆசாரியனுடைய

பொற்கொடியே
உகந்தவனே
அனுக்ரஹத்திற்கு பாத்திரமான உயர்ந்த பிரபன்னே

புற்று அரவு அல்குல்
புற்றில் பாம்பென அடங்கி
புற்றில் கிடக்கும் பாம்புபோல் அடங்கி ஒடுங்கி, கர்வம் இல்லாது இருப்பவன்

புனமயிலே போதராய்
புனமயில் கண்ட மேகம் என
மேகத்தைக் கண்டு தோகை விரித்தாடும் மயில்போல மேகவண்ணனான எம்பெருமானைக் கண்டு மகிழ்பவனே

சுற்றத்து தோழிமார் எல்லோரும் வந்து நின் முற்றம் புகுந்து முகில் வண்ணன் பேர் பாட
வற்றாத நம் முகிலுருவை
உன்னைபோல் நாங்களும் அந்த எம்பெருமானை புகழ்ந்து பாட இங்கு கூடி உள்ளோம்.

சிற்றாதே பேசாதே நீ செல்வப் பெண்டாட்டி ! உறங்கும் பொருள் எற்றுக்கு
வாழ்த்த வாராதது ஏனோ?
மற்றைய உலக விஷயத்தில் அசையாமலும், பேசாமலும் ஆசாரியனுக்கு உகந்தவாறு, தன்னுடைய ஸேஷத்வ பாரதந்திரியத்தை உணர்ந்தவனே! நீ இன்னமும் எம்பெருமானை அனுப்விக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன?

பாசுரம் 12

த்ருப்த பிரபன்னன் ஒருவனை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கு இரங்கி
*நினைத்து முலை வழியே நின்று பால் சோர *
*நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய் *
*பனித்தலை வீழ் நின் வாசற்கடை பற்றி *
*சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற *
*மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய் *
*இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் *
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோ எம் பாவாய்

கடும் தவத்தார் இரங்கி * குழவிக்கு மொழி சொல்ல *
கொடும் உடலோடு குருவும் * களித்து கண்ணீர் பெருக்க /
விடும் போது வீடு வேண்டி * பின் வாசனை விடுத்த *
அடிமைக்கு இனியானை * அவருடன் ரசிக்க வாராய்.

பதவுரை

கடும் தவத்தார்	= கடுமையான பக்தி யோகத்தில் ஆழ்ந்திருக்கும் ரிஷிகள்
இரங்கி	= கருணையோடு
குழவிக்கு	= ஆகிஞ்சன்யரான நமக்கு
மொழி சொல்ல	= ஸ்ருதி ஸ்மிருதி இதிகாச புராணங்களை சொல்லி
குருவும்	= [அதைக் கற்று தேர்ந்த] ஸதாசாரியர்களும்
கொடும்	= கொடுமையான
உடலோடு	= இந்த பிராகிருத சரிரத்துடனே
கண்ணீர்	= எம்பெருமானை நினைத்து நினைத்து கண்ணீர்

பெருக்க = வடித்து
களித்து = அந்த அனுபவத்திலே மகிழ்ந்து [இருக்க]
விடும்போது = இந்த சரீரம் சாயும்போது
வீடு வேண்டி = மோக்ஷம் வேண்டும் என பிரார்த்தித்த
பின் = [த்ருப்த பிரபன்னன்] அதற்கு பிறகு
வாசனை = மற்றைய அல்பமான உலக ரஸானுபவங்களை
விடுத்துத = ஒழித்து கட்டி
அவருடன் = இதை எல்லாம் அறிந்த பிரபன்ன கோஷ்டியுடன்
அடிமைக்கு = எம்பெருமானுக்கு அடிமை என்று இருப்பார்க்கு
இனியானை = ரம்யமாய் இருப்பவனை
ரசிக்க = கண்டு, கேட்டு, சொல்லி, ஆடிப் பாடி அனுபவிக்க
வாராய் = நீயும் வருவாயாக

உட்கருத்தின் சுருக்கம்

இளம் கன்று எருமை கனைத்து கன்றுக்கு இரங்கி
கடும் தவத்தார் குழவிக்கு இரங்கி
பக்தி யோகம் செய்யும் மஹா புருஷர்களான வசிஷ்டர், வியாஸர் போன்றவர்கள் சிறிய அறிவில்லாத, சக்தி இல்லாத ஆகிஞ்சன்யர்களான பத்த ஜீவர்களுக்கு இரங்கி

நினைத்து முலை வழியே நின்று பால் சோர
மொழி சொல்ல
ஸ்ருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்களை நன்கு உபதேசிக்கின்றனர்.

நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன்
கொடும் உடலோடு குருவும் களித்து கண்ணீர் பெருக்க

[அவற்றை எல்லாம் நன்கு கற்று கரை தேர்ந்தது], கண்ணீர் வடித்து, எம்பெருமானின் அனுபவத்தை இந்த சரீரத்திலேயே பெற்று மகிழும் ஆசாரிய வள்ளல்கள், மோக்ஷம் என்கிற செல்வத்தை உயர்ந்த ப்ரபத்தி என்கிற உபாயத்தின் மூலம் நன்கு நடத்தி வைக்கின்றனர்.

தங்காய்

விடும்போது வீடு வேண்டி

அந்த ஆசாரியர் உகந்த ஒரு த்ருப்த பிரபன்னன். அதாவது இந்த சரீரம் கழியும்போது மோஷம் வேண்டும் என்று பிரார்த்தித்த பிரபன்னன்.

பனித்தலை வீழ் நின் வாசற்கடை பற்றி

பின் வாசனை விடுத்து

பனி குளிர்ச்சியாக இருந்தாலும் அல்பமன புல்லை வாட வைத்துவிடும். அதுபோல உலக விஷயங்கள் ரம்யமாக இருந்தாலும் ப்ரபன்னனுக்கு நல்லது தராது. அந்த விஷயாந்தரங்கள் ஒழிந்து போகும்படி உன்னுடைய வாசலுக்கு வந்தோம்

சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானைப்

அடிமைக்கு இனியானை

தன் அடியவர்களுக்கு தீங்கு என்றால் சினத்தை அறியாத ராமபிரானே கடுமையான கோபம் கொண்டு பாகவத விரோதிகளை அழிக்கிறார்

பாடவும் நீ வாய் திறவாய் இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம் அனைத்தில்லத்தாரும் அறிந்தே

அவருடன் ரசிக்க வாராய்

அந்த எம்பிரானை வாய் திறந்து போற்ற மாட்டாயா? உலக விஷயங்களிலிருந்து விடுபட்டு, எங்களுடன் சேர்ந்து எம்பெருமானை அனுபவிக்க வர மாட்டாயா?

பாசுரம் 13

காலக்ஷேப கோஷ்டியில் வந்து சேர்ந்து
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட ஒரு பிரபன்னனை அழைத்தல்

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
*கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப் *
*பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார் *
*வெள்ளி எழுந்து வியாழ முறங்கிற்று *
*புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய் *
*குள்ளக்குளிர குடைந்து நீராடாதே *
*பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால் *
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

மாற்றாரை விலக்கி * மனம் ஒடுக்கிய தேசிகரை *
போற்றியே சேர்ந்தனர் * சிறுவர் சிலரும் காலத்தில் /
சாற்றி முடித்தவனே * போக்கும் பொழுது நோக்காய் *
பற்றிலாது வாராய் * பொல்லாங்கு இல்லாது ஏத்திட.

பதவுரை

மாற்றாரை	= பகவானிடம் பகை கொண்ட பகவத் த்வேஷிகளுடன்
விலக்கி	= சேராது, பேசாது, அவர்களை கவனியாது
மனம் ஒடுக்கிய	= இந்திரிய நிக்ரஹம் செய்த
தேசிகரை	= ஸாதாசாரியர்களை
போற்றியே	= புகழ்ந்து பாடி, அவர் தனியன்களை சொல்லிக் கொண்டு
சிறுவர்	= பாரதந்திரிய ஸேஷத்வம் உடைய பிரபன்னர்கள்
காலத்தில்	= காலையில் உபாதன காலத்தில்
சேர்ந்தனர்	= காலக்ஷேப கோஷ்டிக்கு வந்து சேர்ந்தனர்

சிலரும் = சிலரே இருந்தனர். மீதி எல்லோரும் காலக்ஷேபம் வேண்டாம் என வெளியேறி விட்டனர்

சாற்றி = ப்ரபத்தி என்ற வ்யாஜத்துடன்

முடித்தவனே = செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாம் செய்து முடித்த க்ருதக்ருத்யனே

போக்கும் பொழுது = ஸத்விஷயங்களை கேட்டு காலத்தை கழிக்க வேண்டும்

நோக்காய் = [என்கிற] எண்ணத்தை உடையவனே

பற்றிலாது = ஸம்ஸாரிகள் உலக விஷயங்களில் மகிழ்ந்து இருப்பது போல் நீயும் இருப்பதை துறந்து

பொல்லாங்கு இல்லாது = ஆத்ம அபஹாரம் என்கிற திருட்டு இல்லாது

ஏத்திட = எம்பெருமானை அனுபவிக்க

வாராய் = வருவாயாக

உட்கருத்தின் சுருக்கம்

போதரிக் கண்ணினாய்

பொழுது போக்கு நோக்காய்

பகவத் அனுபவத்தில் நல்ல பொழுது போக்குவதில் கண்ணும் கருத்தும் உடைய பிரபன்னனே

புள்ளின்வாய் கீண்டானைப்

மாற்றாரை விலக்கி

பகவத் விரோதிகளிடமிருந்து விலகி இருப்பது

[ஸ்ரீமந் நாராயணனையும் மற்ற தெய்வங்களையும் ஒன்றாய் நினைக்கின்ற பாஷாண்டிகளோடும் , சாஸ்திரம் தவறியவர்களோடும், வஞ்சனை, ஏமாற்றல், துர்புத்தி உடையவர்களுடனும் பேச்சுகூட கொடுக்காது]

பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை

மனம் ஒடுக்கிய தேசிகரை

மனது என்னும் பொல்லாத இந்திரியத்தை கட்டுப்படுத்திய ஆசாரிய ஸார்வபௌமர்களை

கீர்த்திமை பாடிப்போய்ப்

போற்றியே

புகழ்ந்து கொண்டே, அவர்கள் தனியன்களையும், வாழ்த்துக்களையும் பாடிக் கொண்டே

பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார்

சிறுவர் சேர்ந்தனர்

எல்லா சிஷ்யர்களும் காலக்ஷேப கூட்டத்தில் கூடி விட்டனர்.

வெள்ளி எழுந்து வியாழம் உறங்கிற்று

காலத்தில்

அபிகமன காலம் முடிந்து உபதான காலம் வந்து விட்டது.

புள்ளுஞ் சிலம்பினகாண்

சிலரும்

உபாதானத்திற்கு பின் நடக்கும் காலக்ஷேபத்தில் பங்கு கொள்ளாமல் சிலர் வெளியே செல்பவர்கள்

நீ நன்னாளால் குள்ளக்குளிர குடைந்து நீராடாதே பள்ளிக் கிடத்தியோ

பற்றிலாது

இந்த நல்ல நாளில் பகவானை நன்றாக அனுபவிக்காமல் ஸம்ஸாரிகளைப் போல் பகவானிடத்து விருப்பு வெறுப்பு இன்றி இருக்கிறாயே

பாவாய்

சாற்றி முடித்தவனே

செய்ய வேண்டியவற்றை எல்லாம் செய்து முடித்த கருதக்குருத்யனான பிரபன்னனே

கள்ளந் தவிர்ந்து கலந்து

பொல்லாங்கு இல்லாது வாராய்

ஆத்ம அபகாரம் செய்தவர்கள் போல் இல்லாது எங்களுடன் சேர்ந்து வாராய்

பாசுரம் 14

அர்ச்யாவதார எம்பெருமானை அனுபவிக்கும் ஒரு பிரபன்னை
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபட அழைத்தல்

*உங்கள் புழக்கடைத் தோட்டத்து வாவியுள் *
*செங்கழுநீர் வாய் நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பினகாண் *
*செங்கல் பொடிக்கூரை வெண்பல் தவத்தவர் *
*தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார் *
*எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும் *
*நங்காய்! எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்! *
*சங்கொடு சக்கர மேந்துந் தடக்கையன் *
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்

**உடலில் உள்ளே உறங்கும் * உத்தம குணங்களும் மலரும் *
அடக்கி புலனும் ஆசையும் * அழுக்கிலாது கோவில் சேரும் /
முடித்த தவத்தீர் மேவி * முன்வந்து அழையா விடினும் *
குடியேறிய சங்காழி * கமலக் கண்ணனை பாட வாராய்.**

பதவுரை

உறங்கும்	= மயக்கத்தையே தரும் இந்த பூலோகத்தில்
உடலில்	= ப்ராகிருத சரீரத்தில்
உள்ளே	= உள் தலைமையான இதயத்தில்
உத்தம குணங்களும்	= ஆத்ம குணங்கள்
மலரும்	= ப்ரகாசிக்கும்
அடக்கி புலனும்	= இந்திரியங்களை கட்டுப் படுத்தி
அடக்கி ஆசையும்	= ரஜோ குணமான ஆசையையும் ஒழித்து
அழுக்கிலாது	= வெண்மையான ஆடையுடன்

கோவில் செல்லும் = பகவான் எழுந்தருளியிருக்கும் கோவில்களுக்கு செல்கின்ற

முடித்த தவத்தீர் = உயர்ந்த தபஸ்ஸான சரணாகதியை அனுஷ்டித்த ப்ரபன்னரே

முன்வந்து = நீராகவே முன் வந்து

அழையா விடினும் = எம்பெருமான் ஸேவைக்கு எங்களை அழைத்து செல்லாவிடினும்

சங்கு ஆழி = சங்கு சக்கரங்களை

குடியேறிய = திருக்கையில் வந்து அமர்ந்த

கமலக் கண்ணனை = தாமரை மலர் போன்ற திருக்கண்களை உடைய கண்ணனை

மேவி = பொருந்தி, நெருங்கி, ஊற்றமுடன்

பாட வராய் = அனுபவிக்க வருவீர்களாக!

உட்கருத்தின் சுருக்கம்

அர்ச்யாவதார பெருமானை அனுபவிக்கும் பிரபன்னனை அழைப்பதாக உள்ளது இந்த பாசுரம்.

உங்கள்
(தவத்தீர்)
பூஜாயாம் பஹுவசனம் என்கிறபடியே பிரபன்னன் ஒருவனையே சொன்னாலும், பன்மை இங்கே மரியாதையை காட்டுகிறது.

புழக்கடைத் தோட்டத்து வாவியுள்
இங்கே உடலில் உள்ளே
ஸம்ஸார மண்டலத்தில், ப்ராகிருத சரீரத்திலுள்ள இதயத்தில்.

செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து

உத்தம குணங்களும் மலரும்

அந்த இதயத்தில் ஆத்ம குணங்களாகிய பூக்கள் மலர்ந்துள்ளன.

ஆம்பல்வாய் கூம்பினகாண்

அடக்கி புலனும்

இரவில் மலர்ந்து பகலில் சுருங்கும் ஆம்பல் பூ போலே இரவான ஸம்ஸாரத்தில் இருந்து கொண்டே புலன்களை சுருக்கியவர். இந்திரிய நிக்ரஹம் செய்தவர்கள்

செங்கல் பொடிக்

அடக்கி ஆசையும்

சிவப்பு நிறம் ரஜோ குணத்தை காட்டுவதாலே, செங்கல் பொடி என்பது ஆசையை தவிடு பொடியாக்குவது.

வெண் கூரை

அழுக்கிலாது

வெள்ளை வஸ்திரம் அணிந்து

பல் தவத்தவர்

முடித்த தவத்தீர்

சரணாகதி என்று பல கோடிக்கணக்கான தவங்களைவிட உயர்ந்ததான தவத்தை செய்து முடித்து க்ருதக்ருத்யனானவர்.

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்

கோவில் சேரும்

எம்பெருமான் அர்ச்யாமூர்த்தியாய் எழுந்து அருளியிருக்கும் திருக் கோயில்களுக்கு செல்கின்றனர்

எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
முன்வந்து அழையா விடினும்
எங்களை அந்த பெருமாள் ஸேவைக்கு நான் முன்னே வந்து அழைத்துச் செலகிறேன் என்று சொல்லிய நீ இன்னமும் புறப்படாமல் இருக்கிறாயே? நாங்கள் வந்து விட்டோம்.

நங்காய்!நாணாதாய்! நாவுடையாய்!
மேவி
பகவத் அனுபவத்தில் ஊற்றமும், நெருக்கமும், பொருத்தமும் உடையவரே பகவானை வெட்கம் இல்லாது பாடி, அப்படி பாடுவதற்கு நல்ல குரல் படைத்தவரே.

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
குடியேறிய சங்கு ஆழி
சங்குசக்கரம் கையில் கொண்டுள்ள எம்பெருமான்

எழுந்திராய் பங்கயக் கண்ணானைப் பாடேலோ
தாமரைக் கண்ணனை பாட வாராய்
பரத்வ நிர்ணயம் செய்த கண்ணழகை பாட நீயும் வருவாயாக

பாசுரம் 15

பகவத் சிந்தனையில் தன்னை மறந்த ஒரு பிரபன்னனை
பகவத் ஆராதனத்திற்கு அழைத்தல்

எல்லே! இளங்கிளியே! இன்ன முறங்குதியோ?
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை
எல்லோரும் போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
*வல்லானை * மாயனைப் பாடலோ ரெம்பாவாய்*

சிறுகிளியே வழிபடவாராய் என்க * சிலுக்காதே சொன்னாரை என்க *
குருமொழி குறிப்பு வன்மை என்க * குறை எமதே மன்னிக்க என்க /
வருவார் எல்லாம் உளரா என்க * வந்தார் என்றே உணர்வாய் என்க *
நீரும் நுமதும் ஒழிக்கும் என்றே * நிகரிலா மாயனை ஏத்த வாராயே.

பதவுரை

சிறுகிளியே = ஆசாரியரிடம் முறைப்படி கற்றதை அப்படியே கூட்டி, குறைக்காமல் சொல்லுகின்ற இளமையான பிரபன்னனே
வழிபடவாராய் = உபாதன காலத்து காலக்ஷேபம் முடிந்து விட்டது. இஜ்யா கால ஆராதனத்திற்கு வருவாயாக
என்க = என்று பிரபன்ன கோஷ்டி அவனை அழைக்க
சொன்னாரை = அப்படிச் சொன்னவரிடம்

சிலுக்காதே = “சும்மா வருவாயா வருவாயா” என்று தொந்திரவு செய்யாதீர்கள்
என்க = என்று சுணுங்க
குருமொழி = ஆசார்ய புருஷர்களின் உபதேசங்களின்
குறிப்பு = ஸூக்ஷ்ம ஆர்த்தங்கள் எல்லாம்
வன்மை = நன்று அறிந்து வாக்கு வன்மை உடையவரே
என்க = என்று பிரபன்ன கோஷ்டி அவரை புகழ
மன்னிக்க = [அடியேனை] மன்னிக்க வேண்டும்
குறை எமதே = தவறுகள் எல்லாம் அடியேனுடையதே
என்க = என்று பிரபன்னனும் மன்னிப்பு கோர
வருவார் எல்லாம் = பகவத் ஆராதனத்திற்கு எப்பொழுதும் வந்து கலந்து கொள்ளும் கோஷ்டியான பிரபன்னர்கள் எல்லாம்
உளரா = வந்து விட்டார்களா?
என்க = என்று பிரபன்னனும் வினவ
வந்தார் என்றே = எல்லோரும் வந்து விட்டார்கள் என்றே
உணர்வாய் = நினைத்துக் கொள்ளுங்கள்
என்க = என்று சொல்ல
நீரும் நுமதும் = நான், எனது என்கிற அகங்கார மமகாரங்களை
ஒழிப்பான் என்றே = ஒழித்து என்னை சுத்தமாக்குவான் எனும் எண்ணத்தோடு
நிகரிலா = தனக்கு நிகரான சக்தி எதுவும் இல்லாத வல்லமையுடன்
மாயனை = மஹா மாயனான கண்ணனை
ஏத்த வாராயே. = புகழ்ந்து பாட வருவாயாக என்றனர்.

உட்கருத்தின் சுருக்கம்

புள்ளும் சிலம்பினகாண் பாசுரத்தில் [பாசுரம் 13], அபிகமனதிற்கு பிறகு உபாதான காலத்தில் காலஷேபத்திற்கு வந்து நீயும் அனுபவிப்பாய் என்று ஒரு உத்தம பிரபன்னனை, பிரபன்ன கோஷ்டி அழைத்ததின் தொடர்ச்சி இங்கே.

உத்தம பிரபன்னன், காலக்ஷேபம் முடிந்தும், அந்த விஷயத்தில் மூழ்கி, தன்னை மறந்து அந்த நினைவிலேயே காலம் சென்றதை அறியாமல் இருந்தான். உபாதனத்திற்கு பிறகு இஜ்ஜயா காலம் வந்ததை பிரபன்ன கோஷ்டி அவனுக்கு நினைவு உறுத்தி, பகவத் ஆராதனத்திற்கு வருமாறு அழைக்கின்றனர்.

எல்லே! இளங்கிளியே!

சிறுகிளியே

அட! என்ன ஆச்சரியம். ஆசாரியர் சொல்லிக் கொடுத்ததை ஒரு கிளிபோலே கூட்டாமலும் குறைக்காமலும் சொல்லுகின்ற உத்தம பிரபன்னே.

இன்னம் உறங்குதியோ?

வழிபட வாராய் என்க

“காலக்ஷேபத்திற்கு சென்று அங்கு ஆசாரியார் சொல்லிக் கொடுத்தில் மெய் மறந்து அந்த சிந்தனையிலேயே அடுத்த காரியாமான இஜ்ஜயா ஆராதன காலம் வந்து விட்டதை மறந்து விட்டாயா?” என்று கேட்டனர்.

சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்

சொன்னாரை சிலுக்காதே என்க

“என்னை வருகிறாயா? வருகிறாயா? என்று கேட்டு தொண தொணக்காதீர்கள். நான் வருகிறேன்,” என்று பிரபன்னன் கோஷ்டியிடம் கூறுகிறான்.

வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்

குருமொழி குறிப்பு வன்மை என்க

உடனே கோஷ்டி சொல்கிறார்கள் “அப்பா பிரபன்னா, நீ ஆசாரியர் சொல்லிக் கொடுத்ததை எல்லாம் நன்றாக, விளக்கமாக உன் வாயால் திருப்பிச் சொல்லும் ஆற்றல் படைத்தவன். விஷயங்களின் தராதர மறிந்த பண்டிதன்” என்று புகழ்ந்தனர்.

வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
குறை எமதே மன்னிக்க என்க
உள்ளே இருக்கும் பிரபன்னனுக்கு இதைக் கேட்டதும், கொஞ்சம் வெட்கம் வந்து விட்டது. " என்னை சொல்லாதீர்கள். நான் இல்லை. நீங்கள்தான் அப்படிப் பட்ட பண்டிதர்கள்" என்ரு சொல்லி, முன்னே சில்லென்று அதாவது வெடுக்கென்று சொன்னதை உணர்ந்து, "நானேதான் ஆயிடுக" என்று அபராதத்திற்கு மன்னிப்பு வேண்டுகிறான்.

ஒல்லைநீ போதாய் உனக்கு என்ன வேறுடையை
வழிபட வாராய் என்க
வெளியில் இருக்கும் கோஷ்டி சொல்கிறார்கள். "சரி, அது போகட்டும், நீயும் எங்களுடன் வந்து பகவத் ஆராதனத்தில் கலந்து கொள்வாய்" என்று வேண்டினர்.

எல்லோரும் போந்தாரோ
வருவார் எல்லாம் உளரா என்க
உள்ளே இருக்கும் பிரபன்னன் கேட்கிறான். "பகவத் ஆராதனத்திற்கு தினமும் வந்து கலந்து கொள்ளும் பிப்ரபன்னர்கள், மீதி எல்லோரும் வந்து விட்டார்களா?" என்று வினவினான்.

போந்தார் போந்தெண்ணிக்கொள்
வந்தார் என்றே உணர்வாய் என்க
வெளியில் உள்ளவர்கள் "எல்லோரும் வந்ததாகவே எண்ணிக் கொள்" என்றார்கள்.

வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை
நீரும் நுமதும் ஒழிப்பான் என்றே

அத்துடன், “நம்முடைய அகங்கார மமகாரங்களை நீக்கும் ஆசார்ய ஸம்பந்தத்தை நமக்கு கொடுத்த

மாயனைப் பாடலோ

நிலை தரும் மாயனை ஏத்துவாயே.

மாயனான எம்பெருமானை ஆராதிப்போம்”, நீரும் வாரும் என்று சொல்லி முடித்தனர்.

பாசுரம் 16

நம் மனதைக் கட்டுப் படுத்த எம்பெருமானிடம் வேண்டல்

நாயகனாய் நின்ற நந்தகோப னுடைய
*கோயில் காப்பானே! * கொடித் தோன்றும் தோரண*
*வாசல் காப்பானே! * மணிக் கதவம் தாள் திறவாய் *
*ஆயர் சிறுமிய ரோமுக்கு * அறைபறை*
*மாயன் மணி வண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான் *
*தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான் *
*வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மா! * நீ*
நேச நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்

**நல் நினைவும் புலனும் காத்து * நலம் நிறைக்கும் நாதனே *
மேல் மேயாது மண் வந்து * எம் மனக்கதவை திறவாயே /
இல்லாது வேறு பேறென * இயலாது வந்தோம் இருடீகேசா! *
சொல் மாறாது சொன்னவாறு * பற்றறுப்பாயே பத்தி நிலைக்க.**

பதவுரை

நாதனே	= உபய விபூதிக்கும் நாயகனான எம்பெருமானே
நல் நினைவும் காத்து	= மனதில் உள்ள நல்ல எண்ணங்களை காத்து
புலனும் காத்து	= கண், காது போன்ற வெளி இந்திரியங்களும் அஸத்தான விஷயத்தில் செல்லாதவாறு காத்து
நலம் நிறைக்கும்	= நீ ஆனந்தமயமாய் இருந்து எல்லோருக்கும் ஆனந்தத்தை தரக்கூடியவனே
மேல் மேயாது	= பரமபதத்தில் பரத்வமாய் பிரகாசிக்கும் நீ அந்த வசிப்பிடத்தை வேண்டாம் என்று

மண் வந்து	= அல்பமான பூலோகத்திற்கு கீழ் இறங்கி வந்து ஸௌலப்யத்தை பிரகாசித்தவனே
எம் மனக் கதவை	= எங்களுடைய மனஸ் என்கிற இந்திரியத்தை திறந்து
திறவாயே	=நல்ல விஷயங்களை புகச் செய்வாய்
இருடீகேசா!	= இந்திரியங்களுக்கு எல்லாம் தலவனான உன்னிடம்
வேறு பேறு	= வேறு ஒரு பலனும்
இல்லாது என	= வேண்டாமல், உன்னையே பலனாகக் கொண்டு
இயலாது	= ஒன்றுக்கும் தகுதி இல்லாத ஆகிஞ்சன்யத்துடன்
வந்தோம்	= உன் திருவடிகளே தஞ்சம் என புகுந்தோம்.
சொன்னவாறு	= சாஸ்திரங்களில் நீயே வாக்குறுதி அளித்தபடி
சொல் மாறாது	= சொன்ன சொல் தவறாது,
பத்தி நிலைக்க	= உன்னிடம் பக்தி என்னும் ஆனந்த வெள்ளம் எங்களுக்கு நிலையாக இருக்க
பற்று அறுப்பாயே	= உலக விஷயங்களில் எங்களுக்கு உள்ள பற்றை அழிப்பாயாக.

உட்கருத்தின் சுருக்கம்

பாசுரம் 6 முதல் 15 வரை எம்பெருமானை அனுபவிக்க ஒவ்வொரு பிரபன்னனையும் அழைத்ததை பார்த்தோம்.

நம் மனத்தை கட்டுப்படுத்த எம்பெருமானிடம் வேண்டுவதை காட்டுகிறது, இந்த பாசுரம். ஸம்ஸாரத்தில் நம்மை ஆழ்த்தவும், அதிலிருந்து விடுபட்டு மோஷம் அடையவும் வேறு காரணம் ஒன்றும் இல்லை. நம் மனதே காரணம் ஆகிறது. அதனால் நம் மனத்தை நல்ல விஷயத்தில் புகுத்தும்படி எம்பெருமானிடம் பிராத்திப்பது இங்கே.

நாயகனாய் நின்ற

நாதனே

நாயகன் என்றால் அதிபதி, ஸ்வாமி, ஸேஷி. பரம பதமும், ப்ரகிருதி மண்டலமும் ஆன உபயவிபூதிக்கும் நாதனான எம்பெருமான் ஸ்ரீமந் நாரயணனே நாயகன்.

நந்தகோப னுடைய

நலம் நிறைக்கும் காத்து

நந்தன் என்றால் ஆனந்தத்தை அளிப்பவன். கோபன் என்றால் காப்பவன். பகவான் ஆனந்தமயமாய் இருந்து தன்னை அடைந்தவர்களையும் ஆனந்திக்கச் செய்கிறான். அதனால் அவன் நலம் நிறைப்பவன். ரக்ஷிப்பவனே கோபன். ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற தொழில்களில் காத்தல் என்கிற ஸ்திதியை தானே கொண்டான்.

கோயில் காப்பானே!

நல் நினைவும் காத்து

நம்முடைய மனது என்கிற கோயிலில்தான் எம்பெருமான் எழுந்தருளி இருக்கிறான். மனதை வேண்டாத விஷயங்களில் செல்லாதவாறு காத்து நல்ல சிந்தனைகளையே தருகிறான் பகவான்.

கொடித் தோன்றும் தோரணவாசல் காப்பானே!

புலனும் காத்து

வெளி இந்திரியங்களான கண், காது போன்றவற்றையும் அஸத்தான விஷயத்தில் செல்லாதவாறு காக்கிறான்.

மணிக் கதவம் தாள் திறவாய்

எம் மனக் கதவை திறவாயே

எங்களுடைய மனம் என்கிற உள் இந்திரியத்தின் கதவை திறந்து, நல்ல விஷயங்களில் ஈடுபடச் செய்

ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை

இயலாது

ஆயர் சிறுமியர் என்பது ஆகிஞ்சன்யத்தை, அதாவது கையிலாகத தன்மையை காட்டுகிறது. அகிஞ்சனரான நாம் பகவானை அடைய, அவனே, அவனை அனுபவிக்க வேண்டிய அறிவை, ஞானத்தை அருளுகிறான்.

மாயன் மணி வண்ணன்

மேல் மேயாது மண் வந்து

மாயன் என்பது மேலே உள்ள பரத்வத்தையும், மணி வண்ணன் என்பது அவனே கீழே கண்ணனான இறங்கிய ஸௌலப்யத்தை காட்டும். பகவான் தன்னகே உள்ள பரமபத்தை வசிக்கும் இடமாக கொண்டு இருந்தாலும் அதை வேண்டம் என்று உதறி பூலோகத்திற்கு ஒடி ஒடி வருகிறான்.

நென்னலே வாய் நேர்ந்தான்

சொன்னவாறு

ஏற்கனவே சாஸ்திரங்களில் பல இடங்களில் பகவான் வாக்குறுதி தந்திருக்கிறான். என்னை அடைந்தவர்களை ரக்ஷித்தே தீருவேன் என்று.

தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்

இல்லாது வேறு பேறு என வந்தோம் இருடீகேசா

நாங்கள் உன் அனுபவத்தை தவிர வேறு ஒரு ப்ரயோஜனமும் எதிர்பாரது, அநந்யப்ரயோஜனராய் வந்திருக்கிறோம். ஹ்ருஷீகேசன் என்று உனக்கு திருநாமம். ஹ்ருஷீகம் என்பது இந்திரியங்கள். அதற்கு ஈசனாய், நியந்தாவாய் இருப்பவன் ஸ்ரீமந் நாரயணனான உன்னை வேண்டுகிறோம்.

வாயால் முன்னமுன்னம் மாற்றாதே யம்மா!

சொல் மாறாது

நீ ஏற்கனவே சொல்லி, உறுதி அளித்திருப்பதை மாற்றாதே. சொன்ன சொல் தவறாது ரக்ஷிக்க வேண்டும்.

நீ நேச நிலைக் கதவம் நீக்கேல்

பற்று அறுப்பாயே பத்தி நிலைக்க

நீ எங்களுடைய பக்தி, அன்பு என்னும் ஆனந்த வெள்ளம் உன்னிடமே நிலைத்து நிற்க, அதற்கு தடையாக இருக்கும் உலக விஷயங்களில் உள்ள பற்றுதலை நீ அருள் புரிந்து நீக்க வேண்டும்.

பாசுரம் 17

பாகவதர்களையும் ஆசாரியர்களையும் முன்னிட்டு
பகவத் குணாதிஸயங்களில் ஈடுபடுதல்

*அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் *
*எம்பெருமான் நந்தகோ பாலா எழுந்திராய் *
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே
எம்பெரு மாட்டி யசோதா அறிவுறாய்
அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர்கோ மானே உறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா
உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய்

**குலம் காத்து மகிழ்வித்து * மெய் வழி பலனைப் பொழிந்து *
நலம் அருளி நல்விளக்காய் * தரமுடன் மெலிந்த இறைவா *
நிலம் நின்ற நித்யர் தலைவா * நீண்டு வானை நிறைத்தாயே *
பலம் மிகுந்த நிதிபதியே * பாங்காய் நாடினோம் நாங்களே.**

பதவுரை

குலம்	= ராமனுஜ ஸம்பிரதாயம் என்று புகழும் குலத்தை
காத்து	= நன்றாக ரக்ஷித்து, வளர்த்து
மகிழ்வித்து	= அதன் கொள்கைகளை சிஷ்யர்களுக்கு எல்லாம் எடுத்துரைத்து அவர்களை சந்தோஷப்படுத்தி
மெய்	= உண்மையான தத்துவத்தையும்
வழி	= எம்பெருமானை அடைவதற்கான உபாயங்களையும்
பலனை	= உயர்ந்த புருஷார்த்தமாகிற மோஷத்தில் ஆசையையும்

பொழிந்து = உண்டு பண்ணி அதன் தாத்பர்யங்களை எல்லாம் கன்றுக்கு சுரக்கும் தாய் பசுபோலே வாரி வழங்கி

நலம் = மாதா ஸ்தானத்தில் விளங்கும் திருமந்திரம், த்வயம், சரம ஸ்லோகம் போன்று செளக்கியத்தை தரும்

அருளி = விஷயங்களை எல்லாம் நன்கு தெளிவாக உபதேசித்து

நல்விளக்காய் = ஸத் ஸம்பிராதாய ஞானத்தால் தன் சிஷ்யர்களை பிரகாசப்படுத்தி, தானும் ஒளியுடனே விளங்கி

தரமுடன் = பெருமையுடன், உயர்ந்த தகுதி படைத்தவராய்

மெலிந்த = அனுஷ்டானத்தினால் சரீரம் மெலிந்து, ஞானத்தினால் எந்த இடத்தில் வளைந்து கொடுக்க வேண்டுமோ அங்கே கொடி போலே வளைந்து

இறைவா! = ஸாக்ஷாத் பகவானுடைய ஸ்தானத்தில் இருக்கும் என்னுடைய ஆசாரியனே

நிலம் நின்ற = பூமியை ஒரு திருவடியால் அளந்து அதன்மேல் நின்று

நீண்டு = மற்றொரு திருவடியை ஓங்கி

வானை = ஆகாயத்தை கிழித்து

நிறைத்தாயே! = எங்கும் பரவி நின்றாயே

நித்யர் தலைவா = நித்ய ஸூரிகளுக்கு எல்லாம் தலவனான ஸ்ரீமந் நாராயணனே!

பலம் மிகுந்த = எம்பெருமானின் கடாக்ஷத்தால் பலம் மிகுந்து

நிதிபதியே = கைங்கர்யஸ்ரீ என்கிற உயர்ந்த செல்வத்தை பெற்ற பாகவதர்களே

பாங்காய் = முறையாக [உங்களை]

நாடினோம் = ஸேவித்து, ஆசாரியர்களையும் சேவித்து, அதன் பிறகு எம்பெருமானையும் அனுபவிக்க புகுந்தோம்

நாங்களே = அடியவர்களான நாங்கள்.

உட்கருத்தின் சுருக்கம்

இந்த பாசுரத்தில் பகவானை ஸேவித்து பகவத் அனுபவத்தை பெறும்போது முறையாய் அனுஸந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறாள். ஆசாரியர்களையும், பாகவதர்களையும் முன் கொண்டுதான் எம்பெருமானை அடைய வேண்டும் என்பதுதான் உட்கருத்து.

அம்பரமே

மெய்

தத்வ ஹித புருஷார்த்தங்களை அம்பரமே தண்ணீரே சோறே என்று சொல்லிற்று. அம்பரம் என்றால் ஆடை, ஆகாயம். ஆடை என்பது உடலை மூடி மறைப்பது போலே ஸகல சித், அசித்தான பொருள்கள் எல்லாம் எம்பெருமானை சுற்றி உள்ளன.

மெய் என்பது ஸத்யம், உண்மையான தத்துவம். மெய் என்றால் சரீரம் என்றும் பொருள். உடல்மிசை உயிரென கரந்து எங்கும் பரந்துளன் என்கிறபடி, சேதனா சேதனங்கள் எல்லாம் எம்பெருமானுக்கு சரீரமாக உள்ளன.

தண்ணீரே

வழி

தண்ணீர் என்பது வழி, உபாயம். தண்ணிரைக் கொண்டுத்தான் சமைக்க முடியும். உபாயத்தைக் கொண்டுத்தான் பலனை அடைய முடியும்.

சோறே

பலனும்

சோறு என்பது சமைத்தபின் அனுபவிக்கக்கூடிய பலன். பரம புருஷார்த்தத்தை காட்டுகிறது.

அறம் செய்யும்

பொழிந்து

அறம் செய்து என்பது தர்ம காரியங்களில் ஈடுபட்டு. ததுவங்களை ப்ரதி பலன் பாராது வர்ஷிக்கும் குணத்தை சொன்னது.

எம்பெருமான்

இறையே

பகவானே ஸாக்ஷாத் ஆசாரியானாக அவதாரம் எடுத்துள்ளான். பீதகவாடை பிரானர் பிரம் குருவாகி என்கிறாற்போல் இறையே என்ப்து ஆசாரியனை சொல்லும்.

நந்தகோபாலா

மகிழ்வித்து குலம் காத்து

நந்தம் என்றால் மகிழ்வித்து. ஆசாரியர் தன்னை அண்டியவர்களுக்கு ஞானத்தை வாரி வழங்கி அவர்களை சந்தோஷப்படுத்துகிறார். ஆசாரியர் நம் ஸம்பிரதாயத்தை ரக்ஷிப்பவர். ராம்நுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமர்கள். குலம் காக்கும் உத்தமர்கள்.

கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே

மெலிந்து

ஆசாரியர்கள் ஞானத்தில் எவ்வளவு உயர்ந்து இருந்தாலும், கொடி போன்று மெலிந்து, வளைந்து கொடுத்து, சிஷ்யர்களை கரை தேற்றுகிறார்கள்.

குலவிளக்கே

நல்விளக்காய்

ஆசாரியர் என்பது ஸம்பிரதாய தீபம். நல்விளக்கு. தன்னை அண்டியவர்களை பிரகாசப்படுத்தி, தானும் ஒளியுடன் இருப்பவர்கள்.

எம்பெருமாட்டி

நலம் அருளி

எம்பெருமாட்டி என்பது தாயாரை போன்று நமக்கு நன்மையே கொடுக்கும் ரஹஸ்யங்களைச் சொன்னது. திருமந்திரம், துவயம், சரம ஸ்லோகம் என்பது நமக்கு நித்ய ஆனந்த்ததை அளிக்கக் கூடியது. அந்த நல்த்தை நமக்கு அருளி, உபதேசித்து நல்வழி படுத்துபவர் ஆசாரியர்.

யசோதாய்

தரமுடன்

யஸஸ் என்றால் புகழ், கீர்த்தி, பெருமை. ஆசாரியர்கள் உன்னதமான தரத்துடன், பெருமையுடன் விளங்குகிறார்கள்.

அறிவுறாய்

அருளி

அறிவுறாய் என்றால் அருளி. ஸத் விஷயங்களை ஆசாரியர்கள் அருளுகிறார்கள்.

அம்பரம் ஊடறுத்து ஓங்கி உலகளந்த உம்பர்கோ மானே

நிலம் நின்று நீண்டு வான் நிறைத்தாயே நித்யர் தலைவா

ஆகாயத்தை தன் திருவடியால் பிளந்த திருவிக்கிரமனே நித்யஸூரிகளின் தலைவா. வாமனன் ஒரு காலை நிலத்தில் ஊன்றி மற்றொரு திருவடியால் ஆகாயம் பூராகவும் நிறைத்தான். அந்த திரிவிக்கிரமனே நித்யஸூரிகளின் தலைவன்.

செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா

பலம் மிகுந்த நிதிபதியே *

பலதேவா என்றால் பலம் நிறைந்தவர். ஆண்டாள் இங்கே எம்பெருமானின் சிவந்த திருவடிகளுக்கு கீழே உல்ள பாதுகைகளைச் சொல்லி, அந்த பாதுகை, ஆதிஸேஷனே பலராம அவதாரம் என்றாள். ஆதிசேஷன் நிதிக்கு எல்லாம் அதிபதி. எது நிதி என்றால் கைங்கர்யம்தான் செல்வம்.

உம்பியும் நீயு ம் உறங்கேலோ
பாங்காய் நாடினோம் நாங்களே
அந்த கைங்கர்ய செல்வத்தை உடைய பாகவதர்களே, உம்மை,நாடி ஆசாரியர்களை நாடி அதன் பிறகு பகவானையும் முறையாக அனுபவிக்க வந்துள்ளோம் நாங்கள். உம்முடைய திருவருளும் வேண்டும்.

பாசுரம் 18

பிராட்டியை முன்னிட்டே எம்பெருமானை அடைதல்

*உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன் *
*நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய் *
*கந்தம் கமழும் குழலி கடைதிறவாய் *
*வந்தெங்கும் கோழி அழைத்தன காண் * மாதவிப்*
*பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண் *
*பந்தார் விரலி உன் மைத்துனன் பேர்பாட *
*செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப *
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்

மணம் கமழும் நப்பின்னை * மல் நந்தகோபன் மருமகளே *
அணுக உன்னை கோழிபோலே * ஆசிரியர் மறைமுடியாலே *
வணங்க விரகாகி * தொட்டில் வளைக்கை குலுங்க * உன்
கணவன் குணம் பாடி மகிழ * எம் மனக் கதவை திறவாயே.

பதவுரை

மணம் கழமும் = ஸர்வ கந்தக: என்று எப்படி எம்பெருமான் ஸர்வவிதமான நறுமணத்துடன் விளங்குகிறானோ அதுபோல மணம் வீசும்
நப்பின்னை = நப்பின்னை பிராட்டியே
மல் = மிகுந்த வலிமை உடைய
நந்தகோபன் = கண்ணனுடைய தகப்பனாராகிய நந்தகோபரின்
மருமகளே = மருமகளே (வீட்டு பெண்ணே என்று புகுந்த வீட்டின் மேன்மை சொல்லி அழைக்கின்றனர்]
கோழிபோலே = கோழி குப்பையை கிளறி தனக்கு வேண்டியதை மட்டும் பொறுக்குமாப்போலே,

ஆசிரியர் = நம்முடைய ஸத்ஸம்பிரதாய ஆசார்ய மஹாபுருஷர்கள்
மறைமுடியாலே = [உபதேசித்த] வேதங்களின் சிகரமான உபனிஷத்தின் கருத்துக்களில் முக்கியமானதான புருஷகாரத்வத்தை அறிந்து கொண்டு
வணங்க = புருஷகாரகமாக [உன்னை] முதலில் வணங்க
விரகாகி = பிராட்டியும் அதற்கு மகிழ்ந்து, தனக்கே உள்ள தனிப்பட்ட வால்லப்ய ஸாமர்த்யத்தினால் சேதனனை ரக்ஷிக்கிறேன் என்று உறுதி பூண்டு
தொட்டில் = தொட்டிலில் கிடக்கும் குழந்தையிடம் தாயாருக்கு உள்ள பரிவு போலே, பிரகிருதி மண்டலத்தில் சிக்கியுள்ள பத்த ஜீவன்களிடம் கருணை கொண்டு
வளைக்கை = தன்னுடைய அபய ஹஸ்தத்தினால்
குலுங்க = பிராட்டி எம்பெருமானை விட்டு பிரியாமல் இருந்ததால், கை மெலிந்து வளை நழுவி விழாமல் இருந்து, அந்த வளை குலுங்கி சப்தித்து
உன் கணவன் = உன்னுடைய கணவனான கண்ணனின்
குணம் பாடி = புகழை, திருநாம ஸங்கீர்த்தனத்தை [நாங்கள்] பாடி
மகிழ = அதுவே பரம புருஷார்த்தம் என்று ஆனந்தித்து கிடக்க
எம் மனக் கதவை = அந்த இன்பத்தில் எங்களுடைய மனது செல்லுமாறு
திறவாயே = ஆக்குவாயே

உட்கருத்தின் சுருக்கம்

பிராட்டியை முன்னிட்டே எம்பெருமானை அணுக வேண்டும் என்பதை இந்த பாசுரத்தின் மூலம் வலியுறுத்துதுகிறாள். இங்கே, கிருஷ்ணாவதாரத்தில் நப்பினைக்கே ஏற்றமானதால், அவளை ஸேவித்து பகவத் அனுபவத்தை வேண்டுகிறார்கள்.

பெரிய பிராட்டியாரே புருஷகாரபூதை ஆனாலும், கிருஷ்ணாவதாரத்தில் நப்பின்னைக்கே ப்ராதான்யம் உண்டாகையாலே அவளே புருஷகாரபூதையாக இருக்கிறாள்.

பிராட்டியை புருஷகாரமாக பற்றினாலேயே பலம் ஸித்திக்கும் இல்லா விட்டால் பலஸித்தி உண்டாகது என்று சாஸ்திரங்களில் பல இடங்களில் காட்டியது என்பது இந்த பாசுரத்தின் தாத்பர்யம்.

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
மல்
பெருமையும் வலிமையும் உடைய நந்தகோபன்.

நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்
நப்பின்னை நந்தகோபன் மருமகளே
அந்த நந்தகோபரின் மருமகளாகிய நப்பின்னை பிராட்டியே! நந்தகோபர் மருமகளே என்ரூ புகுந்த வீட்டிஅ இட்டு சொன்னது.

கந்தம் கமழும் குழலி கடைதிறவாய்
மணம் கமழும் திறவாயே
வாசனை மிக்க கூந்தலை உடைய நப்பின்னையே எங்கள் மனக்கதவை திறவாய்.

மாதவிப் பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
ஆசிரியர் மறை முடியாலே
மாதவிப் பந்தல் என்பது வேதங்களின் உச்சியான, மறைமுடியான உபனிஷத்துக்கள். குயில்கள் என்பது ஆசாரியர்கள். பல்கால் என்றால் பலமுறை உபதேசிக்கின்றனர். ஆசாரியர்கள் சிஷ்யர்களுக்கு நன்கு உபனிஷத்துக்களின் கருத்தை தெளிவாக உபதேசிக்கின்றனர்.

வந்தெங்கும் கோழி அழைத்தன காண்
அணுக உன்னை கோழிபோலே
கோழி பாகவத லக்ஷணத்தை காட்டும். குப்பையை கிளறி தேடி, தனக்கு வேண்டியதை எடுத்துக் கொள்ளும் கோழி போல் பாகவதனும், ஸார தமத்தையே எடுத்து கொள்வான். ஆசாரியரின் உபதேசத்தால், பிராட்டி மூலமாகத்தான் எம்பெருமானை அடைய முடியும் என்ற கருத்தை அடியவர்கள் அறிந்து கொண்டு, நப்பின்னையே உன்னை அவர்கள் அணுகுகிறார்கள்.

பந்தார் விரலி
தொட்டில்
பந்து என்பது பிரகிருதி மண்டலத்தை காட்டும். அதில் சிக்கியுள்ளா சேதனர்களை தொட்டிலில் கிடக்கும் குழந்தை போல கவனித்து கொள்கிறாள். பிராட்டி ஒரு பக்கம் தொட்டிலும் ஒரு பக்கம் கட்டிலும் ஆக இருக்கிறாள். ஒரு பக்கம் குழந்தையும் ஒரு பக்கம் கணவனகிய எம்பெருமானையும் அணைத்து கிடக்கிறள்.

உன் மைத்துனன் பேர்பாட
உன் கணவன் குணம் பாடி மகிழ
எம்பெருமானின் குணாதிஸயங்களில் ஈடுபட, திருநாம ஸங்கீர்த்தனத்தில் மூழ்கி ஆனந்திக்க

செந்தா மரைக்கையால்
வணங்க விரகாய் வளைக்கை
சிவந்த தாமரை மலர் போன்ற திருக்கரங்கள். பிராட்டி அபய ஹஸ்தம் எம்பெருமானுடையதைவிட உயர்ந்தது. அடியவர்கள் பிராட்டியிடம் வேண்டிய உடனே, "நான் உனக்கு புருஷகாரகம் செய்கிறேன்" என்று தன்னுடைய வால்லப்ய ஸாமர்த்யத்தை காட்டி சேதனர்களை காக்கிறாள்.

சீரார் வளையொலிப்ப

வளைக்கை குலுங்க

பகவானை பிரியாதலால் அவளுடைய அழகான திருக்கைகளை அலங்கரிக்கும் வளை கழன்று விழவில்லை.

வந்து திறவாய் மகிழ்ந்து

எம் மனக் கதவை திறவாயே

நப்பின்னை பிராட்டியே, நீ அனுபவிப்பது போல் நாங்களும் அனுபவிக்க வேண்டும். எம்பெருமானை போற்றி மகிழ எங்களின் மனஸ்ஸை நீதான் சரி செய்ய வேண்டும் என வேண்டுகிறார்கள்.

பாசுரம் 19

பிராட்டி பகவான் இருவரையும் சேர்த்து
உபாயமாக பலனாக இருக்க வேண்டுதல்

*குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல் *
*மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி *
*கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் *
*வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய் *
*மைத்தடங் கண்ணினாய்! நீயுன் மணாளனை *
*எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண் *
*எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால் *
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்

**அஞ்சை அருளால் அறிந்து * அவனியில் ஒரு நாலும் *
தஞ்சமாய் மிதுனம் அடைந்து உகக்க * நப்பின்னை கட்டில் /
மஞ்சத்தில் மயங்கிய நீ * வாய் மலராயோ? * மைக்கண்ணே
கொஞ்சமும் பகிராது * உனக்கே கொள்வதும் முறையோ?**

பதவுரை

அஞ்சை = அர்த்த பஞ்சக (ப்ரமாத்மா, ஜீவத்மா, உபாயம், பலன், பலன் அடைய தடை) ஞானத்தை
அருளால் = ஆசாரியர்களின் பரிபூர்ண நிர்ஹேதுக கருணையால்
அறிந்து = நன்றாக கற்றுக் கரை தேர்ந்து
அவனியில் = ப்ரகிருதி மண்டலத்தில்
ஒரு நாலும் = நான்கு விதமான (தேவ மனுஷ்ய, திர்யங், ஸ்தாவர) சரீரங்களை உடைய பத்த ஜீவன்களும்
தஞ்சமாய் = சரணாகதி என்று
மிதுனம் = எம்பெருமான், பிராட்டி என்கிற ஒரு மிதுனத்தை

அடைந்து = உபாயமாக பற்றி
உகக்க = அதையே பலனாக அனுபவிக்க
நப்பின்னை = எம்பெருமானே உன்னுடைய நாயகியான நப்பின்னை
கட்டில் = உன்னை தன் அன்பினால் கட்டி அரவணைத்து இருக்க
மஞ்சத்தில் = அழகான, சுகமான மெத்தையில்
மயங்கிய நீ = தன்னை மறந்து மயங்கி கிடக்கும் நீ
வாய் மலராயோ? = எங்களுக்கு உன் திருவாய் திறந்து "அஸ்து தே" என்று சொல்லக்கூடாதா?
மைக்கண்ணே = மை தடவி, கறுத்து, அழகுடன் விளங்கும் திருக்கண்களை உடைய நப்பின்னையே
கொஞ்சமும் பகிராது = சற்றுகூட அந்த எம்பிரானை எங்களுடன் பகிர்ந்து கொள்ளாது
உனக்கே கொள்வதும் = சுய நலமாக உனக்கே என்று எம்பெருமானை நீ மட்டும் அனுபவிப்பது
முறையோ? = சரிதானா? [நீயே யோசித்து பார்]

உட்கருத்தின் சுருக்கம்

இந்த பாசுரத்தில் பிராட்டி, பகவான் இருவரையும் சேர்த்து வேண்டி பகவத் அனுபவத்தை பிரார்த்திக்கிறார்கள்.

குத்து விளக்கெரியக்
அருளால் அறிந்து
ஆசாரியர் அருளிய உபதேசத்தால் ஞான விளக்கு ஏற்றப்பட்டு கொழுந்து விட்டு எரிய, அந்த அறிவைக் கொண்டு

கோட்டுக்காற் கட்டில்மேல்
அவனியில் ஒரு நாலும்

கட்டிலின் நான்கு கால்களைப்போல லீலாவிபூதியில், ப்ரகிருதி மண்டலத்தில் நான்கு விதமான பத்த ஜீவர்கள் (தேவ, மனுஷ்ய, திர்யங் ஸ்தாவர) பகவத் அனுபவம் இங்கேயே பெற ஆசைப்படுகிறார்கள்

மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி

அஞ்சை அறிந்து

பஞ்ச சயனம் என்பது அர்த்த பஞ்சகத்தை காட்டும். எப்படி மெத்தை உடம்புக்கு சுகமக இருக்குமோ அதுபோல ஆத்மாவிற்கு சுகமானது அர்த்த பஞ்சக ஞானம்.

கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா

நப்பின்னை கட்டில் மஞ்சத்தில் மயங்கிய நீ
தஞ்சமாய் மிதுனம் அடைந்து உகக்க

பிராட்டியின் பக்திக்கும், அன்பிற்கும் வசப்பட்டு அவளுடன் மெத்தையில் கிடக்கும் எம்பெருமானே, உம்மையும் பிராட்டியையும் சேர்ந்த மிதுனத்தை உபாயமாகவும், பலனாகவும் நாங்கள் பற்றினோம்.

வாய்திறவாய்

வாய் மலராயோ?

நீ அனுக்ரஹிக்கிறேன் என்று ஒரு வார்த்தை உன் திருவாய் மலர்ந்து சொன்னால் போதும். எழுந்திருந்து வர வேண்டும் என்பது கூட இல்லை. இதைக் கேட்ட பகவான் உடனே எழுந்திருக்க எத்தனிக்கிறான். பிராட்டி அவனை தடுத்து தான் முந்திக் கொள்கிறாள்.

மைத்தடங் கண்ணினாய்

மைக்கண்ணே

கருமையான கண்களில் மை இடப்பட்டு மிக்க அழகை உடைய பெண்ணே

நீயுன் மணாளனை எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
உனக்கே கொள்வதும்
எம்பெருமான் எனக்கு மட்டுமே என்று அனுபவிக்கிறாயே!

எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
கொஞ்சமும் பகிராது
நாங்கள் எல்லோரும் வந்து அந்த எம்பெருமானை சேர்ந்து அனுபவிக்க வேண்டாமா?

தத்துவம் அன்று தகவு அன்று
முறையோ?
இப்படி நீ செய்யும் காரியம் உன்னுடைய ஸ்வரூபத்திற்கும், உன்னுடைய கருணைக்கும் முறையானது அன்று.

பாசுரம் 20

நப்பின்னை பிராட்டியை எம்பெருமானை
வசீகரப்படுத்தும்படி வேண்டுதல்

*முப்பத்து மூவ ரமர்க்கு முன் சென்று *
*கப்பம் தவிர்க்கும் கலியே துயி லெழாய் *
*செப்ப முடையாய் திறலுடையாய்! * செற்றார்க்கு*
*வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய் *
*செப்பென்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்கல் *
*நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய் *
*உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை *
இப்போதே யெம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

இமையோர்க்கு முன் சென்று * இடர் தீர்க்கும் தூயவனே *
சுமை விடுத்தார் கடன் கழற்றி * மேன்மையுடன் ஒத்தவனே /
பகையின் அனலே அருளாயே * பூர்த்தி நப்பின்னையே திருவே *
வகையாய் பதியை கவனித்து * வாழ வைப்பாய் இக் கணமே.

பதவுரை

இமையோருக்கு = முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும்
முன் சென்று = எங்களுக்கு துன்பம், நீ காப்பாற்ற வேண்டும்
என்று அவர்கள் கேட்பதற்கு முன்பாகவே
இடர் தீர்க்கும் = அவர்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்யும்
தூயவனே = பரி சுத்தமானவனே
சுமை விடுத்தார் = பரந்யாஸம் செய்து நிர்பரமாய் இருக்கும் பிரபன்னர்கள்

கடன் கழற்றி = அவர்களுடைய மூன்று விதமான - தேவ, ரிஷி, பித்ரு கடன்களை எல்லாம் ஒழித்து

மேன்மையுடன் = பரத்வமாய் பிரகாசித்து

ஒத்தவனே = ஆர்ஜவம் மனோ வாக் காயை என்ற முக்கரணங்களிலும் ஒத்து, தன் அடியவர்களுக்கு தகுந்தபடி தன்னை அமைத்து கொண்டு

பகையின் அனலே = பகைவர்களுக்கு துக்கத்தையும் பயத்தையும் அனல் போல தருபவன்

அருளாயே = நீ எங்களுக்கு அருள் செய்ய வேண்டும்.

பூர்த்தி = பூர்ணையாக இருந்து எங்களையும், ஏன் பகவானையுமே பூர்ணமாக்குகிற

திருவே = திரு என்னும் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அவயவ பூதையான

நப்பின்னையே = நப்பின்னை பிராட்டியே

பதியை = உனக்கு பதியான, உன் பர்த்தாவான எம்பிரானை

வகையாய் = பல விதங்களிலும்

கவனித்து = சிச்ருஷை, உபசார, அறிவுரை போன்றவை செய்து அவனை மயக்கி

வாழ வைப்பாய் = எங்களுக்கு பகவத் அனுபவம் என்கிற பெருஞ்செல்வ வாழ்க்கையை தருவாயாக

இக்கணமே = இந்த க்ஷணமே வேண்டும். இதற்கு மேல் ஒரு நோடியும் எங்களால் பொறுக்க முடியாது.

உட்கருத்தின் சுருக்கம்

போன பாசுரத்தில் பகவானையும், பிராட்டியையும் சேர்த்து உபாயமாகவும், பலனாகவும் பற்றி, பகவத் அனுபவத்தை அருள வேண்டும் என வேண்டினர். அந்த அனுபவம் கிடைக்காதலால், தாங்கள் பிரார்த்தித்த முறையில் தவறு இருக்கலாம் என்று எண்ணுகின்றனர்.

பிராட்டியிடம் தத்துவம் அன்று தகவு அன்று என்று போன பாசுரத்தில் கோவத்துடன் சொன்னதை நினைத்து மனம் வருந்தி இந்த பாசுரத்தில் வினயத்துடன் பிரார்த்திக்கிறார்கள்.

முப்பத்து மூவர் அமரர்க்கு முன் சென்று
இமையோருக்கு முன் சென்று
பகவானுடைய வைபவம் எப்படி என்றால் தன்னுடைய ஆஸ்ரிதர்களை ரக்ஷிக்க தானே எல்லோருக்கும் முன் செல்கிறான். இங்கே முப்பது முக்கோடி தேவர்களுக்கு, அவர்களுக்கு கஷ்டம் வருவதற்கு முன்னே அதை தீர்க்க போகிறான்.

கப்பம் தவிர்க்கும்
இடர் தீர்க்கும் தூயவனே
சுமை விடுத்தார் கடன் கழற்ற
கடனை ஒழிக்கும் வல்லமை மிடுக்கு சாமர்த்தியம் உடையவன். பிறக்கும்போது மூன்று கடன்கள் - பித்ரு, தேவ, ரிஷி கடன்கள். பிரபன்னர்களுக்கு மறு பிரவி கிடையாதலால் கடன்கள் எல்லம் இந்த பிறவியிலேயே ஒழிகின்றன.

கலியே துயிலெழாய் செப்ப முடையாய் திறலுடையாய்
மேன்மையுடன் ஒத்தவனே
கலி என்றால் பலம். கலி என்றால் மிகுதி என்னும் பொருளும் உண்டு. மிகுதி என்பது ஸகல தேவர்களுக்கும் மேல் மிகுந்து மேன்மையாய் இருப்பவன். ஆர்ஜவம் - நேர்மை உடையவன். சொல் செயல் எண்ணம் எல்லாம் ஒன்றாக ஒத்து இருப்பது. திறல் என்பது பலம் - நிரதிசய ஸ்வாதந்திரியம் இருப்பதால் பலம் இவனிடம்தான் பொருந்தி உள்ளது.

செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்
பகைகைக்கு அனலே தூயவனே

பாகவதர்களின் விரோதிகளுக்கு அனல் போல். பிரகாலதனுக்கு துன்பம் கொடுத்த ஹிரண்யகசிபுவை அழித்தற்போலே. ஆனால், நாங்கள் விரோதிகள் இல்லை. உன் அனுபவத்தையே தேடி வந்தோம், பரிசுத்தமானவனே

விமலா துயிலெழாய்
தூயவனே அருளாயே

செப்பென்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்கல் நப்பின்னை நங்காய் திருவே! துயிலெழாய்
பூர்த்தி நப்பின்னையே திருவே
பகவானிடம் பிரார்த்தித்து பின் பிராட்டியிடம் வருகின்றனர். ஸமுதாய சோபையுடன் உள்ள நப்பின்னை பிராட்டியே
நப்பின்னை திருவே என்று மஹாலக்ஷ்மியாக அழைக்கிறார்கள்.

உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை
வகையாய் பதியை கவனித்து
விசிரி, கண்ணாடி போன்ற உபசாரங்கள் செய்து எம்பெருமானை எழுப்பி

இப்போதே எம்மை நீராட்டேலோ
வாழ வைப்பாய் இக் கணமே.
பகவத் அனுபவம் பெற நீ புருஷகார பூதையாக இருந்து நடத்தி தர வேண்டும். கைங்கர்ய ப்ராப்தி இப்பொழுதே அருள வேண்டினர்.

பாசுரம் 21

பூலோகத்தில் சாஸ்திர ரீதியாக
எம்பெருமானை அனுபவித்தல்

*ஏற்றக் கலங்கள் எதிர்பொங்கி மீ தளிப்ப *
*மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள் *
*ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்! *
*ஊற்ற முடையாய்! பெரியாய்! * உலகினில்*
*தோற்ற மாய்நின்ற சுடரே! துயிலெழாய் *
*மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண் *
*ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே *
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலார் எம்பாவாய்

கருத்தை சுரக்கும் மறையும் * காட்டும் பரக்க இறையும் *
இருக்கும் நிலையாய் பெரிதாய் * இருப்பார் உள்ள முகக்கும் /
விருப்புடன் விழுந்தோம் உன்னடியில் * விரோதி போலன்று *
ஆறு பேறு தெய்வம் வேறு * அணுகாத எமக்கு அருளாயே

பதவுரை

கருத்தை	= பலவிதமான பலன்களுக்கு அடிப்படையான பலவித தாத்பர்யமும், அனுஷ்டானங்களையும்
சுரக்கும்	= ப்ரதிபலன் பாராது கருணையோடு பொழியும்
மறையும்	= தானே தோன்றிய வேதங்களும் (உபனிஷத்துக்களும்)
பரக்க	= பரந்து கிடக்கும் பல விதமான பகுதிகளிலும்

காட்டும் = உறுதியாய், திடமாய் நிருபிக்கும்
இறையும் = பகவான், ரக்ஷகன், பர தத்வம் எது என்றால்
நிலையாய் = வேத முதல்வனாய், ஸ்திர தன்மை என்னும் திண்மை உடையவனாய்
பெரிதாய் = மஹத் என்று பெரிதுக்கும் பெரிதாய், எல்லை காண முடியாதபடி
இருக்கும் = நன்கு சிறந்து விளங்கும் [அத்துடன்]
இருப்பார் உள்ளம் உகக்கும் = பூலோகத்தில் கூடவே இருந்த சாதாரண ஜீவ ராசிகளும் பார்த்து மகிழும்படி ராம கிருஷ்ண விபவ அவதராமாயும் இருக்கும்
உகக்கும் உள்ளம் இருப்பார் = உகக்கின்ற உள்ளத்தினுள் அந்தர்யாமியாய் உறைந்து இருப்பார்
உள்ளம் உகக்க இருப்பார் = எப்போது வேண்டுமானாலும் எல்லோரும் அனுபவிக்கத் தகுந்த அர்ச்ச்யாவதார முர்த்தியாயும் இருப்பார் இந்த பகவான்
விரோதி போல் அன்று = உன்னுடைய பகைவர்கள் தோற்று, பலம் இழந்து உன் திருவடியில் பணிவதைப் போல் இல்லாது
விருப்புடன் = ஆசையுடன், ஸம்ஸாரத்தை நீ ஒழிப்பாய் என்று
உன்னடியில் = உன் திருவடிகளில்
விழுந்தோம் = சரணாகதி செய்தோம்
வேறு ஆறு = ப்ரபத்திக்கு பின் வேறு ஒரு உபாயமோ
வேறு பேறு = வேறு ஒரு பலனையோ
வேறு தெய்வம் = வேறு ஒரு தெய்வத்தையோ
அணுகாத = நினைத்துக் கூட பார்க்காத
எமக்கு = க்ருத க்ருத்யனாய், பரமைகாந்தியாய் இருக்கும் எங்களுக்கு
அருளாயே = பகவானே நீ கடாக்ஷிக்க மாட்டாயா?

உட்கருத்தின் சுருக்கம்

கீழ் பாட்டிலே பிராட்டியையும் எம்பெருமானையும் சேர்த்து பகவத் அனுபவம் தர வேண்டும் என பிரார்த்தித்தார்கள். பகவத் குணாதிசயங்களில் ஈடுபட்டு எப்படி அதை அனுபவிப்பது என்பதை இந்த பாசுரம் சொல்கிறது. வேதங்களும் உபனிஷத்துக்களும் காட்டிய பகாவனின் ஐவகை நிலைகளை அறிந்து வேறு ஒரு உபாயமோ, பலனோ, தெய்வமோ நாடாது பரமிகாந்தியாய் அனுவிப்பதே உயர்ந்து என்பதை வலியுறுத்துகிறது.

மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
மறையும் கருத்தை சுரக்கும்
பசுக்கள் என்பது வேதங்கள். பெரும் பசுக்கள் என்பது உபனிஷத்துக்கள். அந்த உபனிஷத்துக்கள் தத்வ, ஹித, புருஷார்த்த ஞானம் என்கிற பாலை பொழிகின்றன.

ஏற்றக் கலங்கள் எதிர்பொங்கி மீ தளிப்ப
கருத்தை சுரக்கும்
அபௌருஷேயம். யாராலும் எழுதப் படத வேதங்களும் உபனிஷத்துக்களும், கருணையோடு எல்லாரும் உஜ்ஜீவிக்க வேண்டும் என்ற கருத்தோடு சாஸ்திரங்களை நமக்கு தருகின்றன.

ஆற்றப் படைத்தான் மகனே!
பரக்க காட்டும் இறையும்
அந்த வேதங்களிலும் உபனிஷத்துக்களிலும் சொல்லப்படுபவன் ஸ்ரீமந் நாரயணனே.

அறிவுறாய்!
அருளாயே
நீ அருள்வாய்

ஊற்ற முடையாய்!
நிலைத்து
ஸ்திரமானவனே பரத்வம்

பெரியாய்!
பெரிதாய்
மஹத் வ்யூஹம்

உலகினில் தோற்ற மாய்நின்ற சுடரே! துயிலெழாய்
கண்டு உள்ளம் உகக்கும்
விபவாவதாரத்தில் எளிமையாய் நின்றாயே விபவம்

நின்ற - அர்ச்சை, *சுடரே* - அந்தர்யாமி

துயிலேழாய்
கடாக்ஷிப்பாய்

மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன் வாசற்கண்
உன் அடிபணியுமா போலே
விருப்புடன் உன்னடி பணிந்தோம் விரோதி போலன்று
பகைவர்கள் தங்கள் தேஜஸ்ஸை இழந்து உன்னிடம் அடி பணிகிறார்கள்.

போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலா
விருப்புடன் உன்னடி பணிந்தோம்
பகைவர்கள் பயத்தினால் செய்தது போல அன்றி, நாங்கள் உன்னை போற்றி அடைந்தோம்

ஆற்றாது வந்து

ஆறு பேறு தெய்வம் வேறு அணுகாத

தேஹாத்ம ப்ரமம், ஸ்வதந்திர ஆத்ம ப்ரமம், அந்யதேவதா ஸேஷத்வ அபிமானம் இவை இல்லாது வந்தோம்.

பாசுரம் 22

மோக்ஷ தெசையில் பரிபூர்ண ஞானத்துடன்
கிடைக்கும் பகவத் அனுபவத்தை நினைத்தல்

*அங்கண் மா ஞாலத்தரசர் * அபிமான*
*பங்கமாய் வந்து நின் பள்ளிக்கட்டிற் கீழே *
*சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம் *
*கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே *
*செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ *
*திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல் *
*அங்கண் இரண்டும் கொண்டெங்கள்மேல் நோக்குதியேல் *
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோர் எம்பாவாய்

அழகிய பெரும் வானில் * அமர்ந்த நாகணையான் *
கழல்கள் கீழ் தனதன்றி * கட்டிலாதார் பணி போலே /
எழில் பரிதிமதி செங்கண் * சிறிது திறந்த சதங்கை *
விழி கொடுத்து எமக்கு * விலக்கிய வினை ஒழிப்பாயே.

பதவுரை

அழகிய பெரும் = மிகவும் அழகு உடையதாய், மிகப் பெரிதாய் த்ரிபாத் விபூதி என்ரு அழைக்கப்படும்
வானில் = பரமபதமாகிற ஸ்ரீவைகுண்டத்தில்
அமர்ந்த நாகணையான் = திருமாமணி மண்டபத்தில் நடுவே ஆதி ஸேஷனில் சிம்மாசனமாய் அமர்ந்து இருக்கும் ஸ்ரீமந் நாராயணன்
கழல்கள் கீழ் = திருவடிகளின் கீழ்
கட்டிலாதார் = ஸம்ஸார பந்தம் இல்லாத நித்யர்களும் முக்தர்களும்

தனதன்றி = அகங்கார மமகாரங்கள் இல்லாது
பணி போலே = பலவிதமான கைங்கர்யங்களைச் செய்து மகிழ்வதைப்போலே
விழி கொடுத்து = எங்களுக்கும் அந்த பரமானந்தத்தை அருள கடாக்ஷிப்பாயே
சிறு திறந்த = சிறிதாய் பாதி திறந்தும் பாதி மூடியும்
சதங்கை(யென) = இருக்கும் சதங்கை போலே
பரிதிமதி = உன்னுடைய சந்திரன் போன்ற போக்யமாகவும், சூரியனைபோல் அஞ்ஞான இருட்டை விலக்கும்
எழில் = மிக அழகியாதான
செங்கண் = சிவந்த தாமரை மலர் போன்ற உம் திருக்கண்களால்
எமக்கு = பிரபன்னர்களாகிய எங்களுக்கு
விழி கொடுத்து = கடாக்ஷித்து
விலக்கிய வினை = ப்ரபத்தி செய்யும்போதே இவன் அனுபவிக்க வேண்டாம் என்று ஒதுக்கி வைத்த ஸஞ்சிதம், அப்யுகதக ப்ராரப்தமும், ப்ரபத்திக்கு பின் புத்தி பூர்வமான ஆகாமி ஆகிய பாபங்களை
ஒழிப்பாயே. = ஒழித்து எமக்கு அருள்வாயே

உட்கருத்தின் சுருக்கம்

கீழே ஏற்ற கலங்கள் பாசுரத்தில் சொன்ன முறையிலேயே, பகவானை அனுபவிக்கும் முறை இங்கே சொல்லப் படுகிறது. அங்கே பூலோகத்தில் எப்படி வேதங்களையும் உபனிஷத்துக்களையும் கொண்டு சாஸ்திர விஹிதமாக வேறு உபாயம், பலன், தெய்வம் நாடாது பகவத் அனுபவம் பெறுவது என்றது. இங்கே மோக்ஷ தெசையில் எப்படி எம்பெருமானை அனுபவிப்போம் என்பதை நினைத்து பார்த்து மகிழும் முறை.

அங்கண் மா ஞாலத்து
அழகிய பெரும் வானில்
மிகவும் அழகிய பெரிய லோகமான வைகுண்டம். திரிபாத் விபூதி என்று மூன்று பங்கு. அங்கே பெரும் அரசர்கள் என்பது முக்தர்களும் நித்யர்களும். பகவான் வானில் இளவரசு.

அரசர் அபிமான பங்கமாய் வந்து
கட்டிலாதார் தனதன்றி
அந்த நித்ய முக்தர்கள் எல்லாம் தான் தனது என்கிற அகங்கார மமகார அபிமானங்கள் எல்லம் விட்டு ஒழித்து

நின் பள்ளிக்கட்டிற் கீழே
அமர்ந்த நாகணையான் கழல்கள்கீழ்
பகவானே உன்னுடைய பள்ளிகட்டாகிற ஆதிஸேஷன் மேல் நீ அம்ர்ந்திருக்க உன் திருவடிக்கீழ்

சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்
பணி போலே எமக்கு விழி கொடுத்து
கூட்டம் கூட்டமாக வந்து உமக்கு கைங்கர்யம் செய்கிறார்கள். அதைப்போலே நாங்களும் ஸ்வாதீன கர்த்ருத்வம், ஸ்வாதீன போக்ருத்வம், ஸ்வார்த்த கர்த்ருத்வம், ஸ்வார்த்த போக்ருத்வம் இன்றி வந்துள்ளோம்.

கிங்கிணிவாய்ச் செய்த தாமரைப் பூப் போலே
செங்கண் சிறுச் சிறிதே எம்மேல் விழியாவோ
சிறு திறந்த சதங்கையென
சதங்கை எப்படி சிறிது சிறிதாக திறக்குமோ அதைப்போல் உம்முடைய திருக்கண்களை சிறிது சிறிதாக திறந்து எங்களை கடாக்ஷிக்க வேண்டும்.

திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்
அங்கண் இரண்டும் கொண்டெங்கள்மேல் நோக்குதியேல்
எழில் பரிதிமதி செங்கண் எமக்கு விழி கொடுத்து
இருளை விலக்கும் சூர்யனும் பரிபூர்ண ப்ரம்மாநுபவம் என்கிற மகிழ்ச்சியை கொடுப்பது குளிர்ந்த சந்திரனை போன்றும் ஒருங்கே உள்ளது.

எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ
விலக்கிய வினை ஒழிப்பாயே
பாபம் என்றால் பிராயசித்தத்தினால் ஒழியும். சாபம் அனுபவித்தே தீர வேண்டும். அந்த சாபம் கூட எம்பெருமானின் கடாக்ஷத்தால் தொலையும். இங்கே சாபம் என்பது இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறேன் ஒத்துக் கொள்ளப்பட்ட ப்ராரப்த கர்மாவும், ப்ரபத்திக்கு பின் புத்தி பூர்வமாக பண்ணிய பாவங்களும். மற்றவை ஸஞ்சித, அப்யுகதக ப்ராரப்த கர்மா, அபுத்தி பூர்வ ஆகாமி. இவற்றை சரணாகதி செய்யும்போதே எம்பெருமான் ஒழிப்பதாக ஸங்கல்பித்து விட்டான். அவற்றை இப்போது நிறைவேற்றி அருள்வாய்.

பாசுரம் 23

எம்பெருமானின் ஸ்ருஷ்டியை நினைத்து மகிழல்

*மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து றங்கும் *
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
*போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா * உன்*
*கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக் * கோப்புடைய*
*சீரிய சிங்காசனத்தி ருந்து * யாம் வந்த*
காரியம் ஆராய்ந்து அருளேலோ ரெம்பாவாய்

**தன்னுள் எல்லாம் அமிழ * தான் ஒன்றாய் நீரில் உறங்க *
நன்று நினைத்து நீ உமிழ * நாகத்தை நறையுடனே நழுவ *
என்றும் பிரியா மேனி மிளிர * தாழ வந்து குணமும் மலர *
இன்று அரியணை யிருந்து * ஆராய்ந் தெமக்கு அருளாயே.**

பதவுரை

அமிழ = பிரளய காலத்தில்
தன்னுள் எல்லாம் =எல்லா சேதன அசேதனங்களும் நாம ரூபம் இன்றி எம்பெருமானிடம் ஒன்றி கிடக்க
தானே ஒன்றாய் = தான் மட்டுமே ஒருவனாய தனித்து
நீரில் உறங்க = எங்கும் நிறைந்த ஜல ப்ரவாகத்தில் ஸயனித்து உறங்குவது போல யோகம் செய்து
நன்று நினைத்து = பல கோடி யுகங்களுக்கு பின், இந்த சேதனர்கள் எல்லாம் உஜ்ஜீவிக்க வேண்டி நல்ல காரியங்கள் செய்ய சரீரம் தேவை என்று எண்ணி

நீ உமிழ = ஸ்ரீமந் நாராயணனான நீ, நான் பலவிதமாக ஆகக் கடவேன் என்று ஸங்கல்பித்து ஸ்ருஷ்டி செய்தாய்

நாகத்தை நழுவ = [பிறகு] உனக்கே உரித்ததான வைகுண்ட லோகத்தையும் விட்டு பிரிந்து

நறையுடனே = தெய்வீகமான அந்த பரிமளத்தோடே

என்றும் பிரியா = உன்னை விட்டு பிரியாத

மேனி மிளிர = அப்ராகிருத திருமேனியும், அவதாரங்கள் பல செய்ய செய்ய ஒளி மிகுந்து இருக்க

என்றும் பிரியா குணமும் = உன்னை விட்டு பிரியாத திருக்கல்யாண குணங்களும்

மலர = அன்று மலர்ந்த பூக்கள் போல மலர்ந்திருக்க

தாழ வந்து இன்று = இப்படி எங்களுக்காகவே கீழே இறங்கி வந்த நீ

அரியணை இருந்து = அழகிய சிம்மாசனத்தில் எழுந்தருளியிருந்து

எமக்கு = உன்னையே தேடி வந்தது நிற்கும் எங்களுடைய காரியத்தை

ஆராய்ந்து அருளாயே. = வினவி, விசாரித்து அருள் செய்வாயாக.

உட்கருத்தின் சுருக்கம்

மாரிமலை முழைஞ்சில்
தன்னுள் எல்லாம் அமிழ
மஹா ப்ரளய காலத்தில் எல்லாப் பொருள்களும் நாம ரூபமின்றி எம்பெருமானிடம் லயித்து கிடக்கும்

மன்னிக் கிடந்து றங்கும்
தானே ஒன்றாய் நீரில் உறங்க
ஜல ப்ரவாகத்தில் ஸ்ரீமந் நாராயணன் மட்டும்தான் ஸயனித்து உறங்குவது போல் உள்ளான்

சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
நன்று நினைத்து நீ உமிழ
பல பல யுகங்களுக்கு பின், பகவான் ஜகத் ஸ்ருஷ்டி செய்வதாய் ஸங்கல்பிக்கிறான்

வேரி மயிர் பொங்க
நறையுடனே
பகவான் பலவிதமான அவதாரங்களாய் அப்ராகிருத திருமேனியோடு பரிமளத்தோடு இறங்கி வருகிறான்.

எப்பாடும் பேர்ந்து உதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
நாகத்தை நழுவ என்றும் பிரியா மேனி மிளிர
வைகுண்டத்தில் உள்ள எல்லாவற்றையும் உதறி திருக்கல்யாண குணக்கள் ஒன்றும் விடாமல்

போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா
குணமும் மலர
பூக்கள் மலருவது போல் எம்பெருமானின் திருக்கல்யாண குணங்கள் மலர்கின்றன

உன் கோயில் நின்று இங்ஙனே போந்தருளிக்
தாழ வந்து இன்று
உனக்கே உரித்ததான் வைகுண்ட லோகத்தை விட்டு

கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து
அரியணை இருந்து
உன்னுடைய சிம்மாசனத்தை விட்டு

யாம் வந்த காரியம் ஆராய்ந்து அருளேலோ

எமக்கு ஆராய்ந்து அருளாயே

நாங்கள் தேடி வந்த காரியத்தை ஆராய்ந்து பார்த்து அருள்வாய்

பாசுரம் 24

எம்பெருனானுக்கு அடிமை என்பதை சொல்லி
நித்ய கைங்கர்யத்தை வேண்டுதல்

*அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி *
*சென்றங்குத் தென் இலங்கைச் செற்றாய் திறல் போற்றி *
*பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி *
*கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி *
*குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி *
*வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி *
*என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான் *
இன்று யாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்

**உலகம் அளந்த கழலானே * புலன் பத்தும் களைந்தவனே *
கலங்கு மனம் கடைந்தவனே * கரத்தின் வலிமை கழலாலே /
குலம் காக்கும் குணவானே * குடி ஒத்து வேல் பிடித்தானே *
நலம் மிக்க நற் பணியை * நாளும் பெற நமக்கு அருளாயே.**

பதவுரை

உலகம் அளந்த = வாமனாய் சுருங்கி, பிறகு வளர்ந்து உலகம் முழுவதும் அளந்த
கழலானே = அந்த திருவடிகளை உடைய திரிவிக்கிரமனே
புலன் பத்தும் = ராக்ஷஸனான ராவணனுக்கு பத்து தலைபோல் நமக்கு வெளி இந்திரியங்கள் பத்து.
களைந்தவனே = அவற்றின் அஸத்தான விஷயங்களை ஒழித்து
கலங்கு மனம் = நல்லது கெட்டது என தெரியாமல், தெரிந்தும் அதை செயல் படுத்த முடியாமல் குழம்பி கிடக்கும் மனம் என்கிற சக்கரத்தை

கடைந்தானே = சுழற்றி, சுழற்றி அதைக் கடைந்து ஸாரமான விஷயங்களை மட்டும் நமக்கு கொடுத்து

கரத்தின் வலிமை = கன்றாக நின்ற வத்ஸாஸீரனை தடியாக கொண்டு, விளாங்கனியாக நின்ற அஸுரன் மேல் விட்டேறிந்து அவர்களைக் கொன்ற கரத்தின் பலம்

கழலாலே = உம்முடைய இரண்டு திருவடிகளில் அல்லவோ உள்ளது

குலம் = ஸமோகம ஸர்வபூதேஷு என்கிறபடி இடையர் குலத்திலுள்ள எல்லோரையும், நல்லவன் கெட்டவன் என்ற தராதரம் பாராது

காக்கும் குணவானே = ரக்ஷித்து அருளும் உம்முடைய திருக்கல்யாண குணங்களை உடையவனே

குடி ஒத்து = இவன் குடிக்கு வேலே ஆயுதம். தந்தை வழியே செல்லும் தனயன் ஆகையாலே,

வேல் பிடித்தானே = கூர்வேல் நந்தகோபன் குமரனாய், தானும் வேலை கையில் ஏந்தி

நலம் மிக்க = பரம புருஷார்த்தம், பெறும் பேறு என்ரு சொல்லக்கூடிய

நற்பணியை = அகங்கார மமகாரங்கள் இன்றி செய்யும் கைங்கர்யத்தை

நாளும் பெற = எப்பொழுதும் நித்யமாக பெறுவதற்கு

நமக்கு அருளாயே = எங்களுக்கு நீ அருள் செய்ய வேண்டும்.

உட்கருத்தின் சுருக்கம்

மாரிமலை முழைஞ்சில் பாசுரத்தில் பகவான் ஜகத் காரணகனாய் ஸ்ருஷ்டி செய்வதையும், அவனே அவதாரங்களாக இங்கே தோன்றி எல்லோரையும் ரக்ஷிப்பதையும் சொல்லி, இந்த பாசுரத்தில் அந்த எம்பெருமானுக்கு நாம் அடிமையாக ஸேஷனாக இருக்கும் ஸேஷித்வத்தை சொன்னது.

காரணத்வம், ரக்ஷத்வம், ஸேஷித்வம் இந்த மூன்றும்தான் ப்ரணவத்தில் உள்ள அகார சப்தம் விவரிக்கிறது.

எம்பெருமானுக்கு அனந்த ஆனந்தமான கைங்கர்யம் செய்து மகிழும் ப்ராப்தியை அளிப்பாயே என வேண்டுவது இப்பாசுரம்.

அன்றிவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி
உலகம் அளந்த கழலானே போற்றி
எம்பெருமானின் திருவடிகளே பற்றுவதற்கு எளிதாக உள்ளது. அந்த திருவடிகளுக்கு பல்லாண்டு முதலில்.

சென்றங்குத் தென் இலங்கைச் செற்றாய் திறல் போற்றி
புலன் பத்தும் களைந்தவனே போற்றி
பகவான் இலங்கைக்கு சென்று பத்து தலை ராவணனை அழித்தாற்போல், இந்த பூலோகத்திற்கு வந்து நம்முடைய பத்து இந்திரியங்களையும் அறுத்து தள்ளுகிறான்.

பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி
கலங்கு மனம் கடைந்தானே போற்றி
அடுத்து 11வது இந்திரியமான உள் இந்திரியம் மனது என்பது சக்கரம் போன்றது. அதை கட்டுப்படுத்த எம்பெருமானை வேண்டினர்.

கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
கரத்தின் வலிமை கழலிலே போற்றி
ஒரு அசுரனை எடுத்து இன்னொரு அசுரன் மேல் விட்டெறிந்து இருவரிஅயும் கொன்ற அந்த வலிமையான கை இருந்தாலும், அதற்கு அவசியமான அவனுடைய திருவடிகளையே இங்கே புகழ்கிறாள்.

குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி

குலம் காக்கும் குணவானே போற்றி

எல்லோரையும் சமமாக பாவிப்பேன் என்றார் பகவான். குன்றை குடையாய் பிடித்த போது நல்லவன், கெட்டவன் என்று பார்க்காது இடையர் குலத்தில் உள்ள அனைவரையும் காத்தான்.

வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி

குடி ஒத்து வேல் பிடித்தானே போற்றி

கூர்வேல் கொடுந்தொழிலன் நந்த கோபன் குமாரன் ஆகையாலே தானும் தன் குடிக்கு ஒத்தவாறு வேல் பிடித்து நின்றான்.

என்றென்றும் உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்

நலம் மிக்க நற்பணியை நாளும் பெறவே

நித்ய கைங்கர்ய ப்ராப்தியே பரமபுருஷார்த்தம் என்று அதைக் கேட்டு பெறவே வந்தோம்.

இன்று யாம் வந்தோம் இரங்கேலோ

நமக்கு அருளாயே.

அதை நீ எமக்கு அருள்வாயாக

பாசுரம் 25

பூலோகத்தில் சாஸ்திர ரீதியாக
எம்பெருமானை அனுபவித்தல்

*ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில் **
*ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத் **
*தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைத்த **
*கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் **
*நெருப்பென்ன நின்ற நெடுமாலே * உன்னை*
*அருத்தித்து வந்தோம் பறை தருதி யாகில் **
*திருத் தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி **
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோர் எம்பாவாய்

பன்னும் மறையில் ஒளிர * பஞ்ச ராத்திரம் மட்டும் மலிய *
மேன்மை மாற்றிய மொழியை * பொசுக்கி நடுக்கம் எடுத்த /
அன்பனே அத்தனே * ஆறும் பேறுமென அலற்றினோம் *
நின்று நற்நிதி நிலைக்க * நலிவு விடுத்து நல் அருளாயே.

பதவுரை

பன்னும் = ஓதுகின்ற
மறையில் = வேதங்களில்
ஒளிர = பரத்வமான நாராயணன் நன்றாக பிரகாசிக்க
பஞ்சராத்ரம் = ஸ்ரீமந் நாராயணனே தன் வாக்கால் க்ருத யுகத்தில் ஓதுவித்த பாஞ்ச ராத்ரம் என்கிற சாஸ்திரம்
மட்டும் மலிய = குதிர்ஷ்டிகளால் இகழப்பட்டு, அது வேதங்கள் போல் ப்ரமாணம் இல்லை என்று குதர்க்க வாதம் செய்ய

மேன்மை = எம்பெருமான் ஒருவனே பரத்வம், ஜகத் காரணகன், அவனே உபாயம், அவனே பலன் என்று வேதங்களில் சொல்லியிருந்தும்

மாற்றிய = அதை சகிக்க முடியாதபடியான பாஷாண்டிகள் பாஞ்ச ராத்ர சாஸ்திரத்தை கண்டிக்க, விலக்க

மொழியை = துர்வாதத்தை கிளப்ப

பொசுக்கி = அவற்றை எல்லாம் நெருப்பில் இட்ட பஞ்சு போல் ஒழித்து கட்டி

நடுக்கம் எடுத்த = இந்த துர்வாதங்களால் நம் குலத்திற்கே கேடு வந்து விடுமோ என்று பயந்த பாகவத உத்தமர்களின் கலக்கத்தை நீக்கி

அன்பனே = மால் என்று பிரியமாக அழைக்கப்படுபவனே

அத்தனே = எல்லோருக்கும் ஸ்வாமியாய் தந்தையாய் உயர்ந்தவனே

ஆறும் பேறுமென = பகவானே நீதான் எங்களுக்கு உபாயம் என்று அறிந்து நீதான் பலன் என்று அறிந்து

அலற்றினோம் = உன்னையே புகழ்ந்து பாடி, மனம் ததும்பி சரணாகதி பண்ணினோம்

நல்நிதி = உயர்ந்த செல்வமான கைங்கர்ய ப்ராப்தியை

நின்று நிலைக்க = நித்யமாகவும், குறைவில்லாமலும் இருக்க

நலிவு விடுத்து = எங்களுடைய பாவங்களை விலக்கி, அநிஷ்ட நிவ்ருத்தி

நல் அருளாயே = உன்னுடைய அருள் என்கிற உயர்ந்த பலனை, இஷ்ட ப்ராப்த்தியை எங்களுக்கு கொடுத்து அருள்வாயே

உட்கருத்தின் சுருக்கம்

அன்றி இவ்வுலகம் அளந்தாய் பாசுரத்தில், கீழே பகவானுக்கு போற்றி போற்றி என்று மங்களாசாஸனம் செய்தனர். இந்த பாசுரத்தில் உய்ர்ந்த ப்ரமாணம் என்கிற சாஸ்திரங்கள் நமக்கு பகவானை காட்டி கொடுத்தற்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து

பன்னும் மறையில் ஒளிர

ஒருத்தி என்பது வேதம். அந்த வேதங்கள் நித்ய நிர்தோஷத்வம். அபௌருஷயம். மகனாய் பிறந்து என்பது அந்த வேதங்களில் பரதி பாத்ய தெய்வம் எம்பெருமான். ஓதுகின்ற வேதங்கள் நன்றாய் காட்டுவது எம்பெருமானையே.

ஓர் இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்

பஞ்ச ராத்திரம் மட்டும் மலிய

இங்கு ஒருத்தி என்பது பாஞ்ச ராத்ர சாஸ்திரம். அது க்ருத யுகத்தில் சொல்லப்பட்ட எம்பெருமான் உரை. பிறகு கடுமையான காலங்களில் இந்த பாஞ்சராத்ர சாஸ்திரத்தின் ப்ராமாண்யத்தை சிலர் கெடுத்தனர். அநத சமயத்தில் பகவான் இந்த சாஸ்திரத்தில் நன்கு பிரகாசிக்காது ஒளிந்து இருந்தான்.

தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைத்த

மேன்மை மாற்றிய மொழியை

சிலருக்கு நாராயணனின் பரத்வத்தை கண்டு பொறாமை. பகைமை. எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களில் குற்றம் சொல்ல ஆரம்பித்தனர். பாஞ்சராத்ர சாஸ்திரம் ப்ரமாணம் ஆகாது என பலவிதமான புது சாஸ்திரங்களை பரப்பினர்.

கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன

பொசுக்கி நடுக்கம் எடுத்த

நம்முடைய ஆசாரியர்கள், முன்னோர்கள் எல்லோரும் இந்த குத்ருஷ்டி வாதங்களைக் கண்டு நம் ஸம்பிரதாயத்திற்கே தீங்கு வந்து விடுமோ என நடுங்கினர். அந்த உயர்ந்த கருத்தை, தாத்பர்யத்தை பகவான் காப்பாற்றி,எஅம் குலத்தோரின் கலக்கத்தையும் ,நடுக்கத்தையும் நீக்கிய

நின்ற நெடுமாலே

அன்பனே பெரியோனே

எல்லோரிடம் ப்ரியமானவனே! பரத்த்வமாய் உயர்ந்தெ பெரியவனே

உன்னை அருத்தித்து வந்தோம் பறை தருதி யாகில்

ஆறும் பேறுமென வேண்டினோம்

உன்னையே அர்சித்து வந்தோம் (உபாய பல ஐக்யம்), நீதான் வழி உபாயம் என்று உன்னிடம் வந்து வேறு எந்த பலனையும் கேட்கவில்லை. உன்னையே வேண்டினோம்.

திருத் தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி

நல்நிதி நின்று நிலைக்க

கைங்கர்ய செல்வம் நிலைத்து இருக்க

வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து

நலிவு விடுத்து நல் அருளாயே

அநிஷ்ட நிவ்ருத்தி என துன்பத்தை விலக்கி இஷ்ட ப்ராப்தியென இன்பத்தை அருள்வாயே.

பாசுரம் 26

பூலோகத்திலேயே மோக்ஷானந்தத்தை
அருள வேண்டுதல்

*மாலே மணிவண்ணா! மார்கழி நீர் ஆடுவான் **
*மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல் **
*ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன **
*பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே **
*போல்வன சங்கங்கள் போய்ப் பாடு உடையனவே **
சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே
*கோல விளக்கே கொடியே விதானமே **
ஆலின் இலையாய்! அருளேலோர் எம்பாவாய்

**இடையே முன்னோர்வழி நடந்து * இறைக்கும் பகவருக்கும் *
அடிமையே என்னும் அறிவை * தரணி நடுங்க தாரம் முழங்க /
பாடியே அப் பல்லாண்டை * நாலெட்டுடன் எட்டும் இரண்டை *
ஆடிமகிழ நீலமேனி அன்பா * ஆலிலையானே எமக் கருளாயே.**

பதவுரை

இடையே = ப்ரபத்திக்கு பின் மீதி இந்த சரீரத்துடன் கழிக்கின்ற நாட்கள் எல்லாம்

முன்னோர் வழி நடந்து = சாஸ்திர வரையறையுடன், நம் முன்னோர்கள் மிகத் துணிவாக நடந்து காட்டிய முறையுடன்

இறைக்கும் = ஸகலருக்கும் ரக்ஷனான எம்பெருமானுக்கும்

பகவருக்கும் = அவனே கதி என்று கிடக்கும் பாகவதர்களுக்கும் ஆசாரியர்களுக்கும்

அடிமையே = [நாம் எல்லோரும்] அவர்களின் வசமாய் அவர்களுக்கு அடிமையாய் இருந்து பணி செய்வது

என்னும் அறிவை = என்கிற தெளிவான உண்மையான ஸத்வ குண ஞானத்தை

தரணி நடுங்க = உலகமே அதிரும்படியாக

தாரம் = அஷ்டாக்ஷரத்தின் முதலில் உள்ள ப்ரணவம் என்கிற ஒங்காரம்

முழங்க = அந்த அறிவை நமக்கு பிரகாசமாய் புகட்ட

அப்பல்லாண்டை = பரமபதத்தில் இசைக்கும் அந்த பல்லாண்டை

பாடியே = இசையுடன் பாடிக் கொண்டே

எட்டும் = எட்டு அக்ஷரங்கள் கொண்ட திருமந்திரம்

இரண்டை = உபாயம் பலன் என்கிற இரண்டையும் அறிவிக்கிற த்வயம்

நாலெட்டுடன் = 4x8 =32 அக்ஷரங்கள் கொண்ட கண்ணனின் கீதா சரம ஸ்லோகத்துடன்

ஆடி மகிழ = அனுஸந்தித்து எம் மீதி ஜீவித நாட்களை நல்லவிதமாக கழிக்க

நீலமேனி = நீல ரத்னம் போல திருமேனியும்

அன்பா = மால் என்று எல்லோரிடமும் மிகப் ப்ரீதி உடைய

ஆலிலையானை = ஒரு சிறிய ஆல மரத்து இலைமேல் ஸயனித்த மஹா மாயாவியான கண்ணனே

அருளாயே = நீ அருள்வாயாக.

உட்கருத்தின் சுருக்கம்

ஒருத்தி மகனாய் பாசுரத்தில் அநிஷ்ட நிவ்ருத்தியும், இஷ்ட ப்ராப்தியும் வேண்டிய பிறகு இங்கே அந்த மோக்ஷானந்தம் இங்கேயே கிடைக்குமாறு வேண்டுகிறாள்.

மாலே மணிவண்ணா

நீலமேனி அன்பா

அன்பாய் இருப்பவனே நீல ரத்னத்தை போல் திருமேனி உடையவனே

மார்கழி நீர் ஆடுவான்

மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்

இடையே முன்னோர் வழி நடந்து

உத்ராயண புண்ய காலம் முன்னே விடியற்காலை பொழுது. அப்போது ஞானம் மங்கலாக தெரிகிறது. மீதி ஜீவித காலத்தை பிரபன்னன் அப்ராதமில்லாத கைங்கர்யம் செய்து கழிக்க வேண்டும். அதை சிஷ்டாசாரம் என்று முன்னோர் வழி பின் பற்றி நடப்பது.

ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன

தரணி நடுங்க

இந்த உலகமே நடுங்கும்படியான ஞானத்தை தந்து அஞ்ஞானத்தை போக்கி

பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே

தாரம் முழங்க

வெள்ளை நிறம் ஸத்வ குணத்தை காட்டும். சங்கு ப்ரணவ ரூபத்தில் இருக்கிறது. ஸேஷத்வ, தாஸத்வ கைங்கர்ய ஞானம்

போல்வன சங்கங்கள் போய்ப் பாடு உடையனவே

இறைக்கும் பகவருக்கும் அடிமையே என்னும் அறிவை

இதைப்போல் பல சங்குகள். பகவத் ஸேஷத்வம், பாகவத ஸேஷத்வம் என்று பல.

சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே

அப்பல்லாண்டு பாடியே

பரம புருஷார்த்தமான மோக்ஷம். அந்த மோக்ஷத்தி இசைக்கும் கானம் பல்லாண்டு. அதை இங்கேயே பாடி மகிழ

கோல விளக்கே கொடியே விதானமே

நாலெட்டுடன் எட்டும் இரண்டை

அஷ்டாக்ஷரம், த்வயம், சரம ஸ்லோகம் - ரஹஸ்யங்கள் விளக்கு = ஸ்வரூப ஞானம், கொடி வெற்றி சரணாக்தி மூலம் ஸமஸாரத்தில் வெற்றி விதானம் - கண்ணனின் சரம ஸ்லோகம் எல்லோரையும் உட்கொண்டது.

ஆலின் இலையாய்! அருளேலோ

ஆடி மகிழ ஆலிலையானே எமக்கு அருளாயே

இவற்றை எல்லாம் அனுஸந்தித்து என மீதி வாழ்நாட்களை மகிழ்ச்சியுடன் கழிக்க மாயாவியான கிருஷ்ணன் நீ அருள்வாய்

பாசுரம் 27

உயிர் நீத்து பரமபதம் அடைந்து எம்பெருமானை
அனுபவிக்கும் விதம்

*கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா! * உன் தன்னைப்*
*பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம் **
*நாடு புகழும் பரிசினால் நன்றாகச் **
*சூடகமே தோள்வளையே தோடே செவிப் பூவே **
*பாடகமே என்றனைய பல் கலனும் யாம் அணிவோம் **
*ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு **
*மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக் **
கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்

குணத்தால் பணியாரைக் கவர * வணங்க வியப்பாய் வீடு செய்ய *
மணத்தூள் மாலை மை ஆடை * அணியுடன் அக்கரையில் அழைக்க *
இனமொத்த மேனி எடுக்க * இன்பத்தால் இறையை மூட * சேர்ந்து
மனமொத்து சுவைக்கும் சம ஆனந்த * சிந்தை அருள்வாய் கோவிந்தா!

பதவுரை

குணத்தால் = தன்னுடைய திருக்கல்யாண குணங்களால்
பணியாரை = தன் திருவடி பணியாமல் மாறி நிற்பவரையும் கூட
கவர = விரும்பி, ஆட் கொண்டு தன் வசமாக்கி அவர்களை ஏற்றுக் கொண்டு
கோவிந்தா = பரம ஸௌலப்யனான கோவிந்தனே
வணங்க = உன்னையே நாடி ப்ரபத்தி செய்த [பிரபன்னர்களுக்கு]
வியப்பாய் = எல்லோரும் அதிசயித்து புகழும்படியாக

வீடு செய்ய = மோக்ஷ ப்ராப்தியை நீ அளிக்கவே
மணத்தூள் = வாசனைப் போடி
மாலை = அழகிய நறுமணம் மிக்க மாலைகள்
மை = அஞ்சனம்
ஆடை = புத்தாடை
அணியுடன் = ஆபரணங்களுடன்
அக்கரையில் = விரஜா நதிக்கு மறுகரையில் உள்ள பரமபதத்தில்
அழைக்க = ஐந்நூறு அப்ஸரஸ் ஸ்திரீகள் கையில் வைத்துக் கொண்டு எதிர்கொண்டு அழைக்க
இனம் ஒத்த = மோக்ஷத்தில் ஸம்ஸாரத்தை அடையாத பகவான், நித்யஸூரிகள், முக்தர்களை போல்
மேனி எடுக்க = அப்ராகிருதமான திவ்ய திருமேனி எடுத்துக் கொண்டு
இன்பத்தால் = பரிபூர்ண ப்ரம்மாநுபவத்தால்
இறையை மூட = எம்பெருமானை முழுக்க முழுக்க ஸ்வரூப, ரூப, குண, விபூதிகளில் தினைத்தனையும் விடாது அனுபவிக்க
மனம் ஒத்து = யார் யாருக்கு எல்லாம் எந்த அளவிற்கு எந்த விதமான கைங்கர்யங்கள் எப்படி எல்லாம் ஆசை உள்ளதோ
சுவைக்கும் = அப்படியே அந்த அளவிற்கு செய்து மகிழும்
சம ஆனந்த = மோக்ஷத்தில் ஸஹ போஜனம் என்கிறபடி, பகவானுக்கு நிகரான ஆனந்தத்தை அடைவதை
சிந்தை = அந்த நினைவை இங்கேயே, இந்த பூமியிலேயே
அருள்வாய் = எனக்கு நீ அருளுவாயாக

உட்கருத்தின் சுருக்கம்

பிரபன்னன் சரீரம் கழிந்து மோக்ஷத்தில் கிடக்கப் பெறும் ப்ரமானந்தத்தை இந்த பூமியிலேயே நினைத்து பார்த்து மகிழ்வதைச் சொல்கிறது இந்த பாசுரம்.

கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா
குணத்தால் பணியாரை கவர கோவிந்தா

தன்னுடன் கூடாதவர்களைக் கூட தன் எண்ணற்ற திருக்கல்யாண குணங்ளால் கவர்ந்து அவர்களையும் தன் வசப்படுத்துகிற உலகத்தை எல்லாம் காக்கின்ற பரம ஸௌலப்யனான கோவிந்தனே

உன் தன்னைப் பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம் நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
வணக்க வியப்பாய் வீடு செய்ய
உன்னிடம் சரணாகதி செய்து, உயர்ந்த புருஷார்த்தமாகிற ப்ரமபதத்தை வேண்டிய பிரபன்னர்களுக்கு எல்லோரும் ஆச்சரியப்படும்படி தேவர்கள் ரிஷிகள் எல்லாம் வணங்கும்படியாக,

சூடகமே, தோள்வளையே, தோடே, செவிப் பூவே, பாடகமே
என்றனைய பல் கலனும் யாம் அணிவோம்
மணத்தூள், மாலை, மை, ஆடை அணியுடன் அக்கரையில் அழைக்க
ப்ரம்மாலங்காரங்கள்

ஆடை உடுப்போம்
இனம் ஒத்த மேனி எடுக்க
மோக்ஷத்தில் பகவான், நித்யசூரிகள், முக்தர்களைபோல் அப்ராகிருதமான திருமேனியை எடுத்துக் கொள்ள

அதன் பின்னே பாற் சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்
இன்பத்தால் இறையை மூடி
பரிபூர்ண ப்ரம்மாநுபவம் ஸ்வரூப, குண ரூப, விபூதிகள் அனைத்திலும் தினைத்தனையும் விடாதே அனுபவிக்க எம்பெருமானகிறா சோறை ஆனந்தம் என்கிற நெய்யால் முழுவதும் மூடி மகிழ்ந்து

கூடி இருந்து குளிர்ந்தேலோ

சேர்ந்து மனம் ஒத்து சுவைக்கும் சம ஆனந்த சிந்தனை அருள்வாய்

நித்ய முக்தர்களோடு கூடி, யார் யாருக்கு எல்லாம் எந்த விதமாக, எந்த அளவிற்கு கைங்கர்யம் செய்ய ஆசையோ அப்ப்டி கைங்கர்யங்கள் செய்து மகிழ்ந்து, ஸஹபோஜனம் என்கிறப்டி எம்பெருமானுடன் சமமான ஆன்ந்தத்தை அடைந்து மகிழும் நினைவை இங்கேயே அருள்வாயாக.

பாசுரம் 28

பரம் புருஷார்த்தமான மோக்ஷத்தை
அருளிய எம்பெருமானுக்கு நன்றி நவிலுதல்

*கறவைகள் பின் சென்று கானஞ்சேர்ந்துண்போம் *
*அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து * உன் தன்னைப்*
*பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம் *
*குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா * உன் தன்னோடு*
*உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது *
*அறியாத பிள்ளைகளோம் அன்பினால் * உன்தன்னை*
*சிறுபேர் அழைத்தனவும் சீறியருளாதே *
இறைவா! நீ தாராய் பறையேலோர் எம்பாவாய்

**குருவைப் பற்றி குறை சேராது * உன்னையன்றி வேறு அறியாது *
தருவாய் கோவிந்தா குறையிலாது * பெறவே எம்மிடம் வினையிலாது /
பெருமை முழுதும் அறியாது * பரம் சொல்லி சீலம் சொல்லாது * நம்
உறவு இயற்கை அழியாது * அருளாயே எமக்கு அமிழ்த்தாது**

பதவுரை

குருவைப் பற்றி = நம்முடைய ஸத் ஸம்பிரதாய ஆசாரியர்களை பின்பற்றி

குறை சேராது = ஸத் ஸம்பிரதாய கருத்துக்களுக்கு மாறாக, குற்றம் குறைகளை பரப்புகின்ற நமக்கு ப்ரதிகூலர், அநபயர் போன்றவரோடு சேராது

உன்னையன்றி = எம்பெருமானே உன்னைத் தவிர

வேறு அறியாது = வேறு எந்த ஞானமும் இல்லாது

குறையிலாது = மோக்ஷத்தில் நித்ய முக்தர்கள் சூழ இருந்தாலும், உன் எல்லா திருக்கல்யாண குணங்களும் பிரகாசிக்கமல் இருக்க அந்த குறை தீரும்படி

பெறவே = இந்த பூலோகத்திற்கு நீ இறங்கி வந்து உன்னை நாங்கள் பெறுவதற்கு

எம்மிடம் = நாங்கள்

வினையிலாது = ஒரு புண்யமும் செய்யாது இருக்க

தருவாய் = நீயாகவே வந்து உன்னைத் தருகிறாய்

கோவிந்தா = எளிமையின் ஸ்வரூபமான கோவிந்தா!

உம் சீலம் விட்டு = உன்னுடைய ஸௌஸீல்ய ஸௌலப்ய குணக்களை பிரகாசிக்கும் கண்ணா, கோவிந்தா என்று அழைக்காது

பரத்தை சொல்ல = பரத்வமான நாராயணா என்று அழைத்தோம்

உம் பெருமை = பகவானே உன் மகிமை, பெருமை

முழுதும் அறியாது = பூர்ணமாக அறியாத மூடர்கள் நாங்கள். ஆனால் யாரால் தான் உன் பெருமை பூர்ணமாக அறிய முடியும்?

நம் அருமை உறவு = உனக்கும் எமக்கும் உள்ள உறவு மிகச்சிறந்தது. அது தனிப்பட்டது.

இயற்கை = ஸ்வாபாவிகமானது. ஒரு காரணத்தைக் கொண்டு ஏற்படுத்தப் பட்டது இல்லை.

அழியாதது = எப்படி உன்னுடைய ஆத்மாவும் என்னுடைய ஆத்மாவும் அழியாததோ அதுபோல நம்க்குள்ள உறவும் அழியாதது.

அமிழ்த்தாது = இந்த உறவைக் கொண்டு நாங்கள் செய்த தவறைக் கண்டு எங்களை மறுபடியும் ஸம்ஸாரத்தில் தள்ளாது

எமக்கு அருளாயே. = எங்களுக்கு அருள் செய்வாயாக.

உட்கருத்தின் சுருக்கம்

கூடாரை வெல்லும் பாசுரத்தில் மோக்ஷ ப்ராப்தியை நினைத்து மகிழும் பிரபன்னன், தனக்கு இந்த பரம புருஷார்த்ததை அருளிய எம்பெருமானுக்கு நன்றி கூறுகிறான் இந்த பாசுரத்தில்.

கறவைகள் பின் சென்று
குருவைப் பற்றி
ஆசாரியனும் சாஸ்திரங்களும்தான் கறக்கும் பசுக்கள். அவற்றை பின் தொடர்ந்து, அவ்ர்கள் வழியே நடந்து

கானம் சேர்ந்து உண்போம்
குறை சேராது
அந்த பகவத் அனுபவத்தை ஒத்த மனம் உடைய கோஷ்டியுடன், அதாவது விபரீத புத்தி, ப்ரதிகூல புத்தி உடையவர்களோடு சேராமல், அனுபவித்து

அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து
உன்னை அன்றி வேறு அறியாது
உன்னைத் தவிர வேறு ஞானம் எதுவும் இல்லாமல் இந்த லீலாவிபூதியில்

உன் தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்
வருவதற்கு எம்மிடம் வினையிலாது
நீ இங்கே எங்களுடன் வந்து தோன்ற எங்களுக்கு கர்ம வினை புண்யங்கள் எதுவும் இல்லை

குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா
வருவாய் கோவிந்தா குறையிலாது
பரமபதத்தில் பிரகாசிக்காத குணங்களும் இங்கே பிரகாசித்து உனக்கு குறை என்பதே இல்லாதபடி

உன் தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது
நம் அருமை உறவு இயற்கை அழியாது
உனக்கும் எனக்கும் உல்ள ஸம்பந்தம் ஸேஷ-ஸேஷி, ஸவாமி-தாஸன் என்பது ஒரு காரணத்தால் வந்தது அல்ல. அது இயற்கையானது.

அறியாத பிள்ளைகளோம்
பெருமை முழுதும் அறியாது
உன்னை பூர்ணமாக அறியா அஞ்ஞானிகள் நாங்கள்

அன்பினால் உன்தன்னை சிறுபேர் அழைத்தனவும்
உம் சீலம் விட்டு பரத்தை சொல்ல
உயர்வை சொல்லி உன் எளிமையை சொல்லாமல் போனோம். ப்ரளய் தெசை என்கிற சீற்றம் வேண்டாம்

சீறியருளாதே இறைவா! நீ தாராய் பறை
அமிழ்த்தாது அருளாயே.
ஸ்வாமியே, பகவத் கைங்கர்ய அனுபவத்தை நீ எமக்கு அளிபாயாக

பாசுரம் 29

பறை என்றால் உமக்கே நித்ய கைங்கர்யம்
செய்யும் ப்ராப்தி

*சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து * உன்*
*பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் **
*பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து * நீ*
*குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது **
*இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா! **
*எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் * உன் தன்னோடு*
*உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம் **
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்

உன் பொன்னடியை முறையாய் * உணர்ந்து பொழுதே அடைந்து *
யான் வேண்டும் பலன் கேட்டு * ஆயனே உம் பணி மறுக்காதே /
முன் வேண்டி உறவை அறிந்து * உமக்கு அடியாருடன் எங்கும் *
நன் நோக்குடன் வேறின்றி * நழுவா பணிக்கு ஆட் செய்வாயே.

பதவுரை

உன் = பரத்வமாய், எளிமையாய் பிரகாசித்து ஸகல திருக்கல்யாண குணங்களும் உடைய எம்பெருமானே
பொன்னடியை = உமது பொன் போன்று சிறந்துள்ள திருவடிகளை
முறையாய் = ஆசாரியர், பிராட்டி ஸம்பந்தத்தை முன்னிட்டு
உணர்ந்து = தத்வ ஞானம், அர்த்த பஞ்சக ஞானம் கொண்டு
பொழுதே = நல்ல விடியற்காலை பொழுதிலேயே, அறிவு வந்த இந்த நாளே
அடைந்து = சரணாகதி செய்து

யான் = அகிஞ்சன அநந்யகதியனான அடியேன்
வேண்டும் = பிரார்த்தித்த
பலன் = புருஷார்த்த பலன்
கேட்டு = என்ன என்று நீங்கள் செவி சாய்த்து
ஆயனே = இடையர் குலத்தில் அவதரித்த எம்பெருமானே
உம் பணி = உம்முடைய திருவடிகளில் செய்யும் நித்ய கைங்கர்ய
மறுக்காதே = ப்ராப்தியை கொடுக்காமல் போகக் கூடாது
முன் வேண்டி = ஏற்கனவே நாராயணனே நமக்கே பறை என்று சொல்லி கிடந்த எமக்கு
உறவை = உமக்கும் எனக்கும் உள்ள பிரிக்க முடியாத நித்யமான உறவை
அறிந்து = ஆசாரியர்கள் அருளால் நன்கு தெரிந்து கொண்டு
அடியாருடன் = பாகவத உத்தமர்களோடு
உமக்கு = ஸ்ரீமந் நாராயணான உமக்கு
எங்கும் = இங்கே பூலோகத்திலும், மேலே ஸ்ரீவைகுண்டத்திலும்
நன் நோக்குடன் = நான் எனது என்கிற அகங்கார மமகாரங்கள் கழிந்து
வேறின்றி = வேறு ஒரு ப்ரயோஜனத்தை நினைக்காதவாறு
நழுவா பணிக்கு = அபராதமில்லாத, பிரிக்கமுடியாத நித்ய கைங்கர்யத்திற்கு
ஆட்செய்வாயே = என்னை ஆட்படுத்துவாயே

உட்கருத்தின் சுருக்கம்

கூடாரை பாசுரத்தில் கூடி இருந்து குளிர்ந்து என்றும் கறவைகள் பாசுரத்தில் இறவா நீதாராய் பறை என்று சொல்லி இங்கே அந்த பறை என்ன என்பதை உனக்கே நாம் ஆட் செய்வோம் என்று சொல்லி தெளிவாக காட்டுகிறாள்.

சிற்றம் சிறுகாலே
பொழுதே
விடியற் காலை பொழுது ஸத்வ குணம் நிரம்பியது

வந்து உன்னைச் சேவித்து
முறையாய் உணர்ந்து அடைந்து
திருமந்திரம் ,அர்த்த பஞ்சக ஞானத்துடன், ஆசாரியர்கள், பிராட்டி அருளுடன் ஆத்ம நிவேதநம் செய்து

*உன் பொற்றாமரை அடியே **
உன் பொன்னடியை
உம் திருவடிகளில் சரணாகதி செய்து

போற்றும் பொருள் கேளாய்
யான் வேண்டும் பலன் கேட்டு
நாங்கள் வேண்டுகிற ப்லன் என்ன என்பதை கேட்டு அருள வேண்டும்.

பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து
ஆயனே
மாடு மேய்க்கின்ற ஆயர் குலத்தில் பிறந்த நீ

நீ குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
உம் பணி மறுக்காதே
உமக்கு கைங்கர்யம் செய்ய ஆசையாய் இருக்கும் எமக்கு அதைத் தராமல் போகக்கூடாது.

இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா!
முன் வேண்டி
வேறு ஒரு பலனையும் நாங்கள் கேட்க வில்லை. முன்பே நாராயணனே நமக்கே பறை என்று சொல்லி உள்ளோம்.

எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்

எங்கும்

இங்கே ஸம்ஸார தெசையிலும், பின்பு முக்தி தெசையிலும் எப்போதும்

உன் தன்னோடு உற்றோமேயாவோம்

உறவை அறிந்து

ஸ்வாபாவிகமான் உறவுடன்.

உனக்கே நாம் ஆட்செய்வோம்

உமக்கு அடியாருடன் * நழுவா பணிக்கு ஆட் செய்வாயே.

உனக்கே (உமக்கும் பிராட்டிக்கும், பாகவதர்களுக்கும்) நாங்கள் நித்ய கைங்கர்யம் செய்து மகிழ வேண்டும்

மற்றை நம் காமங்கள் மாற்றேலோ

நன் நோக்குடன் வேறின்றி

வேறு ஒரு சிந்தனையும் கூடாது. அந்த கைங்கர்யம் நித்ய நிரபராத கைங்கர்யமாய் ஸித்திக்க அருள்வாய்

பாசுரம் 30

திருப்பாவையின் பலன்

*வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை *
*திங்கள் திருமுகத்து சேயிழையார் சென்றிறைஞ்சி *
*அங்கப் பறை கொண்ட ஆற்றை * அணி புதுவைப்*
*பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன *
*சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே *
*இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால் வரைத் தோள் *
*செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் *
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர் எம்பாவாய்

**பொங்கும் கடலைக் கடையும் * மாதவனை கேசவனை ஆறாய் *
தங்கும் எழில் குணத்துடன் * திவம் வேண்டி அடைந்தாரை /
நங்கை புதுவை பட்டர்கோதை * நவின்ற முப்பதையும் தவறாதார் *
செங்கண் திறல் திருமாலால் * எங்கும் பணியுடன் மகிழ்வாரே.**

பதவுரை

பொங்கும் = ஆசை, துக்கம், பிறப்பு, இறப்பு போன்ற அலைகள் முட்டி மோதுகின்ற
கடலை = ஸம்ஸார ஸாகரம் என்கிற பிறவிக் கடலை
கடையும் = நன்கு கடைந்து எடுத்து அதிலிருந்து ஜீவன்களை விடுதலை செய்கின்ற
மாதவனை = ஸ்ரீயப் பதியான எளிமையான எம்பெருமானை
கேசவனை = பிரமனுக்கும் சிவனுக்கும் ஈசனான பரத்தவமான பகவானை
தங்கும் = எப்போதும் தங்குகின்ற

எழில் = அழகான
குணத்துடன் = ஆத்ம குணங்கள் நிரம்பியவர்கள்
திவம் = பரம புருஷார்த்தமான பரமபதத்தை வேண்டி
ஆறாய் = [அவனையே] உபாயமாக
அடைந்தாரை = சரணாகதி செய்தாரை
நங்கை = உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் நிரம்பிய பெண்
புதுவை = ஸ்ரீவில்லிபுத்தூர்
பட்டர் = பட்டர்பிரான் என்கிற விஷ்ணுசித்தர்
கோதை = [அவருடைய மகளான] ஆண்டாள்
நவின்ற = சேதனர்கள் உஜ்ஜீவிக்க வேண்டு மென்கிற உய்ர்ந்த எண்ணத்தோடு
முப்பதையும் = முப்பது பாசுரங்களையும் [அருள]
தவறாதார் = அந்த முப்பதில், பாசுரத்தையோ அதில் சொன்ன கருத்துக்களையோ ஒன்று கூட விடாமல் அனுஸந்திப்பவர்கள்
செங்கண் = ஸ்ருதி வாக்யங்களில் பரதத்வமாக புகழப்படும் சிவந்த கண்களை உடைய எம்பெருமான்
திறல் = அதிக பலம் இருப்பதற்காக வலிமையான நான்கு தோள்களை உடைய
திருமாலால் = திருவுடன் கூடிய நாராயணனால்
எங்கும் = பூலோகத்திலும், மோக்ஷத்திலும்
பணியுடன் = தன் ஸ்வரூப லக்ஷணமான பகவத் பாகவத கைங்கர்யங்களை செய்து கொண்டு
மகிழ்வாரே = தான் மகிழ்ச்சியுடனும், மற்றவரையும் ஆனந்தப் படுத்துவர்.

உட்கருத்தின் சுருக்கம்

வங்கக் கடல் கடைந்த
பொங்கும் கடலைக் கடையும்
அலைகள் பொங்கி எழுகின்ற ஸம்ஸார ஸாகரத்தை கடைந்து

மாதவனைக் கேசவனை
மாதவனை கேசவனை
ஸௌலப்ய, பரத்வனாய்

திங்கள் திருமுகத்து சேயிழையார்
தங்கும் எழில் குணத்துடன்
எப்ப்பொழுதும் தங்குகின்ற அழகான ஆத்ம குணங்களுடன்

சென்றிறைஞ்சி
திவம் வேண்டி அடைந்தாரை
பரம புருஷார்த்தமான மோக்ஷானந்த்தை வேண்டி அதை பெற
எம்பெருமானை அடைந்தாரை

அங்கு அப் பறை கொண்ட ஆற்றை
உன்னையே ஆறாய்
அந்த மோக்ஷத்திற்கு உபாயமாக எம்பெருமானே உன்னையே கொண்டு

அணி புதுவைப் பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
நங்கை புதுவை பட்டர் கோதை நவின்ற
அழகிய வில்லிபுத்தூர், தாமரை மாலை அணிந்த பட்டர் பிரானின்
குமாரத்தியான ஆண்டாள் சொன்ன

சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
முப்பதும் தவறாதார்

சிறந்த தமிழ் பாசுரங்கள் முப்பதையும் ஒன்று விடாதே

இங்கு இப்பரிசு உரைப்பார்

இப்படி இந்த புருஷார்த்தத்தை வேண்டுபவர்

ஈரிரண்டு மால் வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
செங்கண் திறல் திருமாலால்
அழகிய நான்கு தோள்களை உடைய சிவந்த கண்களை உடைய ச்ரிய பதியால்

எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்
எங்கும் பணியுடன் மகிழ்வாரே
எல்லா இடங்களிலும் இங்கே, மோஷத்தில் எல்லாம் அவர்களுடைய திருவருளால் கைங்கர்ய செல்வம் பெற்று வாழ்வார்கள்.

திருப்பாவை முடிவுரை

**அரங்கன் மேல்* மாதவனை கேசவனை ஆறாய் *
சுரங்கம் இதுவே என * திவம் வேண்டி அடைந்தாரை /
வரங்கொடுப்பான் * நவின்ற முப்பதையும் தவறாதார் *
கரங்கள் கூவி * எங்கும் பணியுடன் மகிழ்வாரே.**